ரஷ்ய உளவுத் துறை

# KGB

என். சொக்கன்




உலகின் ஒட்டுமொத்த ஜாதகத்தையும்
தன் கைப்பிடிக்குள் வைத்திருந்த ரஷ்ய உளவுத் துறை
கேஜிபியின் சரித்திரம், விறுவிறுப்பான மொழியில்.

# உள்ளே

1. பன்னிரண்டு வருஷத் தவம் / 9
2. நாயும் துடைப்பமும் / 15
3. முதுகில் சில கண்கள் / 24
4. ஒக்ரானா / 34
5. கொஞ்சம் நிலவு, கொஞ்சம் நெருப்பு / 43
6. அசாதாரணம் / 51
7. சிவப்பாக ஒரு பயங்கரம் / 62
8. பஞ்சம், பிடிவாதம் / 77
9. விஷப் பற்கள் / 87
10. ஆபரேஷன் ட்ரெஸ்ட் / 95
11. முடிக்கப்படாத ஓவியம் / 106
12. களையெடுப்பு / 112
13. மூன்று தலைவர்கள் / 123
14. கடைசிப் பெயர் / 136
15. உளவு, ஊடுருவல் / 144
16. உள்ளங்கையில் உலகம் / 151
17. சிதைந்த கனவுகள் / 171
பிற்சேர்க்கைகள் / 181

# 1. பன்னிரண்டு வருஷத் தவம்

அந்த அறையின் கதவுகள், ஜன்னல்கள் யாவும் இறுக மூடப்பட்டிருந்தன. காற்றுக்கூட உள்ளே நுழைய முடியாத, நுழையக் கூடாத சூழல்.

பழகிய புழுக்கத்தின் நடுவே, மிக லேசான வெளிச்சத்தில் சில காகிதங் களைப் படித்துக்கொண்டிருந்தார் அவர். ஒவ்வொரு குறிப்பையும் படித்து முடித்து விட்டு, சில நிமிடங்கள் யோசிப்பார், பின்னர் தன்முன்னே வைக்கப்பட்டு இருக்கும் கோப்புகளில் ஏதேனும் ஒன்றில் அந்தக் காகிதத்தை வைத்து விட்டு, அந்தத் தகவலை வேறொரு காகிதத்தில் குறித்துக்கொள்வார்.

அங்கிருந்த பெரும்பாலான காகிதங் கள், காலப்போக்கில் நிறம் மங்கி, தூசு படிந்து, அழுக்காகத் தென்பட்டன. ஆனாலும், அவற்றில் நிரம்பிக் கிடந்த தகவல்களில் இன்னும் உயிர்த் துடிப்பு மிச்சமிருந்தது.

வெற்றிகள், தோல்விகள், ரகசியங்கள், நம்பிக்கைகள், துரோகங்கள், சோர்வுகள்,

பண வெறி, பெண்ணாசை, பொன்னாசை, தேசப் பற்று, வெறுப்பு, பயம், வீரம் என்று சகல உணர்ச்சிகளையும் அந்தக் காகிதங்களில் சரளமாகப் பார்க்கமுடிந்தது. அவை அனைத்தும், ஏதேனும் ஒரு விதத்தில் பல தேசங்களின் சரித்திரத்தைத் தீர்மானித்த சுவடுகள்.

அநேகமாக எல்லாக் காகிதங்களும், 'ரகசியம்' என்று கவனமாகக் குறிக்கப்பட்டிருந்தன. அவை எழுதப்பட்ட காலகட்டத்துக்குப் பிறகு, இரண்டு பேர் - மிஞ்சிப்போனால் நான்கு பேர் அவற்றை வாசித்திருப்பார்கள். மற்றபடி, கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலத்துக்குமேலாகச் சேகரிக்கப்பட்டிருக்கும் இந்த ரகசியங்கள் எல்லாவற்றையும் வாசித்தவர் என்று யாருமே இருந்திருக்க முடியாது.

தனக்குக் கிடைத்திருக்கும் இந்த அபூர்வமான வாய்ப்பை, வேறு யாராலும் கற்பனை செய்யக்கூட முடியாது என்று அந்த முதியவருக்கு நன்றாகப் புரிந்திருந்தது. ஆகவே, இதனை நன்கு பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்திருந்தார்.

இந்த ரகசியங்கள், சரித்திரச் சுவடுகள் அனைத்தும், இருட்டறைக்குள் முடங்கிப்போய்விடக்கூடாது என்று எண்ணினார் அவர். யானையைத் தடவிப் புரிந்துகொண்ட குருடர்களைப் போல, இந்த தேசத்தைப்பற்றியும், அதன் கொள்கைகள், தலைவர்கள், அமைப்புகள் ஒவ்வொன்றைப்பற்றியும் விதவிதமாகக் கற்பனைக் குறிப்புகள் வலம் வந்துகொண்டிருக்கும் சூழலில், முகத்தில் அறைகிற இந்த நிஜம், நிச்சயமாகப் பதிவு செய்யப்படவேண்டும்.

எப்போது, எப்படி என்கிற கேள்விகளுக்கெல்லாம் அவரிடம் பதில் இல்லை. உண்மையில், இப்படி ஓர் ஆசை அல்லது கற்பனை தன் மனத்துக்குள் ஓடிக்கொண்டிருக்கிறது என்கிற விவரம் வெளியே தெரிந்தால், தன்னுடைய கதி என்ன ஆகும் என்று நினைத்துப் பார்க்கையில் அவருக்கு திகிலாக இருந்தது.

ஆனால், இதுபோன்ற சிந்தனைகள், அவருடைய வேலையை பாதிக்கவே இல்லை. அந்தக் காகிதங்களுக்குள் உறைந்திருந்த உண்மைகளைப் படிப்படியாக வெளியே எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளைத் தொடங்கிவிட்டார் அவர்.

அப்போது அவருடைய அலுவலகம் வேறோர் இடத்துக்கு மாற்றப்பட்டிருந்தது. பழைய கட்டடத்திலிருந்து, புதிய அலு

வலகத்துக்கு எல்லா ஆவணங்களையும் பாதுகாப்பாக எடுத்துச் செல்லவேண்டியது அவருடைய பொறுப்பு.

ஆகவே, ஒவ்வொரு புதன்கிழமையும், பழைய அலுவலகக் கட்டடத்தின் ஆவண அறைக்குள் சென்று, அங்கிருக்கும் ரகசியக் குறிப்புகளை வாசித்துக்கொண்டிருப்பார் அவர். மணிக்கணக் காக நீளும் இந்தத் தனிமைப் பணிக்குப் பின்னர், வாசித்த குறிப்புகளை ஒழுங்குபடுத்தி, கால வரிசைப்படி அல்லது தலைப்பு, முக்கியத்துவத்தின்படி கட்டுகளாகக் கட்டுவார்.

இதையடுத்து, இந்தக் கட்டுகள் அனைத்தும், பெரிய பெட்டிகள்/ கன்டெய்னர்களில் அடுக்கப்பட்டு, அவருடைய மேற்பார்வை யில் சீல் வைக்கப்படும். மறுநாள் வியாழக்கிழமை பலத்த பாதுகாப்புடன் எல்லாப் பெட்டிகளும் புதிய அலுவலகத்துக்குச் செல்லும் இதையும் அவரே தனிப்பட்டமுறையில் உறுதி செய்யவேண்டும்.

அதன்பிறகு, அவருடைய பொறுப்புகள் தீர்ந்துவிடுவதில்லை, புதிய அலுவலகத்தில் எல்லாப் பெட்டிகளையும் பெற்றுக் கொண்டு, முறைப்படி கணக்குப் பார்த்து நிச்சயப்படுத்திக் கொண்டு, அவற்றைப் பிரித்து அடுக்கிவைப்பதும் அவர்தான்.

இப்படி வாரத்தில் இரண்டு நாள்கள் பழைய அலுவலகத்தில், மூன்று நாள்கள் புது அலுவலகத்தில் என்று லட்சக்கணக்கான ரகசிய ஆவணங்களை மிகுந்த கவனத்துடன் இடம் மாற்றிக் கொண்டிருந்தார் அவர்.

இந்தக் காலகட்டத்தில் அவரால் கையாளப்பட்ட காகிதங்கள் ஒவ்வொன்றிலும், ஊசி வெடி, ஆனை வெடியில் தொடங்கி அணுகுண்டு வரையிலான பன்னாட்டு ரகசியங்கள் பொதிந்திருந் தன. எப்போதாவது, இந்தத் தகவல்களெல்லாம் வெளியே தெரியவந்தால், அதனால் திகைப்படையாத, அதிர்ச்சியடையாத தேசம் என்று அட்லஸில் ஒரு குட்டியூண்டு நாடுகூட இருக்க முடியாது.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களை, இப்படி ஒரு தனி நபரிடம் கொடுத்து, படித்துப் பார்க்கச் சொல்வார்களோ?

சொல்லியிருக்கிறார்களே! கிட்டத்தட்ட எழுபத்தைந்து ஆண்டு கள், உலகின் மிக முக்கியமான உளவு நிறுவனமாக எல்லோர்

விஷயத்திலும் மூக்கை நுழைத்துக்கொண்டிருந்த அறிவு ஜீவிகள், இந்தத் தகவல்களையெல்லாம் ஒப்புதல் வாக்குமூலம்போல் ஒரு முதியவர் கையில் மொத்தமாக ஒப்படைத்துவிட்டார்கள்.

இப்படி அவர்கள் அசாத்திய நம்பிக்கை வைத்திருந்த அந்த முதியவர், இந்த ரகசிய ஆவணங்களை எப்படியாவது வெளியே கொண்டு சென்றாகவேண்டும் என்று முடிவு செய்து, அதற்கான வழிகளைத் தேடத் தொடங்கியிருந்தார்.

இந்தக் காலம்போல், அப்போதெல்லாம் தெஹல்கா முன்னு தாரணங்கள், குண்டுசி சைஸ் கேமெராக்களெல்லாம் பரவலாகப் புழக்கத்தில் இல்லை. என்றாலும், உலகின் 'நம்பர் ஒன்' உளவாளிகளிடம் வேலை பார்க்கிறவர். அவர்களுடைய சிறிய பெரிய ஒற்றர்களின் ஜகதலப் பிரதாபங்களையெல்லாம் எழுத்துப் மூலமாகப் படித்துத் தெரிந்துகொண்டவர். அவருக்கு ஏதேனும் ஒரு வழி கிடைக்காமலா போய்விடும்?

முதலில், மிக எளிய ஒரு வழிமுறையோடு தொடங்கினார். நாள் முழுதும் தான் படிக்கிற எல்லாக் குறிப்புகளையும் நினைவில் வைத்திருந்து, இரவு வீடு திரும்பியதும் குறிப்பு எடுக்க ஆரம் பித்தார்.

பிசிறில்லாத, யாராலும் கண்டறியமுடியாத திருட்டுதான். ஆனால், வயதான காலத்தில் எவ்வளவு விஷயங்களைத்தான் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளமுடியும்? அதுவும் ஒவ்வொன்றும் முழ நீளத் துக்குச் சுருண்டு நெளிகிற ரஷ்யப் பெயர்களை?

சில வாரங்களுக்குப்பிறகு, இது சரிப்படாது என்று முடிவு செய்த அவர், அடுத்து என்ன செய்யலாம் என்று தீவிரமாக யோசிக் கலானார். முழுக் காகிதங்களை வெளியே கொண்டு செல்வதில் ஆபத்து அதிகம். ஆகவே, சிறிய துண்டுக் காகிதங்களில் குறிப்பு எடுத்துக்கொண்டு, அவற்றை ரகசியமாக இங்கிருந்து வெளியே கடத்தலாம் என்று முடிவு செய்தார்.

ஆனால், இதிலும் ஒரு சின்னப் பிரச்னை இருக்கிறது. எப்போதா வது, யாருக்காவது, அவர்மீது சந்தேகம் ஏற்பட்டு, திடீர் சோதனை செய்யக் கிளம்பிவந்தால், கையில் பேனாவும் பேப்பருமாக மாட்டிக்கொள்வார்.

இதற்கும் ஓர் உபாயம் சிந்தித்தார் அவர். சின்னச் சீட்டுகளில் முக்கியமான ஆவணங்களைக் குறிப்பெடுத்துக்கொள்வது,

பிறகு அவற்றைக் கசக்கி குப்பைத் தொட்டியில் வீசிவிடுவது - இப்படிச் செய்தால் தகவல்களும் நகலெடுக்கப்பட்டுவிடும், மாட்டிக்கொள்கிற அபாயமும் குறையும்.

இப்படி நாள்முழுதும் குப்பைத் தொட்டியைக் கசங்கிய காகிதப் பந்துகளால் நிரப்பிய அவர், பொழுது சாய்ந்ததும் அந்தக் காகிதங் களைப் பொறுக்கியெடுத்து, கசங்கல்களை நீவி ஒழுங்காக்கி, காலுறையினுள் ஒளித்துவைத்துக்கொள்வார். பிறகென்ன, 'எல்லோருக்கும் குட் நைட்' என்று நாசூக்காகக் கையசைத்து விட்டு, விறுவிறுவென்று வீட்டைப் பார்க்க நடக்கவேண்டியது தான்.

சில வாரங்கள் கழிந்தன. இந்த மனிதர் சாக்ஸுக்குள் எதையோ ஒளித்துவைத்துக்கொண்டு செல்கிறார் என்று யாருக்கும் தெரிய வில்லை. சும்மா பெயருக்குக்கூட அவரை யாரும் நிறுத்திச் சோதனை போடவில்லை.

முக்கிய அதிகாரிகள் எல்லோரும் புதிய கட்டடத்துக்குச் சென்று விட்டதாலோ என்னவோ, ஆவணக் காப்பறைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மெலிந்திருந்தன. எப்போதாவது நினைத்துக் கொண்டாற்போல் யாரையாவது தடுத்து நிறுத்தி, பெட்டி, பைகளைச் சோதிப்பார்கள். மற்றபடி சட்டைப் பைக்குள் கை விட்டுத் தேடுகிற பழக்கமெல்லாம் இல்லை.

இதை உன்னிப்பாகக் கவனித்து உறுதி செய்துகொண்டபிறகு, அவருக்குள் நம்பிக்கை அதிகரித்தது. சாக்ஸுக்குள் ரகசியங் களைச் சொருகாமல், சட்டைப் பைக்குள்ளேயே மடித்து வைத்துக்கொண்டு கிளம்பலானார்.

இப்படி அலுவலகத்திலிருந்து கடத்திக் கொண்டுவந்த காகிதங் களையெல்லாம், பத்திரமாகத் தன்னுடைய வீட்டிலும், 'டாச்சா' (Dacha) எனப்படும் விடுமுறை இல்லங்களிலும் ஒழுங்குபடுத்தி வைத்தார் அவர். முடிந்தபோதெல்லாம் அவற்றைத் தட்டச்சு செய்து தொகுத்தார். இவை எல்லாம், பத்திரமாகத் தரைக்கு அடியில் புதைக்கப்பட்டிருந்தன.

இதையெல்லாம் செய்தபோது, இந்தக் காகிதங்கள் அனைத்தும், மண்ணிலிருந்து வெளியே வருமா அல்லது அங்கேயே புதை யுண்டுவிடுமா என்பதுகூட அவருக்கு நிச்சயமாகத் தெரிய வில்லை. ஆனால், இவற்றைத் தொகுத்துப் பாதுகாக்கவேண்டி

யது தனக்கு விதிக்கப்பட்ட கடமை என்று எண்ணியவர்போல், தொடர்ந்து அதே முனைப்போடு பல முக்கியமான ஆவணங் களைக் கடத்திச் சேகரித்துக்கொண்டிருந்தார் அவர்.

ஒரு வருஷம் இல்லை, இரண்டு வருஷம் இல்லை, பன்னிரண்டு வருஷங்கள். *1984*-ல் அவர் பணியிலிருந்து ஓய்வு பெறும்வரை, இந்த ரகசியத் தேடல் தொடர்ந்துகொண்டிருந்தது.

இந்தப் பன்னிரண்டு வருஷத் தவம், அதன்பிறகு பதினைந்து ஆண்டுகள் கழித்துதான் உலகின் பார்வைக்குக் கிடைத்தது. அப்போது ஒரே நேரத்தில் உலகெங்கும் வெடித்த அந்த பூகம் பத்துக்குப்பிறகு, கேஜிபி (KGB) என்கிற பெயர் உச்சரிக்கப்படும் போதெல்லாம், கூடவே வாசிலி மிட்ரோகின் (Vasili Mitrokhin) என்ற அந்த முதியவரின் பெயரும் தவறாமல் பேசப்படுகிறது.



## 2. நாயும் துடைப்பமும்

'கேஜிபி' என்பது, *1954*-ம் ஆண்டு சோவியத் யூனியனில் உருவாக்கப் பட்டு, *1991*-ம் ஆண்டு அழிந்துபோய் விட்ட ஓர் அமைப்பு. அதன் மொத்த ஆயுள் காலமே, நாற்பது வயதைத் தாண்டவில்லை.

ஆனால், 'கேஜிபி' என்ற சொல், இந்தக் காலகட்டத்துக்கு முன்பும் பின்பும் சோவியத் நாட்டிலிருந்த பிற ரகசியக் காவல்துறை மற்றும் உளவு அமைப்பு களையெல்லாம் பொதுவாகக் குறிப் பிடுகிறது.

உதாரணமாக, ஒரு சின்னப் பட்டியல்:

* CHEKA (1917 - 1922)
* GPU (1922 - 1923)
* OGPU (1923 - 1934)
* GUGB (1934 - 1941)
* NKGB (1941, 1943 - 1946)
* GUGB (1941 - 1943)
* MGB (1946 - 1947)
* KI (1947 - 1951)

* MVD (1953 - 1954)

* KGB (1954 - 1991)

இவை எல்லாமே, 'கேஜிபி'யின் வெவ்வேறு அவதாரங்கள் தான். மஹாவிஷ்ணுவின் தசாவதாரங்கள்போல் வரிசையாக இப்படிப் பெயர்கள் நீண்டாலும், இவை எல்லாவற்றுக்கும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான நோக்கங்கள், வழிமுறைகள், மனிதர்கள். மக்களிடையே அவை சம்பாதித்த ஆதரவும் எதிர்ப்பும்கூட ஒரே மாதிரியானவைதான்.

1917-ல் ரஷ்யப் புரட்சி வெற்றிபெற்று, அங்கே போல்ஷ்விக் அரசு அமைந்தபிறகு, கிட்டத்தட்ட அதே நேரத்தில் உருவான அமைப்பு, 'செகா' (Cheka). அதன்பிறகு, **1991**-ல் சோவியத் யூனியன் சிதறிக் கவிழும்வரை, அங்கே வெவ்வேறு பெயர்களில் 'செகா'வின் ஆதிக்கம் கொடி கட்டிப் பறந்தது.

இந்தக் காலகட்டத்தில், தலைவர்கள் மாறினார்கள்; தலைமுறைகள் மாறின; மக்களின் மனவோட்டம் மாறியது; அரசியல், பொருளாதாரம், கலாசாரம், கலை, இலக்கியம், காலநிலை என்று சகலமும் மாறியது. இத்தனைக்கும் மாறாமல் தனித்துவத்தோடு நின்ற மிகச் சில விஷயங்களில் ஒன்று, கம்யூனிஸ்ட் கட்சி, இன்னொன்று, 'செகா' என்கிற 'கேஜிபி!'

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியை, இப்படி ஒரு ரகசிய உளவு அமைப்போடு ஒப்பிடுவது கொஞ்சம்கூட நியாயமில்லைதான். ஆனால், 'தாற்காலிக ஏற்பாடு' என்று சொல்லிக்கொண்டு 'செகா'வைத் தோற்றுவித்த காம்ரேட்கள், அதன்பிறகு எந்தக் காலகட்டத்திலும் அதை ஒழித்துக்கட்டுவதற்கு நியாயமான முயற்சிகளை எடுக்கவில்லை. மாறாக செல்லம் கொஞ்சிப் பாராட்டிக் கொண்டுதான் இருந்தார்கள் என்பதை வேறு எப்படிச் சொல்வது?

மிகவும் நுணுக்கமாக அலசி ஆராயவேண்டிய இந்த விஷயத்தைப் பார்ப்பதற்குமுன், 'செகா' என்பது என்ன? அப்படி ஓர் அமைப்பைத் தொடங்குவதற்கான அவசியம் ஏன் ஏற்பட்டது?

இந்தக் காரணத்தை முழுமையாகத் தெரிந்துகொள்ளவேண்டுமானால், சுமார் ஐந்தரை நூற்றாண்டுகள் பின்னோக்கிச் செல்லவேண்டும்.

அப்போது ரஷ்யாவில் நான்காம் இவான் (Ivan IV) என்று ஓர் அரசன் இருந்தான். 'ஜார்' என்ற பட்டத்தை முதன்முதலாகச் சூடிக்கொண்ட இவனை பெரும்பாலான சரித்திரப் புத்தகங்கள் 'Ivan the Terrible' என்று அலங்காரமாக வருணித்து, முரட்டு தாடி, கோபப் பார்வையோடு படங்கள் வரைந்து பயமுறுத்துகின்றன.

'Terrible' என்றால், தமிழில் பயங்கரமானவன், கொடூரமானவன் என்று அர்த்தம். இப்படிப் பூச்சாண்டித்தனமாக ஒரு நேரடிப் பட்டப்பெயரைச் சூட்டியிருக்கிறார்கள் என்றால், அந்த இவான் எந்த அளவு முரடனாக இருந்திருப்பான் என்று நாம் ஓரளவு ஊகித்துக்கொள்ளலாம்.

ஆனால், இவானின் பெயர் அல்லது ஆகிருதியைக் கண்டு நடுங்காதவர்கள் அந்தப் பதினாறாம் நூற்றாண்டில் இருந்திருக் கிறார்கள். அவர்கள்மீது அனல் பார்வை வீசிக் கோபித்த இவான், எல்லோரையும் மொத்தமாக அழிப்பதற்கு ஒரு படு பயங்கரமான வழி கண்டுபிடித்தான்.

'ஒப்ரிசினிகி' (Oprichiniki) என்ற பெயரில் தனக்கென்று ஒரு தனி நபர் பாதுகாப்புப் படையை உருவாக்கிக்கொண்டான் இவான். இந்தப் படையின் நோக்கம், மாட்சிமை பொருந்திய இவான் மஹாராஜாவை யாரும் நெருங்கிப் பிரச்னை செய்துவிடாதபடி காப்பாற்றுவது.

இந்தக் கால அரசியல்வாதிகளின் கறுப்புப் பூனைப் படைகளுக்கு முன்னோடியான இந்த ஒப்ரிசினிகிகள், அரசரைப் பாதுகாப்ப தோடு நின்றுவிடாமல், அரசருடைய எதிரிகள், அல்லது எதிரி களாகக்கூடியவர்கள் எல்லோரையும் முன்னெச்சரிக்கை நட வடிக்கையாக, கொன்று தீர்த்தார்கள்.

'எதிரிகள்' தெரியும், அதென்ன 'எதிரிகளாகக்கூடியவர்கள்?'

இவான் அரசரை எதிர்த்து, குரல் கொடுப்பவர்கள் அல்லது மக்களின் ஆதரவு / படை திரட்டுபவர்களையெல்லாம் ஒப்ரிசினிகி கள் தேடிப்பிடித்து தண்டித்தார்கள். அதோடு நிறுத்திவிடாமல், வருங்காலத்தில் அரசருக்கு எதிராகச் செயல்படக்கூடியவர்கள் என்றும் சிலரைப் பிடித்துக்கொண்டார்கள்.

இப்படி யாரெல்லாம் அரசருக்கு எதிரியாகக்கூடியவர்கள் என்று கண்டறிவதற்கு, அவர்கள் எந்த ஜோசியரையேனும் ஆலோசனை

கேட்டார்களா என்பது தெரியவில்லை. ஆனால் அறிவியல் பூர்வமான, தகவல் அடிப்படையிலான எந்த ஆய்வுகளும் நடை பெறவில்லை என்பதுமட்டும் உறுதி.

அதாவது, ஒப்ரிசினிகிகள் நினைத்தால், ஊருக்குள் யாரை வேண்டுமானாலும், 'எதிர்கால எதிரி' என்று மோனையில் பட்டம் சூட்டி இழுத்துச் செல்லலாம். விசாரணை நடத்தாமல், இஷ்டம்போல் தண்டிக்கலாம்.

தண்டனை என்றால், சவுக்கடி, 'ஜில்' தண்ணீரில் நிறுத்துவ தெல்லாம் கிடையாது. நேரடியாக மரண தண்டனைதான். கனவில்கூட யாரும் அரசரை எதிர்த்து, கிளர்ச்சியில் இறங்கி விடக்கூடாது என்பதில் ஒப்ரிசினிகிகள் மிகவும் கவனமாக இருந்தார்கள்.

இதனால், மக்கள் எல்லோரும் ஒப்ரிசினிகிகளைப் பார்த்தாலே பயந்து நடுங்கினார்கள். எந்த நேரத்தில் என்ன நடக்குமோ, யார்மீது என்ன குற்றச்சாட்டு சுமத்தப்படுமோ, யாரை எப்படித் துன்புறுத்துவார்களோ என்று எங்கு பார்த்தாலும் கலவரச் சூழல்.

இதற்கேற்ப, ஒப்ரிசினிகிகளுக்குப் பொருத்தமான ஒரு யூனி ஃபார்ம் தேர்ந்தெடுத்திருந்தான் இவான். மரணத்தின் தூதர் களைப்போலக் கறுப்பு உடை அணிந்து, கறுப்புக் குதிரையில் அவர்கள் ஏறி வருவதைப் பார்த்தாலே, எதிர்ப்புச் சிந்தனைகள், கற்பனைகளெல்லாம் நடுங்கி ஒடுங்கி மறைந்துவிடும்.

கறுப்புச் சீருடையைப்போலவே, ஒப்ரிசினிகிகளுக்காக இவான் தேர்வு செய்திருந்த சின்னமும் மிகப் பிரபலமானது, அதில் நாய் ஒன்றின் படமும், துடைப்பம் ஒன்றும் இடம்பெற்றிருந்தது.

நாய்க்கும் துடைப்பத்துக்கும் என்ன சம்பந்தம்?

தவறு செய்கிறவர்களை மோப்பம் செய்து பிடிப்பது நாய். அவர்களை, அதாவது குப்பைகளை ஒதுக்கித் தள்ளுவதற்கு துடைப்பம். அரசருடைய பாதுகாவல் படைக்கு இதைவிடப் பொருத்தமான ஒரு சின்னம் வேறென்ன இருக்கமுடியும்?

இந்தச் சின்னத்துக்கேற்பவே ஒப்ரிசினிகியின் பணிகளும் அமைந்திருந்தன - இவான் அரசுக்கு எதிராகப் பிரச்னைகளைத் தூண்டுபவர்களை மோப்பம் பிடிப்பது, குற்றவாளிகளை ஒடுக்கி அழிப்பது.

தன்னுடைய பாதுகாப்புப் படையினரைப் பார்த்து எல்லோரும் பயப்படவேண்டும் என்பதில் கவனமாக இருந்த இவான், அதில் இடம்பெறுபவர்கள் ஒவ்வொருவரையும் தானே கவனமாக நேர்முகம் செய்து தேர்ந்தெடுத்தான்.

இப்படித் தேர்வாகிறவர்கள் எல்லோரும், அரசரிடம் தனிப்பட்ட முறையில் உறுதிமொழி எடுத்துக்கொள்ளவேண்டும். வேலையில் எந்தக் கஷ்டம் வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல், அரசரது விரோதிகளை அழிப்போம் என்று சத்தியம் செய்ய வேண்டும். அதன்பிறகுதான், கறுப்பு யூனிஃபார்ம் கைக்குக் கிடைக்கும்.

இதுபோல் சுமார் 6000 பேரைத் தனது ஒப்ரிசினிகி படையில் வைத்திருந்தான் இவான். இந்த வீரர்களால், நாட்டில் பல குழப்பங்கள், மரணங்கள், கலவரங்கள், கொடுமைகள் வரிசையாக அரங்கேறின.

இவானுக்குப்பிறகும், பல்வேறு தேசங்களைச் சேர்ந்த அரசர்கள் இப்படித் தனி நபர் படைகளை அமைத்து, தங்களுடைய பாதுகாப்பை உறுதி செய்துகொண்டிருக்கிற தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இந்தப் படைகளைச் சேர்ந்தவர்களுடைய முக்கியக் கடமை, அரசரையும், அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் பாதுகாப்பது. ஆட்சிப் பறிப்புகள், அரசியல் கொலைகளெல்லாம் சகஜமாகியிருந்த அன்றைய சூழலில், இது ஒரு மிக முக்கியமான, சவாலான பணியாகக் கருதப்பட்டது.

ஆகவே, பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்தவர்கள் அரசரோ, அவரது குடும்பத்தினரோ அரசவை, கோயில், குளம், ஜாலியாக மான் வேட்டை என்று எங்கே கிளம்பினாலும், கூடவே பின் தொடரவேண்டும். அவசியம் ஏற்பட்டால், தங்களது உயிரைக் கொடுத்தேனும் அரச பரம்பரையைக் காப்பாற்றவேண்டும்.

படை வீரர்கள், புரவிகள் என்று ஏதோ சரித்திரப் புதினம் படிக்கிற பிரமை வருகிறதா? தப்பில்லை, ஒப்ரிசினிகிகளில் தொடங்கி, பெரும்பாலான காவல் படையினர் இந்தப் பாதுகாப்பு வேலைகளில்தான் முக்கியமாக ஈடுபட்டிருந்தார்கள்.

ஒழிந்த நேரத்தில், உளவு வேலைகள் இருந்தன. அரசருக்கு எதிராகப் பேசுகிற அல்லது செயல்படுகிறவர்கள் யார் யார்? அவர்

களுடைய நோக்கங்கள் என்ன, திட்டங்கள் என்ன என்பது போன்ற தகவல்களை அறிந்துவந்து, அவற்றைப் பயன்படுத்தி சதித் திட்டங்களை முறியடிக்கிற புத்திசாலித்தனமும், அப் போதே 'ரகசிய போலீஸ்' அடையாளமாகிவிட்டது.

இவ்வாறு படிப்படியாக ஜார் அரசாங்க அமைப்பின் ஒரு தவிர்க்க முடியாத அங்கமாகவே தொற்றிக்கொண்டுவிட்ட பாதுகாப்புப் படையினருக்கு, பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் மீண்டும் முக்கியத்துவம் அதிகரித்தது. இதற்குக் காரணமாக அமைந்த ஜார் மன்னரின் பெயர், அலெக்ஸாண்டர் II.

1818-ல் பிறந்த இரண்டாம் அலெக்ஸாண்டர், தன்னுடைய முப்பத்தேழாவது வயதில் ரஷ்யாவின் அரசரானார். அடுத்த சில ஆண்டுகளுக்குள், நாடு முழுவதும் அவருக்கு விரோதிகள் முளைத்துவிட்டார்கள்.

அவருக்கு எதிரான முதல் கொலை முயற்சி, 1866 ஏப்ரலில் நடந்தது. புனித பீட்டர்ஸ்பர்க்கில் ஓர் ஓவியக் கண்காட்சியைத் திறந்துவைத்துவிட்டுத் திரும்பிய மன்னரை, யாரோ சிலர் சுட்டுக் கொல்ல முயன்றார்கள். அதிர்ஷ்டவசமாக, இந்தத் தாக்குதலில் இருந்து தப்பிவிட்டார் அரசர்.

இந்த ஆபத்திலிருந்து கடவுள்தான் தன்னைக் காப்பாற்றினார் என்று நம்பிய அலெக்ஸாண்டர், இதைக் கொண்டாடும் வகையில் நாடு முழுதும் தேவாலயங்கள், பிரார்த்தனை மண்டபங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டார்.

அதோடு நிறுத்திவிடாமல், தன்னைக் கொல்ல முயன்றவர்களைக் கண்டுபிடித்து தண்டிக்கவேண்டும் என்று உறுதியாக எண்ணிய அரசர், இதற்காக அதே பீட்டர்ஸ்பர்க் நகரில் 12 உறுப்பினர்களோடு ஒரு புதிய அமைப்பைத் தோற்றுவித்தார். இதன் பெயர், 'Department on Securing the Order and Public Peace.' அதாவது மக்களிடையே ஒழுங்கையும் அமைதியையும் உறுதிப் படுத்தும் துறை.

அதாவது, மஹாராஜாவைக் கொல்வதற்குச் சிலர் மெனக்கெடுகிறார்கள் என்றால், நாட்டில் ஏதோ சட்டம் ஒழுங்கு கெட்டுப் போயிருக்கிறது. அதற்கான காரணங்களைக் கண்டறிந்து சரி செய்யவேண்டும். மீண்டும் அமைதிப் புறாவைப் பறக்கவிட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை இந்தப் புதிய அமைப்பு செய்யும் என்று நம்பப்பட்டது.

ஆனால் இந்த அமைப்பு, எதிர்பார்த்ததுபோல் மக்களின் அடிப் படைப் பிரச்னைகள், எதிர்பார்ப்புகளில் கவனம் செலுத்த வில்லை. அரசரைக் கொல்ல முயன்றவர்கள் யார், அவர்களை எப்படிக் கண்டறிந்து தண்டிக்கலாம் என்றுதான் பழி வாங்கத் துடித்துக்கொண்டிருந்தார்கள்.

இதனால், ரஷ்யாவில், அதாவது இரண்டாம் அலெக்ஸாண்டரின் ஆட்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எவையும் இல்லை. மாறாக, மக்களிடையே அதிருப்திதான் அதிகரித்தது.

இப்படி அரசுக்கு எதிராகக் கோபம் கொண்டு போராடத் துணிந்தவர்கள் சிலர், 'மக்கள் சக்தி' என்று பொருள்படும்படி யாக, 'நரோட்னயா வோல்யா' (Narodnaya Volya) என்ற பெயரில் ஒரு புரட்சி இயக்கத்தை உருவாக்கினார்கள். இந்த அமைப்பின் நோக்கம், அரசரைத் தீர்த்துக்கட்டுவது.

இந்த அதிருப்தியாளர்கள், *1879* ஏப்ரல், டிசம்பர் மற்றும் *1880* பிப்ரவரி என்று வரிசையாக மூன்றுமுறை இரண்டாம் அலெக் ஸாண்டரைக் கொல்ல முயன்றார்கள். அரசருக்கு ஆயுள் கெட்டி. ஒவ்வொருமுறையும் பிரச்னையில்லாமல் தப்பித்துவிட்டார்.

தன்னுடைய அதிர்ஷ்டம் இன்னும் எத்தனை நாளைக்கு இப்படித் தன்னைக் காப்பாற்றும் என்று தெரியாமல் விழித்த அரசர், ஒரு விஷயத்தைமட்டும் தெளிவாகப் புரிந்துகொண்டார். அமைதியை நிலைநாட்டுவதற்காக தொடங்கிய குழுவால் பெரிதாகப் பலன் எதுவும் கிடைத்துவிடவில்லை, மக்கள் இன்னும் ஆவேசமாக துப்பாக்கியோடு அலையத் தொடங்கி விட்டார்கள்.

ஆகவே, இந்த நிலைமையைச் சமாளிக்க, இன்னும் தீவிரமான முறையில் வலுவான பாதுகாப்பு அமைப்பு ஒன்றைத் தொடங்க வேண்டும் என்று முடிவு செய்தார் இரண்டாம் அலெக்ஸாண்டர். இதன்படி, 'மாகாணக் காவல்துறை' (Department of State Police) என்ற புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது. முன்பைவிட அதிக அதி காரங்களுடன் ரஷ்யாமுழுவதும் பிரச்னைக்காரர்களை வலை வீசித் தேடத் தொடங்கியது.

ஆனால், புத்திசாலித்தனமான இந்த ஏற்பாடாலும், இரண்டாம் அலெக்ஸாண்டரின் உயிரைக் காப்பாற்றமுடியவில்லை என்பது தான் சோகம்!

1881-ம் ஆண்டு மார்ச் 1-ம் தேதி, ஐந்து பேர் அடங்கிய குழு ஒன்று, அரசர் இரண்டாம் அலெக்ஸாண்டரை வெவ்வேறு திசைகளில் இருந்து சுற்றி வளைத்து, வெடிகுண்டுகளைப் பயன்படுத்தித் தாக்கிக் கொன்றது.

உலக அளவிலான தீவிரவாத நடவடிக்கைகளைத் தொடங்கி வைத்த இந்தச் சம்பவம், மன்னராட்சி ரஷ்யாவில் பலமான அதிர்வுகளை உண்டாக்கியது. அரசருடைய, அரசாங்கத்துடைய எதிர்ப்பாளர்களைக் கண்டறிந்து சமாளிப்பது எப்படி?

இந்தக் கவலைதான் புதிதாக ஆட்சிக்கு வந்த மூன்றாம் அலெக்ஸாண்டரைத் துன்புறுத்திக்கொண்டிருந்தது. முந்தைய அலெக்ஸாண்டர்போல் தனக்கு நான்கைந்து வாய்ப்புகள் கிடைக்குமா அல்லது ஒரே அடியில் வீழ்த்திச் சாய்த்துவிடுவார்களா என்று பரபரப்பாகிக்கொண்டிருந்தார் அவர்.

புதிய அரசர் எதிர்பார்த்ததுபோலவே, அவரையும் கொல்வதற்கான முயற்சிகள் சீக்கிரத்தில் தொடங்கிவிட்டன. ஒரு வருஷம் முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட காவல்துறையால், புரட்சிக்காரர்களைத் தடுக்கமுடியவில்லை.

இதனால், மேலதிகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் சிலவற்றைச் செய்துகொள்வது என்று முடிவெடுத்த மூன்றாம் அலெக்ஸாண்டர், தனது ராஜ்ஜியத்தின் பல பகுதிகளில் இதற்கென்று விசேஷமான பாதுகாப்பு மையங்களைத் திறக்கத் தொடங்கினார்.

முதன்முதலாக மாஸ்கோ மற்றும் வார்சா நகரங்களில் அமைக்கப்பட்ட இந்தப் பாதுகாப்பு அலுவலகங்களை, நமது இந்தக் கால போலீஸ் ஸ்டேஷன்களின் முன்னோடிகள் என்று சொல்லலாம். மூன்றாம் அலெக்ஸாண்டர் காலத்தில் இவற்றுக்குச் சூட்டப்பட்டிருந்த பெயர், பாதுகாப்பு மற்றும் விசாரணைக்கான ரகசியக் காவல் நிலையங்கள் - Security and Investigation Secret Police Stations.

இந்த ஏற்பாட்டின்மூலம், முக்கியமான ஒரு சிந்தனை மாற்றம் ஏற்பட்டது. அரசரைப் பாதுகாக்க எண்ணுகிறவர்கள், துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு அவருக்குப் பின்னாலேயே உலவிக்கொண்டிருந்தால் போதாது. ஊருக்குள் என்ன நடக்கிறது, யார் என்ன பேசிக்கொள்கிறார்கள், உள்ளூர்க் கலவரங்கள் என்னென்ன, அவற்றின் பின் விளைவுகள் என்னவாக இருக்கலாம், அவற்றைக் கட்டுப்படுத்துவது எப்படி? - இதையெல்லாம்

கவனித்துச் செயல்பட்டால்தான், புரட்சிக்கான சாத்தியங்களை முளையிலேயே கிள்ளி எறிய முடியும்.

இதைப் புரிந்துகொண்ட மூன்றாம் அலெக்ஸாண்டர், வெவ் வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களைக் கண்காணிப்பதற்காகவே இந்தக் காவல் நிலையங்களைத் தொடங்கினார். பின்னர் இவை படிப்படியாக வளர்ச்சியடைந்து, வேறு சில முக்கியமான பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டன.

*1881* முதல், 1917-ல் ரஷ்யாவில் ஜார் வம்ச ஆட்சி வீழ்த்தப்படும் வரை, மன்னர், அவரது குடும்பம், ஆட்சியைப் பாதுகாப்பதற் காகப் போராடிய இந்தக் காவல் படை, அந்தக் கால ஒப்ரிசினிகி கள் அளவுக்குக் கொடூரமாக நடந்துகொள்ளாவிட்டாலும், ஜார் அரசர்களுக்கு எதிராக மக்களிடையே புரட்சி எண்ணங்கள் தோன்றாதபடி தொடர்ந்து பயத்தில் வைத்திருந்தது.

நவீன கேஜிபியின் கொள்ளுத் தாத்தாவான இந்தப் பாதுகாப்புக் குழுவின் பெயர், 'ஒக்ரானா' (Okhrana).



# 3. முதுகில் சில கண்கள்

'ஒக்ரானா'வின் முழு வடிவம், 'ஒக்ரானயொ ஒடெலினியா', ரஷ்ய மொழியில் இதன் பொருள், 'பாது காப்புத் துறை', அல்லது 'பாதுகாப்புப் பிரிவு.'

இப்படி நேரடியான ஒரு பெயருடன் களத்தில் இறங்கிய 'ஒக்ரானா'க்களுக்கு, முந்தைய சம்பவங்கள், அனுபவங் களின் அடிப்படையில் சில மிக முக்கிய மான பணிகள் ஒதுக்கப்பட்டிருந்தன:

1. ஜார் மன்னர், அவருடைய குடும்பத் தினரைப் பாதுகாப்பது.
2. கலவரங்கள், கொலை முயற்சி களை முன்கூட்டியே கண்டறிந்து, ஒடுக்குவது.

புதிதாக ஒன்றும் இல்லை. கிட்டத்தட்ட முந்தைய 'போலீஸ்'கள் செய்துகொண் டிருந்த அதே பணிகள்தான். ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி யில் ரஷ்யாவில் ஏற்பட்டிருந்த சில மிகப் பெரிய அரசியல், சமூக மாற்றங்

களின் அடிப்படையில், 'ஒக்ரானா'க்களுக்குப் பல புதிய சவால்கள் காத்திருந்தன.

உதாரணமாக, அதுவரை சொன்ன வேலையைச் செய்துவிட்டு, கொடுத்த சம்பளத்தை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்த தொழிற்சாலை ஊழியர்கள், இப்போது அதிகச் சம்பளம் வேண்டும், கூடுதல் சவுகரியங்கள் வேண்டும், நாள் முழுதும் (கிட்டத்தட்ட பதினான்கு மணி நேரங்கள்) எங்களைக் கசக்கிப் பிழியக்கூடாது என்றெல்லாம் குரல் கொடுக்கத் தொடங்கியிருந்தார்கள்.

இதுபோன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, ரஷ்யா முழுவதும் 1895-ம் ஆண்டுமுதல் நூற்றுக்கணக்கான போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் நடைபெறத் தொடங்கியிருந்தன.

தொழிற்சாலைகளைப் பொருத்தவரை, முதலாளிகள்தான் அரசருக்குச் சமம். அந்த முதலாளிகளை எதிர்த்துச் சிலர் போராட்டத்தில் குதிக்கிறார்கள் என்றால், நாளைக்கு இவர்கள் அரசருக்கு எதிராகக் கொடி தூக்குவதற்கும் தயங்கமாட்டார்கள் என்றுதானே அர்த்தம்?

இதை உணர்ந்து சுதாரித்துக்கொண்ட ஜார் வம்சம், இப்போதைய நிலைமையில் 'ஒக்ரானா'க்களுடைய தேவை எங்கெல்லாம் இருக்கிறது என்று தெளிவாக வரையறுத்துக் கொடுத்தார்கள்.

1. தொழிலாளர் போராட்டங்களைக் கண்டறிந்து, தடுத்து நிறுத்துவது.
2. வம்பு செய்யும் தொழிலாளர் தலைவர்களை விலைக்கு வாங்குவது, அல்லது செயல்படமுடியாதபடி முடக்குவது.
3. தொழிற்சாலைகளுக்கு வெளியே, அரசாங்கத்துக்கு எதிர்ப்பு இருக்கிறதா என்று கண்டறிவது.
4. ராஜ விரோதிகளை அடையாளம் காண்பது.

இவை எல்லாவற்றையும்விட முக்கியமாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் ரஷ்யா முழுவதும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியிருந்த மார்க்சிஸ்ட் கொள்கை இயக்கங்களை எப்படியாவது முடக்கிவிடவேண்டும் என்று நினைத்தது ஜார் அரசாங்கம். ஒக்ரானா அதிகாரிகள் அதற்கான திட்டங்களைத் தீட்டத் தொடங்கினார்கள்.

பிரச்னையின் ஆணி வேராகத் தோன்றுகிற தொழிலாளர் போராட்டங்களை முதலில் கவனிக்கவேண்டும் என்று முடிவு செய்த ஒக்ரானா, ரஷ்யாவில் தொழிற்சாலைகள், தொழிலாளர்கள் அதிகம் வசிக்கும் புனித பீட்டர்ஸ்பர்க், மாஸ்கோ, வார்ஸா உள்ளிட்ட பகுதிகளில் தங்களது பாதுகாப்பு மையங்களைத் தோற்றுவித்தார்கள்.

இந்தப் பாதுகாப்பு மையங்களின் முக்கியமான நோக்கம், தொழிலாளர்களுக்கிடையே ரகசியமாக ஊடுருவி, அவர்களுடைய மனத்தில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதுதான்.

இதற்காக, யூனிஃபார்ம் போட்ட காவல் அதிகாரிகளை இறக்குமதி செய்யாமல், உள்ளூர்த் தொழிலாளர்களில் சிலரையே தங்களது ஊழியர்களாக வேலைக்குச் சேர்த்துக்கொண்டது, ஒக்ரானா.

ஊழியர்கள் என்று சொல்வதைவிட, உளவாளிகள் என்று சொல்லலாம். அவர்களுடைய ஒரே வேலை, தொழிலாளர் அமைப்புகள் / யூனியன்களில் ஆர்வத்தோடு ஈடுபடுவதுபோல் நடித்து, உள் விவகாரங்களை அறிந்து வந்து ஒக்ரானாவுக்குச் சொல்வதுதான்.

இதற்காக தொழிலாளர்களுக்கு மிக நல்ல சம்பளம் அல்லது சன்மானம் தரப்பட்டது. முன்பு எப்போதும் பார்த்திராத தொகையைப் பெற்றுக்கொண்ட அவர்கள், ஒக்ரானாவுக்கு விசுவாசத்தோடு செயல்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

இதே காலகட்டத்தில் இன்னொரு தந்திரத்திலும் இறங்கியது ஒக்ரானா. அதன் அதிகாரிகள் / ஏஜெண்ட்கள் சிலர், தொழிலாளர்களுடன், குறிப்பாக யூனியன் தலைவர்களோடு நெருங்கிப் பழகத் தொடங்கினார்கள்.

இதன்மூலம், பல ரகசியங்களை நேரடியாகத் தெரிந்துகொள்ள முடிவது ஒரு சவுகரியம். கூடவே, போராட்டத் தலைவர்களை மூளைச் சலவை செய்கிற அபூர்வமான வாய்ப்பும் அவர்களுக்குக் கிடைத்தது.

ராஜாதிராஜ ராஜ குலோத்துங்க ராஜ திலக முதலாளிகள் எவ்வளவு நல்லவர்கள்! நமக்கெல்லாம் குறையொன்று

மில்லாதபடி என்னென்ன வசதிகளைச் செய்துகொடுத்திருக் கிறார்கள். அவர்களிடம் இத்தனை நாளாக வாங்கித் தின்று கொண்டிருந்த நாம், இப்போது எல்லாவற்றையும் மறந்து கொடி தூக்குவது என்ன நியாயம்? எங்கே போனது நம்முடைய விசுவாசம்?

ஆனால், இதுபோன்ற 'ஜிலுஜிலு' வார்த்தைகளுக்கெல்லாம் போராட்டத் தலைவர்கள் மயங்கிவிடுவார்களா? தொழிலாளர் உரிமை என்பது அத்தனை சுலபத்தில் மறக்கடித்துவிடக்கூடிய ஆடம்பர நோக்கமில்லை. அடிப்படை உரிமை என்பது ஒக்ரானாவுக்கு ஏனோ புரியவே இல்லை.

ஆகவே, தொழிலாளர் தலைவர்களைப் பேச்சின்மூலம் மூளைச் சலவை செய்வது, பணம் அல்லது பிற சவுகரியங் களைச் செய்து கொடுத்து விலைக்கு வாங்குவது போன்ற ஒக்ரானாவின் நடவடிக்கைகள், அதிகப் பலனளிக்கவில்லை. ரஷ்யாவில் போராட்டத்தின் சிவப்புக் கொடி உயரத்தான் செய்தது.

1905-ம் ஆண்டு ரஷ்யாவை உலுக்கிய புரட்சி, பெரிய அளவில் வெற்றியடையாவிட்டாலும் ஜார் வம்சத்தினர் மனத்தில் ஒருவிதமான நடுக்கத்தை உருவாக்கியிருந்தது. என்றைக்காவது ஒருநாள், இந்த எதிர்கோஷ்டியினர் நிச்சயமாகத் தங்களைச் சட்னியாக்கிவிடுவார்கள் என்று புரிந்துகொண்ட அவர்கள், அதற்கு முன்னால் தாங்கள் முந்திக்கொள்ளத் தீர் மானித்தார்கள்.

இதையடுத்து, அதுவரை அங்கொன்றும் இங்கொன்றுமாக அமைக்கப்பட்டிருந்த ஒக்ரானா நிலையங்கள், நாடுமுழுதும் விரிவாக்கப்பட்டன. அரசுக்கு எதிரான புரட்சி அமைப்புகள் வலுப்பெற்ற அதே வேகத்தில், ஒக்ரானாக்களின் எண்ணிக்கை, பலமும் பெருமளவு அதிகரிக்கப்பட்டது.

முன்பு தொழிலாளர் தலைவர்களைத் தேடிப் பிடித்தது போலவே, இப்போது புரட்சியாளர்கள், கம்யூனிசத் தலைவர் களைக் குறி வைத்தது ஒக்ரானா. ஜார் வம்சத்துக்கு எதிரான கலவரங்கள், போராட்டங்களையெல்லாம், அவை நிகழ்வதற்கு முன்பே தடுத்து நிறுத்தவேண்டும் என்பதுதான் இந்த நடவடிக்கைகளின் பிரதான நோக்கம்.

இதற்காக, ஒக்ரானா பிரதிநிதிகள் அதிருப்தியாளர்களோடு நெருங்கிப் பழகி, அவர்களுடைய நம்பிக்கையைப் பெறத் தொடங்கினார்கள். அரசருக்கு விரோதமாக ஒரு சுண்டு விரல் உயர்ந்தாலும்கூட, அந்தத் தகவல் உடனே ஒக்ரானா மேலிடத் துக்குத் தெரிந்துவிடவேண்டும் என்பதுதான் அவர்களுடைய லட்சியமாக இருந்தது.

முந்தைய முயற்சிகளோடு ஒப்பிடுகையில், இந்தமுறை ஒக்ரானாவின் உளவாளிகளுக்குக் கணிசமான வெற்றி கிடைத்திருந்தது. இதற்குக் காரணமாக, இரண்டு விஷயங் களைக் குறிப்பிடலாம்.

முதலாவது, ஒக்ரானாவின் மாஸ்கோ பிரிவுத் தலைவராக இருந்த செர்கே ஜுபடோவ் (Sergei Zubatov) என்பவர், 1895-ம் ஆண்டில் தொடங்கி, அதன் நடவடிக்கைகளை நவீனப்படுத்து வதற்கான முயற்சிகளில் இறங்கியிருந்தார்.

சந்தேகத்துக்குரிய நபர்களைப் பற்றிய விவரங்கள் எல்லா வற்றையும், சுலபமாகக் கைக்குச் சிக்கும் வகையில் ஒரே கோப்பினுள் (File) சேமித்துவைக்கவேண்டும் என்கிற அடிப்படை அரிச்சுவடியில் தொடங்கி, ரகசியத் தகவல்களைச் சேகரிப்பதற்கு புகைப்படக் கருவியைப் பயன்படுத்துவது, அதிரடி நடவடிக்கைகளுக்குப் பறக்கும் படை என்று பல புதிய விஷயங்களை ஒக்ரானாவில் அறிமுகப்படுத்தினார் செர்கே.

இதனால், அதுவரை பழைய பஞ்சாங்கமான வழிமுறைகளை மட்டும் பயன்படுத்திப் பல் உடைந்துகொண்டிருந்த ஒக்ரானா ஏஜெண்ட்களுக்கு, ஏராளமான நவீன உளவாடல் மற்றும் ஒற்றறி தல் தந்திரங்கள் சொல்லித்தரப்பட்டன. முறைப்படி பயிற்சி பெற்ற இவர்கள், எதிராளிக்குச் சந்தேகம் ஏற்படாதபடி தகவல் களைச் சேகரிப்பதில் நிபுணத்துவம் பெற்றிருந்தார்கள்.

இதுதவிர, தனக்குக்கீழே பணிபுரிகிறவர்களைமட்டும் நம்பிக் கொண்டிருக்காமல், தேவைப்பட்டால், உளவாளிகளைக் காசு கொடுத்து விலைக்கு வாங்கலாம் என்கிற அட்டகாசமான யோசனையும் ஒக்ரானாவுக்கு இப்போது வந்திருந்தது.

உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட புரட்சி இயக்கத்தில் கெடுபிடி ஜாஸ்தி, நண்பர்களைப்போல் அதில் இணையும் ஒக்ரானா

ஊழியர்கள், முக்கியத் தலைவர்களை நெருங்குவதும், அவர் களுடைய நம்பிக்கையைப் பெறுவதும் மிகச் சிரமமாக இருக் கிறது என்று வைத்துக்கொள்வோம்.

இப்படியொரு சூழ்நிலையில், இரும்புக் கோட்டையை உடைத்து உள்ளே நுழைவதற்கு முட்டி மோதிக்கொண்டிருக் காமல், அந்தத் தலைவருக்கு ஏற்கெனவே நெருக்கமாக இருக் கிற ஒருவரைத் தங்கள் வசம் இழுத்துக்கொண்டுவிடுவது. அவ்வளவுதான் விஷயம்!

கேட்பதற்குச் சுலபமாகத் தோன்றுகிற இந்தத் திட்டத்தை, யதார்த்தத்தில் நிறைவேற்றுவது மிகவும் சிரமம். ஆகவேதான், இதற்கென்று ஏகப்பட்ட தந்திரங்களை யோசித்துவைத்திருந் தது ஒக்ரானா.

முதலாவதாக, பணம். ஒக்ரானாவின் உளவாளியாக இயங்க விரும்புகிற ஒருவருக்கு, அவர் சார்ந்திருக்கும் இடத்தின் முக்கியத்துவத்தைப் பொறுத்து, மாதம் சுமார் நூறு ரூபிள்களில் தொடங்கி, ஆயிரக்கணக்கில்கூட சன்மானம் அள்ளித் தரப் பட்டது.

அந்தக் காலகட்டத்தில் ஒரு சராசரி ரஷ்யத் தொழிலாளி பெற்றுக்கொண்டிருந்த மாதச் சம்பளத்தோடு ஒப்பிடுகையில், இந்தத் தொகை மிக மிக அதிகம். இதனால் கிடைக்கக்கூடிய ஆடம்பர வசதி, வாய்ப்புகள், சவுகரியங்கள் பலரைச் சுண்டியிழுத்தன.

ஆனால், எல்லோரையும் இப்படிப் பணத்தால் விலைக்கு வாங்கிவிடமுடியுமா?

இந்தக் கேள்விக்கான பதிலை ஏற்கெனவே ஒருமுறை அனு பவபூர்வமாகப் புரிந்துகொண்டிருந்த ஒக்ரானா, பணத்துக்கு மயங்காத புரட்சியாளர்களை, மிரட்டலின்மூலம் அடிபணியச் செய்ய முடிவு செய்திருந்தது.

அதாவது, புரட்சி இயக்கங்களின் தலைவர்கள், தளபதிகள் அல்லது இரண்டாம் நிலைத் தளபதிகளைத் தொடர்ந்து கண் காணித்துக்கொண்டிருப்பது, என்றைக்காவது ஒருநாள், அவர் கள் வெளிப்படையாக ஒரு தவறு, அல்லது சட்டவிரோதமான

ஒரு செயலைச் செய்யாமல் இருக்கமாட்டார்கள். அப்போது அவர்களைப் பிடித்து, கைது செய்துவிடுவது.

ஒக்ரானாவால் கைது செய்யப்பட்டவர்கள் எல்லோருக்கும், மிகக் கொடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டம் அது. சைபீரியத் தனிமைச் சிறைவாசத்தில் தொடங்கி, மரண தண்டனைவரை நீள்கிற இந்தப் பட்டியல், யாரையும் பயமுறுத்திவிடும்.

இதனால், ஒக்ரானாவிடம் சிக்கியவர்கள் அனைவரும், மனத்தளவில், உடலளவில் அதீத சித்திரவதைகளுக்குத் தயாராகிவிடுவார்கள். அவர்களிடம் போய், 'உன்னை நாங்கள் ஒன்றும் செய்யப்போவதில்லை, நாளை காலையில் உனக்கு விடுதலை' என்று சொன்னால்?

அதைத்தான் செய்தது ஒக்ரானா. 'உன்னை விடுவித்துவிடப் போகிறோம், நீ ஜாலியாக வீட்டுக்குப் போகலாம்' என்று அறிவித்து, கைதிகளின் முகத்தில் படர்கிற நம்ப முடியாத சந்தோஷத்தை வேடிக்கை பார்த்தார்கள்.

அதன்பிறகுதான், முக்கியமான விஷயத்தைப்பற்றிய பேச்சு தொடங்கும். 'ஆனால், உன்னுடைய விடுதலைக்கு பதிலாக, நீ எங்களுக்கு ஒரு சின்ன வேலை செய்தாகவேண்டும்.'

'சின்ன வேலை' என்றால், வேறென்ன? புரட்சியாளர்களை உளவு பார்க்கவேண்டும். முக்கியத் தகவல்களை அவ்வப்போது ஒக்ரானா அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும். அவ்வளவுதான்.

இதைக் கேட்டதும், அப்படியொரு நம்பிக்கை துரோகத்துக்கு மனது ஒப்பாத பலர், உடனடியாக 'முடியாது' என்று மறுத்துவிடுவார்கள். அப்படி முரண்டு பிடிக்கிறவர்களைத் தனிமைச் சிறைக்கு அனுப்புவோம், கொன்றுவிடுவோம், அவர்களுடைய குடும்பத்தினரை மொத்தமாக அழித்துவிடுவோம் என்றெல்லாம் மிரட்டல்கள் தொடங்கும்.

நன்றாக யோசித்துப் பார், நீ செய்த குற்றத்தை மன்னித்து, உன்னை விடுதலை செய்கிறோம். செலவுக்கு தாராளமாகப் பணம் கொடுக்கிறோம். பதிலுக்கு இந்தச் சின்ன உபகாரம்கூட செய்யமாட்டாயா என்ன?

இதைவிட யதார்த்தமான ஒரு மிரட்டல் வாசகம் இருக்க முடியுமா என்ன? இந்தக் கட்டத்தில், தனக்கு வேறு வழி இல்லை என்று தெளிவாகப் புரிந்துகொள்ளும் புரட்சியாளர்கள் சிலர், கொள்கை, விசுவாசத்தையெல்லாம் தூக்கிக் குப்பைக் கூடையில் வீசிவிட்டு, ஒக்ரானா ஏஜெண்ட்களாகத் தடம் மாறுவார்கள்.

ஆனால், இப்போது 'சரி' என்று தலையாட்டிவிட்டு, வெளியே சென்றதும் இவர்கள் ஒக்ரானாவுக்கு ஆதரவாகச் செயல்படுவார்கள் என்பது என்ன நிச்சயம்? விடுதலை செய்தபிறகு, அவர்களை ஒக்ரானாவால் கட்டுப்படுத்த முடியாதே.

இதற்கும் ஒரு வழி கண்டுபிடித்தது ஒக்ரானா. தங்களால் கைது செய்யப்பட்ட எல்லோரிடமும், அவர்கள் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டதாக ஒரு வாக்குமூலம் எழுதி வாங்கிவிடுவார்கள். அதன்பிறகுதான், இந்தப் பேச்சுவார்த்தைகளெல்லாம் தொடங்கும்.

இதனால், ஒக்ரானாவுக்கு ஆதரவாகச் செயல்பட ஒப்புக்கொள்கிறவர்கள் யாரும், பின்னர் கட்சி மாறமுடியாது. ஒருவேளை அவர்கள் தங்களுக்கு எதிராகத் திரும்புவதுபோல் தோன்றினால், முன்பு எழுதிக் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தைக் காண்பித்து மிரட்டுவார்கள். தேவைப்பட்டால், மீண்டும் கைது செய்து சிறையில் தள்ளுவார்கள். புதிய தண்டனைகளை உருவாக்கிக் கொடுமைப்படுத்துவார்கள்.

இதை நன்கு புரிந்துகொண்டிருந்த 'உளவாளி'கள், முடிந்த வரை ஒக்ரானாவுக்கு விசுவாசமாகவே செயல்பட்டுக்கொண்டிருந்தார்கள். இதனால், புரட்சி இயக்கங்களின் நடவடிக்கைகள் அனைத்தும், உடனுக்குடன் அவர்களுக்குத் தெரிந்துகொண்டிருந்தது.

இந்தக் காலகட்டத்தில் ஒக்ரானாவின் நேரடி மற்றும் மறைமுக உளவாளிகள் அநேகமாக எல்லாப் புரட்சி இயக்கங்களிலும், அரசியல் அமைப்புகளிலும் இடம் பெற்றிருந்தார்கள். அவர்களில் சிலர், அந்தந்தக் கட்சிகளின் மிக முக்கியமான பதவிகளுக்கு உயர்ந்த கதைகளும் உண்டு.

உதாரணமாக SR எனப்படும் சோஷலிஸ்ட் புரட்சிக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான எவ்னொ அஜெஃப் (Evno Azef)

மற்றும் போல்ஷ்விக் கட்சியைச் சேர்ந்த ரோமன் மலினோவ்ஸ்கி (Roman Malinovsky) ஆகியோர் ஒக்ரானாவுக்கு உளவாளிகளாகப் பணியாற்றியவர்கள்.

இவ்வளவு ஏன், அப்போதைய போல்ஷ்விக் கட்சியின் இன்னொரு முக்கியத் தலைவர், பின்னாள்களில் ரஷ்யாவின் அதிபராக உயர்ந்த ஜோசஃப் ஸ்டாலின்கூட, ஆரம்ப காலத்தில் ஒக்ரானா ஏஜெண்டாகப் பணியாற்றியவர்தான் என்று ஒரு வதந்தி உண்டு.

அந்தக் காலகட்டத்தில் பரவலான புரட்சிச் செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்த பிரபலத் தலைவர் என்கிற முறையில், ஸ்டாலினைப் பற்றித் தனி ஃபைல் தயார் செய்திருந்தது ஒக்ரானா. ஆனால், அதில் இடம்பெற்றிருந்த பல தகவல்கள், காணாமல் போய்விட்டன.

ஸ்டாலின் சோவியத் யூனியன் அதிபரானபிறகு, தன்னைப் பற்றிய 'பழைய' உண்மைகள் வெளியே தெரியக்கூடாது என்ற எண்ணத்தில், அவரேதான் அந்த ஆவணங்களைத் 'தொலைத்து'விட்டார் என்று வாதிடுகிறவர்கள் உண்டு.

ஆனால், ஸ்டாலின் அப்படி மெனக்கெட்டு மறைக்க விரும்பிய ரகசியம் என்ன?

இதுகுறித்து, 1956-ம் ஆண்டில் லைஃப் (Life) இதழ் ஒரு கடிதத்தை வெளியிட்டிருக்கிறது. புனித பீட்டர்ஸ்பர்க் காவல் நிலையத்தில் இருந்து, கர்னல் அலெக்ஸாண்டர் மிகைலோவிச் யெரெமின் (Alexander Mikhailovich Eremin) என்ற அதிகாரி, சர். அலெக்ஸோய் ஃபெட்ரோவிச் (Alexei Fedorovich) என்பவருக்கு எழுதிய கடிதம் அது.

இந்தக் கடிதத்தில், ஜோசஃப் விசர்யோனோவிச் (Joseph Vissarionovich) என்ற ஒக்ரானா உளவாளியைப்பற்றிப் பாராட்டி எழுதியிருக்கிறார் யெரெமின். ஸ்டாலினின் நிஜப் பெயர் அது.

1908-ம் ஆண்டுமுதல், ஸ்டாலின் ஒக்ரானாவுக்குப் பல ரகசியத் தகவல்களைத் தொடர்ந்து அளித்துவந்ததாகக் குறிப்பிடும் இந்தக் கடிதம், ஒரு கட்டத்தில் அவர் அரசாங்கத்துக்கு எதிராகச் செயல்படத் தொடங்கிவிட்டார். அதன்பிறகு அவருக்கும் ஒக்ரானாவுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று முடிகிறது.

இந்தத் தகவல்கள் நிஜமானவையா என்று உறுதி செய்துகொள் வதற்கு ஆதாரமாக எந்த ஆவணமும் இதுவரை கிடைக்க வில்லை. ஆகவே, இந்தக் கடிதம் உண்மையானதா அல்லது போலியாகத் தயாரிக்கப்பட்டதா என்பது இன்றுவரை கேள்விக்குறியாகவே இருக்கிறது.

இதனால், ஸ்டாலின் ஒக்ரானாவுக்காகப் பணியாற்றினாரா என் பதை உறுதியாகச் சொல்வதற்கில்லை. எனினும், அந்தக் கால கட்டத்தில் பல புரட்சி இயக்கங்களின் முதுகில், ஒக்ரானாவின் உளவுக் கண்கள் அழுத்தமாகப் பதிந்திருந்தது உண்மை.

ஆனால், இதுபோன்ற தடுப்பு நடவடிக்கைகளால், ரஷ்யாவின் மக்கள் புரட்சியை முடக்கிவிட முடிந்ததா?



# 4. ஒக்ரானா

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ரஷ்யாவில் புரட்சி நோக்கத்தோடு செயல்பட்டுக்கொண்டிருந்த ரகசியக் குழுக்கள், அமைப்புகள், கட்சிகள் ஏராளம். இவர்களிடையே கொள்கைகள், நம்பிக்கைகள், வழிமுறைகளில் பல விதமான வேறுபாடுகள் இருந்தபோதும், 'பொது எதிரி' என்கிற ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் எல்லோரும் விதிவிலக்கில்லாமல் ஒத்துப்போனார்கள்.

கொடுங்கோல் ஆட்சி புரியும் ஜார் மன்னன், அவனுடைய அரசாங்கம், அதற்கு ஆதரவாகச் செயல்படும் பிற அமைப்புகள் எல்லாம் தூக்கியெறியப் படவேண்டும். மக்களால், மக்களுக்கான அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

இந்த நோக்கத்தோடு புரட்சிக் குழுக்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கையில், இவற்றைக் கண்டறிவதற்கும் கட்டுப் படுத்துவதற்கும் உருவாக்கப்பட்ட அமைப்புதான் ஒக்ரானா.

இதனால், ஒக்ரானாவுக்கும் புரட்சிக் குழுக்களுக்கும் நிரந்தர விரோதம் ஏற்பட்டிருந்தது. புரட்சி முயற்சிகள் அனைத்தையும் எப்படியாவது நசுக்கிவிடவேண்டும் என்று ஒக்ரானா முனைந்துகொண்டிருக்க, ஒக்ரானாவைச் சமாளிப்பது எப்படி என்று புரட்சியாளர்கள் கூட்டம் போட்டு பேசிக் கொண்டிருந்தார்கள்.

தங்களுக்கிடையே ஒக்ரானாவின் உளவாளிகள் சிலர் இருக்கி றார்கள் என்று புரட்சி அமைப்புகளுக்கு நன்றாகத் தெரிந்திருந் தது. ஆனால், அந்தக் கறுப்பாடுகளை எப்படிக் கண்டுபிடிப்பது என்று புரியாமல் அவர்கள் குழம்பிக் கொண்டிருக்கையில், யாரோ ஒருவர் அட்டகாசமான அந்த யோசனையை முன் வைத்தார்.

ஒக்ரானா நம்மை உளவு பார்க்கிறது என்பது தெரியும். அதைத் தடுப்பதற்கு நம்மால் எதுவும் செய்யமுடியவில்லை. அதற்கு பதிலாக, இதே ஆயுதத்தைப் பயன்படுத்தி நாமும் அவர்களைத் திருப்பித் தாக்கினால் என்ன?

அப்படியென்றால்? புரட்சியாளர்கள் போலீஸை வேவு பார்ப் பதா? இதென்ன அபத்தம்?

ஒக்ரானாவை உளவு பார்த்துப் புரட்சியாளர்களுக்குப் பெரிதாக எந்தப் புண்ணியமும் இல்லை. மாறாக, தவறான அல்லது குழப்பமான தகவல்களின்மூலம் அவர்களைத் திசை திருப்பிவிட்டால்?

அதாவது, புரட்சியாளர்கள் சிலர் வேண்டுமென்றே ஒக்ரானா விடம் சென்று, நாங்கள் கட்சி மாறுகிறோம் என்று சொல்ல வேண்டியது; அவர்களும் இவர்களை வரவேற்று, பிஸ்கட், கேக், வோட்கா கொடுத்து உபசரிப்பார்கள். சம்பளம் கொடுத்து உளவாளிகளாகச் சேர்த்துக்கொள்வார்கள்.

அதன்பிறகு, ஒக்ரானா விசுவாசிகளாக நடிக்கும் இவர்கள், புரட்சி இயக்கங்களின் அடுத்தடுத்த நடவடிக்கைகளைப் பற்றிய பொய்யான தகவல்களை ஒக்ரானாவிடம் பரப்பு வார்கள். இதற்காக அவர்கள் தருகிற சன்மானம் முழுவதும், இயக்கத்தின் வளர்ச்சிக்கு நன்கொடையாகப் பயன்படுத்தப் படும்.

'ஜேம்ஸ் பாண்ட் 007'ல் தொடங்கி, நம் ஊர் 'மாடர்ன் தியேட்டர்ஸ்' சிஐடிக்கள் வரை எல்லோரும் திரும்பத் திரும்பப் பயன்படுத்திப் பழசாக்கிவிட்ட இந்த 'டபுள் ஏஜெண்ட்' உத்தியைக் கேட்டால், நமக்கு இப்போது சிரிப்பு வரலாம். ஆனால், அப்போதைய சூழலில், ஒக்ரானாக்களை திசை திருப்புவதற்கு இது மிகப் பிரமாதமாகப் பயன்பட்டது.

ஒக்ரானாக்களைப் பொருத்தவரை, புரட்சி இயக்கங்களைப் பற்றிய தகவல்கள் தொடர்ந்து கிடைத்துக்கொண்டே இருந்தன. ஆனால், அந்தத் தகவல்களால் தங்களுக்கு நயா பைசா பிரயோஜனம் இல்லை என்பது அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இதனால், தங்களுக்குக் கிடைத்திருக்கும் ரகசிய(?)க் குறிப்புகளை நம்பி, ஏதோ ஒரு பகுதியில் அவர்கள் தடுப்பு நடவடிக்கைகளைத் திட்டமிட்டுக்கொண்டிருக்க, இன்னொரு மூலையில் புரட்சியாளர்கள் தடையில்லாமல் குண்டு வெடித்துப் பண்டிகை கொண்டாடிக்கொண்டிருந்தார்கள்.

இப்படி ஒக்ரானாக்களின் நேரத்தையும், அரசாங்கத்தில் அவர்களுக்கிருந்த நல்ல பெயரையும் எதிராளிகள் சீரழித்துக் கொண்டிருந்ததால், படிப்படியாக அவர்களுடைய மவுசு குறைந்தது.

அதுவரை ஜார் சாம்ராஜ்ஜியம் முழுவதும், பல்வேறு இடங்களில் ஒக்ரானா மையங்கள் தொடங்கப்பட்டிருந்தன. இதுதவிர, வெளிநாடுகளில் தஞ்சமடைந்து, தலைமறைவாக இயங்கிக்கொண்டிருக்கும் புரட்சியாளர்களைப் பிடிப்பதற்காக, பாரிஸ், லண்டன் உள்ளிட்ட அயல்நாட்டு மையங்களும் உண்டு.

1910-ம் ஆண்டுக்குப்பிறகு, ஒக்ரானாக்களின் நடவடிக்கைகள் தொடர்ந்து பல விமரிசனங்களுக்கு ஆளாகின. போதாக் குறைக்கு, தவறான தகவல்களால் எல்லோரையும் குழப்பியடித்துக் கொண்டிருந்த 'டபிள் ஏஜெண்ட்'களின் கைங்கரியத்தில், அரசாங்கத்திடம் அவர்கள் தங்களுடைய நம்பகத்தன்மையை மொத்தமாக இழந்திருந்தார்கள்.

இதனால், பல்வேறு ஒக்ரானா மையங்கள் இழுத்து மூடப்பட்டன. ரஷ்யப் புரட்சி தனது உச்சத்தை அடைந்த காலகட்டத்தில் (1917), ஜார் சாம்ராஜ்ஜியம் முழுவதும் ஓரிரு இடங்

களில்தான் ஒக்ரானா இயங்கிக்கொண்டிருந்தது. அதுவும் பெயரளவில்.

ஜார் வம்சத்துக்கு எதிரான புரட்சியைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதைத் தனது முக்கிய நோக்கங்களில் ஒன்றாக வைத்திருந்த ஒக்ரானா, அந்தத் திசையில் சரியாகவே இயங்கிக்கொண்டிருந்தது. எனினும், எண்ணிக்கை அளவில் எப்போதும் அது மிகப் பெரிய ஓர் இயக்கமாக வளரவில்லை. அதற்கென்று தனி ராணுவம் இல்லை. அது கையாண்டு கொண்டிருந்த நவீன உளவுமுறைகள்கூட, மக்கள் புரட்சியை எதிர்த்துச் செயல்படுவதற்குப் போதவில்லை.

இதேபோல், ஒக்ரானா சந்தித்த இன்னொரு இருப்பியல் பிரச்னை, அதற்குக் கைது செய்கிற அதிகாரம்மட்டும்தான் தரப்பட்டிருந்தது. மற்றபடி குற்றம் சாட்டப்பட்டவர்கள்மீது வழக்குத் தொடர்ந்து, தீர்ப்பு வழங்கி, விடுதலை அல்லது தண்டனையை நிறைவேற்றுவதெல்லாம் அப்போதைய ரஷ்யச் சட்டத்துறையின் பொறுப்பு.

இதனால், ஒக்ரானாவால் கைது செய்யப்பட்ட முக்கியக் குற்ற வாளிகள், சட்டப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். அதன் பிறகு அவர்கள்மீது வழக்குத் தொடுப்பதற்குத் தேவையான சகல உதவிகளையும் ஒக்ரானா செய்யவேண்டியிருந்தது.

உதவிகள் என்றால், சட்ட ஆவணங்களைத் தயார் செய்வது, ஆதாரங்கள், சாட்சியங்களை ஒழுங்குபடுத்துவது, வழக்கு விசாரணைகளில் பங்கெடுத்துக்கொண்டு, அவ்வப்போது வேண்டிய தகவல்களைத் தருவது என, ஒக்ரானா ஊழியர் களின் நேரத்தைத் தின்பதற்குப் பல விஷயங்கள் இருந்தன.

இதையெல்லாம், புரட்சி இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் கவனித்துக்கொண்டுதான் இருந்தார்கள். பின்னர் அவர்கள் தங்களுக்கென்று ஒரு பாதுகாப்பு / உளவு அமைப்பை உரு வாக்கிக்கொண்டபோது, அதில் இதுபோன்ற நேர விரயங் களுக்கு இடமில்லாதபடி பார்த்துக்கொண்டார்கள். தேவை யான அதிகாரங்களையும் கொடுத்து, முழு பலத்துடன் செயல்படச் செய்தார்கள்.

ரஷ்யப் புரட்சியின்போது, ஒக்ரானாவை எழுச்சியாளர்கள் திட்டமிட்டு நீக்கினார்களா, அல்லது காலப்போக்கில்

அதுவாகத் தனது முக்கியத்துவத்தை இழந்து தேய்ந்துபோனதா என்பதை உறுதியாகச் சொல்வதற்கில்லை. எனினும், ஒக்ரானாவின் தேவை மிக அதிகமாகத் தேவைப்பட்ட கால கட்டத்தில், அது கட்டெறும்பாகத் தேய்ந்து மறைகிற நிலைமையில் இருந்தது.

மார்க்சிஸ்ட் தோழர்கள், ஒக்ரானாவை எப்போதும் அலட்சி யப்படுத்திவிடவில்லை. என்றாலும் ரஷ்யப் புரட்சி பரபரப் பான கட்டத்தை எட்டிக்கொண்டிருந்ததால், அவர்களுக்கு வேறு சில முக்கியப் பணிகள் இருந்தன.

அப்போது ரஷ்யப் புரட்சியை முன்னின்று வழிநடத்திக் கொண்டு இருந்த 'போல்ஷ்விக்' பிரிவினருள் மிக முக்கிய மானவர், லெனின். முழுப் பெயர் விளாதிமிர் இலியிச் உலியானோவ் லெனின்.

தன்னுடைய அண்ணன் அலெக்ஸாண்டர் வாயிலாக, மிக இளம் வயதிலிருந்தே அரசியல், மார்க்சிய நூல்களைப் படித்து வளர்ந்த லெனின், ஜார் அரசாங்கத்தின் சுரண்டல், அடக்கு முறைகளை நேரில் கண்டவர். அதன்மீது கடும் வெறுப்பை வளர்த்துக்கொண்டவர். சட்டம் படித்த அவர், 1892-ல் ரஷ்யாவின் முதலாவது மார்க்சியக் குழுவை உருவாக்கினார்.

அதன்பிறகு தனது எழுத்துகள் மற்றும் பேச்சுகளின்மூலம் ரஷ்யாவின் தொழிலாளர்களை மட்டுமின்றி, பொதுமக்களை யும் ஈர்த்துக்கொண்ட லெனின், வெறும் தனி நபர் கவர்ச்சிக் காகக் கட்சி நடத்தாமல், கொள்கைக்காக ஒரு தலைமுறை யையே சிலிர்த்தெழச் செய்தவர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், மக்களுக்கு அவ்வள வாக அறிமுகமில்லாத ஓர் அரசியல் சிந்தனையாகவே இருந்த மார்க்சியம், படிப்படியாக ரஷ்யாவில் வேரூன்றி, 1917-ம் ஆண்டு பெரும் புரட்சியாக வெடித்தது. ஒக்ரானா உள்ளிட்ட பல்வேறு அரசு அமைப்புகளின் எதிர் நடவடிக்கைகளால், இந்த மக்கள் புரட்சியை எதுவும் செய்யமுடியவில்லை. முடிவில், நிக்கோலஸ் II என்ற கடைசி ஜார் மன்னனுடன், பல தலைமுறைகளாக ரஷ்யாவை அடக்கியாண்டுகொண்டிருந்த ஜார் அரசாங்கம் தூக்கியெறியப்பட்டு, மக்களின் ஆட்சி அமைந்தது.

முந்தைய ஜார் வம்சத்தினரோடு ஒப்பிடுகையில், கம்யூனிஸ்ட் களின் அரசாங்கம் முற்றிலும் மாறுபட்ட வகையில் இருக்கும் என லெனினும் அவரது தோழர்களும் வலியுறுத்திச் சொன்னார்கள்.

வித்தியாசம் என்றால், சும்மா பெயரளவில் அல்ல, அடிப் படைக் கட்டமைப்பில் வித்தியாசம். அரசு என்பது யாரோ சிலர் உச்சத்தில் உட்கார்ந்துகொண்டு மக்களை ஆட்சி செய்வது என்றில்லாமல், ஒவ்வொருவரும் அரசர்கள்தான். எல்லோருக் கும் எல்லாமும் கிடைக்கும் என்றது போல்ஷ்விக் அரசு.

அதாவது, லெனின் தலைமையில் இப்போது அமைந்திருக்கும் போல்ஷ்விக் அரசு, தாற்காலிகமானதுதான். ஆரம்பக் குழப்பங் களைத் தீர்த்து, மக்களாட்சியை நிலை பெறச் செய்தபிறகு, அரசாங்கம் என்று தனியாக ஒன்று தேவைப்படாது. மக்களே தங்களைத் தாங்கள் ஆண்டுகொள்வார்கள்.

அரசாங்கமே இல்லை எனும்போது, ஒக்ரானா?

'சான்ஸே இல்லை' என்றார்கள் போல்ஷ்விக் தோழர்கள். முந்தைய ஆட்சியின் அடக்குமுறை அடையாளமான போலீஸ், ஒக்ரானா, சட்டத்துறை, உளவாளிகள், கைதுகள், விசாரணைகள், தண்டனைகள் என்று எல்லாமே, காலப் போக்கில் வழக்கொழிந்துபோய்விடும் என்பது அவர் களுடைய நம்பிக்கை.

கம்யூனிசத்தின் ஆட்சியில், எல்லோரும் எல்லாமும் பெற்று சுபிட்சமாக வாழும்போது, யாரும் யாரிடமும் திருடமாட்டார் கள். யாரும், யாரையும் துன்புறுத்தமாட்டார்கள். கொலை, கொள்ளை, வம்பு, வழக்குகள் எவையும் இருக்காது. ஒவ்வொருவரும் அரசர்கள் என்பதால், அரசுக்கு எதிராகக் கொடி பிடிக்கிற புரட்சிகளுக்கும் வாய்ப்பே இல்லை.

இப்படிப் பல காரணங்களை, அல்லது சாத்தியங்களைச் சுட்டிக் காட்டி, ஒக்ரானா போன்ற ஓர் அமைப்பின் தேவை, புதிய ஆட்சியில் நிச்சயமாக இருக்காது என்று நம்பியது போல்ஷ்விக் அரசு. 'மக்களின் ஆட்சியில் அரசியல் போலீஸ், ரகசியப் போலீஸுக்கெல்லாம் அவசியமே இல்லை' என்று லெனினே எழுதியிருக்கிறார்.

அப்படியானால், இந்தப் புதிய அரசுக்கு எந்தத் தரப்பினரிடமிருந்தும் எதிர்ப்பே வராது என்று குழந்தைத்தனமாக லெனின் நம்பிக்கொண்டிருந்தாரா?

இல்லை. எந்தப் புதிய கொள்கை அல்லது ஆட்சிமுறைக்கும் எதிர்க் குரல்கள் அவசியம் இருக்கும் என்பது அரசியலில் நல்ல அனுபவம் கொண்ட லெனினுக்குத் தெரிந்திருந்தது. என்றாலும், கம்யூனிசத்திடம் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் இருக்கிறது என்று உறுதியாக நம்பினார் அவர்.

ஆரம்பத்தில் இந்த ஆட்சியை எதிர்த்துச் சிலர் கொடி தூக்கலாம். ஆனால், மற்ற எந்த முறைகளையும்விட இது மேம்பட்டது என்பதை அவர்கள் புரிந்துகொண்டபிறகு, தானே எதிர்ப்பைக் கைவிட்டு, தோழர்களாகிவிடுவார்கள் என்பது அவருடைய நிச்சயமான நம்பிக்கை.

லெனினின் லட்சியச் சிந்தனைகள் கேட்பதற்கு அழகானவைதான். ஆனால், 1917-ல் அவரது போல்ஷ்விக் ஆட்சியின்கீழ் வந்த ரஷ்யாவின் யதார்த்த நிலைமை அத்தனை இதமாக இல்லை.

ஜார் மன்னரின் ஆட்சி ஒழிந்தது எல்லோருக்கும் சந்தோஷம்தான். ஆனால், அதையடுத்து அமைந்த புதிய ஆட்சியைப் பற்றியும், அவர்களது சில கொள்கைகளைப்பற்றியும்தான் விமரிசனங்கள் எழுந்தன.

பொதுஜனத்தின் மொத்த ஆதரவோடு ஆட்சிக்கு வருகிற 'மக்கள் தலைவர்'களுக்கே எதிர்ப்புக் கோஷ்டிகள் சகஜம் எனும்போது, அப்போதைய ரஷ்யாவில் ஏகப்பட்ட கட்சிகள்; ஏராளமான கொள்கை வேறுபாடுகள். இவற்றினிடையே, போல்ஷ்விக்குகள் மொத்த ஆட்சியையும் எடுத்துக்கொள்வது எப்படிச் சாத்தியம்?

போதாக்குறைக்கு, 1917-ல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில், போல்ஷ்விக் கட்சியினர் பெற்ற வாக்குகள், இருபத்தைந்து சதவிகிதத்துக்குக் குறைவுதான். சோஷலிஸப் புரட்சிக் கட்சிதான் பாதிக்குப் பாதி இடங்களைக் கைப்பற்றியிருந்தது.

ஆனால், இந்தத் தேர்தலுக்குப்பிறகு லெனின் மக்களவையைக் கலைத்து, போல்ஷ்விக் ஆட்சிதான் இனிமேல் என்று அறி

வித்துவிட்டார். ஆகவே, நாடு முழுதும் அதிருப்தி அலைகள் பரவின. இந்த எதிர்ப்புகள் எந்த அளவு வலுவானவை, நிஜமாகவே மக்களின் முழு ஆதரவு லெனின் அரசுக்கு உண்டா என்பதில் பெரும் குழப்பம் நீடித்தது.

இப்படிப் பல காரணங்களால், ரஷ்யாவில் புதிய ஆட்சி அமைந்தபிறகும்கூட, நாட்டில் ஆங்காங்கே சிறியதும் பெரியதுமாகக் குழப்பங்கள் நீடித்துக்கொண்டுதான் இருந்தன. இதுபோன்ற எதிர்ப்புகளையெல்லாம் கவனித்து, அவற்றின் தீவிரத்தைக் கணித்து, உரிய நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானது. இதற்காக, அப்போதைய ரஷ்ய உள் விவகாரக் குழுவின் பொறுப்பில், 'Workers and Peasants Militsiya' என்ற அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது.

'மிலிட்ஸியா' என்றால், ரஷ்ய மொழியில் போலீஸ் / காவல் துறை என்று அர்த்தம். நாடு முழுதும் புதிய அரசுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்காணித்து, பிரச்னைகள் எவையும் நேராதபடி காவல் காக்கவேண்டும் என்பதுதான் இந்தப் புதிய அமைப்பின் பொறுப்பு.

மக்களுடைய ஆட்சியில், யாரும் யாரையும் காவல் காக்க வேண்டிய அவசியமே இருக்காது என்று தீவிரமாக நம்பிய கம்யூனிஸ்ட் தோழர்கள், அரசமைத்த சில நாள்களுக்குள், தங்களுக்கென்று ஒரு விசேஷப் போலீஸ் படையை அமைத்துக் கொள்ள நேர்ந்தது ஒரு சுவாரசியமான முரண்பாடு.

ஆனால், அப்போது இதைப்பற்றியெல்லாம் நிதானமாக யோசிக்கக்கூட லெனினுக்கு நேரமிருக்கவில்லை. பல போராட்டங்களுக்குப்பிறகு, ஒருவழியாகக் கொடுங்கோல் ஆட்சி மறைந்திருக்கிறது. இதனை உறுதியாக நிலைப் படுத்திக்கொள்வதற்குள், மீண்டும் முதலாளிகள் ஆட்சியைக் கைப்பற்றிக்கொள்வதற்கான வாய்ப்பு எதையும் அவர் வளரவிட விரும்பவில்லை.

ஆகவே, புதிய ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டம் போடுகிற சிறிய, பெரிய குழுக்கள் எல்லாவற்றையும் கண்டறிந்து, களையெடுப்பதற்காக, இந்தப் புதிய 'மிலிட்ஸியா'வைத் தோற்றுவிக்க முனைந்த அவர், இந்த வேலையைச் சிறப்பாகச் செய்வதற்குத் தகுதியுள்ள திறமைசாலி யார் என்று தேடிக் கொண்டிருந்தார்.

அப்போதுதான், போல்ஷ்விக் உறுப்பினரான ஃபிலிக்ஸ் என்ற புரட்சியாளரைப்பற்றிக் கேள்விப்பட்டார் லெனின். முந்தைய ஃபிப்ரவரியில்தான் லெனின் தலைமையிலான போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டிருந்த அவர், இந்தக் குறுகிய காலகட்டத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, எல்லாத் தரப்பினரிடமும் நல்ல பெயர் வாங்கியிருந்தார்.

இந்தச் செயல்பாடுகளின் அடிப்படையில்தான், புதிய காவல் படையை ஏற்று நடத்துவதற்கு ஃபிலிக்ஸ்தான் தகுதியானவர் என்று தீர்மானித்தார் லெனின்.

ரஷ்யச் சரித்திரத்தில் மிக முக்கியமான ஓர் அத்தியாயம் தொடங்கியது.



# 5. கொஞ்சம் நிலவு, கொஞ்சம் நெருப்பு

நம் ஊரில், 'இரும்பு மனிதர்' என்றால், சர்தார் வல்லபபாய் படேல்தான் உடனடியாக நினைவுக்கு வருவார். கிட்டத்தட்ட அதேபோன்ற பெருமை யோடு ரஷ்யர்களால் பெரிதும் மதிக்கப் படுகிறவர் ஃபிலிக்ஸ்.

முழுப் பெயர், ஃபிலிக்ஸ் எட்மன் டோவிச் டெஜெர்ஜின்ஸ்கி (Felix Edmundovich Dzerzhinsky), சுருக்கமாக, 'இரும்பு ஃபிலிக்ஸ்.' பணியில் அவர் காட்டிய கடுமைக்கும் நேர்மைக்கும் கம்பீரத்துக்கும் பரிசாகக் கிடைத்த செல்லப் பெயர் இது.

1877-ம் ஆண்டு செப்டம்பர் 11-ம் தேதி பிறந்த ஃபிலிக்ஸ், ஓரளவு வசதியான போலந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர். சிறு வயதில் மிகுந்த கடவுள் நம்பிக்கை யோடு வளர்ந்த அவருக்கு, கிறித்துவப் பாதிரியாராகும் ஆசை இருந்தது.

ஆனால், நிஜத்தில் நடந்தது அதற்கு முற்றிலும் நேரெதிரான ஒரு விஷயம் - பள்ளிக் காலத்திலேயே, புரட்சிக்

கருத்துகளால் ஈர்க்கப்பட்ட அவர், உள்ளூர்ப் புரட்சி இயக்கங்கள் சிலவற்றோடு தன்னை இணைத்துக்கொண்டார். பல்வேறு அடக்குமுறைகளை எதிர்த்து நேரடிப் போராட்டங்களில் குதித்தார்.

சின்னப் பையன், அதுவும் பள்ளிக்கூடத்தில் சென்று படிக்கிற பையனுக்கு, இப்போதே இதுபோன்ற அரசியல் தலைவலிகளெல்லாம் தேவையா என்று நினைத்த ஃபிலிக்ஸின் உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்களெல்லாம் அவருக்குப் பொறுமையாக அறிவுரை சொன்னார்கள். ஆனால், அவர் எதையும் கேட்கிற நிலைமையில் இல்லை.

ஒருகட்டத்தில் பொறுமையிழந்த ஃபிலிக்ஸின் பள்ளி நிர்வாகம், இதற்குமேல் இந்தப் பையனை நம்மோடு சேர்த்துக்கொண்டிருந்தால், நமக்குதான் ஆபத்து என்று முடிவெடுத்தது. புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றத்துக்காக அவரைப் பள்ளியில் இருந்து நீக்கிவிட்டது.

இதனால், ஃபிலிக்ஸுக்கு எந்த வருத்தமும் இல்லை. சொல்லப் போனால், சந்தோஷம்தான் அதிகம். இனிமேல் எந்தத் தொல்லையும் இல்லாமல் ஆர்பாட்டங்கள், எதிர்ப்புப் பேரணிகள், வேலை நிறுத்தங்கள் போன்ற இயக்கப் பணிகளில் ஈடுபடலாமே!

தனது பதினெட்டாவது வயதில், மார்க்சிய இயக்கம் ஒன்றில் சேர்ந்து மும்முரமாகச் செயல்படத் தொடங்கிய ஃபிலிக்ஸ், சில ஆண்டுகளுக்குப்பிறகு, 'போலந்து மற்றும் லிதுனியா சமூகப் புரட்சி இயக்கம்' என்று ஓர் அமைப்பைத் தோற்றுவித்தார். அதன் பிறகு அவருடைய வாழ்க்கையே போராட்டமயமாகிவிட்டது.

இந்தக் காலகட்டத்தில் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு, பலமுறை கைது செய்யப்பட்ட ஃபிலிக்ஸ், தனது இளமைக்காலத்தின் பெரும்பகுதியைச் சிறைகளில்தான் கழித்தார். உண்மையில், இந்தச் சிறைவாசங்களின்போதுதான், அவரது அரசியல் சிந்தனைகள் ஒழுங்கான வடிவம் பெற்றன. புரட்சி எண்ணங்கள் மேலும் தீவிரமாயின.

ஆனால், அதற்காக எப்போதும் ஜெயிலில் உட்கார்ந்துகொண்டிருந்தால், வெளியே காத்திருக்கிற இயக்கப் பணிகளையெல்லாம் யார் செய்வார்கள்? இதனால்தான், சிறைக்குச் சென்ற

மறுவிநாடியில் தொடங்கி, அங்கிருந்து எப்படித் தப்பிப்பது என்று தீவிரமாக யோசிக்கத் தொடங்கிவிடுவார் ஃபிலிக்ஸ்.

ஒவ்வொருமுறையும், அவருக்கென்று ஏதேனும் ஒரு தந்திரம் தட்டுப்படும். இல்லாவிட்டால் வாய்ப்புகளை அவரே உருவாக்கி, சிறையிலிருந்து எப்படியோ தப்பித்துச் சென்றுவிடுவார் ஃபிலிக்ஸ்.

இதைப் பார்த்து டென்ஷனான காவல்துறையினர், 1897-ல் ஒரு முறையும், பின்னர் 1900-ம் ஆண்டிலும் அவரை சைபீரியச் சிறைகளுக்கு பத்திரமாக அனுப்பிவைத்தார்கள். இரண்டு முறையும் வெற்றிகரமாகத் தப்பி வெளியே வந்துவிட்டார் மனிதர்.

அதன்பிறகு சில ஆண்டுகளைத் தலைமறைவு வாழ்க்கையில் கழித்த ஃபிலிக்ஸ், 1905-ம் ஆண்டுப் புரட்சியில் பங்கேற்றார். அந்த முயற்சி தோல்வியடைந்ததும், மறுபடி சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தமுறை அவரைக் கைது செய்தது சாதாரணக் காவல் படை அல்ல. புரட்சியாளர்களை நசுக்குவதற்காகவே கங்கணம் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த ஒக்ரானா, ஃபிலிக்ஸுக்குக் கடுமையான தண்டனையை வாங்கிக்கொடுத்தது.

இதனால், தனது வாழ்க்கையிலேயே முதன்முறையாக நீண்ட தொரு சிறை வாசத்தை அனுபவித்தார் ஃபிலிக்ஸ். ஆனால், எப்போதும் இதையே நினைத்துக் கவலைப்பட்டுப் புலம்பிக் கொண்டிருக்காமல், நிதானமாகச் சிந்தித்து, தனது சிறை அனுபவங்களை நாள்குறிப்பாக எழுதத் தொடங்கினார் அவர்.

வார்சா சிறையில் ஃபிலிக்ஸ் எழுதிய அந்தக் குறிப்புகள், பின்னர் 'ஒரு கைதியின் டைரி' (Diary of a Prisoner) என்ற பெயரில் புத்தகமாக வெளியிடப்பட்டன. இதமான மொழிநடையில் கனமான சிந்தனைகளைக் கலந்து எழுதப்பட்டிருக்கும் இந்த நூலை வாசிப்பவர்கள், ஃபிலிக்ஸை நிச்சயம் ஒரு மென்மையான மனிதராகதான் ஊகிப்பார்கள். முரட்டுப் புரட்சியாளராக, அல்லது கண்டிப்பான காவல்துறை அதிகாரியாக அவரை யாராலும் நினைக்கமுடியாது.

வாழ்க்கையை அணுஅணுவாக அனுபவித்து ரசிக்கும் ஒரு கவித்துவமான இளைஞன் ஃபிலிக்ஸுக்குள் ஒளிந்திருந்தது உண்மை

தான். ஆனால் அதேசமயத்தில், 'கொஞ்சம் நிலவு, கொஞ்சம் நெருப்பு' கதையாக, இதே ரசனையோடு அவரால் ஒரு தொழில்முறைப் புரட்சியாளராகவும் (Professional Revolutionists) இயங்கமுடிந்தது.

'ப்ரொஃபஷனல் புரட்சியாளர்' என்ற வார்த்தையைக் கேட்டால், ஏதோ வேடிக்கைக்காக எழுதப்பட்ட வாக்கியம்போல் நமக்குச் சிரிப்புதான் வரும். ஆனால், அந்தக் கால ரஷ்யாவில், புரட்சியை யும் தொழிலாகச் செய்கிறவர்கள் இருந்தார்கள். அப்படிப்பட்ட வர்களுக்கான அவசியம் இருந்தது.

அதாவது, டாக்டர், இன்ஜினீயர், வழக்கறிஞர் போன்றவர்கள் பிழைப்புக்காக அந்தந்தத் தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதேபோல, புரட்சி இயக்கங்கள், போராட்டங்களை முன் னின்று நடத்துவதற்கும் ப்ரொஃபஷனல்கள் தேவைப் பட்டார்கள்.

ஆனால் அதற்காக, இவர்களைக் கூலிக்கு மாரடிக்கும் கூட்டம் என்று நினைத்துவிடக்கூடாது. ஒரு கொள்கையால் கவரப்பட்டு, அதனை வெற்றிபெறச் செய்வதற்கான போராட்டத்தில் தங்க ளுடைய பங்களிப்பைச் செலுத்துவார்கள். அவர்களுடைய தனிப் பட்ட தேவைகளைக் கருதி, இதற்காக அவர்களுக்கு ஒரு தொகை சம்பளம் அல்லது சன்மானமாகத் தரப்பட்டது.

இப்படிப் போராட்டமே வாழ்க்கை என்று வகுத்துக்கொண் டிருந்த ஃபிலிக்ஸ், பெரும்பாலும் தலைமறைவாகதான் வாழ வேண்டியிருந்தது. வெளியே தலைகாட்டினால், காவல்துறை அல்லது ஒக்ரானாவிடம் சிக்கிக்கொள்ள வேண்டியதுதான்.

1905 புரட்சியைத் தொடர்ந்து, ஒக்ரானாவால் கைது செய்யப்பட்ட ஃபிலிக்ஸ், 1912-ல் விடுதலையானார். ஆனால், 'அப்பாடா' என்று வெளிக் காற்றை நிம்மதியாகச் சுவாசிப்பதற்குள் மீண்டும் அவரைக் கைது செய்து, மாஸ்கோவில் அடைத்துவிட்டார்கள்.

அதன்பிறகு, மீண்டும் ஒரு நீண்ட சிறைவாசம். ஐந்து வருஷங்கள் கழித்து, 1917-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில்தான், மீண்டும் வெளி உலகத்தைப் பார்ப்பதற்கான வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

அப்போதும், ஆட்சியாளர்கள் ஃபிலிக்ஸை விடுவிக்கவில்லை. அவராக தான் சிறையிலிருந்து தப்பி வெளியே வந்தார் என்று சில

குறிப்புகள் தெரிவிக்கின்றன. ஆனால், இதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லாததால், 1917-ல் ஃபிலிக்ஸ் விடுதலை செய்யப் பட்டார் என்றுதான் நம்பவேண்டியிருக்கிறது.

சிறையிலிருந்து வெளியே வந்த ஃபிலிக்ஸ், முதல் வேலையாக, 'போல்ஷ்விக்' கட்சியில் இணைந்துகொண்டார். ரஷ்ய மக்கள் புரட்சியின் வெற்றிக்குத் தன்னால் இயன்ற பணிகளைச் செய்யத் தயாராக இருப்பதாகச் சொன்னார்.

ஜார் அரசாங்கத்துக்கு எதிரான ரஷ்யப் புரட்சி, மிக முக்கியமான 'க்ளைமாக்ஸ்' கட்டத்தை எட்டிக்கொண்டிருந்த சூழல் அது. ஆகவே, ஃபிலிக்ஸின் அனுபவமும் திறமையும், போல்ஷ்விக் இயக்கத்தினருக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

இவற்றையெல்லாம்விட முக்கியமாக, அவரிடம் தென்பட்ட அர்ப்பணிப்பு உணர்வுதான் பலரை உடனடியாகக் கவர்ந்தது. எந்த வேலையை ஏற்றுக்கொண்டாலும், அதில்தான் தன் னுடைய மொத்த வாழ்க்கையும் அடங்கியிருப்பதுபோல் நினைத்துக்கொண்டு, முழு கவனத்தையும் செலுத்தி அதனைச் சிறப்பாகச் செய்து முடிக்கிற அவருடைய பழக்கத்தைப் பல புரட்சியாளர்கள் விரும்பிப் பின்பற்றத் தொடங்கினார்கள்.

இதனால், அடுத்த சில வாரங்களுக்குள், போல்ஷ்விக் வட்டாரங் களில் ஃபிலிக்ஸ் மிகப் பிரபலமாகியிருந்தார். அவருடைய சுறுசுறுப்பையும், நேர்மையான, கண்ணியமான அணுகுமுறை களையும் பல தலைவர்கள் பாராட்டிப் பேசியபோதுதான், லெனினுக்கும் அவர் அறிமுகமாகியிருந்தார்.

ரஷ்யப் புரட்சியின் முக்கியமான ஹீரோக்களில் ஒருவராக ஃபிலிக்ஸை எண்ணிய லெனின், அவர்மீது மிகுந்த மரியாதையும் நம்பிக்கையும் வைத்திருந்தார். அதனால்தான், புதிய அரசைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட 'மிலிட்ஸியா'வின் தலைமைப் பொறுப்பை ஃபிலிக்ஸிடம் வழங்குவதாக முடிவு எடுத்தார் லெனின்.

பல முறை கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பதைத்தவிர, ஃபிலிக்ஸுக்கும் காவல்துறைக்கும் அதிகம் சம்பந்தம் இல்லை. என்றாலும், கடமையில் துளியும் பிசகாத 'இரும்பு மனிதர்' என்று பெயரெடுத்த ஒருவரால், இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்பது லெனினின் நம்பிக்கை. இதை நன்கு புரிந்து

கொண்ட ஃபிலிக்ஸ், தனது புதிய பொறுப்பில் முழு கவனத்தை யும் செலுத்திச் செயல்படத் தொடங்கினார்.

புரட்சியின்போது, ரஷ்யாவிலிருந்த பல்வேறு தபால் நிலையங் கள், தந்தி அலுவலகங்களைக் கைப்பற்றும் பணி ஃபிலிக் ஸுக்குத் தரப்பட்டிருந்தது. அப்படிக் கைப்பற்றப்பட்ட அலு வலகங்களைத் தக்கவைத்துக்கொள்வதுதான் இப்போதைய சவாலாக இருந்தது.

ஆனால், புதிய மிலிட்ஸியாவின் நோக்கம், தபால் பெட்டிகளைப் பாதுகாப்பது மட்டும் அல்ல. புதிதாக அமைந்திருக்கும் லெனின் அரசுக்கு எதிரான சச்சரவுகள், கலவரங்களைக் கண்டறிந்து ஒடுக்குவதுதான் அவர்களுடைய அடிப்படைப் பொறுப்பாக இருந்தது.

அப்படியானால், ஒக்ரானாவுக்கும் இதற்கும் என்ன பெரிய வித்தியாசம்?

அவர்கள் ஜார் மன்னரைப் பாதுகாத்தார்கள். இவர்கள் புதிய ஆட்சியாளர்களைப் பாதுகாக்கிறார்கள். இந்த ஓர் அடிப்படை வித்தியாசத்தைத்தவிர, மற்ற எல்லா விஷயங்களிலும் இந்த இரு குழுக்களும் கிட்டத்தட்ட ஒரேமாதிரியாகத்தான் இயங்கிவந்தன. குறிப்பாக, எதிர்ப்பாளர்களை இனம் கண்டு நசுக்குவதில்.

இந்த விஷயம் ஃபிலிக்ஸுக்கு நன்றாகப் புரிந்திருந்தது. என்றா லும், புதிய ஆட்சிக்கு எதிரான இந்தச் சலசலப்புக் குரல்களை இப்போது ஒடுக்காவிட்டால், கம்யூனிசம் என்கிற உன்னதமான கொள்கையை உலகுக்கு நிரூபித்துக் காண்பிக்கிற ஒரு நல்ல வாய்ப்பு தவறிப்போய்விடும் என்று எண்ணினார் அவர்.

அதாவது, இப்போது ரஷ்யாவில் அமைந்திருக்கும் மக்க ளாட்சியை, உலகமே உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக் கிறது. லெனின் மற்றும் தோழர்கள் கம்யூனிசக் கொள்கைகளைச் சிறப்பாகப் பின்பற்றி, இங்கே நிஜமான சுபிட்சத்தைக் கொண்டு வந்துவிட்டால், அதன்பிறகு ஆதாரபூர்வமான இந்த உண் மையை யாராலும் மறுக்கமுடியாது.

ஆனால், இதை முயன்று பார்த்து நிரூபிப்பதற்கான நேரம், வாய்ப்புகள், அதிகாரங்கள் போன்றவை, இந்தப் புதிய அரசுக்கு வழங்கப்படவேண்டும். அப்படியில்லாமல், உள்ளூர் கலாட்டாக்

களுக்கே அவர்கள் தங்களுடைய நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்தால், அவர்களால் மேற்சொன்ன முக்கியப் பொறுப்புகளில் கவனம் செலுத்தமுடியாது.

அதுமட்டுமல்லாமல், எதிர் கோஷ்டியினரின் சதித் திட்டங்களால், ஒருவேளை இந்த அரசு கவிழ்க்கப்பட்டுவிட்டால், அது கம்யூனிசத்தின் தோல்வியாகவே பார்க்கப்படும். 'எல்லாப் பிரச்னைகளுக்கும் இதுதான் மருந்து என்று சொன்னீர்களே, இப்போது உங்கள் ஆள்களே உங்களைத் துரத்திவிட்டார்கள்' என்று ஏளனம் செய்வார்கள்.

இப்படிப் பல காரணங்களால், போல்ஷ்விக் இயக்கத்துக்கு, புதிய அரசுக்கு எதிராகச் செயல்படும் அமைப்புகளைக் கண்டறிந்து, தண்டிப்பது மிக அவசியம், அவசரம் என்று முடிவெடுத்தார் ஃபிலிக்ஸ். அதன்பிறகு, வாழ்நாள்முழுதும் அவர் தனது இந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ளவில்லை.

ஆனால், ஃபிலிக்ஸ் நினைத்ததுபோல், இந்தப் புதிய 'மிலிட்ஸியா'வால் சுதந்தரமாகவோ, சிறப்பாகவோ இயங்கமுடியவில்லை. இதற்கு முக்கியக் காரணம், மிலிட்ஸியாவைக் கட்டுப்படுத்திக்கொண்டிருந்த உள் விவகாரக் குழுதான்.

ரஷ்யப் புரட்சியைத் தொடர்ந்து, ரஷ்யா மற்றும் அதைச் சுற்றியிருந்த பல பகுதிகளை ஒருங்கிணைத்து, முழுமையான ஒரு வடிவத்துக்குக் கொண்டுவரப் போராடிக்கொண்டிருந்தது இந்தக் குழு. ஆகவே, உள்ளூர் அரசாங்கங்கள், அவற்றினிடையேயான பிரச்னைகள் என்று அவர்களுக்குப் பலவிதமான தலைவலிகள் இருந்தன.

இதனால், புதிய மிலிட்ஸியாவின் பணிகளுக்கு அவர்களால் அதிக முக்கியத்துவம் தர முடியவில்லை. ஒருவேளை அவர்களாக விரும்பி வந்தாலும்கூட, இதுபோன்ற வேலைகளில் அவர்களுக்கு அனுபவம் போதாது.

தனி நபராக, ஃபிலிக்ஸ் ஒருவர்மட்டும் எவ்வளவு வேலைதான் செய்யமுடியும்? ஒருகட்டத்தில் பொறுமை இழந்த அவர், பிரச்னையை விளக்கி லெனினுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

'கேஜிபி'யின் முதல் விதையான அந்தக் கடிதத்தின் சாரம் இதுதான். 'நீங்கள் என்னிடம் ஒப்படைத்திருக்கும் பணி, மிக

முக்கியமானது. நமது அரசின் நிலைத்தன்மைக்கு அவசிய மானது, அப்படிப்பட்ட ஒரு பணியைப் பகுதி நேரமாகச் செய்வ தெல்லாம் சரிப்படாது; சரிப்படவில்லை. ஆகவே, இதற்கென்று தனியாக, இதில்மட்டும் முழுக் கவனம் செலுத்தக்கூடிய ஒரு நிறுவனம் தேவை.'

இப்படி வெட்டு ஒன்று, துண்டு மூன்று என்று பேசுவதுதான் ஃபிலிக்ஸின் ஸ்டைல். சும்மா பொம்மை விளையாட்டுபோல், 'மிலிட்ஸியா' நடத்திக்கொண்டிருப்பது சரிப்படாது. இதற் கென்று தனி அமைப்பு வேண்டும் என்று பளிச்சென்று சொல்லி விட்டார்.

இந்தக் கடிதத்திலிருக்கும் நியாயத்தைப் புரிந்துகொண்ட லெனின், அரசுக்கு எதிராக யார் என்ன செய்கிறார்கள் என்று உளவறிந்து தெரிந்துகொள்வது, அவர்களுடைய நடவடிக்கை களைக் கட்டுப்படுத்துவது போன்ற பாதுகாப்பு நடவடிக்கை களுக்காக, புதிய அமைப்பு ஒன்றை அமைக்கத் தீர்மானித்தார்.

ஃபிலிக்ஸின் ஆலோசனைப்படி, அவருடைய அதிகாரத்துக்குட் பட்ட தனி ராஜ்ஜியமாகத் தோன்றிய அந்த அமைப்புதான், அடுத்த பல வருஷங்களுக்கு ரஷ்யா மற்றும் சோவியத் யூனி யனின் தவிர்க்கமுடியாத அரசியல் சக்தியாகத் திகழ்ந்தது.



## 6. அசாதாரணம்

ஒரு நாட்டில் எதிர்பாராத நேரத்தில் யுத்தம், பஞ்சம், இயற்கைச் சீரழிவுகள் போன்றவை நேர்ந்தால், திடுதிப் பென்று மொத்தச் சூழலும் மாறிப் போய்விடும். மக்களுக்குத் தேவை யான அடிப்படை விஷயங்கள் கிடைக் காது. பதுக்கல் பேர்வழிகள் சுறுசுறுப் பாகச் செயல்படுவார்கள். பதற் றத்தைப் பயன்படுத்திக்கொண்டு புதிய கலவரங்களை உண்டாக்கச் சிலர் கத்தி, கபடாவோடு அலைவார்கள். இது தான் நேரம் என்று அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடக்கூட சிலர் முயற்சி செய்வார்கள்.

இதுபோன்ற நேரங்களில், நிலைமை யைச் சமாளிப்பதற்காக, 'அசாதாரண' (Extraordinary) குழுக்கள் அமைக்கப் படும். இந்தத் தாற்காலிக அமைப்பு களின் ஒரே நோக்கம், அசாதாரண மான அந்தச் சூழலைக் கடந்து வெளியே வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நிறைவேற்றுவது.

இங்கே இரண்டு வார்த்தைகளை அடிக்கோடிட்டுக் கவனிக்க வேண்டும் - தாற்காலிகம் மற்றும் அசாதாரணம்.

உதாரணமாக, திடீரென்று நாட்டில் பஞ்சம், மக்கள் சாப்பாடு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அப்போது மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், அல்லது சமைத்த பண்டங்களை விநியோகிப்பதற்காக, ஒரு ரேஷன் கமிட்டி அமைக்கப் படலாம்.

பஞ்ச காலத்தில், இந்தக் கமிட்டிக்கு எல்லா வசதிகளும், முழு அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக்கும். அப்போதுதான் மீனம், மேஷம் பார்க்காமல் அவர்களால் சட்டென்று நினைத்த உதவிகளைச் செய்யமுடியும். இதைத் தவறாகப் பயன்படுத்த எண்ணுகிற ஏமாற்றுக்காரர்களை இரும்புக் கரம் கொண்டு கட்டுப்படுத்தவும் முடியும்.

ஆனால், இதுபோன்ற நடவடிக்கைகளால் பஞ்சம் தீர்ந்து, மீண்டும் நிலைமை கட்டுக்குள் வந்தபிறகு, இந்த அசாதாரணக் குழுக்களுக்கு எந்தத் தேவையும் இருக்காது. அவற்றால் எந்தப் பலனும் இருக்காது. அப்போது அவற்றைக் கலைத்து விடுவார்கள்.

ஃபிலிக்ஸ் டெஜொர்ஜின்ஸ்கி ஆலோசனைப்படி, 1917-ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட ரஷ்யப் பாதுகாப்பு நிறுவனமான 'செகா', இதுபோன்ற ஓர் 'அசாதாரண' அமைப்பாகத்தான் தொடங்கப்பட்டது.

அப்போதைய ரஷ்யாவில் அப்படி என்ன அசாதாரணமான நிலைமை?

ஜார் ஆட்சி தூக்கியெறியப்பட்டு, லெனின் தலைமையிலான போல்ஷ்விக் அரசு அமைந்தபிறகு, இதனை விரும்பாத சிலர் ஆர்ப்பாட்டங்கள், கலவரங்கள், வேலை நிறுத்தங்கள் போன்றவற்றை நடத்தி, மக்களின் ஆதரவைத் திரட்ட முயன்றுகொண்டு இருந்தார்கள்.

போல்ஷ்விக் இயக்கத்தினர் பலர், இதுபோன்ற எதிர்ப்புகளை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. என்றாலும், இவற்றை முற்றிலும் அலட்சியப்படுத்திவிடமுடியாதபடி அவர்களுக்குச் சில தயக்கங்கள் இருந்தன.

முதலாவதாக, இந்த எதிர்ப்பாளர்கள் தன்னிச்சையாக இயங்குகிறார்களா அல்லது வேறு யாரேனும் பின்னணியில் இருந்துகொண்டு இவர்களை ஆட்டிவைக்கிறார்களா என்பதைப் புதிய அரசாங்கத்தால் உறுதிப்படுத்திக்கொள்ளமுடியவில்லை.

ஒருவேளை, இவர்கள் எல்லோரும் தனி நபர்கள். சும்மா பதவி கிடைக்கவில்லையே என்று கோபப்பட்டுக்கொண்டு கல்லெறிகிறார்கள் என்று உறுதியாகத் தெரிந்துவிட்டால், பிரச்னையே இல்லை. 'சூரியனைப் பார்த்து நாய் குரைக்கிறது' என்று பழமொழி சொல்லிவிட்டு அடுத்த வேலையைப் பார்க்கப் போய்விடலாம்.

அப்படியில்லாமல், வேறு சில அன்னிய சக்திகள், அதாவது கம்யூனிசத்துக்கு எதிரான மேலை நாடுகளில் சிலர் இவர்களைத் தூண்டிவிடுகிறார்களோ என்பதுதான் லெனின் தலைமையிலான அரசின் முக்கியமான சந்தேகம்.

புதிதாக ஆட்சி அமைத்திருக்கும் இவர்கள், இன்னும் அரசாங்கக் கட்டடங்களில் தொடங்கி, ராணுவம்வரை எதையும் ஒழுங்குபடுத்தவில்லை, பலப்படுத்தவில்லை. இப்படியொரு சூழலில், இந்த அன்னியர்கள் முதலில் உள்நாட்டுக் கலவரங்களைத் தூண்டிவிட்டு, அதன்பிறகு வெளியிலிருந்து உள்ளே குதித்து மொத்தமாக எல்லாவற்றையும் ஆக்கிரமித்துக்கொண்டுவிட மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

பரப்பளவிலும் சுற்றளவிலும் (அப்போதே) மிகப் பெரிய தேசமாக விரிந்திருந்த ரஷ்யாவின் எல்லைப் பகுதிகளைக் கண்காணிப்பதும் பாதுகாப்பதும் சுலபமான விஷயமில்லை. ஆகவே, இதுபோன்ற சலசலப்புகளை இப்போது அலட்சியப்படுத்திவிட்டால், உள்ளே இருக்கும் துரோகிகளைப் பயன்படுத்திக்கொண்டு, வெளியிலிருந்து ஊடுருவல்கள் தொடங்கிவிடும்.

முதலாளித்துவத்தில் ஊறிப்போன மேற்கத்திய நாடுகள், கம்யூனிசத்தை எப்படியாவது அழித்துவிடப் போராடுகின்றன என்று ஒரு கருத்தை மனத்தில் அழுத்தமாக வளர்த்துக்கொண்டிருந்த போல்ஷ்விக் காம்ரேட்கள், ரஷ்யாவின் முழுக் கட்டுப்பாடும் தங்கள் கையில் வரும்வரை, இதுமாதிரியான உள்நாட்டுக் கலவரங்கள், எதிர்ப் புரட்சிகளை அனுமதிப்பது ஆபத்து என்கிற முடிவுக்கு வந்தார்கள்.

பச்சையாகச் சொன்னால், எப்படியாவது தங்களுடைய அரசைக் காப்பாற்றிக்கொள்கிற எண்ணம்தான் என்றாலும், மக்களுடைய ஆட்சியை மற்றவர்கள் தட்டிக்கொண்டு போய்விடாதபடி பாதுகாக்கவேண்டும் என்கிற நோக்கத்தைப் பாராட்ட வேண்டும்.

இப்படிப் பல காரணங்களாலும், ரஷ்யப் புரட்சியை அடுத்து, நாடுமுழுதும் பரவியிருந்த அரசியல் நிலையற்ற தன்மையைக் கருத்தில் கொண்டும், 'செகா'போன்ற ஓர் 'அசாதாரண'ப் பாதுகாப்பு அமைப்புக்கான தேவை இப்போது இருக்கிறது என்று லெனின் உள்ளிட்ட தோழர்கள் முடிவு செய்தார்கள்.

ஆனால் அதேசமயம், இந்த ஆரம்பக் குழப்பங்கள், தடுமாற்றங் களெல்லாம் தீர்ந்து, போல்ஷ்விக் அரசு நிலைபெற்றபின்னர், இதுபோன்ற ஒரு ரகசியப் போலீஸ் படை நமக்குத் தேவைப் படாது என்பதும் அவர்களுடைய நம்பிக்கையாக இருந்தது.

அதனால்தான், 'செகா' (Cheka) அல்லது 'வெசெகா' (VeCheka) என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்த அமைப்பின் பெயரி லேயே, அதன் அசாதாரணத் தன்மையை நேரடியாகவும், தாற் காலிக நோக்கத்தை மறைமுகமாகவும் பார்க்கமுடிகிறது.

போல்ஷ்விக் அரசு அமைந்து சில வாரங்களுக்குள் தொடங்கப் பட்ட 'செகா'வின் முழுப் பெயர், All Russian Extraordinary Commission for Combating Counter-Revolution and Sabotage. அதாவது, அரசுக்கு எதிரான கலவரங்கள் மற்றும் நாசவேலைகளை எதிர்த்துப் போராடும் அகில ரஷ்ய அசாதாரணக் குழு.

கிட்டத்தட்ட ஓர் அரசியல் கட்சிக்குரிய பெயர் நயத்தோடு இருக் கும் 'செகா', புரட்சிக்குப் பிந்தைய ரஷ்யச் சூழலைச் சமாளிப் பதற்காக உருவாக்கப்பட்ட தாற்காலிக அமைப்புதான். அதனை நிரந்தரமான ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்திக்கொள்ளும் யோசனையெல்லாம், ரஷ்யத் தலைவர்களுக்கு ரொம்பப் பின்னால்தான் வந்தது.

1918-ம் ஆண்டில், 'செகா'வின் பெயர் கொஞ்சம் மாற்றப்பட்டது. எதிர்த்துப் போராடும் பட்டியலில் அநியாயக் கொள்ளை யடிக்கும் பதுக்கல்கள் (Profiteering), ஊழல் (Official Corruption) ஆகியவற்றைச் சேர்த்துக்கொண்டார்கள்.

இப்படி ஒரு சில சிறிய மாற்றங்களைத்தவிர, சுமார் நான்கு ஆண்டுகளுக்குமேலாக, 'செகா' ஒரேமாதிரியான வடிவத்தில், ஒரேமாதிரியான நோக்கங்களோடுதான் இயங்கிக்கொண்டிருந்தது. ஆனால், ரஷ்ய அரசியல், சமூகச் சூழலைப் பொறுத்து, காலப்போக்கில் அதன் ஊழியர் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது. அது பயன்படுத்திய வழிமுறைகளும் தீவிரமடைந்தது.

'செகா' அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட நாள், 1917-ம் ஆண்டு டிசம்பர் 20-ம் தேதி. அதில் பணிபுரிகிற அனைவரும், 'செகிஸ்ட்கள்' (Chekists) என்று பெருமையோடு அழைக்கப்பட்டார்கள்.

அதன்பிறகு, 'செகா' என்ற பெயர் 1922-ம் ஆண்டிலேயே மாற்றப்பட்டுவிட்டது. என்றாலும், 'செகிஸ்ட்கள்' என்ற பெயரும், அதோடு இணைந்த கௌரவமும் மாறவில்லை. இன்றுவரை, 'நான் ஒரு செகிஸ்ட்' என்று பெருமையோடு சொல்லிக்கொள்ளும் போல்ஷ்விக்/கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஏராளம். பிரபலமான ஓர் உதாரணம், கேஜிபியில் பணியாற்றிப் பின்னர் ரஷ்யப் பிரதமரான விளாமிர் புதின் (Vladimir Putin).

இதேபோல், 'செகா' அமைப்பு தொடங்கப்பட்ட இருபதாம் தேதியை, 'செகிஸ்ட்கள் தினம்' என்று பெருமையோடு கொண்டாடுகிற பழக்கமும், அதன்பிறகு பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்தது.

இதனால்தான், 'செகா'விலும், அதன் பிந்தைய வடிவங்களிலும் பணிபுரிந்த செகிஸ்ட்களுக்கு, மாதம் பிறந்தால் ஒண்ணாந்தேதி சம்பளம் கிடையாது. 'செகா' தோற்றுவிக்கப்பட்ட இருபதாம் தேதிதான் சம்பளம் பெறுவார்கள். இதில் அவர்களுக்கு அளவற்ற பெருமிதம் உண்டு.

'செகா' நிறுவனரான ஃபிலிக்ஸ், இங்கே பணிபுரிகிறவர்களுக்குச் சில முக்கியமான தகுதிகள் வேண்டும். அவற்றை வளர்த்துக்கொண்டு, 'செகா'வில் இணைகிறவர்களுக்கு, தங்களுடைய பொறுப்பு குறித்த கம்பீரமான பெருமை வேண்டும் என்று நம்பினார்.

'செகிஸ்ட்' என்ற பதத்தை ஒரு கௌரவ அடையாளமாக முன்னிறுத்தியவர் அவர்தான். வேலையில் கடுமையானவர்கள், ஆனால் உள்ளுக்குள் ஈர இதயம் கொண்டவர்கள். எந்தச் சூழலி

லும் பதற்றமடையாதவர்கள், நேர்மையானவர்கள் என்று 'செகிஸ்ட்'களின் பண்புகளை வரையறுத்து, எல்லோரும் இதன்படி நடந்துகொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினார் அவர்.

இப்படிச் சொல்வதோடு நிறுத்திவிடாமல், கடைசிவரை தானும் ஓர் உண்மையான செகிஸ்டாக வாழ்ந்து காட்டியவர் ஃபிலிக்ஸ். இன்றுவரை, அவரது பணி சார்ந்த பொறுப்புகள் அல்லது கடமைகளிலிருந்து அவர் தவறியதாக யாரும் எந்தச் சிறிய விமரிசனத்தையும் வைத்துவிடமுடியாது. அந்த அளவுக்குப் பிசிறில்லாமல் 'செகா'வை வழிநடத்திய முக்கியத் தலைவர் அவர்.

இதனால்தான், ஃபிலிக்ஸைப் பின்பற்றி 'செகா'வில் இணைந்தவர்களில் தொடங்கி, அதன்பிறகு பல தலைமுறை செகிஸ்ட்களுக்கு அவர் ஒரு புனிதமான வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அந்தவிதத்தில், ரஷ்யப் பாதுகாப்பு மற்றும் உளவுத்துறைச் சரித்தில் ஃபிலிக்ஸின் இடம், லெனின், ஸ்டாலின் போன்றோரின் முக்கியத்துவத்துக்குக் கொஞ்சமும் குறையாதது.

புரட்சி முடிந்து சுமார் ஆறு வாரங்களுக்குப்பிறகு, 'செகா' அமைப்பு தோற்றுவிக்கப்பட்டபோது, இந்த அமைப்பு எதற்காக என்பது ஃபிலிக்ஸ் மற்றும் லெனின் இருவருக்கும் தெளிவாகப் புரிந்திருந்தது. ஆனால், இதன் கடமைகள் என்னவாக இருக்க வேண்டும் என்பதை அப்போது அவர்களால் சரியாக / முழுமையாகத் தீர்மானிக்கமுடியவில்லை.

ஆங்கிலத்தில் 'Ad-hoc' என்று சொல்வார்கள். அதாவது, நோக்கம் தெளிவாக இருக்கிறது. ஆனால் அதை எப்படிச் செய்ய வேண்டும் என்கிற திட்டம் தெளிவாக இல்லை. என்றாலும், திட்டம் சரியாக அமையும்வரை காத்திருக்கமுடியாது. ஆகவே, அப்போதைக்கு எது முக்கியமாக, உடனடித் தேவையாகத் தோன்றுகிறதோ அதைச் செய்யத் தொடங்குவது. அதன்பிறகு படிப்படியாக மற்ற திட்டங்களை உருவாக்கிக்கொள்ளலாம்.

இந்தமாதிரியான ஓர் ஏற்பாடாகத் தான், 'செகா' தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்புக்கு என்னென்ன அதிகாரங்கள் உண்டு என்பதுகூட தெளிவாக வரையறுக்கப்படவில்லை. அதன்பிறகு காலப்போக்கில்தான், 'செகா' தனக்கான பாதையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டது.

ஃபிலிக்ஸுக்கும் அப்போது இந்தத் துறையில் முறையான பயிற்சி அல்லது முன் அனுபவம் எதுவும் இல்லாததால், ஆரம்ப காலத்தில் 'செகா' எப்படிச் செயல்படவேண்டும், என்ன மாதிரி யான வழிமுறைகளைப் பயன்படுத்தவேண்டும் என்பதையெல் லாம் தீர்மானிப்பதில் மிகுந்த சிரமம் இருந்தது.

ஆனால், நாடுமுழுதும் பதற்றம் தொற்றிக்கொண்டிருந்த அந்தச் சூழலில், இதையெல்லாம் நிதானமாக உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருக்க நேரமில்லை. ஆகவே, ஆபத்துக்குப் பாவ மில்லை என்று, ஒக்ரானாவைப் பின்பற்றத் தீர்மானித்தார்கள்.

எந்த ஒக்ரானா? முந்தைய ஆட்சியில், ஜார் வம்சத்தினரின் ஆணைப்படி புரட்சியாளர்கள் எல்லோருடைய கண்ணிலும் விரலை விட்டு ஆட்டிக்கொண்டிருந்த அதே ஒக்ரானா.

புரட்சிக் காலத்தில் அநேகமாக எல்லா போல்ஷ்விக் தலைவர் களையும் ஒக்ரானா உளவு பார்த்துக்கொண்டிருந்தது. தங்களைச் சுற்றியிருப்பவர்களில் யார் துரோகிகள் என்று நிச்சயமாகத் தெரிந்துகொள்ளமுடியாமல் திணறிய புரட்சியாளர்கள், எந்த நேரத்திலும் கைதாகிவிடுவோம் என்கிற லேசான பயத்தோடு தான் இயங்கவேண்டியிருந்தது.

அப்படிப் புரட்சியாளர்களைப் பாடாகப் படுத்திக்கொண்டிருந்த ஒக்ரானாவை, இப்போது அவர்களே 'செகா'வுக்காகக் காப்பி யடிக்க நேர்ந்தது. வேறு வழியே இல்லாமல்தான் ஃபிலிக்ஸும் தோழர்களும் இந்த முடிவுக்கு வந்திருக்கவேண்டும். என்றாலும், இதை நியாயப்படுத்துவதற்குச் சில அடிப்படைக் காரணங்களும் இருந்தன.

முதலாவதாக, ஒக்ரானா என்பது என்ன?

ஜார் மன்னருக்கு எதிரான, அதாவது ஆட்சியாளர்களுக்கு எதிரான புரட்சி முயற்சிகளைக் கட்டுப்படுத்தும் ஓர் அமைப்பு. இந்தக் கோணத்தில் பார்க்கிறபோது, அப்போதைய ஒக்ரானாவின் நோக்கத்துக்கும், இப்போதைய 'செகா'வுக்கும் அதிக வித்தி யாசங்கள் இல்லை.

அப்போது போல்ஷ்விக் உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் ஜார் அர சாங்கத்தை எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்தார்கள். இப்போது போல்ஷ்விக் ஆட்சி அமைந்துவிட்டது. வேறு சிலர் அவர்களை எதிர்த்துப் போராடுகிறார்கள். ஆகவே, எதிர்ப்பாளர்களை

ஒடுக்குவது என்கிற புள்ளியில் ஒக்ரானாவும் செகாவும் ஒத்துப் போகின்றன.

ரஷ்யாவில் கிட்டத்தட்ட முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமேல் இயங்கிய ஒக்ரானா, எண்ணிக்கை அளவில் கடைசிவரை ஒரு சிறிய அமைப்பாகவேதான் இருந்தது. என்றாலும், அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் அவர்கள் ஓரளவு நல்ல வெற்றியடைந்திருந்தார்கள்.

இந்த விஷயத்தை அனுபவபூர்வமாக உணர்ந்திருந்த போல்ஷ்விக் தோழர்கள், ஒக்ரானாவை விரோதியாகக் கருதி ஒதுக்குவதைவிட, அதன் வழிமுறைகளைப் பின்பற்றி, நாமும் இதேபோன்ற வெற்றியை அடையமுடிந்தால் நல்லதுதானே என்று யோசித்தார்கள்.

ஜார் அரசின்போது ஒக்ரானா நிறுவனம் பின்பற்றிய பல வழிமுறைகள், போல்ஷ்விக் இயக்கத்தாரால் கடுமையாக விமரிசனம் செய்யப்பட்டன. அதுபோன்ற கொடூரமான அடக்கு முறைகளைப் பொதுமக்கள்மீது அவிழ்த்துவிட அவர்கள் விரும்பவில்லை. என்றாலும், எந்தத் திசையில் போவது என்று புரியாமல் தவித்துக்கொண்டிருப்பதைவிட, எதிரியின் செயல் பாடுகளில் இருக்கும் நல்லவற்றைப் படித்துப் பின்பற்றலாமே என்று யோசித்தார்கள்.

அதாவது, முந்தைய ஆட்சியில் ஒக்ரானா என்னவெல்லாம் செய்தது, எப்படியெல்லாம் தங்களுடைய ரகசியங்களை உளவறிந்து பயன்படுத்தியது, தங்களுடைய முயற்சிகள் எப்படி முறியடிக்கப்பட்டன என்பதையெல்லாம் நேரடியாகப் பார்த்திருந்த போல்ஷ்விக் இயக்கத்தினர், கிட்டத்தட்ட அதே பாணியில் இந்தப் புதிய எதிரிகளைச் சந்திக்கத் தீர்மானித்தார்கள்.

பின்னாள்களில் 'செகா' வெவ்வேறு பெயர்களில் புதுப்புது அவதாரங்கள் எடுத்து, கடைசியாக 'கேஜிபி' என்கிற அடையாளத்துடன் நிலைபெற்றபிறகும்கூட, ஆரம்ப காலத்தில் நாங்கள் ஒக்ரானாவைப் பின்பற்றினோம் என்று அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. இதற்குக் காரணம், ஜார் அரசின் அடக்கு முறை அடையாளங்களில் ஒன்றான 'ஒக்ரானா'வுக்கும் தங்களுக்கும் இடையே இப்படியோர் ஒப்பீடு செய்யப்படுவதை அவர்கள் விரும்பவில்லை.

அதுமட்டுமின்றி, தொடக்கத்தில் வேறு வழியே இல்லாமல் ஒக்ரானாவின் வழிமுறைகள் சிலவற்றைப் பின்பற்ற ஆரம்பித்த செகா, சீக்கிரத்திலேயே தனக்கென்று ஓர் அடையாளத்தை அமைத்துக்கொண்டுவிட்டது. அதன்பிறகு செகிஸ்ட்கள் செய்த உளவுச் சாதனைகளெல்லாம், ஒக்ரானாக்களை உப்பு, மிளகாய் போட்டுத் தூக்கிச் சாப்பிட்டுவிடக்கூடியவை.

ஆரம்பத்தில், பெரும்பாலான செகிஸ்டுகளுக்கு இரண்டு வேலைகள்தான் தரப்பட்டிருந்தன.

1. ரஷ்யாமுழுவதும், போல்ஷ்விக் அரசுக்கு எதிரான போராட்டங்கள், எதிர் நடவடிக்கைகளைக் கண்டறிந்து, அவற்றை யார் செய்துகொண்டிருந்தாலும் தடுத்து நிறுத்துவது.

2. குற்றம் செய்தவர்களை, 'புரட்சி ட்ரிப்யூனல்' எனப்படும் சிறப்பு நீதிமன்றத்திடம் ஒப்படைப்பது. அவர்களுக்கு எதிராக வழக்கு நடத்தி, தண்டனை பெற்றுத் தர உதவுவது.

சாதுவான இந்த இரு கடமைகளோடு தனது பணியைத் தொடங்கிய 'செகா', முதலில் பெட்ரோக்ராட் நகரில் இயங்கிக் கொண்டிருந்தது. பின்னர் சோவியத் அரசு மாஸ்கோவைத் தனது அதிகார மையமாக மாற்றிக்கொண்டபோது, செகாவும் அங்கே நகரவேண்டியதாயிற்று.

அப்போது மாஸ்கோ நகரில் செகாவுக்காகத் தேர்ந்தெடுக்கப் பட்ட 'லுப்யன்கா' (Lubyanka) என்ற மஞ்சள் கட்டடம்தான், பின்னாள்களில் கேஜிபியின் தலைமையகமாக உலகப் புகழ் பெற்றது.

ரஷ்யப் புரட்சி தீவிரமடைவதற்குப் பல வருஷங்கள் முன் பாகவே, 1898-ம் ஆண்டில் கட்டப்பட்ட லுப்யன்காவில், ஓர் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் இயங்கிக்கொண்டிருந்தது. அவர்களை வெளியே அனுப்பிவிட்டு, செகிஸ்ட்கள் அந்தக் கட்டடத்தைத் தங்களுடைய முக்கிய அலுவலகமாக மாற்றிக்கொண்டார்கள்.

அதன்பிறகு, 'செகா' என்கிற பெயரில் தொடங்கி, அதன் நோக்கங்கள், கொள்கைகள், வழிமுறைகள், தலைவர்கள், அலுவலர்கள், அதிகாரிகள், உளவாளிகள் என்று எல்லாமே காலப்போக்கில் மாறிப்போனது. ஆனால், லுப்யன்கா மட்டும்

மாறவே இல்லை. இன்றைக்கும், ரஷ்யர்களிடம் 'கேஜிபி' என்று சொல்லிப் பார்த்தால், மஞ்சள் மணக்கும் லுப்யன்கா கட்டடம் தான் அவர்களுடைய நினைவில் கம்பீரமாக வந்து நிற்கும்.

லுப்யன்காவைப்போலவே, தனது கொள்ளுப் பேரன் கேஜிபிக்கு 'செகா' கொடுத்த இன்னொரு அடையாளக் கொடை, அதன் சின்னம்.

கேஜிபி, செகா, ஒக்ரானாவுக்கெல்லாம் முன்னோடியான அந்தக் காலத்து ஒப்ரிசினிகியின் சின்னத்தில், ஒரு நாயும் துடைப்பமும் இடம்பெற்றிருந்ததை ஏற்கெனவே பார்த்தோம். எதிரிகளை மோப்பம் பிடிப்பதற்கு நாய், அவர்களை ஒழித்து, நாட்டைச் சுத்தப்படுத்துவதற்கு துடைப்பம்.

செகாவின் சின்னமும் கிட்டத்தட்ட இதேபோன்ற சிந்தனையோடுதான் அமைக்கப்பட்டிருந்தது. நாய், துடைப்பத்துக்கு பதிலாக, இங்கே ஒரு போர் வாள், ஒரு கேடயம்.

அதாவது, எதிரிகளின் தாக்குதலில் இருந்து சோவியத் ரஷ்யாவைப் பாதுகாப்பதற்காகக் கேடயம். அந்த எதிரிகளோடு போரிட்டு, அவர்களை வெல்வதற்காக வீர வாள். செகாவின் பிரபலமான இந்தச் சின்னத்தைத்தான், பின்னர் கேஜிபியும் விரும்பி ஏற்றுக்கொண்டது.

தலைமையகக் கட்டடம், சின்னம் ஆச்சு, அடுத்தது என்ன? யூனிஃபார்ம்தானே?

அந்தக் கால செகிஸ்ட்கள் அணிந்த சீருடையில் முக்கியமானது, நீண்ட தோல் சட்டை. அப்போதிலிருந்து, ரஷ்யத் திரைப்படங்களில் வருகிற துப்பறியும் கதாநாயகர்கள் எல்லோரும் லெதர் ஜாக்கெட் அணிந்துகொள்வது தவிர்க்கமுடியாத சம்பிரதாயமாகி விட்டது.

அதெல்லாம் சரி, ஆனால், விஜய்காந்த் முதலான நம் ஊர் சினிமா சிஐடிக்ளைப்போல் இப்படி நீண்ட சட்டையெல்லாம் அணிந்து கொண்டு, செகிஸ்ட்கள் அப்படி எதைத் துப்பறிந்தார்கள்?

அப்போதைய செகிஸ்ட்களுக்கு, நிதானமாகத் துப்பறிவதற்கான அவசியமோ நேரமோ இல்லை. போல்ஷ்விக் அரசுக்கு எதிராகப் பேசுகிறவர்கள், மக்களை அணி திரட்டுகிறவர்கள், கலவரங்கள்,

போராட்டங்கள், தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் திட்டமிடுகிறவர்கள் என்று நாடு முழுதும் ஆங்காங்கே பரவிக் கிடந்ததால், தீயணைப்புப் படையினர்போல் எந்நேரமும் விஷமிகளைத் தேடி ஓடவேண்டியிருந்தது.

இப்படிப் பிரச்னை செய்கிறவர்களைப் பிடித்துக் கைது செய்துவிட்டாலும், விஷயம் முடிந்துவிடாது. அதன்பிறகு அவர்களுடைய குற்றத்துக்கான ஆதாரங்களைத் திரட்டி, நீதிமன்றத்திடம் சமர்ப்பித்து, அவர்கள் கேட்கிற குறுக்கு விசாரணைக் கேள்விகளுக்கு பதில் சொல்லி, அவர்கள்தான் தப்புச் செய்தவர்கள் என்று நிரூபித்து, உள்ளே தள்ளும்வரை மாங்குமாங்கென்று போராடவேண்டும்.

கொஞ்சமும் சுவாரசியமில்லாத வேலைதான். ஆனால், ஆரம்ப காலத்தில் செகிஸ்ட்களுடைய அதிகார எல்லை இதோடு முடிந்துவிட்டது. இதற்குமேல் அவர்களால் செய்யக்கூடியது என்று பெரிதாக எதுவுமே இல்லை.

இதுபோல் என்னதான் விளக்கங்கள், காரணங்கள் சொன்னாலும், கேடயமும் வாளும் வைத்துக்கொண்டு நாட்டைப் பாதுகாக்கக் கிளம்பியிருக்கும் ஓர் அமைப்பு, இப்படியா அநியாயத்துக்குத் தூங்கி வழிந்துகொண்டிருக்கும்?

செகாவைத் தட்டியெழுப்பிச் சுறுசுறுப்பாக்குவதற்கு, சில கொலைகளும், ஒரு கொலை முயற்சியும் தேவைப்பட்டது!



# 7. சிவப்பாக ஒரு பயங்கரம்

**1918**-ம் ஆண்டு, ஆகஸ்ட் 30-ம் தேதி. மாஸ்கோவிலிருந்த தொழிற்சாலை ஒன்றில், லெனினைப் பேச அழைத்து இருந்தார்கள். வழக்கம்போல், வந்து இருந்தவர்கள் எல்லோரையும் தனது உணர்ச்சிமயமான பேச்சால் கட்டிப் போட்டார் தோழர் லெனின்.

கூட்டம் முடிந்து, அனைவரிடமும் விடை பெற்றுக்கொண்டு, காரை நோக்கி நடந் தார் லெனின். கதவைத் திறந்து உள்ளே நுழையுமுன், பின்னாலிருந்து அந்தக் குரல் கேட்டது, 'காம்ரேட் லெனின்.'

சட்டென்று திரும்பிப் பார்த்தார் லெனின். அங்கே நின்றிருந்த பெண்ணின் பெயர், ஃபைனா யெஃபிமொவ்னா கப்லன் (Faina Yefimovna Kaplan).

'என்ன விஷயம்?' என்று லெனின் கேட்பதற்குள், ஃபைனா அவரைச் சுடத் தொடங்கிவிட்டாள். சுற்றியிருந்த தொழிலாளர்களும், காவல்துறையின ரும் பாய்ந்து பிடிப்பதற்குள், லெனினை மூன்று முறை சுட்டுவிட்டாள் அவள்.

அடுத்த சில விநாடிகளில், அந்தப் பகுதி முழுவதும் பரபரப்பு தொற்றிக்கொண்டது. லெனினுக்கு மருத்துவ உதவிக்கான ஏற்பாடுகள் ஒருபக்கம் நடந்தன. இன்னொருபக்கம் செகாவுக்குத் தகவல் பறந்தது.

அரசுக்கு எதிராகக் கொடி உயர்த்துகிறவர்களையெல்லாம் கவனமாகப் பிடித்துக்கொண்டிருந்த செகாவுக்கு, தைரியமாகத் துப்பாக்கி தூக்கிவிட்ட இந்தப் பெண்ணைப்பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. அரக்கப் பரக்க ஓடி வந்து, ஃபைனாவைக் கைது செய்து விசாரணையைத் தொடங்கினார்கள்.

அடுத்த சில மணி நேரங்களில், செகிஸ்ட்கள் தங்களுக்குத் தெரிந்த எல்லா வழிமுறைகளையும் பிரயோகித்துப் பார்த்துவிட்டார்கள். எதுவும் ஃபைனாவிடம் பலிக்கவில்லை, திரும்பத் திரும்ப அவள் சொன்னது மிகச் சில விஷயங்கள்தான்.

'நான்தான் லெனினைச் சுட்டேன். அவர் புரட்சிக்கு துரோகம் செய்துவிட்டார் என்பதால், அவரைக் கொல்லவேண்டும் என்று பல நாள்களாகத் திட்டமிட்டிருந்தேன். என்னுடைய விருப்பத்தின்படி செய்த விஷயம்தான் இது. எனக்கு யார் துப்பாக்கி கொடுத்தார்கள் என்பதைச் சொல்லமாட்டேன். இதுபற்றி வேறு எந்த விவரங்களையும் சொல்லமாட்டேன்.'

கிளிப்பிள்ளைபோலத் தொடர்ந்து அவள் இதையே ஒப்பித்துக்கொண்டிருக்கையில், லெனின் உயிர் பிழைத்துவிட்டார் என்கிற செய்தி வந்தது. ஃபைனாவுக்கு பார்வைக் கோளாறு உண்டு. இதனால், அவள் சுட்ட குண்டுகள் லெனினின் இதயத்தைத் தாக்கவில்லை. கடுமையான காயம். ஆனால் உயிருக்கு ஆபத்து இல்லை.

இப்போது செகிஸ்ட்களை உறுத்திக்கொண்டிருந்த முக்கியமான கேள்வி, இந்தப் பெண் ஃபைனாவுக்கு லெனின்மீது தனிப்பட்ட விரோதமா அல்லது வேறு யாருடைய தூண்டுதலின்பேரில் இந்தக் கொலை முயற்சியில் இறங்கினாளா? அடுத்த பல நாள்களுக்குப்பிறகும், இந்த விஷயத்தை அவர்களால் உறுதி செய்துகொள்ளமுடியவில்லை.

போதாக்குறைக்கு, லெனின் சுடப்பட்ட அதே நாளில், லியோனிட் கன்னெகிஸர் (Leonid Kannegiser) என்பவரால் செகாவின் பெட்ரோக்ராட் பிரிவுத் தலைவர் மொய்சி சாலமனோவிச் யுரிட்ஸ்கி (Moisei Solomonovich Uritsky) கொல்லப்பட்டார்.

ஒரே நாளில் அடுத்தடுத்து நிகழ்ந்த இந்த இரு சம்பவங்களுக்குத் தொடர்பு உண்டா, இதோடு முடிந்துவிடுமா அல்லது இன்னும் கொலைகள், கொலை முயற்சிகள் தொடரப்போகிறதா என்று புரியாமல் குழம்பியது செகா.

ஒருபக்கம், நாட்டின் தலைவர் சுடப்பட்டிருக்கிறார். அதைப் பற்றி எந்த விவரமும் தெரியாமல், சதிகாரர்கள் யார் என்பதைக் கூட தெளிவுபடுத்தாமல் இருக்கிற அவமானம். இன்னொரு பக்கம், செகாவின் முக்கியப் பிரமுகர் ஒருவரே கொல்லப்பட்டு விட்டார். இந்த இரட்டை அழுத்தத்தில் செகாவுக்கு மூச்சுத் திணறியது.

இந்தச் சம்பவங்களுக்குச் சில நாள்கள் முன்பு, வேறு சில அரசியல் கொலைகளும் நடந்திருந்தன - *1918* ஜூன் மாதத்தில் போல்ஷ்விக் தலைவர் வொலொடர்ஸ்கி (Volodarski) கொல்லப் பட்டார். அடுத்த மாதம், ரஷ்யாவிலிருந்த ஜெர்மன் தூதர் வில் ஹெம் மிர்பக் (Wilhelm Mirback) மாஸ்கோவில் கொலையானார்.

அதாவது, மூன்று மாதங்களுக்குள், அரசுக்கு எதிராக நான்கு பெரிய தாக்குதல்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதில் மூன்று முக்கியஸ்தர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். லெனின் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்திருக்கிறார். இத்தனை சம்பவங்களையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதற்கு செகா என்னத்துக்கு?

இந்தக் கேள்வி எல்லோர் மனத்திலும் எழுந்திருப்பதைப் புரிந்து கொண்ட செகா, கடந்த சில மாதங்களாகவே, அதிருப்தியாளர் கள் நடத்தும் போராட்டங்கள், கலவரங்கள், வேலை நிறுத்தங் களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை கவனித்தது. இந்தத் தகவல்களின் அடிப்படையில், நாட்டில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுவிட்டதாக முடிவு செய்துவிட்டது.

லெனின் சுடப்பட்ட மறுதினம், ஆகஸ்ட் *31*-ம் தேதி, கிளர்ச்சி யாளர்களுக்கு எதிரான அதிவேக நடவடிக்கைகளைத் தொடங்கி யது செகா. நாடுமுழுதும் அரசுக்கு எதிராக இயங்குபவர்கள் சுற்றி வளைக்கப்பட்டார்கள். சிலர் கைது செய்யப்பட்டார்கள். பலர் கொல்லப்பட்டார்கள்.

செப்டம்பர் 3-ம் தேதி, லெனினைக் கொல்ல முயன்ற ஃபைனா கப்லனுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அவளைச்

சுட்டு முடித்த அதே வேகத்தில், யுரிட்ஸ்கி கொலையோடு தொடர்புடையவர்கள் என்று நூற்றுக்கணக்கானவர்களைப் பிடித்து, தண்டனை வழங்கியது செகா.

வங்கிகளில், 'சேவிங்ஸ் மேளா', 'லோன் மேளா' என்று திருவிழா நடத்துவார்களே, அதுபோல், அடுத்த சில வாரங்களில் ரஷ்யா முழுவதும் 'அடக்குமுறை மேளா' ஒன்றை முன்னின்று நடத்தியது செகா. முழு தீவிரத்துடன் ஊர் ஊராகச் சென்று, பிரச்னைக்குரியவர்களைப் பிடித்து உள்ளே தள்ளினார்கள். அடங்க மறுத்து வம்பு பண்ணுகிறவர்கள் இரக்கமே இல்லாமல் சுடப்பட்டார்கள்.

ஆனால், வெறுமனே கைது செய்து வழக்குத் தொடர்வதுதானே செகாவின் வழக்கம்? இப்படி 'இன்ஸ்டண்ட் தண்டனை'களை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் எப்படி வந்தது?

1918-ம் ஆண்டு தொடங்கிய ரஷ்ய உள்நாட்டுப் போரால், 'வெள்ளை ராணுவம்' என்று அழைக்கப்பட்ட போல்ஷ்விக் அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்கள் கூடுதல் பலம் பெற்றிருந்தார்கள். இந்த நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டு, செகாவுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இதுதவிர, அதே ஆண்டு டிசம்பர் 19-ம் தேதி, செகாவின் விசேஷப் பிரிவு ஒன்றும் தொடங்கப்பட்டது. அதுவரை செகாவிலும் ரஷ்ய ராணுவத்திலும் இடம்பெற்றிருந்த உளவுப் பணிகளை ஒருங்கிணைத்த இந்தப் பிரிவுக்கு, மிகைல் செர்கெயெவிச் கெட்ரொவ் (Mikhail Sergeyevich Kedrov) தலைவராக நியமிக்கப்பட்டார்.

இந்தப் பிரிவின் முக்கியமான நோக்கம், உள்நாட்டுப் போரால் ஏற்பட்டிருக்கும் குழப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு, எதிர்ப்பாளர்களுக்குள் ஊடுருவி அவர்களுடைய ரகசியங்களைத் தெரிந்துகொள்வது, உரிய எதிர் நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்வது.

இதற்காக, ஏராளமான பழைய, புதிய உளவாளிகள் செகாவில் சேர்ந்து, சிறப்புப் பயிற்சி பெற்றார்கள். அதன்பிறகு, அவரவர் பகுதியில் உள்ள எதிர்ப்பு கோஷ்டியில் சேர்ந்து, ரகசியத் தகவல்களைச் சேகரித்து செகாவுக்கு அனுப்பத் தொடங்கினார்கள்.

இதன்மூலம், வெள்ளை ராணுவத்தின் தாக்குதல் முயற்சிகள், எதிர்ப்பாளர்களின் அரசியல் காய் நகர்த்தல்களையெல்லாம் முன்

கூட்டியே தெரிந்துகொண்டு, அதற்கேற்ற எதிர் நடவடிக்கைகளைத் திட்டமிட்டது செகா.

'எதிர் நடவடிக்கைகள்' என்று நாகரிகமாகப் பூசி மெழுகுவதுகூட அவசியமில்லைதான். எதிராளிகள் மற்றும் அவர்களுடைய ஆதரவாளர்கள் மனத்தில் ஒரு நடுக்கத்தை உண்டாக்குவதற்காக, தங்களிடம் பிடிபட்ட கிளர்ச்சியாளர்கள் எல்லோரையும் பகிரங்கமாகத் தண்டித்தது செகா.

தண்டனை என்றால், சிறையில் அடைப்பது தொடங்கி, மரண தண்டனைவரை எல்லாமே உண்டு. 1918 அக்டோபர் 15-ம் தேதி, செகா பெட்ரோக்ராட் பிரிவின் புதிய தலைவர் க்ளெப் இவனோவிச் போகி (Gleb Ivanovish Boky) வெளியிட்ட ஒரு கணக்கின்படி, சுமார் 800 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். ஆறாயிரம் பேருக்குமேல் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

இந்தச் சமயத்தில் வெளியான செகா அறிக்கைகள், செய்திக் குறிப்புகள் என்று எவற்றைப் பார்த்தாலும், இந்தமாதிரியான தகவல்கள்தான் தலையைச் சுற்றவைக்கின்றன. அரசுக்கு எதிராக நூற்றுக்கணக்கான சதித் திட்டங்கள் கண்டறியப்பட்டன. தேச விரோதக் குற்றங்களுக்காகப் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கொல்லப்பட்டார்கள். அதைப்போலப் பல மடங்கு கைது செய்யப்பட்டார்கள் - இந்த மூன்று தகவல்கள்தான் திரும்பத் திரும்ப அடிபடுகின்றன.

மேற்கத்திய வரலாற்றாளர்கள், 'ரெட் டெர்ரர்' - சிவப்பு பயங்கரம் (Red Terror) என்று வருணிக்கிற இந்தக் காலகட்டத்தில்தான், கைதிகளுக்கான சித்திரவதைக் கூடங்கள் (Concentration Camps) ரஷ்யாவுக்கு அறிமுகமாயின.

எனினும், பின்னாள்களில் இதே கான்ஸன்ட்ரேஷன் கேம்ப்களை ஸ்டாலினும் ஹிட்லரும் படுபயங்கரமான சித்திரவதைகளுக்குப் பயன்படுத்திக்கொண்டதைப்போல, லெனின் காலகட்டத்தில் அவை அத்தனை கொடூரமாக இல்லை; அதிக எண்ணிக்கையிலும் இல்லை.

இதுபோன்ற உள்நாட்டுப் போர் நடவடிக்கைகளின்மூலம், ரஷ்யச் சூழலில் செகாவின் முக்கியத்துவம் வெகுவாக அதிகரித்திருந்தது. அதற்கேற்ப அதிக எண்ணிக்கையிலான உளவாளிகள், பிற அலுவலர்கள் தேவைப்பட்டார்கள்.

இதனால், 1917-ம் ஆண்டில் 23 பேருடன் இயங்கிக்கொண்டிருந்த செகா, அடுத்த வருஷமே (1918) பத்தாயிரம் பேருக்குமேல் கொண்ட அமைப்பாக வளர்ந்திருந்தது. அதன்பிறகு, எந்தக் காலகட்டத்திலும் இந்த வளர்ச்சி வேகம் குறையவே இல்லை. 1973-ல் செகிஸ்ட்கள் - அப்போதைய கேஜிபி ஊழியர்களின் உத்தேசமான எண்ணிக்கை 4.9 லட்சம். 1986-ல் ஏழு லட்சம்!

அதாவது, தாற்காலிகமான ஏற்பாடு என்கிற நினைப்போடு உருவாக்கப்பட்ட 'அசாதாரண' செகா, அதிவிரைவில் ரஷ்ய அரசாங்கத்தின் தவிர்க்கமுடியாத தூண்களில் ஒன்றாக வளர்ந்து விட்டது.

செகா செயல்படத் தொடங்கிய காலகட்டத்தில் பெட்ரோக்ராட் நகரில் நடைபெற்ற செகிஸ்ட்கள் கூட்டம் ஒன்றில் பேசிய போல்ஷ்விக் தலைவர் ஜினொவ்யெவ் (Zinov'yev) என்பவர், 'கூடிய சீக்கிரத்தில், நமது சமூகத்தில் செகாபோன்ற ஓர் அமைப்புக்கு அவசியமே இருக்காது. அப்போது செகா அலு வலகங்கள் எல்லாவற்றையும் மூடிவிட்டு, அங்கே சின்னப் பிள்ளைகளுக்கான கிண்டர் கார்டன் பள்ளிகளைத் தொடங்கி விடுவோம்' என்று அறிவித்தார்.

இதேபோல், இன்னொரு போல்ஷ்விக் பிரமுகரான மார்ட்டின் லாட்சிஸ் (Martin Latsis), 'சோவியத் அரசியல் சட்டத்தில் 'செகா' வுக்கு நிரந்தர இடம் இல்லை' என்று பேசியிருக்கிறார்.

ஆனால், இதுபோன்ற பேச்சுகளால் ரஷ்யாவில் செகாவின் முக்கியத்துவத்தைக் கொஞ்சம்கூட குறைக்கமுடியவில்லை. மாறாக, உள்நாட்டுப் போர் நடைபெற்ற 1918-1921-ம் ஆண்டு களில், அதிவேகமாக வளர்ந்து பெரிதாகிவிட்டது செகா.

வளர்ச்சி என்றால், ஊழியர் எண்ணிக்கையில் மட்டுமல்ல, ரஷ்யா முழுவதும் தனது அலுவலகங்களைத் திறப்பது, சொந்த ராணு வம், வெளிநாடுகளில் உளவறிதலுக்கான ஏற்பாடுகள், நவீனப் பயிற்சி முறைகள் என்று செகாவின் பரிணாம வளர்ச்சி மிகப் பெரிய அளவில் இருந்தது.

இந்தக் காலகட்டத்தில், செகாவுக்கு வழங்கப்பட்டிருந்த அதி காரங்களும் கொஞ்சம்கொஞ்சமாக அதிகரிக்கப்பட்டிருந்தன. அரசுக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள்மீது வழக்குத் தொடர்வது, தீர்ப்பு வழங்குவது, தண்டனை தருவது என எல்லா வற்றையும் செகாவே நிறைவேற்றத் தொடங்கிவிட்டது.

சிறிய அளவில்தான் செகா வழங்கிய தண்டனைகளும், தொடங்கின. உதாரணமாக, சும்மா தெருமுனையில் நின்று டீ குடித்தபடி, அரசாங்கத்தை விமரிசனம் செய்கிற வெட்டி அரட்டையர்களுடைய ரேஷன் அட்டைகள் பறிமுதல் செய்யப் பட்டன. இன்னும் தீவிரமாக, எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டார்கள். பிடிபடாதவர் களுடைய பெயர்கள், எதிரிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அவர்களுடைய குற்றங்கள் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது.

இதற்கும் மசியாதவர்களுடைய சொத்துகளைக் கைப்பற்றுவது, மிஞ்சிப்போனால் நாடு கடத்துவது - முடிந்தவரை இப்படி மென்மையான தண்டனைகளைத்தான் செகா நிறைவேற்றிக் கொண்டிருந்தது.

ஆனால், உள்நாட்டுப் போரின் தீவிரம் அதிகரித்தபிறகு, தப்பு செய்தவர்களை இப்படி சும்மா 'ஒப்புக்கு அடிக்கிற' பழக்கம் சரிப்படவில்லை. மீண்டும் இந்தத் தவறை அவர்கள் செய்து விடாதபடி தண்டிக்கவேண்டியிருந்தது.

இதைப் புரிந்துகொண்ட செகா, 1918-ம் ஆண்டில் பகிரங்கமாக ஓர் அறிவிப்பை வெளியிட்டது. 'அரசுக்கு எதிரான துரோகிகள், கொள்ளைக்காரர்கள், அயோக்கியர்கள் பெருகிவிட்டார்கள். இனிமேல் இப்படிப் பிடிபடுகிறவர்களுக்குக் கடுமையான மற்றும் உடனடி தண்டனை கொடுக்கப்போகிறோம். இதைத் தவிர நிலைமையைச் சமாளிக்க எங்களுக்கு வேறு வழி தெரிய வில்லை.'

செகாவின் ஒப்புதல் வாக்குமூலமாகவும், தன்னிலை விளக்கம் போலவும் தொனிக்கும் இந்த அறிக்கை, 'இப்போதிலிருந்து, சோவியத் ரஷ்யாவின் எதிரிகள்மீது நாங்கள் தீவிர நடவடிக்கை கள் எடுக்கப்போகிறோம்' என்றும் மிரட்டல் விடுத்தது.

கடைசியாக, 'இந்தப் பணிகளையெல்லாம் செகாதான் செய்ய வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை. ரஷ்யக் குடி மக்கள் எல்லோரும் இந்த விஷயத்தில் எங்களுக்கு உதவ வேண்டும்' என்று கேட்டுக்கொண்டது இந்த அறிக்கை.

அதாவது, உங்கள் பகுதியின் அரசின் விரோதிகள் யாரையாவது பார்த்தால், உடனே செகாவுக்குத் தகவல் கொடுங்கள். முடிந் தால் உள்ளூர் செகா கிளை ஒன்றைத் தொடங்கி, நாட்டின் பாது காப்பைப் பலப்படுத்துங்கள்.

செகாவின் இந்த அறிக்கையை அப்போது எத்தனை பேர் வாசித்தார்கள், அவர்களில் யாரெல்லாம் செகாவுக்கு உதவ முன்வந்தார்கள் என்பது தெரியவில்லை. ஆனால், அடுத்த மூன்று ஆண்டுகளுக்குத் தன்னுடைய நடவடிக்கைகள் எப்படி இருக்கப் போகின்றன என்பதை அப்போதே கொஞ்சம்போல் கோடி காட்டிவிட்டது செகா.

இந்தக் காலகட்டத்தில்தான், அரசுக்கு எதிராகச் செயல்படுகிறவர்களை விசாரிப்பதற்காக, 'ட்ரொய்கா' (Troikas) எனப்படும் மூன்று நபர் விசேஷ நீதிமன்றங்களை அமைத்தது செகா. அதன்பிறகு கைது, விசாரணை, வழக்கு, தீர்ப்பு, தண்டனை என்று எல்லாம் செகாவின் பொறுப்பாகிவிட்டது.

'ஒரு பாதுகாப்புப் பிரிவுக்கு, இத்தனை அதிகாரங்களை மொத்தமாகத் தூக்கிக் கொடுக்கதான் வேண்டுமா?' என்று அப்போது யாரும் கேள்வி எழுப்பியதாகத் தெரியவில்லை. ஒருவேளை கேட்டிருந்தால், உள்ளே தள்ளியிருப்பார்கள்.

'வெள்ளை நாடுகளின் பிரதிநிதிகள் எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு, மாதக்கணக்காகத் திட்டமிட்டு, நிதி சேகரித்து, சோவியத் குடியரசுக்கு எதிரான சதியை நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறார்கள்' என்ற லெனின், இப்படிப்பட்ட வலுவான திட்டங்களை முறியடிக்கவேண்டுமானால், இதுபோன்ற தீவிர நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருக்கவேண்டும் என்று எண்ணினார்.

லெனினின் இந்த நம்பிக்கை. அல்லது கணிப்பு எந்த அளவுக்கு உண்மை என்பதுபற்றி மாற்றுக் கருத்துகள் இருக்கின்றன. சோவியத் ரஷ்யாவில் புதிதாக அமைந்திருக்கும் கம்யூனிச அரசைக் கவிழ்த்துவிடவேண்டும். அங்கே நமது ஆட்சியை நிலைநிறுத்திவிடவேண்டும் என்கிற நோக்கம் சில மேலை நாடுகளுக்கு இருந்திருக்கலாம். ஆனால், அவர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, இப்படியோர் உள்நாட்டுப் போரைத் தூண்டி விடுகிறார்கள். எதிர்ப் புரட்சியாளர்களுக்கு உதவுகிறார்கள் என்பதற்கெல்லாம் போதுமான ஆதாரங்கள் இல்லை.

அப்போதைய சோவியத் ரஷ்யாவின் பொருளாதார நிலைமை, படை பலம், ஆயுத பலம் போன்றவற்றை யோசிக்கும்போது, உண்மையிலேயே மற்ற பணக்கார நாடுகள் அனைத்தும்

ஒருங்கிணைந்து, ரஷ்யாவைத் திட்டமிட்டு அழிக்க எண்ணி யிருந்தால், அதில் அத்தனை சிரமம் இருந்திருக்காது. மிகச் சுலபமாக மாஸ்கோவைக் கைப்பற்றியிருக்கலாம்.

இப்படிப் பல காரணங்களைச் சுட்டிக்காட்டி, லெனினின் இந்த பயமும், இதை நம்பி அவர் எடுத்த முன்னெச்சரிக்கை நட வடிக்கைகளும் அர்த்தமற்றவை என வாதிடுகிறவர்கள் இருக்கி றார்கள்.

யதார்த்தமோ, அசட்டுத்தனமோ, லெனின் கொண்டிருந்த இந்த நம்பிக்கை, செகாவை மேலும் பலப்படுத்துவதற்கு, அதன் நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கு உதவியது. 'நமது மக்களாட்சிக்குத் தடங்கல்கள், இடைஞ்சல்கள் அதிகமாகி விட்டன. இதையெல்லாம் சமாளிப்பதற்கு, செகா மிகவும் அவசியம்' என்று லெனின் அரசு திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கொண்டிருந்ததால், எல்லோரும் வேறு வழியில்லாமல் அதைப் பொறுத்துக்கொள்ளவேண்டியதாயிற்று.

செகாவும், தனது இருப்பின் அவசியத்தை நிரூபிப்பதுபோல், அவ்வப்போது பரபரப்பான அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருந்தது. வரிசையாகப் பல மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த உளவாளிகள் கைது செய்யப்பட்டார்கள். சோவியத் அரசுக்கு எதிரான திட்டங்கள் பல, கடைசி விநாடியில் கண்டறியப்பட்டு, முறியடிக்கப்பட்டன.

உதாரணமாக, பிரிட்டனைச் சேர்ந்த அதிகாரி, பத்திரிகையாள ரான சர் ராபர்ட் ப்ரூஸ் லாக்ஹார்ட் (Sir Robert Bruce Lockhart) என்பவர், போல்ஷ்விக் அரசோடு கொண்ட சில கருத்து வேறு பாடுகளால், அவர்களுக்கு எதிராகச் செயல்படத் தொடங்கி யிருந்தார்.

உள்ளூர்ப் போராட்டக் குழுக்கள் சிலவற்றுடன் இணைந்து கொண்ட லாக்ஹார்ட், முக்கிய போல்ஷ்விக் தலைவர்களைக் கொன்றுவிட்டு, ஆட்சியைக் கைப்பற்றத் திட்டமிட்டிருந்தார். இந்தப் பணியில் உதவுவதற்காக, பிரிட்டிஷ் உளவுப் பிரிவை ரஷ்யாவில் ஊடுருவச் செய்தார் அவர்.

இந்தத் தகவல்கள் செகாவுக்குத் தெரியவந்தபோது, லாக்ஹார்ட் உள்ளிட்ட எல்லோரையும் மொத்தமாகச் சுற்றி வளைப்பதற் காக, ஒக்ரானா பாணியில் ஓர் உளவுத் திட்டம் தீட்டினார்கள்.

இதன்படி, எட்வர்ட் பெர்ஜின் (Eduard Berzin) என்ற செகா உளவாளி, லாக்ஹார்ட் குழுவுக்குள் நுழைகிற ஒரே நோக்கத்துடன், அவருடைய நண்பர் வட்டாரங்களைச் சுற்றிச் சுற்றி வந்தார், அரசுக்கு எதிரான கலவரம் ஒன்றைத் தன்னால் ஏற்பாடு செய்ய முடியும் என்று அவர் பெருமையோடு சொல்லிக்கொண்டதால், 'அட, இது நம்மாளு' என்று லாக்ஹார்ட் வகையறாக்கள் நெருங்கிவந்தார்கள்.

சில மாதங்களுக்குள் அந்தக் குழுவின் முழு நம்பிக்கையைப் பெற்றுவிட்ட பெர்ஜின், அவர்களுடைய நடவடிக்கைகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் செகாவுக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தார். படிப்படியாக, சோவியத் அரசுக்கு எதிரான இந்தத் திட்டத்தில் பங்குபெற்ற பெரும்பாலானோரைப்பற்றிய விவரங்களைத் திரட்டியபிறகு, இந்தத் தகவல்களை பகிரங்கமாக வெளியிட்டது செகா.

'லாக்ஹார்ட்' திட்டம் என்று பெயரிடப்பட்ட இந்தத் திட்டம், சோவியத் அரசைக் கவிழ்ப்பதற்காக பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் இணைந்து நடத்திய சதி வேலை என்று வருணித்த செகா, இதனைக் கண்டறிந்து முறியடித்ததால், நாட்டுக்கு வரவிருந்த மிகப் பெரிய ஆபத்து தவிர்க்கப்பட்டதாகச் சொன்னது.

இது ஒரு சிறிய ஆரம்பம்தான். அடுத்த ஒன்றரை ஆண்டுகளில், அடுத்தடுத்து சுமார் நானூறுக்கும் மேற்பட்ட சதித் திட்டங்களை இதேபோல் அம்பலப்படுத்தியது செகா.

இந்த நடவடிக்கைகள் ஒவ்வொன்றும், ரஷ்யாவின் மிகப் பெரிய வெற்றிகளாக மதிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியது செகா. போர்க் களத்தில் எதிரியை நேருக்கு நேர் நின்று சந்திக்கிற வீரனுக்கும், இதுபோன்ற சதித் திட்டங்களைத் துப்பறிந்து முறியடிக்கிற உளவாளிக்கும் சம அளவு மரியாதை வழங்கவேண்டும் என்று செகா தலைவர்கள் பேசினார்கள்.

1918-ம் ஆண்டு இறுதியில், உளவுப் பணிகளுக்காக அமைக்கப்பட்ட செகாவின் விசேஷப் பிரிவு, முதலில் உள்நாட்டுப் பிரச்னைகளில்மட்டும் கவனம் செலுத்திக்கொண்டிருந்தது. பின்னர், போர்த் தகவல் குழு (WIB - War Information Bureau) என்ற பெயரில் வெளிநாடுகளிலும் தனது செயல்பாடுகளைத் தொடங்கிவிட்டது.

ஆரம்பத்தில் மிகச் சிறிய அளவில் தொடங்கிய இந்தப் பிரிவு, படிப்படியாக பல்வேறு நாடுகளில் தன்னுடைய உளவாளிகளை விதைத்துவிட்டது. வெளிநாடுகளில் வாழும் ரஷ்யக் குடிமக்கள், அரசு அதிகாரிகள், அங்கே திருட்டுத்தனமாகக் குடியேறிய 'இல்லீகல்'கள் (Illegals), உள்ளூர்க்காரர்கள் என்று பலதரப்பட்டவர்கள் செகாவின் உளவு ஏஜெண்ட்களாகப் பணிபுரிந்தார்கள்.

குறிப்பாக, ரஷ்ய உள்நாட்டுப் போர்க் காலகட்டத்தில், 'இல்லீகல்'கள் எனப்படும் அதிகாரப்பூர்வமற்ற குடியேறிகளைத் தனது உளவுப் பணிகளுக்கு அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கியது செகா. இதற்கு முக்கியக் காரணம், இவர்களால் தான் பல தளங்களில் மிகச் சுலபமாக ஊடுருவி, விஷயங்களைக் கொத்திக்கொண்டுவர முடிந்தது.

இப்படியாக, ஒருகட்டத்தில் செகாவின் உள்நாட்டுப் பணிகளுக்கு இணையாக, அதன் வெளிநாட்டு உளவு நடவடிக்கைகளும் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. ஆகவே, அவற்றைக் கண்காணிப்பதற்காகத் தனிப் பிரிவு ஒன்றைத் தொடங்குவது அவசியமானது.

1920-ம் ஆண்டு டிசம்பர் 20-ம் தேதி, செகாவின் மூன்றாவது ஆண்டு விழாக் கொண்டாட்டங்களின்போது, சோவியத் எல்லைகளுக்கு வெளியிலான உளவுப் பணிகளைக் கவனித்துக் கொள்ள 'INO' என்ற விசேஷப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது.

'INO' என்பதன் ரஷ்ய முழு வடிவம், 'Innostranyi Otdel'. இதன் பொருள், 'வெளிநாட்டு உளவுப் பிரிவு.' இதன் முதல் தலைவராகப் பொறுப்பேற்றவர் யகோவ் டவ்டொவ் (Yakov Davydov).

பின்னாள்களில் செகாவிலும், அதன் அடுத்தடுத்த வடிவங்களிலும் மிகுந்த முக்கியத்துவம் பெற்று ஆதிக்கம் செலுத்திய INO பிரிவின் ஆரம்ப நோக்கங்களாகக் கருதப்பட்டவை இவை:

- சோவியத் எல்லைக்கு வெளியே, சோவியத் அரசுக்கு எதிராகச் செயல்படும் தனி நபர்கள் மற்றும் குழுக்களைக் கண்டறிவது, கட்டுப்படுத்துவது.
- வெளியிலிருந்து சோவியத் நாட்டினுள் நுழைந்து, உளவுப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் அன்னியர்களைப்பற்றிய தகவல்களைத் திரட்டுவது.

- ஒவ்வொரு நாடு / மாகாணத்தின் அரசியல் / பொருளாதாரச் சூழலை ஆராய்ந்து பதிவு செய்வது.

- இவை அனைத்துக்குமான ஆதாரங்கள், ஆவணங்களைச் சேகரிப்பது.

ரஷ்ய உள்நாட்டுப் போரின்போது, நிஜமாகவே வெளிநாட்டவர்கள், முக்கியமாக மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்தவர்கள் சோவியத் அரசைக் கவிழ்க்கத் திட்டமிட்டிருக்கிறார்களா என்பதை உறுதி செய்துகொள்வதற்காகத் தொடங்கப்பட்ட இந்த அமைப்பு, போருக்குப்பிறகு மிகச் சிறந்த அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது.

இந்த ஒரே காரணத்தால், ரஷ்ய அரசியலின் பிரிக்கமுடியாத ஓர் அங்கமாகவே கலந்துவிட்ட இந்த வெளிநாட்டு உளவுப் பணிகளைப் பற்றிப் பின்னர் விரிவாகப் பேசவிருக்கிறோம். இப்போது, மீண்டும் செகாவுக்குத் திரும்பவேண்டியிருக்கிறது.

உள்நாட்டுப் போரின்போது, பல அன்னிய சக்திகள் சோவியத் அரசுக்கு எதிராக இணைந்து சதி செய்கின்றன என்கிற கருத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திக்கொண்டிருந்த செகா, இந்த ஆபத்திலிருந்து ரஷ்யாவைப் பாதுகாப்பதற்காகத் தனது நடவடிக்கைகள், தண்டனைகள் அனைத்தையும் தீவிரப்படுத்தத் தொடங்கியிருந்தது.

இதனால், ஏராளமானவர்கள் கொத்துக்கொத்தாகக் கைது செய்யப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள். எதிராளிகள் மனத்தில் நடுக்கத்தை உண்டாக்கவேண்டும் என்பதற்காக, பெரும்பாலும் மக்கள் முன்னிலையிலேயே கொடூரமான பல தண்டனைகள், சித்திரவதைகள் நிறைவேற்றப்பட்டன.

சோவியத் அரசுக்கு எதிரான பல சதித் திட்டங்கள் வரிசையாக வெளிச்சத்துக்கு வந்த இந்தக் காலகட்டத்தில், இதனால் ஏராளமான ரஷ்யர்களும், சில வெளிநாட்டவர்களும் நேரடியாக பாதிக்கப்பட்டார்கள். ஆனால், இவர்கள் எல்லோரும் நிஜமாகவே சதிகாரர்கள்தானா, செகிஸ்ட்கள் அதை எப்படி உறுதி செய்துகொண்டார்கள், விசாரணையெல்லாம் முறைப்படி நடைபெற்றதா, தீர்ப்பு / தண்டனை வழங்குவதில் ஏதேனும் ஒழுங்குமுறை / அடிப்படை விதிகளைப் பின்பற்றினார்களா என்பதெல்லாம் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

சில சமயங்களில், ஒருவர் என்ன தவறு செய்திருக்கிறார் என்பதை மட்டும் பார்க்காமல், அவர் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர், எந்த இனப் பிரிவைச் சேர்ந்தவர், எந்தக் குழுவில் உறுப்பினராக இருக்கிறார் என்பதையெல்லாம் அடிப்படையாக வைத்துகூட தீர்ப்புகள் வழங்கப்பட்டன. தண்டனைகள் நிறைவேற்றப் பட்டன.

இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு செகா சொன்ன நியாயம், தண்டனைகள் தனி நபர்களுக்குமட்டுமல்ல, அவர்கள் சார்ந்திருக் கும் இயக்கங்களுக்கும்தான். இதனால், ஒருவர் தவறே செய்திருக்காவிட்டாலும், அவர் சார்ந்திருக்கும் குழு அல்லது இனப் பிரிவின் தவறுகளுக்கு அவரும் மறைமுகமாகப் பொறுப் பேற்றாகவேண்டும்.

இப்போதெல்லாம், பிரபலங்கள் யாரையாவது கைது செய்ய வேண்டுமானால் ராத்திரி வேளையில் கமுக்கமாக வேலையை முடிக்கிறார்களே, இந்தப் பழக்கத்தைத் தொடங்கிவைத்தது. அப்போதைய செகாதான்.

அரசுக்கு எதிராகச் செயல்படுகிறார்கள், அல்லது அப்படிச் செயல்படுகிறவர்களுக்கு உதவுகிறார்கள் என்று யார்மீதேனும் சந்தேகம் எழுந்தால், அவர்களைக் கைது செய்வதற்கு இரவு நேரம்தான் சவுகரியமானது என்று எண்ணியது செகா. ஏனெனில், ராத்திரி நேரத்தில் கைது செய்தால், சாட்சியங்கள் அதிகமாக இருக்காது, அநாவசியமான கலாட்டாக்கள், சச்சரவுகளுக்கும் வாய்ப்பில்லை.

செகாவால் கைது செய்யப்பட்டவர்கள், தங்கள் தரப்பு நியாயங் களைச் சொல்லி வாதாடுவதற்குக்கூட வாய்ப்புகள் தரப்பட வில்லை. தொடர்ந்த விசாரணையின்மூலம் அவர்களுக்கு மன அழுத்தத்தை உண்டாக்கி, குற்றங்களை ஒப்புக்கொள்ளச் செய் தார்கள் செகிஸ்ட்கள்.

இதுதவிர, குற்றம் சாட்டப்பட்டவர்கள் பலர், உடல்ரீதியிலான சித்திரவதைகளையும் நிறைய சந்திக்கவேண்டியிருந்தது. இதற் காகக் கையாளப்பட்ட சில கொடூரமான வழிமுறைகளைப் பற்றிப் படிக்கும்போது, மென்மையான இதயம் கொண்டவர் களுக்கு அதிர்ச்சியில் உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கி விடுவது நிச்சயம்.

உதாரணமாக, கைதிகளின் கைப் பகுதியிலிருக்கிற தோலை உரித்து, 'மனித க்ளவுஸ்' செய்வது, ஆணிகள் நிரம்பிய பேரல் களில், அவர்களை நிர்வாணமாகப் படுக்கவைத்து, தரையில் உருட்டிவிடுவது என்று தொடங்கி, இன்னும் குரூரம் நிறைந்த பல சித்திரவதைகள் உருவாக்கப்பட்டிருந்தன. இவற்றைத் தாங்கமுடியாதவர்கள் செய்யாத குற்றங்களைக்கூட ஒப்புக் கொண்டு, தண்டனைக்குத் தயாராகிவிடுவார்கள்.

தண்டனை என்றால், அரசுக்கு எதிராகச் சதி செய்தவர்கள், அல்லது அப்படி ஒப்புக்கொண்டவர்கள் எல்லோருக்கும் பெரும்பாலும் மரண தண்டனைதான். சம்பந்தப்பட்ட நபருக்குக் கொஞ்சம் அதிர்ஷ்டமிருந்தால், சிறைத் தண்டனை அல்லது நாடு கடத்துவது போன்ற 'மென்மையான' தண்டனைகளை யோசிப்பார்கள்.

உள்நாட்டுப் போர் நடைபெற்ற மூன்று வருஷங்களில், செகா வின் அதி தீவிர நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதற்கு அதிகாரப்பூர்வமான கணக்கு எதுவும் இல்லை. என்றாலும், இந்தக் காலகட்டத்தில், அரசு விரோதக் குற்றங்களுக்காகச் சுமார் இரண்டரை லட்சம் பேர் கொல்லப் பட்டிருக்கலாம் என்கிறது ஓர் உத்தேசமான கணிப்பு.

ஒருவேளை இந்தக் கணக்கு நிஜமானால், போரில் நேரடியாக ஈடுபட்டு மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையைவிட, இப்படி மறைமுகச் சதித் திட்டங்களுக்காகத் தண்டிக்கப்பட்ட வர்கள் அதிகம் என்று அர்த்தம்.

இப்படி ரஷ்யா முழுவதும் செகா ஒரு மிகப் பெரிய ருத்ர தாண்ட வம் நடத்திக்கொண்டிருக்கையில், அவர்களுடைய பல நட வடிக்கைகள், சோவியத் குடிமக்களுக்கே பிடிக்கவில்லை. இதனால், செகாமீது பொதுஜன வெறுப்பு பரவத் தொடங்கிய காலகட்டம் இது.

ஆனாலும், செகா தனது தீவிரத்தைக் குறைத்துக் கொள்ள வில்லை. ரஷ்யாவுக்கு எதிராகப் பலர் ஒருங்கிணைந்திருக்கி றார்கள். நம்மைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டுமானால், நாமும் ஒற்றுமையோடு அவர்களை எதிர்கொள்ளவேண்டும். கிளர்ச்சியாளர்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கவேண்டும் என்கிற செய்தி அழுத்தமாகத் திரும்பத் திரும்ப வலியுறுத்தப் பட்டது.

இந்தச் சமயத்தில் செகாவின் நடவடிக்கைகள் அனைத்துப் சோவியத் அதிபர் லெனினின் சம்மதத்தோடுதான் நடந்தது என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ஆனால், ஆரம்பத்தில் இருந்து செகாவின் வளர்ச்சியில் கவனம் செலுத்திக் கொண்டிருந்த லெனின், இதுபோன்ற தீவிர அடக்குமுறைகளைக் கண்டித்து எதுவும் பேசவில்லை, செய்யவில்லை என்பது உண்மை.

மாறாக, சுமார் இரண்டரை ஆண்டுகளுக்குமேல் நீடித்த உள்நாட்டுப் போர் முடிவடைந்து, அதில் சோவியத் ரஷ்யாவின் சிவப்பு ராணுவம் வெற்றியடைந்தபோது, 'நம்மைவிடப் பல மடங்கு சக்தி வாய்ந்த எதிரிகளை ஜெயித்து, இந்தப் போரில் நாம் அடைந்திருக்கும் வெற்றிக்கு, செகா ஒரு முக்கியமான ஆயுதமாகப் பங்காற்றியது' என்று பாராட்டிப் பேசினார் லெனின்.

எப்படியோ, உள்நாட்டுப் போர் முடிந்துவிட்டது. இனிமேலாவது, செகாவுக்கு அவசியம் இல்லை என்று கருதி சோவியத் அரசாங்கம் அதைக் கலைத்துவிடுமா, இல்லாவிட்டால், இந்த 'அமைதி'க் காலத்தில், செகா போன்ற ஓர் அசாதாரண அமைப்பு எப்படிச் செயல்படப்போகிறது என்று ரஷ்யர்களும், பன்னாட்டுப் பார்வையாளர்களும் கவனமாகப் பார்த்துக்கொண்டு இருக்கையில், ரஷ்யாவை ஒரு மிகப் பெரிய பஞ்சம் தாக்கியது.

# 8. பஞ்சம், பிடிவாதம்

முதலாவது உலகப் போரில் தொடங்கி, ரஷ்யப் புரட்சியில் தொடர்ந்து, கடைசியாக இந்த உள்நாட்டுப் போர்வரை, கிட்டத்தட்ட ஆறரை ஆண்டுகளாகத் தொடர்ந்து யுத்தத்தின் மத்தியில் தான் வாழ்ந்து வந்தது சோவியத் நாடு,

இதனால், ரஷ்ய விவசாயிகள், தொழிலாளிகள், பொதுமக்கள் என்று எல்லாருமே, குண்டு வெடிக்கும் சத்தங்களுக்கு நடுவே வாழப் பழகிக்கொண்டு உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் தான் வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்தன.

சோவியத் போல்ஷ்விக் அரசின் சிவப்புராணுவம் (Red Army) மற்றும், அவர்களுக்கு எதிராகக் கிளம்பிய வெள்ளைராணுவம் (White Army) ஆகியோருக்கு இடையிலான சண்டையாகத் தொடங்கிய இந்த உள்நாட்டுப் போர், பெரிய அளவில் தீவிரமடைந்தபிறகு, இரு அணிகளுமே, மற்றவர்களுடைய பலத்தை ஒடுக்குவது எப்படி என்று மும்முரமாக யோசிக்கத் தொடங்கியிருந்தார்கள்.

அப்போது போல்ஷ்விக் ராணுவத்துக்குத் தோன்றிய ஒரு யோசனை - விவசாயிகள் தங்களுடைய நிலங்களில் விளைவிக்கும் தானியங்களையெல்லாம், அரசாங்கமே நேரடியாக விலைக்கு வாங்கிக்கொண்டுவிட்டால் என்ன?

இதற்கும் சண்டைக்கும் நேரடித் தொடர்பு எதுவும் இல்லை. என்றாலும், இதன்மூலம் வெள்ளை ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் இதர உதிரிக் கலகக்காரர்களுக்கெல்லாம் போதுமான அளவு உணவு சென்று சேராமல் தடுத்துவிடமுடியும் என்று நம்பியது சிவப்பு ராணுவம்.

இப்போது வாசிக்கும்போது, இது ஓர் அபத்தமான யோசனை என்று நமக்குத் தோன்றுகிறது. ஆனால், அன்றைய ரஷ்யாவின் நிலைமையைக் கருத்தில் கொண்டு யோசித்தால், இந்த யோசனை ஒரு மிகப் பெரிய ராஜ தந்திரம் என்று புரியும்.

தொடர்ந்த யுத்தங்களின் விளைவாக, ரஷ்யா முழுவதும் உணவுப் பஞ்சம் தலைகாட்டத் தொடங்கியிருந்த காலகட்டம் அது. இதனால், தானியங்கள் மற்றும் உணவுப் பொருள்களுக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவியது. இப்போது நாம் சூப்பர் மார்க்கெட்டில் பாஸ்மதி அரிசி வாங்கி பிரியாணி சமைப்பது போல், யார் வேண்டுமானாலும் நினைத்த நேரத்தில் உணவுப் பொருள்களை வாங்கிவிடமுடியாது.

ஆகவே, அரசுக்கு எதிராகப் புரட்சி செய்கிறவர்களை வயிற்றில் அடிக்கலாம் என்று முடிவு செய்த போல்ஷ்விக் ராணுவம், விவசாயிகளை நேரடியாகக் கண்காணித்து, அவர்கள் விளைவிக்கிற பொருள்கள் அனைத்தையும், தாங்களே கட்டாயமாக வாங்கிக்கொண்டார்கள்.

உண்மையில், 'வாங்கிக்கொண்டார்கள்' என்று சொல்வதைவிட, 'பிடுங்கிக்கொண்டார்கள்' என்பதுதான் பல சந்தர்ப்பங்களில் நிஜமாக இருந்தது. ஏனெனில், பெரும்பாலான விவசாயிகளுக்கு, அவர்களிடம் வாங்கிய தானியங்கள், மற்ற உணவுப் பொருள்களுக்குரிய சரியான விலையை ராணுவம் கொடுக்கவில்லை. பைசா கொடுக்காமல் எல்லாவற்றையும் அள்ளிக் கொண்டுபோன சம்பவங்களும் உண்டு.

இதன்மூலம், அரசுக்கு எதிராகப் புரட்சி செய்கிறவர்கள் உணவு கிடைக்காமல் திண்டாடுவார்கள் என்பது உண்மைதான். ஆனால்,

யுத்தத்தோடு எந்தச் சம்பந்தமும் இல்லாத பொதுமக்களும் இதனால் பாதிக்கப்படுவார்களே.

ஏனோ, இந்த விஷயத்தை அரசாங்கம் யோசிக்க மறந்துவிட்டது. உணவுப் பொருள்களைப் பொருத்தவரை, முன்னுரிமை ராணுவத்துக்குதான் என்று தெளிவாக அறிவித்துவிட்டார்கள்.

ஆனால், இப்படி அதிபுத்திசாலித்தனமாகச் சிந்தித்துத் திட்டம் தீட்டியும்கூட, அவர்கள் நினைத்ததுபோல் எதிர் கோஷ்டியினரின் பலம் குறைவதாகத் தெரியவில்லை. ராணுவத்தில் தொடங்கி செகா வரை எல்லாச் சக்திகளையும் பயன்படுத்திப் போராடியும்கூட, வெள்ளை ராணுவமும் கிளர்ச்சியாளர்களும் வெட்ட வெட்ட முளைத்துக்கொண்டிருந்தார்கள்.

இதையடுத்து, நம்முடைய திட்டம் தோல்வியடைந்தது ஏன் என்று யோசிக்கத் தொடங்கிய சிவப்பு ராணுவம், எப்படியோ ரகசியமாக நமது எதிர்ப்பாளர்களுக்கு உணவுப் பொருள்கள் போய்க்கொண்டிருக்கின்றன என்று முடிவு கட்டியது.

பிறகென்ன, எதிர் கோஷ்டியினருக்கு உணவு கொடுத்து உதவியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, ஏராளமான விவசாயிகள் கைது செய்யப்பட்டார்கள். தண்டிக்கப்பட்டார்கள். தனி நபர்களைக் கைது செய்வதில் தொடங்கி, விவசாயக் குடும்பங்கள், முழு கிராமங்கள் எனப் படிப்படியாகத் தனது தண்டனைகளின் தீவிரத்தை அதிகப்படுத்தியது செகா.

இதோடு நிறுத்தாமல், விவசாயிகளிடம் இருக்கும் கூடுதல் தானியங்கள் அனைத்தையும் கைப்பற்ற உத்தரவிட்டது லெனின் அரசு. இதனால், விவசாயக் குடும்பங்கள் தங்களது சொந்த உபயோகத்துக்காகச் சேமித்திருந்த உணவுப் பொருள்கள், மறு விதைப்புக்காக வைத்திருந்த தானியங்கள் என எல்லாமே அரசாங்கத்துக்குச் சொந்தமாக்கப்பட்டது.

சிறிது காலத்துக்குப்பிறகு, இந்தக் கைப்பற்றுதல் திட்டம் கைவிடப்பட்டது. ஆனால் அதற்குள், இதற்குமுன் எப்போதும் கண்டிராத அளவுக்குப் பெரும் பஞ்சம் ரஷ்யாவைச் சூழ்ந்துவிட்டது.

பஞ்சம் என்றால், உணவுப் பொருள்களின் தட்டுப்பாடு என்று சாதாரணமாகச் சொல்லிவிடுவதற்கில்லை. விவசாயம் இல்லை,

கை நிறையப் பணம் வைத்திருக்கிறவர்கள்கூட, வாங்கிச் சமைப்பதற்கு விளைபொருள்கள் எதுவும் இல்லை. வேறு வழியே இல்லாமல், விதைப்பதற்காக வைத்திருந்த தானியங்கள் கூட உணவாகச் சமைக்கப்பட்டன. இதனால், நாடுமுழுதும் விவசாயம் உறைந்துபோய், பஞ்சம் மேலும் பெரிதானது.

இதில் கொடுமையான விஷயம் என்னவென்றால், பல பகுதிகளில் இப்படி ஒரு பஞ்சம் ஏற்பட்டிருப்பதையே அரசாங்க அமைப்புகள் தாமதமாகத்தான் கவனித்தன. அதன்பிறகு, அவற் றால் எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியாதபடி தாமதமாகி விட்டது.

ரஷ்யா மட்டுமில்லை, இந்தக் காலகட்டத்தில் பல நாடுகள் கிட்டத்தட்ட இதேபோன்ற உணவுப் பிரச்னையில் சிக்கிக் கொண்டிருந்தன. முதலாம் உலகப் போரின் விளைவுகளான இந்தப் பஞ்சங்களைத் தீர்ப்பதற்குப் பல சமூக நல அமைப்புகள் உதவிக்கொண்டிருந்தன.

இவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஓர் அமைப்பு, 'ARA' என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட, அமெரிக்க மீட்பு நிறுவனம் - American Relief Administration. ஹெர்பர்ட் ஹூவர் (Herbert Hoover) என்பவருடைய முயற்சியில் தொடங்கப்பட்டிருந்த இந்த நிறுவனம், உலகப் போரால் பாதிக்கப்பட்ட பல்வேறு நாடுகளில் தனது செயல்பாடுகளைத் தொடங்கி, பரவலான உணவு விநி யோகத்தின்மூலம் பட்டினிச் சாவுகளைத் தவிர்க்க முயன்று கொண்டிருந்தது.

உலகப் போரானால் என்ன, உள்நாட்டுப் போரானால்தான் என்ன? பசி, பட்டினி, பஞ்சம் ஒன்றுதானே? ரஷ்யாவின் நிலை மையைக் கேள்விப்பட்ட ARA, அவர்களுக்கும் உடனடியாக உதவ முன்வந்தது.

இன்னோர் அரசாங்கமாக இருந்தால், 'ஐயா, உலக ரட்சகரே, வாருங்கள்' என்று அந்த அமைப்புக்கு வெற்றிலை, பாக்கு வைத்து அழைத்திருக்கும். ஆனால், போல்ஷ்விக் அரசுக்கு, மேற்கத்திய நாடுகள் எதன்மீதும் முழு நம்பிக்கை இல்லை.

அவர்களுடைய சந்தேகம் என்னவென்றால், பஞ்சத்தைப் போக்க உதவுகிறோம் என்று சொல்லிக்கொண்டு, இந்த அமைப் பின் உறுப்பினர்கள் ரஷ்யாவினுள் நுழைந்து, மக்களை அரசுக்கு

எதிராகத் திருப்பிவிட்டு, கம்யூனிச ஆட்சியைக் கவிழ்த்துவிடு வார்களோ?

எந்த ஊரானாலும், எந்தச் சமூகமானாலும் பசித்த மக்கள் தங்களுக்குச் சாப்பாடு போடுகிறவன்தான் தெய்வம் என்று நம்பு வதில் ஆச்சரியமில்லை. இப்போதைய நிலைமையில், சோவியத் அரசால் அவர்களுக்குச் சோறு போட முடியவில்லை. வெளியூர்க்காரன் அள்ளி அள்ளிக் கொடுக்கிறான். இதனால் உள்ளூர் அரசாங்கத்தைவிட, அவன்தான் உசத்தி என்று அர்த்த மாகிவிடுகிறதில்லையா?

இப்படியொரு ரகசியத் திட்டத்தோடு, ARA அமைப்பு என்கிற போர்வையில், அமெரிக்க அரசாங்கம்தான் தங்களுடைய ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டமிட்டிருக்கிறது என போல்ஷ்விக் தோழர்கள் சந்தேகப்பட்டார்கள். இதற்கேற்ப, ARA முன்வைத்த சில விதிமுறைகளும் அவர்களுக்கு எரிச்சலூட்டின.

1. ரஷ்ய ரயில்வே அமைப்பை முழுவதும் எங்கள் கட்டுப் பாட்டில் தரவேண்டும்.

2. பசித்தவர்கள் எல்லோருக்கும் நாங்கள் உணவு கொடுப் போம். இவர்களுக்குதான் தரவேண்டும், இவர்களுக்குத் தரக்கூடாது என்று நீங்கள் எங்களைக் கட்டுப்படுத்தக் கூடாது.

இந்த இரு நிபந்தனைகளையும், லெனின் ஏற்க மறுத்துவிட்டார். 'எங்களுடைய உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதானால், உங்கள் உதவி தேவையில்லை' என்று கதவைச் சாத்திவிட்டார்.

அப்போதைய (1919) சூழலில் லெனினுக்கு வேறு வழியில்லை என்பதுதான் உண்மை. செகாவின் அயல்நாட்டுப் பிரிவு அப்போது தொடங்கப்பட்டிருக்கவில்லை. சோவியத் ரஷ்யா வுக்கு வெளியே இயங்கிக்கொண்டிருந்த சில செகா உளவாளி களும், அமெரிக்காமீது அவ்வளவாகக் கவனம் செலுத்திய தில்லை. ஆகவே, இந்த 'ARA' நிஜமான சமூக சேவை நிறுவனமா அல்லது சூழ்ச்சியா என்று உளவறிய வாய்ப்பில்லை.

இந்த நிலைமையில், விவரம் புரியாமல் நாமே ஓர் எதிரியை உள்ளே அனுமதிக்கவேண்டாம் என்று முடிவெடுத்துவிட்டது போல்ஷ்விக் அரசு. அவர்கள் வந்தால் பஞ்சம் குறையும் என்பது

உண்மைதான், ஆனால், வேண்டுமென்றே அரசாங்கத்தின் விரோதிகளுக்கு பாதாமும் முந்திரியுமாகக் கொடுத்துத் தேற்றி, புதிய வேகத்தோடு நமக்கெதிராகத் திருப்பிவிட்டால்? மக்களுக்குச் சாப்பாடு கொடுத்து, புரட்சி இயக்கங்களுக்கு ஆதரவு திரட்டினால்? இந்த வம்பே வேண்டாம்.

நாட்டு மக்களெல்லாம் பட்டினியில் செத்துக்கொண்டிருக்கிற நிலைமையில், ஓர் அரசாங்கம் இப்படிக் குரூரமாக யோசிக்குமா என்று இப்போது நமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால், அன்றைக்கு கம்யூனிச ஆட்சி கொண்டிருந்த பயங்கள், இது போன்ற பல அபத்தமான யோசனைகளுக்கு அவர்களைத் தள்ளிக்கொண்டிருந்தன.

பின்னர், கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள். ஏராளமான போர், பட்டினிச் சாவுகளுக்குப்பிறகு, இந்த விஷயத்தில் தங்களது பிடிவாதத்தைக் கொஞ்சம் தளர்த்திக்கொண்டது போல்ஷ்விக் அரசு. 1921 மார்ச் 15-ம் தேதி, புதிய பொருளாதாரக் கொள்கை ஒன்றை அறிவித்தார் லெனின். இதே காலகட்டத்தில், வெளிநாட்டு அமைப்புகள் இங்கே வந்து, தங்களது உதவிகளைச் செய்யவும் அனுமதித்தது சோவியத் அரசு.

இப்போதும், மேற்கத்திய எதிரிகளின்மேலான சந்தேகம் முழுவதுமாக விலகியிருக்கவில்லை. ARA உள்ளிட்ட அமைப்புகள் இங்கே என்னவெல்லாம் செய்கிறார்கள் என்று மும்முரமாக ஆராயத் தொடங்கியது செகா.

அதாவது, 'ரொம்பப் பசிக்கிறது, சாப்பாடு போடுங்கள்' என்று அன்னியர்களை உள்ளே அனுமதித்தது சோவியத் அரசு. பின்னர், அவர்கள் நிஜமாகவே சாப்பாடுதான் விநியோகிக்கிறார்களா அல்லது அரசுக்கு எதிராக மக்களைத் திரட்டுவது, உளவறிவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்களா என்று வேவு பார்த்துக்கொண்டிருந்தது செகா.

இதோடு, செகா ஊழியர்களை வளைத்துப்போடுவதற்கும் ARA முயல்கிறது என்று அதன் உளவுத்துறை நம்பியது. இதனால், நாட்டின் பாதுகாப்பு, கம்யூனிச அரசின் உறுதித்தன்மைக்குப் பெரிய பிரச்னைகள் ஏற்படும் என்று, நடப்பதையெல்லாம் மிகுந்த கவலையோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள் போல்ஷ்விக் ஆட்சியாளர்கள்.

பஞ்சத்தால் பெரிதும் பலவீனமடைந்திருந்த சோவியத் அரசால், ARA அமைப்பை வலுக்கட்டாயமாக வெளியேற்றமுடிய வில்லை. அதேசமயம், அது ஓர் அமெரிக்க உளவு ஏற்பாடுதான் என்கிற தங்களது எண்ணத்தை, கடைசிவரை அவர்கள் மாற்றிக் கொள்ளவே இல்லை. அந்த அமைப்பின் சார்பில் ரஷ்யாவுக்கு வந்த அமெரிக்கர்களும், அவர்களுக்கு உதவிய உள்ளூர்க்காரர் களும், உளவாளிகளாகவே பார்க்கப்பட்டார்கள்.

எனினும், இதுபோன்ற இடைஞ்சல்களைப் பொருட்படுத்தா மல், இந்தக் காலகட்டத்தில் ரஷ்யாவுக்கு ARA செய்த உதவிகள் மிகப் பெரியவை. பட்டினி கிடந்த கோடிக்கணக்கான ரஷ்யர் களுக்கு உணவைத் தாராளமாக வழங்கிக்கொண்டிருந்தது ARA. கிட்டத்தட்ட இரண்டு வருஷங்களுக்கு, அதாவது 1921 ஆகஸ்ட் முதல், 1923 ஜூன்வரை இந்த உதவிகள் தொடர்ந்தன.

பஞ்சம் தீர்ந்து, சகஜ நிலைமை திரும்புவதற்காகவே காத்துக் கொண்டிருந்த போல்ஷ்விக் அரசு, ARA அமைப்புக்கு முழுசாக நன்றிகூட சொல்லாமல், உடனடியாக மூட்டையைக் கட்டுங்கள் என்று சொல்லிவிட்டது.

இதற்குள், செகாவும் தனது உள்கட்டுமானத்தைப் பலப்படுத்திக் கொண்டு, முழு வேகத்தில் இயங்கத் தொடங்கியிருந்தது. உள்நாட்டுப் போரின் உச்சத்தில், சாதாரணப் பொதுமக்கள், சமூகக் குழுக்களுக்கு எதிராக அவர்கள் கையாண்ட அடக்கு முறைகளை, மக்கள் அருவருப்போடு பார்க்கத்தான் முடிந்தது. எதிர்த்துக் குரல் கொடுக்க பயம்.

இதனால், ரௌடிகள், எதற்கும் தயங்காத முரடர்கள், அடுத்தவர் களைத் துன்புறுத்துவதில் இன்பம் காணும் சாடிஸ்ட்கள்தான் செகாவில் சேர்வார்கள் என்று ஒரு பிம்பம் மக்கள் மனத்தில் உருவாகியிருந்தது.

செகா தலைவர் ஃபிலிக்ஸ், இதுபோன்ற ஒரு விமரிசனத்தைக் கொஞ்சமும் விரும்பவில்லை. ஏனெனில், அவர் செகாவைத் தொடங்கியபோது, சொந்தத் தோழர்களைக் கொடுமைப்படுத்த வேண்டும். மிரட்டி, அதட்டி ஒடுக்கவேண்டும் என்கிற எண்ணம் அவருக்கு நிச்சயமாக இல்லை, ஆனால், காலப்போக்கில் வேறு வழியே இல்லாமல் செகா இந்தப் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று.

இதுபோன்ற நடவடிக்கைகள், போல்ஷ்விக் தலைவர் லெனின் மீதும் கடுமையான விமரிசனங்களைக் கொண்டுவந்தன. மக்களுடைய அரசு, அவர்களுடைய எண்ணம்தான் எல்லாம், அவர்கள் விருப்பத்தின்படியே அனைத்தும் நடக்கும் என்றெல்லாம் சர்க்கரையாகப் பேசிவிட்டு, இப்போது எதிர்த்துக் குரல் கொடுக்கிறவர்களை அடித்து உதைத்தால், ஜார் ஆட்சிக்கும் இதற்கும் என்ன பெரிய வித்தியாசம்?

செகாமீது எழுந்துள்ள குற்றச்சாட்டுகள், கேள்விகளையெல்லாம் லெனின் நன்றாகவே உணர்ந்திருந்தார். எனினும், அப்போதைய சூழ்நிலையில், இதுபோன்ற ஓர் அமைப்பு சோவியத் ரஷ்யாவுக்குத் தேவை என்று அவர் உறுதியாக நம்பியதால், செகாவைக் கண்டிக்கவோ, அதன் அதிகாரங்களைக் குறைக்கவோ அவர் முன்வரவில்லை.

இதனால், நீதித்துறை உள்ளிட்ட பிற அரசாங்கப் பிரிவுகளோடு செகாவுக்கு உரசல் ஏற்பட்டது. நாங்கள்தான் எல்லாம் என்று செகா தனித்து இயங்குவதை, மற்றவர்கள் ஏற்க மறுத்தார்கள்.

உதாரணமாக, செகா தன்னிஷ்டம்போல் பொதுமக்களைக் கைது செய்து, விசாரணை நடத்தித் தீர்ப்பு வழங்குவதை ரஷ்யாவின் நீதித்துறை கண்டித்தது. யார் கைதாகிறார்கள், என்ன குற்றத்துக்காக அவர்களுக்கு எப்படிப்பட்ட தண்டனைகள் வழங்கப்படுகின்றன என்பதையெல்லாம் தீர்மானிப்பது நீதிமன்றங்களுடைய பொறுப்பு என்பது அவர்களுடைய வாதம்.

ஆனால், இதை செகா ஏற்க மறுத்துவிட்டது. சாதாரணக் குற்றங்களுக்கு வேண்டுமானால் இந்த நடைமுறை பொருந்தலாம். தேச விரோதிகளை இப்படி நீதிமன்றத்துக்கு இழுத்தடித்தால், மற்றவர்களுக்கு பயம் வராது. இதுபோன்ற குற்றங்கள் நீடித்துக் கொண்டேதான் இருக்கும் என்றார்கள் அவர்கள்.

இப்படி இருதரப்பினரும் முறைத்துக்கொண்டு ஆளுக்கொரு திசைக்குத் திரும்பிவிட்டதை, போல்ஷ்விக் அரசு ரசிக்கவில்லை. முக்கியமான இரு பிரிவுகளுக்கிடையே பிளவு ஏற்படுவது நல்லதில்லை என்று கருதிய அவர்கள், பிரச்னையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை யோசிக்கத் தொடங்கினார்கள்.

இதன்படி, செகா நடவடிக்கைகளுக்குத் துணையாக, ஓர் ஆலோசனைக் குழு உருவாக்கப்பட்டது. நீதித்துறை உள்ளிட்ட

பல பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தார்கள்.

இந்தப் புதிய குழுவின் நோக்கம், முக்கியமான பிரச்னைகளைக் கையாள்வதில் செகாவுக்கு உதவுவது, முடிவெடுப்பதற்குத் தேவையான தகவல்கள், ஆலோசனைகளை வழங்குவது. இதன் மூலம், செகாவின் தடாலடிச் செயல்பாடுகளை ஓரளவு கட்டுப் படுத்த முடியும் என்று அரசாங்கம் கருதியது.

ஆனால், இந்த யோசனையும் செகாவிடம் பலிக்கவில்லை. இப்படியோர் ஆலோசனைக் குழு இருக்கிறது என்பதையே கண்டுகொள்ளாமல், அவர்கள் வழக்கம்போல் தங்களது வழி முறைகளைத் தொடர்ந்துகொண்டிருந்தார்கள். இந்தப் பிரச்னை வந்தது, அதைத் தீர்ப்பதற்கு இப்படி ஒரு முடிவெடுத்தோம் என் பதை, ஒரு தகவல்போல்கூட ஆலோசனைக் குழுவிடம் அவர்கள் தெரிவிக்கவில்லை.

அவ்வப்போது, சில பிரச்னைகள் இந்தக் குழுவின் விவாதத்துக்கு வந்தன. ஆனால், இதுபோன்ற சந்தர்ப்பங்களில் அவர்கள் சொல்லும் யோசனைகளை, செகா மதிக்கவும் இல்லை, ஏற்கவும் இல்லை.

செகாவைப் பொருத்தவரை, அவர்கள் கையாள்கிற பிரச்னைகள் மிகத் தீவிரமானவை, மிக முக்கியமானவை. அவற்றை எப்படித் தீர்ப்பது என்பது தங்களுக்குமட்டும்தான் தெரியும். மற்றவர் களுக்கு இதில் அனுபவம் போதாது, சமர்த்து போதாது என்று அவர்கள் தெளிவாக முடிவெடுத்திருந்தார்கள். இதனால் யார் என்ன சொன்னாலும், செகாவின் தீர்மானம்தான் இறுதியானதாக இருந்தது.

இதனால், ஆலோசனைக் குழுவில் அமர்ந்திருந்த நிபுணர்கள், வல்லுனர்களுக்குக் கோபம் வந்தது. இங்கே எங்களுக்கு மரி யாதை இல்லை, அநாவசியமாக நேரத்தை வீணடிக்க நாங்கள் விரும்பவில்லை என்று எல்லோரும் வெளியேறிவிட்டார்கள்.

அதன்பிறகு, செகாவைப் பெயரளவில்கூட யாராலும் கட்டுப் படுத்தமுடியவில்லை. அதுமட்டுமில்லாமல், சோவியத் அரசாங் கத்தின் முக்கியத் தூண்களுக்கிடையே செகா - மற்றவர்கள் என்கிற நிரந்தரப் பிளவு ஏற்பட்டுவிட்டது. பின்னர் எப்போதும் இதைச் சரிசெய்ய முடியவில்லை.

இந்தப் பிளவுக்கு இன்னொரு முக்கியமான காரணம், முதலில் லெனினும், அவருக்குப்பிறகு ஸ்டாலினும் தனிப்பட்ட முறையில் செகாவுக்கு (அல்லது, அதன் பிந்தைய வடிவங் களுக்கு)த் தொடர்ந்து அளித்துவந்த ஆதரவு.

அதாவது, செகாவுக்கும் இன்னோர் அரசாங்கப் பிரிவுக்கும் இடையே உரசல் / சண்டை மூள்கிறபோதெல்லாம், ஆட்சியாள ரின் நேரடி அல்லது மறைமுக ஆதரவு எப்போதும் செகாவுக்குத் தான் கிடைக்கும். சில சமயங்களில் இது அர்த்தமற்ற, கண்மூடித் தனமான ஆதரவு என்று தோன்றினாலும், இந்தப் பழக்கத்தை அவர்கள் மாற்றிக்கொள்ளவே இல்லை.

இதனால், மற்ற துறைகளைவிட எங்களுக்கு செகாதான் முக்கி யம் என்று அரசாங்கமே ஒப்புக்கொள்வதாக அர்த்தமாகிவிடு கிறது, இல்லையா? இந்தச் 'செல்லப்பிள்ளை' மனோபாவமும், செகாமீது குற்றம் சொல்கிறவர்களெல்லாம் முழு முட்டாள்கள் என்று சொல்லாமல் சொல்வதும்தான் மற்றவர்களுக்குக் கடுப் பேற்றியது.

இந்த விரிசலை, போல்ஷ்விக் அரசு சரியாகப் புரிந்துகொண்டதா எனத் தெரியவில்லை. ஆனால், அதற்கும் செகாமீது வெறுப்புத் தோன்றும்படியான சில சம்பவங்கள், சீக்கிரத்திலேயே நடந்தன.



## 9. விஷப் பற்கள்

செகாவின் நிறுவனரான ஃபிலிக்ஸ் டெஜெர்ஜின்ஸ்கிக்கு, 'போல்ஷ்விக் துறவி' என்று ஒரு பெயர் உண்டு.

கண்டிப்பான காவல்துறை அதிகாரியாகப் புகழ்பெற்றிருந்த அவர், வாழ்க்கை மீதான தனது பற்றுதல், அழகை ரசிக்கும் தன்மை, அன்றாடம் எதிர்ப்படும் சின்னச் சின்ன சந்தோஷங்களை முழுமையாக அனுபவிப்பது போன்ற விஷயங்களின்மூலம், மென்மையான மனிதராகவும் அறியப்பட்டிருந்தார்.

ஃபிலிக்ஸின் தத்துவச் சிந்தனைகளும், அலசல்களும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவை. பல ஆண்டுச் சிறை வாழ்க்கை, அவரது அரசியல் கொள்கைகளைக் கூர்மைப்படுத்தியதோடு, உரக்கச் சிந்திக்கவும் கற்றுத் தந்திருந்தது.

உதாரணமாக, அவரது சிறைக் குறிப்பு ஒன்றில் காணக் கிடைக்கும் இந்த வாசகத்தை கவனியுங்கள். 'இருத்தலின் சோகம், எனக்குக் கிடைக்காத, ஆனால்

நான் சுவாசிக்கும் காற்றைப்போல், அன்பைப்போல் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான ஒன்றின்மீது ஏக்கம்' - இப்படியொரு சிந்தனையோட்டத்தைக் கொண்டவரால், கவிதை எழுத முடியும். காவல் காக்க முடியுமோ?

முடிந்தது. எந்த முன் அனுபவமும் இல்லாவிட்டாலும், என்னால் இது முடியும் என்கிற நம்பிக்கையும், அசுர உழைப்பும் தான், ஃபிலிக்ஸைச் சோவியத் சரித்திரத்தின் மறக்கமுடியாத தலைவர்களில் ஒருவராக உயர்த்தியது.

செகா தொடங்கிய ஆரம்ப காலத்தில், ஃபிலிக்ஸுக்கு வேலை, சாப்பாடு, தூக்கம் என்று எல்லாமே அலுவலகத்தில்தான் தனக்கென்று ஒரு வீடு இருப்பதைக்கூட அவர் மொத்தமாக மறந்துவிட்டிருந்தார்.

அப்போதெல்லாம், அவர் மனத்தில் இருந்த சிந்தனைகள் இரண்டு தான் - செகாவை பலமான ஓர் அமைப்பாக வளர்க்கவேண்டும். சோவியத் தேசத்துக்கு உள்ளிருந்தோ, வெளியில் இருந்தோ எந்த விரோதியும் முளைத்துவிடாதபடி பாதுகாக்க வேண்டும்.

ஃபிலிக்ஸின் நோக்கங்களை, அவரது அர்ப்பணிப்புணர்வை நன்கு புரிந்துகொண்டிருந்த லெனின், தனது முழு ஆதரவையும் செகாவுக்கு வழங்கினார். கம்யூனிஸ்ட் மக்கள் அரசைப் பாதுகாக்க, செகா ஒரு மிக முக்கியமான தேவை என்பதில் அவருக்கு எப்போதும் சந்தேகம் எழவில்லை.

இதனால், செகாவின் தினசரி நடவடிக்கைகளைக்கூட கூர்ந்து கவனித்து, குறிப்புகள், ஆலோசனைகள் வழங்கிக்கொண்டிருந் தார் லெனின். ஆரம்ப காலத்தில் செகா பயன்படுத்திய புத்தி சாலித்தனமான யோசனைகள், முக்கியமான முடிவுகள் பெரும் பாலானவற்றில் தோழர் லெனினின் பங்கு இருந்தது.

காலப்போக்கில், சோவியத் எல்லைகள் விரிந்து, பணி அழுத்தம் அதிகமாகிவிட்டபிறகு, லெனினால் செகாவைத் தொடர்ந்து கண்காணிக்க முடியவில்லை. எனினும், முக்கியமான செகா ஆவணங்கள் அனைத்தும், லெனினுக்கும் ஒரு பிரதி அனுப்பப் பட்டன. நேரம் உள்ளபோதெல்லாம், அவற்றை வாசித்து, யோசனைகள், மாற்றங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார் அவர்.

அதன்பிறகு, சோவியத் ஆட்சி எங்கே சென்றாலும், அங்கே முதன்முதலாகத் தொடங்கப்படும் அரசாங்க நிறுவனங்களில்

ஒன்றாக செகா இருந்தது. இதன்மூலம் படிப்படியாகத் தனது கிளைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக்கொண்ட செகாவுக்கு, உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் மிகப் பிரமாதமான நெட்வொர்க் அமைந்துவிட்டது.

இப்படியொரு பெரிய கட்டமைப்பை உருவாக்கிக்கொண்ட பிறகு, அதற்கேற்ப, பல்வேறு புதிய நோக்கங்கள், கடமைகளையும் ஏற்றுக்கொண்டு செயல்பட ஆரம்பித்திருந்தது செகா. உதாரணமாக,

- எதிரிகளை உளவு பார்ப்பது.
- அவர்களுடைய உளவாளிகளை அடையாளம் காண்பது, திசை திருப்புவது.
- சோவியத் அரசுக்கு விரோதமான கலவரங்கள், எதிர் நடவடிக்கைகளைக் கண்டறிந்து ஒடுக்குவது (உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும்).
- சோவியத் எல்லைகளைப் பாதுகாப்பது.
- போல்ஷ்விக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அதன் தலைவர்களைப் பாதுகாப்பது.
- சாலைகள், ரயில் பாதைகள், கட்டடங்கள் உள்ளிட்ட முக்கியமான தேசச் சொத்துகளைப் பாதுகாப்பது.
- அச்சு மற்றும் பிற ஊடகங்களில் வெளியாகும் புனைவு / அபுனைவு (Fiction / NonFiction) படைப்புகளை ஆராய்ந்து, தணிக்கை செய்வது.

இதுபோன்ற ஒரு பெரிய பட்டியலை யார் தயார் செய்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது. ஆரம்பத்தில் ஓரிரு சிறிய நோக்கங்களோடு தொடங்கிய செகா. படிப்படியாக தனது அதிகார எல்லைகளையும், பணிகளையும் தானே விரிவுபடுத்திக் கொண்டது. இதற்கு போல்ஷ்விக் ஆட்சி மற்றும் கட்சியின் முழு ஆசிர்வாதம் தொடர்ந்து இருந்தது.

இதுபோன்ற பணிகளைக் குழப்பமில்லாமல் நிறைவேற்றுவதற்காக, செகாவுக்குள் தனித்தனி பிரிவுகள் உருவாக்கப்பட்டன. யார் எதைச் செய்யவேண்டும் என்பதைத் தெளிவாக வரையறுத்து,

அவர்களுக்கு அதற்கான பயிற்சிகள், கருவிகள், நிதியுதவி போன்றவை வழங்கப்பட்டன.

தகவல் சேகரிப்புப் பிரிவு, நிர்வாகப் பிரிவு, எதிரிகளின் உளவு முயற்சிகளைத் தடுக்கிற 'எதிர் உளவு'ப் பிரிவு, ஊழல் தடுப்புப் பிரிவு போன்றவை, இந்தக் காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட முக்கியமான செகா உட்பிரிவுகள்.

இவ்வாறாக, என்ன செய்கிறோம், எப்படிச் செய்கிறோம், யார் செய்கிறார்கள் என்பதையெல்லாம் நன்கு உறுதிப்படுத்திக் கொண்டபிறகு, செகா செயல்பாடுகளின் வேகம் பல மடங்கு அதிகரித்தது.

அப்போதிலிருந்து, தன்னுடைய சொந்த ஊழியர்கள், ஏஜெண்ட்களை நேரடியாக உளவுப் பணிகளில் பயன்படுத்தத் தொடங்கியது செகா. சோவியத் ரஷ்யாவோடு ஒப்பிடுகையில், பிற உலக நாடுகள் அனைத்தும், இந்த உளவு விவகாரத்தில் கொஞ்சம் லேட்டாகத்தான் விழித்துக்கொண்டார்கள்.

இதனால், போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாத மேற்கத்திய நாடுகளில் செகாவால் சுலபத்தில் ஊடுருவ முடிந்தது. அவர்களுடைய அரசியல், அறிவியல், ராணுவ விவகாரங்கள் கொஞ்சம்கொஞ்சமாக ரஷ்யாவுக்குக் கடத்தப்பட்டன.

இதுபோன்ற சிறந்த உளவு நடவடிக்கைகளால், அரசு வட்டாரங்களில் செகாவின் மரியாதை மேலும் அதிகரித்தது. ஆனால், அதற்கு நேரெதிராக மக்கள்மத்தியில் அவர்கள்மீது வெறுப்பு படரத் தொடங்கியிருந்தது.

இதற்குக் காரணம், உள்நாட்டுப் போர் சமயத்தில், நாடுமுழுவதும் பரவியிருந்த நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டு செகாவுக்குத் தரப்பட்ட கூடுதல் அதிகாரங்களை, போர் முடிந்தபிறகும் அது தீவிரமாகப் பயன்படுத்திக்கொண்டிருந்தது.

இதனால், சின்னச் சின்ன தெருமுனைச் சண்டைகளைத் தீர்ப்பதற்கெல்லாம், இயந்திரத் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு வந்தது போல், செகாவின் நடவடிக்கைகள் அபத்தமாக இருக்கின்றன என்கிற பேச்சு பரவலாக எழத் தொடங்கியிருந்தது.

இந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற, 'Bread War' என்று அழைக்கப்பட்ட 'ரொட்டிப் போர்'தான், ரஷ்யப் பொது மக்க

விடையே செகாவின் செல்வாக்கை அதல பாதாளத்துக்குத் தள்ளியது.

உள்நாட்டுப் போரின்போது, எதிரிகளுக்கு உணவுப் பொருள்கள் கிடைப்பதைத் தடுப்பதற்காக, அரசும் செகாவும் சில தடுப்பு நடவடிக்கைகளை அமல்படுத்தியிருந்தன என்பதைப் பார்த்தோம். இவற்றில் முக்கியமானது, விவசாயிகள் தங்களிடம் இருக்கும் கூடுதல் தானியங்களை அரசாங்கத்திடம் மட்டுமே விற்க வேண்டும் என்பது.

இப்படிக் கட்டளையிட்ட அரசாங்கம், இந்த உணவுப் பொருள்களுக்கு நிர்ணயித்த விலை, மிகக் குறைவாக இருந்தது. இப்படி அடிமாட்டு விலைக்கு தானியங்களை விற்றால், நஷ்டம்தான் ஏற்படும் என்று முடிவுசெய்த விவசாயிகள், இந்தக் கட்டளைக்கு அடிபணிய மறுத்தார்கள்.

இதுபோன்ற எதிர்ப்புப் போராட்டங்கள் ஆங்காங்கே முளைக்கத் தொடங்கியபிறகு, இந்த விஷயத்தில் அரசுக்கு இணங்க மறுக்கிறவர்களை வழிக்குக் கொண்டுவரும் பொறுப்பு செகாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

பாதுகாப்பு நிறுவனமான செகாவுக்கும், நெல், கோதுமை கொள்முதலுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கக்கூடாது. இப்போது அரசுக்கு தானியம் விற்க மறுக்கிறவர்கள், நாளைக்குக் கலகக்காரர்களாக மாறி, ஆட்சியைக் கவிழக்க முயற்சி செய்யலாம், இல்லையா? அதுபோன்ற பிரச்னை வருவதற்குமுன் காக்கும் நோக்கத்தோடு, களத்தில் குதித்தது செகா.

முதல் வேலையாக, அரசாங்கம் கொடுக்கும் விலை போதவில்லை என்று சொல்லும் விவசாயிகள், தங்களது தானியங்களை வேறு யாரிடம் விற்கிறார்கள் என்று கண்காணித்தது செகா. இவர்கள் எல்லோரும், உணவுப் பொருள்களைப் பதுக்கிய குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டார்கள்.

இதன்மூலம், 'ப்ளாக் மார்க்கெட்' எனப்படும் கறுப்புச் சந்தையில் உணவுப் பொருள்கள் அநியாய விலைக்கு விற்கப்படுவதும், பதுக்கல் பேர்வழிகளின் அட்டகாசமும் பெருமளவு குறைந்தது.

ஆனால், இதன்மூலம் வியாபாரிகளைத்தான் தண்டிக்க முடியும், 'என்னுடைய தானியங்களை அரசாங்கத்துக்கு விற்கமாட்டேன்' என்று பிடிவாதம் பிடிக்கிற விவசாயிகளை என்ன செய்வது?

அவர்களிடம் இருக்கும் தானியங்கள் தவறானமுறையில் பயன்படுத்தப்படாமல் இருக்கவேண்டுமானால், அவற்றைப் பறிமுதல் செய்வதுதான் ஒரே வழி என்று தீர்மானித்தது செகா. அரசாங்க விலையை ஏற்றுக்கொண்டால் ஒழுங்காக தானியங்களை வாங்குவது, இல்லாவிட்டால் எல்லாவற்றையும் மொத்தமாகக் கைப்பற்றி அரசுக் களஞ்சியத்தில் சேமிப்பது என்கிற தீவிர நடவடிக்கையைச் செயல்படுத்தியது செகா.

இதனால் கொதித்தெழுந்த விவசாயிகள், அரசு மற்றும் செகாவுக்கு எதிராகப் போராடத் தொடங்கினார்கள். இவர்கள் எல்லோரையும், 'குலக்' (Kulak) எனப்படும் பணக்கார விவசாயிகள், அரசாங்கத்தின் விரோதிகள் என அறிவித்த செகா, மற்ற புரட்சியாளர்களை ஒடுக்குவதற்கான அதே வழிமுறைகளை, விவசாயிகளுக்கு எதிராகச் செயல்படுத்தியது.

சிறு விவசாயிகள், அவர்களுடைய குடும்பங்கள், கிராமங்கள், சிறிய, பெரிய இனக்குழுக்கள் என ஏராளமானவர்கள் இந்த ரொட்டிப் போரால் பாதிக்கப்பட்டார்கள், விவசாயம் தடைபட்டது, நாடுமுழுதும் பட்டினி பரவியது, இந்தக் காலகட்டத்தில் ரஷ்யாவை பாதித்த பெரும் பஞ்சத்துக்கு இவையெல்லாம் முக்கியமான காரணங்கள்.

இதுபோன்ற பல நடவடிக்கைகளால், ஒருகட்டத்தில் மக்களின் கடும் வெறுப்பைச் சம்பாதித்துக்கொண்டது செகா. இனிமேலும் இப்படி ஒரு நிறுவனம் நமக்குத் தேவைதானா என்று பலர் பேசத் தொடங்கினார்கள்.

புதிய சோவியத் அரசு அமைந்தபோதும், உள்நாட்டுப் போரின் போதும், செகாவின் தீவிர நடவடிக்கைகள் நாட்டுக்கு அவசியப்பட்டிருக்கலாம். ஆனால் அரசு நிலைபெற்று, போரும் முடிந்துவிட்ட சூழலில், அதனால் எந்தப் பயனும் இல்லை என விமரிசனங்கள் எழுந்தன.

செகா தனது தேவையைக் கடந்து, நீண்டக் காலம் வாழ்ந்துவிட்டது என்பதுதான் பெரும்பாலானோரின் கருத்தாக இருந்தது. இதற்குமேலும் இப்படி எல்லா அதிகாரங்களையும் ஒரே இடத்தில் குவித்தால், அதன் நடவடிக்கைகளால் அரசாங்கத்துக்குதான் கெட்ட பெயர் என போல்ஷ்விக் ஆட்சியாளர்களும் எண்ணத் தொடங்கியிருந்தார்கள்.

இந்த விஷயங்கள், ஃபிலிக்ஸின் காதுகளையும் எட்டியிருந்தன. அவர் செகாவின் செயல்பாடுகளைக் கண்மூடித்தனமாக நியாயப் படுத்தாமல், இங்கே சில தவறானவர்கள் இருக்கிறார்கள். ஊழல் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். இப்படிச் சிலருடைய நட வடிக்கைகளால், மொத்த அமைப்பின்மீதும் மக்களுக்கு வெறுப்பு உண்டாகிறது என்று எண்ணினார்.

அதாவது, இந்தப் பிரச்னைக்குத் தீர்வாக, செகாவை முழுவது மாக அழித்துவிடுவது சரியில்லை. அதற்குபதிலாக, செகாவில் இருக்கும் கறுப்பு ஆடுகளைக் கண்டறிந்து, அவர்களை வெளியே அனுப்பினால் போதும் என்றார் அவர்.

இதற்காக அவர் முன்வைத்த இரண்டு யோசனைகள்:

1. ஊழல் செய்கிற, தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகிற செகிஸ்ட்களைச் சுட்டுக் கொன்றுவிடுவது.

2. செகாவால் கைது செய்யப்பட்டவர்களுக்கு மரண தண் டனை வழங்குகிற பழக்கத்தை நிறுத்துவது.

ஃபிலிக்ஸின் இந்த யோசனைகளை போல்ஷ்விக் அரசாங்கம் ஏற்றுக்கொண்டதா, அல்லது நிராகரித்துவிட்டதா எனத் தெரிய வில்லை. ஆனால், போருக்குப்பிறகு, 1921-ம் ஆண்டில் தொடங்கி, செகாவின் அளவு குறைக்கப்பட்டது.

அதாவது, பழைய அதிகாரங்களுடன், ஆனால் முன்பைவிடக் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்கள், கிளைப் பிரிவு களுடன் வழக்கம்போல் இயங்கிக்கொண்டிருந்தது செகா.

ஆனால், இதுபோன்ற தாற்காலிக ஏற்பாடுகளைவிட, இந்த விஷயத்தில் நிரந்தரத் தீர்வு ஒன்றைக் கண்டறியவேண்டும் என்று விரும்பினார் லெனின். மக்களோடு நேரடித் தொடர்புடைய தனி நபர் பிரச்னைகளிலெல்லாம் கவனம் செலுத்தாமல், அரசாங்க விவகாரங்களில்மட்டும் கவனம் செலுத்தும்படி செகாவை மாற்றியமைக்கலாம் என்பது அவருடைய யோசனை.

லெனின் விரும்பினால், இந்தச் சமயத்தில் 'செகா'வை நிரந்தர மாக அழித்திருக்கலாம். ஆனால் ஏனோ, இதுபோன்ற ஓர் அமைப்பு சோவியத் ரஷ்யாவுக்குத் தேவை என்கிற அசைக்க முடியாத நம்பிக்கை அவருக்குள் வேரூன்றியிருந்தது.

கடந்த ஐந்தாண்டுச் சம்பவங்களை வைத்துப் பார்க்கும்போது, அவருடைய இந்த நம்பிக்கை பெருமளவு உறுதிப்பட்டிருந்தது. ஆகவே, இந்தப் பாம்பைக் கொல்லவேண்டாம். சில விஷப் பற்களைப் பிடுங்கிவிட்டால் போதும் என்று முடிவெடுத்தார் லெனின்.

1922-ம் ஆண்டு டிசம்பர் 6-ம் தேதி, அதிகாரபூர்வமாக செகா அமைப்பு கலைக்கப்பட்டது. இன்னும் சரியாகச் சொன்னால், சட்டை உரித்துக்கொண்டு, வேறொரு புதிய வடிவத்தில் முளைத்தது!



# 10. ஆபரேஷன் ட்ரெஸ்ட்

செகா கலைக்கப்பட்ட அதே தினத்தன்று, இன்னொரு விசேஷச் சட்டத்தின் கீழ், கிட்டத்தட்ட அதேமாதிரியான நோக்கங்களோடு, 'GPU' என்ற புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது.

GPU என்பதும், செகாவைப்போலவே சுருக்கப் பெயர்தான். ‘Gosudarstvennoye Polititcheskoye Upravleniye’ என்ற ரஷ்யப் பெயரின் சுருங்கிய வடிவமான இதன் பொருள், ரஷ்யப் பாதுகாப்பு மற்றும் உளவு நிறுவனம்.

ரஷ்ய அரசாங்கத்தைப் பொருத்தவரை, செகாவின் இடத்தில் இன்னொரு நிறுவனம் வந்திருக்கிறது. என்றாலும், இதை வெறும் பெயர் மாற்றம் என்று சொல்லிவிடமுடியாதபடி, இன்னொரு முக்கியமான திருத்தத்தைச் செய்து இருந்தார்கள்.

1917 டிசம்பர்முதல் 1922 பிப்ரவரிவரை கிட்டத்தட்ட நான்கு வருஷங்களுக்கு மேல் இயங்கிய செகா, போல்ஷ்விக் அரசாங்கம், கட்சி ஆகிய இரண்டின்

நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால், புதிதாக உருவாக்கப் பட்ட GPU அப்படி இல்லை.

NKVD என்கிற இன்னோர் அமைப்பின்கீழ் GPU இயங்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. NKVD என்பதும், வழக்கம்போல் ரஷ்யப் பெயரின் சுருக்கம்தான் - 'Narodny Komissriat Vnutrennkh Del', இதன் பொருள் உள் விவகாரங்களுக்கான மக்கள் குழு (People's Commisariat for Internal Affairs).

இந்த NKVD, அதுவரை காவல்துறை, போக்குவரத்து, தீயணைப்பு, எல்லைப் பாதுகாப்பு, அதிகாரிகள், தலைவர்களுக்குப் பாது காப்பு உள்ளிட்ட பல கடமைகளை ஏற்றுச் செயல்படுத்திவந்தது. இப்போது புதிதாக, செகாவின் உளவு மற்றும் அரசு விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்புகளும் அதில் சேர்ந்துகொண்டன.

செகாவைக் கலைத்து, GPUவை உருவாக்கிய சட்டத்தின்படி, GPU அமைப்பின் முக்கியப் பணிகளாகக் குறிப்பிடப் பட்டிருந்தவை:

1. அரசுக்கு விரோதமான எதிர்ப் புரட்சி முயற்சிகளைக் கட்டுப்படுத்துவது.
2. சோவியத் அரசில் ஊடுருவ முயலும் உளவாளிகளை அடையாளம் காண்பது, கட்டுப்படுத்துவது.
3. ரயில் பாதைகள், நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பது.
4. சோவியத் எல்லைகளைப் பாதுகாப்பது, கண்காணிப்பது.
5. நாட்டில் ஒழுங்கை நிலைநிறுத்துவதற்கான பணிகள்.

சுருக்கமாகச் சொன்னால், செகா செய்துகொண்டிருந்த அதே பணிகள்தான். ஆனால், GPU-வின் நடவடிக்கைகள் பெரும் பான்மைப் பொதுமக்களை நேரடியாகப் பாதிக்காதபடி பார்த்துக்கொள்வது NKVD-யின் பொறுப்பு.

அப்படியானால், செகாவிடம் இருந்த கூடுதல் அதிகாரங்கள் அனைத்தும் பிடுங்கப்பட்டுவிட்டதா?

செகாவுடன் ஒப்பிடுகையில், GPU-வுக்குக் குறைந்த அதிகாரங் களே வழங்கப்பட்டிருந்தன. உதாரணமாக, யாரை வேண்டு

என்றாலும் அவர்கள் கைது செய்துகொள்ளலாம். ஆனால், அவர்கள்மீது தவறு உண்டா, இல்லையா என்று இரண்டு நாள் களுக்குள் முடிவு செய்தாகவேண்டும். தவறு செய்யாதவர்களை உடனடியாக விடுவித்துவிடவேண்டும்.

ஒருவேளை, அவர்கள் தவறு செய்திருந்தால்?

அப்போதும், GPU-வால் இரண்டு நாள்களுக்குப்பிறகு அவர் களைக் காவலில் வைத்திருக்கமுடியாது. இப்படி இனம் காணப்பட்ட குற்றவாளிகளை, VTSIK எனப்படும் 'அகில ரஷ்ய மத்தியச் செயற்குழு'விடம் (All Russian Central Executive Committee) ஒப்படைத்துவிடவேண்டும்.

இப்படிப் பல விதங்களில், செகாவைக்காட்டிலும் வலுக் குறைந்த, அதாவது, குறைந்த அளவு அதிகாரங்களைக் கொண்ட ஓர் அமைப்பாகவே GPU கருதப்பட்டது. ஆகவே, அடுத்த சில மாதங்களுக்கு அதன் நடவடிக்கைகளிலும் வன்முறை குறைந் திருந்தது.

செகாவின் பெயர் மாறியதேதவிர, அதன் நிறுவனரான ஃபிலிக்ஸ் மாறவில்லை, அவரே GPU அமைப்புக்கும் தலைவராகப் பொறுப்பேற்றார். அவருக்குக் கீழே பணிபுரிந்த பெரும்பாலான அதிகாரிகள், GPU அமைப்பிலும் இடம்பெற்றார்கள்.

இதையடுத்து, நாடுமுழுதும் இருந்த செகா கிளைகள் பெயர் மாற்றப்பட்டு, GPU என்று பளபள போர்ட்களை மாட்டிக் கொண்டார்கள். இந்தக் கிளைகளின் அதிகாரிகள், அந்தந்தப் பகுதிகளில் இருந்த NKVD அதிகாரிகளின்கீழ் பணிபுரியத் தொடங்கினார்கள்.

சோவியத் அரசு எதிர்பார்த்ததுபோலவே, செகா மறைந்து, GPU செயல்படத் தொடங்கியபிறகு, அடுத்த சில மாதங்களுக்கு அதன்மீதான எதிர்மறை விமரிசனங்களும் குறைந்துபோயின.

இதற்கேற்ப, எகக்வும் உபத்திரவமில்லாத பணிகளில்தான் கவனம் செலுத்திக்கொண்டிருந்தது. சொல்லப்போனால், செகா/ கேஜிபி வரலாறிலேயே, அதிகம் வம்பு வழக்குகள் இல்லாத ஒரே 'அமைதி'க் காலகட்டம் இதுதான்.

1922-ம் ஆண்டு, ரஷ்யா தலைமையில், சுற்றியுள்ள பல கம்யூனிச நாடுகள் ஒன்றிணைந்து, 'சோவியத் யூனியன்' என்று சுருக்கமாக

அழைக்கப்படும் USSR (Union of Soviet Socialist Republics) என்ற சோவியத் சோஷலிஸக் குடியரசுகளின் கூட்டமைப்பு உருவானது.

இதையடுத்து, USSR கூட்டமைப்புக்கு உட்பட்ட பகுதிகளில், கிட்டத்தட்ட GPU போலவே இயங்கிக்கொண்டிருந்த எல்லா அமைப்புகளையும் ஒருங்கிணைத்து, ஓர் 'ஐக்கிய' GPU உருவாக்க முடிவு செய்யப்பட்டது.

இதன்படி, 1923-ம் ஆண்டு நவம்பர் 15-ம் தேதி, GPU கலைக்கப்பட்டு, OGPU என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது.

இதில் கூடுதலாக இடம்பெற்றுள்ள O என்பது, 'Obedinyonnoye' (ஒருங்கிணைப்பு) என்ற ரஷ்யச் சொல்லைக் குறிக்கிறது. ஆக, OGFU என்பதன் பொருள், 'ஒருங்கிணைந்த ரஷ்யப் பாதுகாப்பு மற்றும் உளவு நிறுவனம்.'

GPUவுடன் ஒப்பிடுகையில், OGPU அமைப்பு சோவியத் ஆட்சியில் தனி கமிஷன் அந்தஸ்து பெற்றிருந்தது. அதாவது, இனிமேல் அவர்கள் NKVD-யின் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டியதில்லை. செகா மற்றும் GPU தலைவரான ஃபிலிக்ஸ், OGPU-வுக்கும் தலைவராகப் பொறுப்பேற்றார்.

இந்த மாற்றத்தின்மூலம் தெளிவாக்கப்பட்ட இன்னொரு முக்கிய மான விஷயம் - செகாவின் அடிப்படைகளான அசாதாரணம், தாற்காலிகம் ஆகிய இரண்டுமே, OGPU-வுக்குப் பொருந்தாது. அரசியல் சட்டப்படி நிரந்தரமாக்கப்பட்டுவிட்ட ஓர் அமைப்பு அது.

இப்படிக் கூடுதல் அதிகாரங்கள் மற்றும் புதுப் பொலிவுடன் இயங்கத் தொடங்கிய OGPU, முதல் வேலையாகத் தனது கட்டமைப்பு மற்றும் தொடர்புகளை பலப்படுத்திக் கொள்வதற் கான முயற்சிகளை ஆரம்பித்தது.

இதன்படி, சோவியத் யூனியன்முழுவதும் பெரும் எண்ணிக்கை யில் OGPU-வின் கிளை அமைப்புகள் தொடங்கப்பட்டன. ஏராளமான புதியவர்கள் வேலைக்குச் சேர்க்கப்பட்டார்கள். அவர்களுக்கு நவீன உளவு முறைகளில் சிறப்புப் பயிற்சியளித்து, ரஷ்யாவிலும் அதற்கு வெளியிலும் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கியது OGPU.

வெளிநாடுகளிலும் OGPUவின் ஏஜெண்ட்கள் (அதாவது, செகிஸ்ட்கள்) பரவலாக ஊடுருவத் தொடங்கியிருந்த கால கட்டம் இது. புதிய அமைப்பான சோவியத் யூனியன்பற்றி மேலை நாடுகள் என்ன நினைக்கின்றன, கம்யூனிசத்தை ஒழித்துவிடலாம் என்கிற எண்ணம் இன்னும் அவர்களுக்கு இருக்கிறதா, அதற்காக என்னென்ன திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் சுறுசுறுப்பாக உளவுபார்க்கிற வேலைகள் நடந்தன.

OGPU தொடங்கப்பட்டு சுமார் ஒரு வருஷம் கழித்து, கம்யூனிஸ்ட் ஆட்சியை எதிர்த்துத் தோற்றுவிக்கப்பட்ட 'MUCR' என்கிற ஓர் இயக்கத்தைப்பற்றிய தகவல்கள் செகிஸ்ட்களுக்குக் கிடைக்கத் தொடங்கின.

'MUCR' (Monarchist Union of Central Russia) என்பது, முடியாட்சிக்கு ஆதரவான ஒரு கூட்டம். ரஷ்யப் புரட்சி முடிந்து நான்கு ஆண்டு களுக்குப்பிறகு, அதாவது 1921-ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட இந்த அமைப்பு, எப்படியாவது ரஷ்யாவில் மீண்டும் மன்ன ராட்சியைக் கொண்டுவரவேண்டும் என்கிற நோக்கத்துடன் போராடிக்கொண்டிருந்தது.

ஆனால், கிட்டத்தட்ட இதே நோக்கத்துடன் தொடங்கப் பட்டிருந்த மற்ற பல அமைப்புகளைப்போலவே, 'MUCR' உறுப்பினர்களும் பெரிதாக எதையும் சாதித்துவிடவில்லை. முன்பு செகாவும், பின்னர் GPUவும், இப்போது OGPU-வும் எடுத்த தொடர் நடவடிக்கைகளால், இதுபோன்ற அமைப்புகள் எல்லாம் வலுவிழந்து, வெறுமனே பெயரளவில் செயல்படுகிறவையாகச் சுருங்கிவிட்டன.

ஆகவே, இந்த MUCR இயக்கத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட போது, செகிஸ்ட்கள் மகிழ்ச்சியில் ஆனந்தக் கூத்தாடவில்லை, பத்தோடு பதினொன்று என்று அதன் முக்கியப் பிரமுகர்களை யெல்லாம் கைது செய்து உள்ளே தள்ளினார்கள்.

ஆனால், இதெல்லாம் நடந்துமுடிந்தபிறகும், இப்படி ஓர் இயக் கத்தைக் கண்டறிந்து முடக்கிவிட்டோம் என்கிற தகவலை மட்டும் அவர்கள் வெளியே சொல்லவில்லை. காரணம், இந்தப் பெயரை வைத்து, ஒரு சின்ன விளையாட்டு ஆடிப்பார்க்கலாம் என்று OGPU செகிஸ்ட்கள் முடிவு செய்திருந்ததுதான்.

என்னதான் சோவியத் யூனியனில் போல்ஷ்விக் அரசு நிலை பெற்றுவிட்டாலும், சோவியத் யூனியன்முழுவதும் MUCR போல் அரசுக்கு எதிராகச் செயல்படும் கோப இயக்கங்கள் இருக்கவே செய்கின்றன. இவர்களை எப்படிச் சுறுசுறுப்பாகத் துப்பறிந்து நசுக்கினாலும், வேறொரு திசையில், இன்னொரு பெயரில் முளைத்துவிடுகிறார்கள்.

இந்த இயக்கங்கள் எல்லாமே, சிறியவை அல்லது மிகச் சிறியவைதான். ஆனால் அதற்காக, இவற்றை மொத்தமாகப் புறக்கணித்துவிடமுடியாது. என்றைக்காவது இவர்கள் எல்லோ ரும் ஒன்றாக இணைந்துவிட்டால், அரசுக்கு எதிராகக் கணிசமான எண்ணிக்கையில் படை சேர்ந்துவிடும். ஆகவே, இவற்றை முழுவதுமாகக் கண்டறிந்து முடக்குவது மிக அவசியம்.

ஆகவே, MUCR இயக்கத்தைப் போர்வையாகப் பயன்படுத்தி, இதேபோன்ற வேலையில் ஈடுபட்டிருக்கும் மற்ற தனி நபர்கள், அமைப்புகள் எல்லாவற்றையும் கண்டறிய முடிவுசெய்தது OGPU.

அது எப்படி முடியும்? MUCR-தான் மொத்தமாக அழிக்கப்பட்டு விட்டதே.

ஆமாம், ஆனால், அந்த விஷயம் OGPUவுக்குமட்டும்தானே தெரியும்? மற்ற புரட்சியாளர்களுக்கு இந்தத் தகவல் தெரியாத வரையில், அவர்களைப்பொருத்தவரை MUCR இன்னும் உயி ரோடுதான் இருக்கிறது.

இந்த தந்திரத்தைப் பயன்படுத்தி, தன்னுடைய அலுவலர்கள் சிலரை MUCR உறுப்பினர்களாக நடிப்பதற்குத் தயார்ப்படுத்தியது OGPU. அவர்களும், 'புரட்சி ஓங்குக, போல்ஷ்விக் அரசு ஒழிக' என்று கோஷம் போட்டுக்கொண்டு, தங்களது உளவு வேலை களைத் தொடங்கினார்கள்.

கொஞ்சமும் பிசிறில்லாத திட்டம் அது. நாங்களும் கம்யூனிஸ்ட் அரசாங்கத்துக்கு எதிரான போராளிகள்தான் என்று சொல்லிக் கொண்டு, MUCR இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவது, அதோடு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புகொள்ளும் நபர்கள், பிற இயக்கங்கள் அனைத்தையும், ஒவ்வொன்றாக வளைத்துப் போடுவது.

இந்தத் திட்டம், ரஷ்யா, சோவியத் யூனியனில் மட்டுமின்றி, பல வெளிநாடுகளிலும் வெற்றிகரமாகச் செயல்பட்டது. குறிப்பாக, 'MUCR' அமைப்பின் ஐரோப்பியப் பிரிவு என்ற பெயரில் சில செகிஸ்ட்கள் செய்த அட்டகாசமான உளவு வேலைகளை, ரஷ்யாவில் இப்போதும் கதைகதையாகச் சொல்லி மகிழ்கிறார்கள்.

'ட்ரெஸ்ட் ஆபரேஷன்' (Trest Operation) என்று பெயரிடப்பட்டிருந்த செகிஸ்ட்களின் இந்தத் திட்டத்தில் சிக்கிக்கொண்ட முக்கியமான, பிரபலமான உளவாளி, சிட்னி ரெய்லி (Sidney Reilly).

இவனுடைய உண்மைப் பெயர், சாலமன் ரோஸன்ப்ளம் (Salomon Rosenblum). பிறந்தது ரஷ்யாவில்தான். ஆனால், சில தனிப்பட்ட காரணங்களுக்காகத் தன் குடும்பத்தையும் ரஷ்யாவையும் வெறுக்கத் தொடங்கியவன் சொந்த நாட்டிலிருந்து வெளியேறிவிட்டான்.

அதன்பிறகு, இங்கிலாந்து சென்று, பிரிட்டன் ரகசிய போலீஸில் உளவாளியாகச் சேர்ந்த சிட்னி ரெய்லிக்கு, ரஷ்யாவிலிருந்து சில முக்கியமான ரகசியங்களை அறிந்துவருகிற வேலை கொடுக்கப்பட்டது.

ஒக்ரானா, செகா காலத்தில் தொடங்கி, அநேகமாக உலக நாடுகள் எல்லாவற்றையும் ரஷ்யா உளவு பார்த்துக்கொண்டிருந்தது. ஆகவே, இதேபோன்ற தந்திரங்களைப் பயன்படுத்தி வேறு யாராவது நம்முடைய ரகசியங்களைக் கொள்ளையடித்துவிடுவார்களோ என்கிற பயத்தில், அவர்களுக்கு இயல்பாகவே பாதுகாப்பு உணர்ச்சி அதிகமாக இருந்தது.

இதனால், ரஷ்யாவுக்குள் ஊடுருவித் தகவல்களைக் கைப்பற்றுகிற வேலை அத்தனை சுலபமானது இல்லை. ஆனாலும், சிறுவயதிலிருந்தே சவாலான பணிகளைச் செய்துமுடிப்பதில் விருப்பம் கொண்ட ரெய்லி, இந்தப் பணியை விரும்பி ஏற்றுக்கொண்டான்.

அந்தக் காலத்தில் இரும்புக் கோட்டை என்று கருதப்பட்ட ரஷ்யாவில், பாதுகாப்பு ஏற்பாடுகளும், முதலில் ஒக்ரானா, பிறகு செகா போன்ற அமைப்புகளின் தொடர் கண்காணிப்புகளும் மிகவும் பலமாக அமைந்திருந்தன. இவற்றை மீறி ரகசியங்களைக் கைப்பற்றுவது சிரமமாகக் கருதப்பட்டது.

எனினும், இவற்றால் ரெய்லியைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. சுவாரசியமான பல தந்திரங்களைக் கையாண்டு, வரிசையாகப் பல ராணுவ ரகசியங்கள், தொழில்நுட்பம் சார்ந்த தகவல்களையெல்லாம் உளவறிந்து, பிரிட்டனுக்குக் கடத்திக் கொண்டிருந்தான் அவன்.

இத்தனை தகவல்கள் எப்படி வெளியே போகிறது என்று ஜார் அரசாங்கம் குழம்பிக்கொண்டிருக்கும்போதே, வந்த வேலையை முடித்துவிட்டு இங்கிலாந்து கிளம்பிவிட்டான் சிட்னி ரெய்லி.

அதன்பிறகு, ஜார் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, போல்ஷ்விக் அரசாங் கம் அமைந்தது. புதிய தலைவராக லெனின் பதவியேற்றார். இப்போது சிட்னி ரெய்லி மீண்டும் ரஷ்யாவுக்குள் நுழைய வேண்டியிருந்தது.

இந்தமுறை அவனுக்குத் தரப்பட்டிருந்த பணி, லெனின் அரசு எத்தனை வலுவானது, அதைத் தூக்கியெறிந்துவிட்டு, இங்கிலாந்துக்குச் சாதகமான ஓர் அரசை அங்கே அமர்த்த வேண்டுமானால், அதற்கு என்னவெல்லாம் செய்யவேண்டும் போன்ற தகவல்களைத் திரட்டிவருவது.

இப்படியொரு நோக்கத்துடன் 1918-ம் ஆண்டு ரஷ்யாவுக்குக் கிளம்பிச் சென்ற ரெய்லிக்கு, இந்தமுறை வெற்றி அத்தனை சுலபத்தில் கிடைத்துவிடவில்லை. காரணம், செகா. பல நிலைகளில் கட்டுப்பாடுகளைத் திணித்து, ரகசியங்களைக் காப்பாற்றிவைத்திருந்தது.

ஆனாலும், சிட்னி ரெய்லி அசந்துவிடவில்லை. இந்தப் பிரச் னையை எப்படிச் சமாளிக்கலாம் என்று சிறிது நேரம் யோசித்த வன், நேராகப் பக்கத்திலிருக்கும் செகா அலுவலகத்துக்குச் சென்றான். சரணடைவதற்கு இல்லை, செகாவில் சேர்வதற்கு!

செகாவில் ஏராளமான புதியவர்கள் வேலைக்குச் சேர்ந்துகொண் டிருந்த நேரம் அது. அவர்களோடு நாமும் ஒட்டிக்கொண்டால், உள்ளே இருந்தபடி சகலத்தையும் அறிந்துகொள்ளலாம் என்று கணக்குப் போட்டிருந்தான் சிட்னி ரெய்லி.

சாதாரணமாக செகாவில் யாரையும் உடனே வேலைக்குச் சேர்த்துக் கொண்டுவிடமாட்டார்கள். சம்பந்தப்பட்ட நபர் மற்றும் அவரது பின்னணியைப்பற்றித் தெளிவாக விசாரித்துத்

தெரிந்துகொண்டபிறகுதான், அவர்கள் செகிஸ்டாகத் தகுதியுள்ளவர்களா இல்லையா என முடிவு செய்யப்படும்.

முக்கியமான இந்தத் தடையையும் எப்படியோ வெகு சாமர்த்தியமாகத் தாண்டிவிட்டான் கில்லாடி ரெய்லி. இதன்மூலம், செகாவில் அவனுக்கும் ஓர் இடம் கிடைத்துவிட்டது. இதைப் பயன்படுத்திக்கொண்டு, ரகசியமாகத் தனக்கு வேண்டிய தகவல்களைத் திரட்டத் தொடங்கினான் அவன்.

இதே சமயத்தில், லெனின் தலைமையிலான போல்ஷ்விக் அரசைக் கவிழ்த்துவிட்டு, தானே புதிய அதிபராகிவிடவேண்டும் என்கிற ஆசைகூட அவனுக்குள் இருந்தது. இதற்காகப் புரட்சிப் படை ஒன்றை உருவாக்குகிற முயற்சியிலும் ஈடுபட்டிருந்தான்.

யோசித்துப் பாருங்கள், அரசுக்கு எதிரான முயற்சிகளை ஒடுக்குவதற்காக ஒரு ரகசிய போலீஸ், அதில் இணைந்துகொண்டு, ரகசியமாக ஒரு புரட்சிக்குத் தயாராகிக்கொண்டிருக்கும் அன்னிய உளவாளி.

ஏதோ ஜேம்ஸ் பாண்ட் படம் பார்ப்பதுபோல் இருக்கிறதா? தப்பே இல்லை. ஏனெனில், ஜேம்ஸ் பாண்ட் கதைகளை எழுதிப் புகழ்பெற்ற எழுத்தாளர் இயான் ஃப்ளமிங் (Ian Fleming), சிட்னி ரெய்லியின் 'நிஜ' சாகசங்கள்தான் 'ஜேம்ஸ் பாண்ட் 007' என்ற கற்பனைக் கதாபாத்திரத்தை உருவாக்கத் தனக்குத் தூண்டுதலாக இருந்தது எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

கதையில் வருகிற ஜேம்ஸ் பாண்டுக்கும், நிஜத்தில் சிட்னி ரெய்லிக்கும் இடையே முக்கியமான ஒரு வித்தியாசம், ரெய்லியால் பல ரஷ்ய ரகசியங்களைச் சாமர்த்தியமாக உளவறிய முடிந்ததேதவிர, லெனினைக் கடத்துகிற, போல்ஷ்விக் ஆட்சியைக் கவிழ்க்கிற அவனுடைய ஆசைகள் எவையும் நிறைவேறவில்லை.

காரணம், திரைமறைவில் இதுபோன்ற ஒரு பெரிய சதி முயற்சி நடந்துகொண்டிருப்பதை எப்படியோ மோப்பம் பிடித்துவிட்ட செகா, இதில் ஈடுபட்டவர்கள் பலரைக் கைது செய்துவிட்டது. முக்கியப் புள்ளியான சிட்னி ரெய்லிமட்டும் எப்படியோ மாட்டாமல் தப்பிவிட்டான்.

ரஷ்யா முழுவதும் ரெய்லியைச் சல்லடை போட்டுத் தேடிச் சலித்த செகா, அவனைப் பிடித்துத் தந்தால் ஒரு லட்சம் ரூபிள்கள்

பரிசு தருவதாக அறிவித்தது. ஆனால் இதற்குள், ரஷ்ய விவசாயி, கிரேக்கப் பயணி, துருக்கிய வியாபாரி என்று பல அவதாரங்கள் எடுத்து, எல்லையைத் தாண்டியிருந்தான் சிட்னி ரெய்லி.

பத்திரமாக லண்டனுக்குச் சென்ற ரெய்லி, அங்கிருந்தபடி லெனின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான ஏற்பாடுகளில் இறங்கியிருந்தான். இதைத் தெரிந்துகொண்ட செகா, இங்கிலாந்தில் உள்ள தமது MUCR உறுப்பினர்களின்மூலம், சிட்னி ரெய்லிக்கு வலை விரித்தது.

ரஷ்யாவில் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை ஒழிக்க விரும்புகிற ஓர் இயக்கம், தனது கைக்கெட்டும் தூரத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதைச் சில 'நண்பர்கள்' மூலம் கேள்விப்பட்ட சிட்னி ரெய்லி, உடனடியாக அந்த இயக்கத்தைத் தொடர்புகொண்டு, தன்னுடைய ஆதரவைத் தெரிவித்தான்.

'ரொம்ப சந்தோஷம்' என்று சிட்னி ரெய்லியைக் கை குலுக்கி வரவேற்றது MUCR ஐரோப்பியப் பிரிவு - 'நாம் எல்லோருமாகச் சேர்த்து லெனினை ஒரு வழி பண்ணிவிடலாம் வாருங்கள்.'

இப்படி உற்சாகமாகத் தொடங்கிய சிட்னி ரெய்லி - MUCR நட்பு, நாளுக்கு நாள் பலப்பட்டது. அவனுக்குக் கொஞ்சமும் சந்தேகம் வந்துவிடாத அளவுக்கு, லெனின் ஆட்சியை வீழ்த்துவதற்கான திட்டங்களை நுணுக்கமாகத் தயாரித்து விளக்கிக்கொண்டிருந்தார்கள் லண்டன் MUCR உறுப்பினர்கள்.

ஆனால், இங்கே லண்டனில் உட்கார்ந்துகொண்டு லெனினைக் கீழே தள்ளுவது எப்படி? அதற்கு ரஷ்யாவுக்கு நேரில் போக வேண்டும் அல்லவா?

மீண்டும் ரஷ்யாவுக்குள் நுழைவதில் ரெய்லிக்குச் சில தயக்கங்கள் இருந்தன. முன்பு செகாவிடமிருந்து சாமர்த்தியமாகத் தப்பியது போல, இந்தமுறை OGPU-வைச் சமாளிக்கமுடியுமா என்று சந்தேகப்பட்டான் அவன்.

'கவலைப்படாதீர்கள். எல்லாவற்றையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்' என்றது MUCR அமைப்பு - 'நம்முடைய குழுவின் மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் அங்கே ரஷ்யாவில்தான் இருக்கிறார்கள். அனைவரையும் சந்தித்து நம்முடைய திட்டத்தைச் சொல்வோம். அவர்களுக்கும் உங்களைப் பார்த்தால் கொஞ்சம் தெம்பாக, உற்சாகமாக இருக்கும்.'

இல்லாடி சிட்னி ரெய்லி, எப்படியோ அரதப் பழசான இந்தத் தந்திரத்தில் மயங்கி, ரஷ்யாவுக்கு வரச் சம்மதித்துவிட்டான். இதன்படி அவன் ரஷ்ய எல்லைக்குள் நுழைந்ததும், அங்கேயே அவனை மடக்கியது OGPU.

அப்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில், சிட்னி ரெய்லி உடனடியாகக் கொல்லப்பட்டுவிட்டான் என்கிறது அதிகாரப்பூர்வமான தகவல். ஆனால், அவன் தந்திரமாகத் தப்பிவிட்டான், பின்னர் அவனுக்கு மன நோய் பிடித்துவிட்டது என்றெல்லாம் விதவிதமான வதந்திகள் உண்டு.

சிட்னி ரெய்லி உள்பட, ஏராளமான உளவாளிகள், எதிர் கோஷ்டியினரைக் கண்டறிவதற்கும், தந்திரமாக மடக்குவதற்கும் இந்த MUCR வேஷத்தைப் பயன்படுத்தியது OGPU. பல ஆண்டுகளுக்கு நீடித்த இந்த 'ஆபரேஷன் ட்ரெஸ்ட்' திட்டம், குறிப்பாக 1924 - 25 ஆகிய ஆண்டுகளில்தான் அவர்களுக்கு மிகச் சிறப்பாகக் கை கொடுத்தது.

பின்னர், 1927-ம் வருஷத்தில், MUCR பற்றிய இந்த ரகசியம் வெளிச்சத்துக்கு வந்தபோது, OGPU / சோவியத் உளவுத் துறையின் மிக முக்கியமான முதல் வெற்றியாக 'ஆபரேஷன் ட்ரெஸ்ட்' வருணிக்கப்பட்டது.

இதே காலகட்டத்தில்தான், அவர்கள் தங்களுடைய முக்கியமான தலைவர்கள் இருவரை இழந்தார்கள்!



# 11. முடிக்கப்படாத ஓவியம்

ரஷ்யப் புரட்சிக்கான போராட்டமும், அதைத் தொடர்ந்த புதிய அரசு சார்ந்த அரசியல், பணி அழுத்தங்கள் போன்றவையும் காம்ரேட் லெனினின் உடல் நலத்தைப் பெரிதும் பாதித்திருந்தன.

போல்ஷ்விக் அரசு அமைந்தபிறகு, லெனினைக் கொல்வதற்கு நடந்த முயற்சியில், அவர் உயிர் பிழைத்துவிட்டது உண்மைதான். ஆனால், அப்போது அவருடைய கழுத்துப் பகுதியில் பாய்ந்திருந்த ஒரு குண்டு, முதுகெலும்புக்கு மிக அருகே சென்றுவிட்டதால், மருத்துவர்களால் அதனை நீக்கமுடியவில்லை.

பின்னர், 1922 மே மாதத்தில் தொடங்கி, ஓர் ஆண்டுக்குள் அடுத்தடுத்து மூன்று முறை பக்கவாதத்தின் தாக்குதலைச் சந்தித்த லெனின், நிரந்தரமாகப் படுக்கைவசமாகிவிட்டார். அதன்பிறகு, அரசாங்க விவகாரங்களில் அவரால் தலையிட முடியவில்லை. 1924-ம் ஆண்டு ஜனவரி 21-ம் தேதி, லெனின் மரணமடைந்தார்.

புரட்சிக் காலகட்டத்தில் தொடங்கி, லெனினுடன் இணைந்து பணியாற்றிவந்தவர் ஃபிலிக்ஸ். குறிப்பாக, செகா என்ற அமைப்பு தொடங்கப்பட்டபிறகு, அதன் நோக்கங்கள், கடமைகளைத் தெளிவாக்கி, கட்டமைப்பை உறுதிப்படுத்தியதில் இவர்கள் இருவருக்கும் சம அளவு முக்கியத்துவம் உண்டு.

ஆனால், பல விஷயங்களில் தன்னுடைய கருத்துகள், கொள்கைகள், நம்பிக்கைகள் இன்னொரு போல்ஷ்விக் தலைவரான ஸ்டாலினுடன்தான் அதிகம் ஒத்துப்போகின்றன என்பதை உணர்ந்திருந்தார் ஃபிலிக்ஸ். இதனால், லெனின் ஆட்சியின் போதே, இவர்கள் இருவருக்கும் நல்ல நட்பு உண்டு.

இதனால், லெனினுக்குப்பிறகு சோவியத் அதிபராக ஸ்டாலின் பொறுப்பேற்றுக்கொண்டபோது, செகாவின் அப்போதைய வடிவமான OGPU புதிய ஆட்சியின்கீழ் பணியாற்றத் தொடங்குவதில் பெரிய பிரச்னைகள் இல்லை.

ஸ்டாலின் ஆட்சியில் OGPU-வின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்தது. அதன் பாதுகாப்பு மற்றும் உளவுப் பிரிவுகளை ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்திக்கொண்ட முதல் தலைவர் என்று ஸ்டாலினைச் சொல்லலாம். இதனால், அதுவரை கட்சி மற்றும் ஆட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த OGPU, முதன் முறையாக, ஆட்சியாளர் என்கிற தனி நபரின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப இயங்கத் தொடங்கியிருந்தது.

சோவியத் யூனியனில் தனக்கிருந்த அரசியல் எதிரிகளைச் சமாளிப்பதற்கு, ஸ்டாலின் OGPU-வைச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொண்டார். இதனால், இந்தக் காலகட்டத்தில் ஸ்டாலின் மட்டும் கட்டளையிட்டுவிட்டால், அதை நிறைவேற்றுவதற்காக OGPU எந்த அளவு கடுமையான வழிமுறைகளையும் பயன்படுத்தத் தயங்காது என்கிற பிம்பம் உருவானது.

இதைப்பற்றி, வேடிக்கையான ஒரு நகைச்சுவைத் துணுக்கு உண்டு.

ஒருமுறை, ஸ்டாலின் சொந்த ஊரிலிருந்து ஏழெட்டுப் பேர் அவரைப் பார்ப்பதற்காக வந்திருந்தார்களாம். ஊர் விவகாரங்களையெல்லாம் பேசிவிட்டு, அவர்கள் விடைபெற்றுக் கொண்டு கிளம்பிச் சென்றார்கள்.

அவர்கள் சென்றபிறகு, ஸ்டாலின் பைப் புகைக்க விரும்பினார். ஆனால், மேஜைமீது மேலோட்டமாக ஒருமுறை தேடிப் பார்த்தபோது, அவருடைய பைப் கண்ணுக்குத் தென்பட வில்லை.

ஒருவேளை, வந்தவர்களில் யாரேனும் தெரியாமல் தன்னுடைய பைப்பை எடுத்துச் சென்றுவிட்டார்களோ என்று நினைத்த ஸ்டாலின், ஃபிலிக்ஸைத் தொலைபேசியில் அழைத்தார், 'காம்ரேட், என்னுடைய பைப்பைக் காணவில்லை' என்று சொல்லி, சற்றுமுன் இங்கிருந்து கிளம்பியவர்களை அழைத்து விசாரிக்கச் சொன்னார்.

சிறிது நேரத்துக்குப்பிறகு, ஸ்டாலின் கையிலிருந்த காகிதம் ஒன்று கீழே விழுந்துவிட்டது. அதை எடுப்பதற்காகக் குனிந் தவர், மேஜைக்குக் கீழே தன்னுடைய பைப் கிடப்பதைக் கண்டுகொண்டார்.

உடனே, ஃபிலிக்ஸுக்கு ஃபோன் செய்து இந்த விவரத்தைச் சொல்லவேண்டும் என்று நினைத்தார் ஸ்டாலின், அதற்குள் தொலைபேசி மணி தானாக ஒலித்தது, எடுத்துப் பார்த்தால், ஃபிலிக்ஸ்தான்.

'காம்ரேட், உங்களைப் பார்க்க வந்தவர்கள் எல்லோரையும் நன்கு விசாரித்துவிட்டோம். நான்கு பேர் தாங்கள்தான் பைப்பைத் திருடினோம் என்று ஒப்புக்கொண்டுவிட்டார்கள். மிச்சமிருந்தவர்கள் விசாரணையின்போது இறந்துபோய் விட்டார்கள்' என்றார் ஃபிலிக்ஸ்.

கொஞ்சம் குரூரமான கற்பனைதான் - என்றாலும், அப்போதைய சூழலில் ஸ்டாலினின் கை பொம்மையாகவே OGPU இயங்கத் தொடங்கிவிட்டது என்பதுதான் இதன் பின்னணியில் ஒளிந் திருக்கிற உண்மை.

ஃபிலிக்ஸும் ஸ்டாலினும் நெடுநாள்கள் இணைந்து பணியாற்ற வில்லை. லெனின் மரணமடைந்து இரண்டு ஆண்டுகளில், 1926 ஜூலை 26-ம் தேதி மாரடைப்பால் காலமானார் ஃபிலிக்ஸ் டெஜெர்ஜின்ஸ்கி.

அடுத்தடுத்து நிகழ்ந்துவிட்ட இந்த இரு தலைவர்களின் மரணங் களும், செகாவை, அதாவது, அப்போதைய OGPU-வை வெவ் வேறு விதத்தில் பாதித்தன. திசை திருப்பின.

லெனினைப்போலின்றி, தனது தனிப்பட்ட கொள்கைகள், விரோதங்களின் அடிப்படையில் OGPU-வைப் பயன்படுத்தத் தொடங்கினார் ஸ்டாலின். அவருக்குப்பிறகு வந்த தலைவர் களும் அவ்வப்போது இந்த வழிமுறையைப் பின்பற்றிக் கொண் டிருந்ததால், ஒருகட்டத்தில் சோவியத் யூனியனின் நலத்துக்காக உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு, தனி நபர்களின் ஆயுதமாகவே பெயர் பெற்றுவிட்டது.

இதேபோல், ஃபிலிக்ஸுக்குப் பிறகு OGPU தலைவரான விய செஸ்லவ் ருடோல்ஃபொவிச் மென்ஜின்ஸ்கி (Vyacheslav Rudolfovich Menzhinsky) என்பவரால், அதனைச் சிறப்பாக வழி நடத்தமுடியவில்லை. இதன்மூலம், மிக முக்கியமான கால கட்டத்தில் OGPU-வின் வளர்ச்சி தடைபட்டது/ அதன்பிறகு, அதைத் தங்களது கை பொம்மையாக மாற்றிக்கொள்வது ஆட்சி யாளர்களுக்குச் சுலபமாக இருந்தது.

ஃபிலிக்ஸைப்போலவே, வியசெஸ்லவும் போலந்துக் குடும் பத்தைச் சேர்ந்தவர்தான். ஆரம்பத்திலிருந்தே செகாவில் பணி யாற்றிய சீனியர் செகிஸ்ட், தீவிர ஸ்டாலின் ஆதரவாளரும்கூட. போதாதா? ஃபிலிக்ஸ் மரணமடைந்ததும், OGPU தலைமைப் பதவி அவரைத் தேடி வந்தது.

ஆனால், இப்படியொரு முக்கியமான பதவிக்கு வ்யசெஸ்லவ் கொஞ்சம்கூட தயாராக இல்லை. சொல்லப்போனால், இந்தக் கடமைகளிலிருந்து அவர் விலகியிருக்கவே முயன்றார்.

இதற்கு முக்கியமான காரணம், அவருடைய உடல்நிலை. பல ஆண்டுகளாக அஞ்சினா (Angina) என்ற வியாதியால் அவதிப்பட்ட அவரால், பெரும்பாலான சமயங்களில் தன்னுடைய இருக்கை யில் இருந்து நகரக்கூட முடியாது. இப்படிப்பட்ட ஒருவர், OGPU போன்ற ஓர் அமைப்பின் தலைவராகப் பணியாற்றுவது என்றால் நடக்கிற காரியமா?

தவிர, இயல்பிலேயே வ்யசெஸ்லவ் அப்படியொன்றும் பிரமாத மான திறமைசாலி என்று சொல்வதற்கில்லை. புரட்சிக்குமுன்பு அவரைச் சந்தித்துப் பேசிய போல்ஷ்விக் முக்கியத் தலைவர் களுள் ஒருவரான லியான் ட்ராட்ஸ்கி (Leon Trotsky), 'முடிக்கப் படாத ஓர் ஓவியப் பிரதியைப்போல் தெரிகிறார்' என்று விய செஸ்லவை வருணித்திருக்கிறார்.

திறமைக் குறைவோ, அல்லது உடல் நலக் குறைவோ, OGPU தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்ட வ்யசெஸ்லவ், இவற்றுள் ஏதோ ஒரு காரணத்தால், தனக்குரிய பொறுப்புகள், கடமைகளைத் தட்டிக் கழிக்கத் தொடர்ந்து முயன்றுவந்திருக்கிறார்.

இதனாலேயே, சோவியத் அரசு அல்லது காவல்துறை / உளவுத் துறைச் சரித்திரங்கள் வ்யசெஸ்லவ்பற்றி அதிகம் பேசுவதில்லை. சொல்லப்போனால், அவரைவிட, அவருக்குக் கீழே பணிபுரிந்த உதவித் தலைவர்கள், அதிகாரிகள் அதிகப் புகழடைந்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

இதைப்பற்றி வ்யசெஸ்லவ் அவ்வளவாக அலட்டிக்கொள்ளவில்லை/ பெரும்பாலான களப் பணிகளைத் தன்னுடைய ஜூனியர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்ட இவர், தனது பதவிக்காலம் முழுவதும் தனது லுப்யன்கா அலுவலகத்திலிருந்து வெளியே அதிகமாகத் தலைகாட்டவே இல்லை.

இதனால், வ்யசெஸ்லவ் தலைவராகப் பணியாற்றிய எட்டு ஆண்டுகளில், OGPU-வில் இரண்டாம் நிலைத் தலைவர்கள், அதிகாரிகளின் ஆதிக்கம் படிப்படியாக அதிகரித்தது. இவர்களில் பெரும்பாலானோர், குறிப்பிடத்தக்க OGPU / KGB தலைவர்களாக வளர்ந்தார்கள்.

ஸ்டாலினின் ஆட்சியில், பெரும்பாலான அரசு சார்ந்த அமைப்புகள், புதிய கடமைகள், பணிகளை ஏற்கவேண்டியிருந்தது. புதிய ஆட்சியின் சில கொள்கை முடிவுகளைச் செயல்படுத்துவதில், OGPUவும் முக்கியப் பங்காற்றியது.

உதாரணமாக, சோவியத் யூனியனில் தொழிற்புரட்சியைத் தொடங்கிவைத்த ஸ்டாலினின் ஐந்தாண்டுத் திட்டங்கள், பல்வேறு புதிய தொழில் நகரங்களை உருவாக்கின.

புதிதாக ஒரு வீடு கட்டுவது என்றாலே, நூற்றுக்கணக்கான தொழிலாளர்களின் உழைப்பு வேண்டியிருக்கிறது. தொழிற்சாலைகள், தொழில் நகரங்கள் என்று உருவாக்குவதானால், இன்னும் அதிக எண்ணிக்கையிலானவர்கள் தேவைப்படுவார்கள். அத்தனை தொழிலாளர்களுக்கு எங்கே போவது?

இங்கேதான், ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு OGPUவின் பங்களிப்பு தொடங்கியது. தங்களுடைய சிறைச்சாலைகள் மற்றும் சிறப்பு

முகாம்களிலிருந்து, லட்சக்கணக்கான கைதிகளை இதுபோன்ற தொழில் நகரங்களின் உருவாக்கத்துக்காகப் பணிபுரிய அனுப்பிவைத்தது OGPU.

அதன்பிறகு, மழை, வெய்யில், பனி, குளிர் என்று எதையும் பார்க்காமல், இந்தக் கைதிகள் வேலையில் இறங்கவேண்டியிருந்தது. தொழிற்சாலைகளின் அஸ்திவாரத்துக்குப் பள்ளம் தோண்டுவதில் தொடங்கி, சுவர் எழுப்பி, மேலே கூரை வைத்து, இயந்திரங்களை நிர்மாணிப்பதுவரை, எல்லாப் பணிகளிலும் இவர்கள் பெரும் எண்ணிக்கையில் பயன்படுத்தப்பட்டார்கள்.

இதன்மூலம், ஒரு பைசா செலவில்லாமல், பிரம்மாண்டமான, மிகக் கடினமான கட்டுமானப் பணிகளைக்கூடச் சுலபமாகவும் விரைவாகவும் செய்து முடித்தது சோவியத் அரசு.

ஆனால், இதுபோன்ற 'மெகா ப்ராஜெக்ட்'களில் பயன்படுத்துவதற்கு வசதியாக, லட்சக்கணக்கான கைதிகள் OGPU-வுக்கு எங்கிருந்து கிடைத்தார்கள்? எப்படிக் கிடைத்தார்கள்?

சோவியத் யூனியனும் சரி, OGPU-வும் சரி, நிரந்தரமாக மறக்க விரும்பும் கொடுமையான கதை அது.



# 12. களையெடுப்பு

நண்பர் ஒருவரோடு சாதாரணமாகப் பேசிச் சிரித்தபடி, சாலையோரமாக நடந்து சென்றுகொண்டிருக்கிறீர்கள்.

அப்போது, திடுதிப்பென்று இரண்டு பேர் உங்கள்மீது பாய்கிறார்கள். நண்பரையும் உங்களையும் ஆளுக்கு ஒரு திசையில் வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்கிறார்கள். சிறிது தூரம் சென்ற பிறகு, உங்களை விடுவித்து, ஒரே ஒரு கேள்வி கேட்கிறார்கள்.

'கடைசியாக, நீங்கள் இருவரும் என்ன பேசிக்கொண்டிருந்தீர்கள்?'

சுலபமான கேள்விதான். ஆனால், எத்தனை பேரால் அப்போதைய பதற்றத்தில் இதற்குச் சரியான பதில் சொல்ல முடியும்? திடீரென்று தாக்கப்பட்ட பரபரப்பில், பயத்தில் சற்றுமுன் நடந்ததெல்லாம் சுத்தமாக மறந்துபோயிருக்காதா?

ஸ்டாலின் ஆட்சிக் காலத்தில் ரஷ்யர்கள் சர்வ சாதாரணமாகச் சந்தித்த காட்சி

இது. அரசுக்கு எதிராக ரகசியத் திட்டங்களைத் தீட்டுகிற கிளர்ச்சியாளர்களை அடையாளம் காண்பதற்குப் பயன்படுத்தப் பட்ட பல வழிமுறைகளில், இதுவும் ஒன்று.

தெருவில் பேசிக்கொண்டு நடக்கிற இரண்டு பொதுமக்களை, திடீரென்று எந்த முன் அறிவிப்பும் இல்லாமல், OGPU அதிகாரிகள் பிரித்து அழைத்துச்செல்வார்கள், பின்னர் இருவரிடமும் தனித்தனியே ஒரே கேள்வி கேட்கப்படும், 'சற்றுமுன் நீங்கள் என்ன பேசிக்கொண்டிருந்தீர்கள்?'

இந்தக் கேள்விக்கு, சம்பந்தப்பட்ட இருவரும் ஒரேமாதிரியான பதிலைச் சொன்னால், அவர்கள்மீது எந்தத் தவறும் இல்லை என்று முடிவு செய்து, இருவரையும் விடுவித்துவிடுவார்கள். ஆனால் ஒருவேளை, பொருந்தாத பதில்களைச் சொன்னாலோ, யாரோ ஒருவர், 'ஞாபகமில்லை' என்று மண்டையைச் சொறிந் தாலோ போச்சு, அவர்கள் இருவரும் புரட்சியாளர்கள். அதனால் தான் விஷயத்தைச் சொல்லத் தயங்குகிறார்கள் என்று முடிவு செய்து, இருவரையும் கைது செய்து சிறையில் தள்ளிவிடும் OGPU.

இதனால், அந்தக் காலத்தில், சும்மா காற்று வாங்குவதற்காக வெளியே கிளம்புகிறவர்கள்கூட, 'OGPU-விடம் பிடிபட்டால், நாம் இருவரும் சினிமாவுக்குப் போவதாகப் பேசிக்கொண்டிருந் தோம் என்று சொல்லவேண்டும்' என முன்கூட்டியே பொதுவான ஒரு பதிலை முடிவு செய்துகொள்வது வழக்கம். இல்லா விட்டால், யாரை வேண்டுமானாலும் இந்தச் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்கிற உரிமை OGPU-வுக்கு உண்டு.

இதுபோல் இன்னும் ஏராளமான உத்திகள், தந்திரங்கள் OGPU-விடம் இருந்தன. அவை யதார்த்தத்துக்குப் பொருந்துகின் றனவா, இல்லையா என்பதைப்பற்றிக் கொஞ்சம்கூட யோசிக்கா மல், ஸ்டாலின் அரசாங்கத்தின் (அல்லது, ஸ்டாலினின்) விரோதிகளைக் கண்டறிவது என்கிற தனது ஒரே லட்சியத்தைக் கண்மூடித்தனமாகத் துரத்திக்கொண்டிருந்தது அந்த அமைப்பு.

லெனின் காலத்தில், 'அரசாங்க விரோதிகள்' என்ற வார்த்தைக்குச் சில அர்த்தங்கள்தான் இருந்தன. உதாரணமாக, அரசின் கொள்கைகளை ஏற்காமல், அவற்றைப் பின்பற்ற மறுத்து வம்பு செய்கிறவர்கள், அரசுக்கு எதிராகக் கலவரங்களில் ஈடுபட ஆள்

திரட்டுகிறவர்கள், ஆயுதம் சேகரிக்கிறவர்கள், அதிகாரிகள் அல்லது தலைவர்களைத் தாக்குவதற்கு, அல்லது கொலை செய்வதற்கு முயல்கிறவர்கள், ஊழல் செய்கிறவர்கள், 'கறுப்புச் சந்தை' பதுக்கல் பேர்வழிகள், உளவாளிகள், அரசு ரகசியங்களை அன்னியர்களுக்கு விற்கிறவர்கள்.

இதுபோன்றவர்களைக் கண்காணிப்பதும், அவர்களுடைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதும்தான் செகாவின் முக்கிய நோக்கங்களாக அறியப்பட்டிருந்தன. ஆனால், காலப்போக்கில், 'அரசு விரோதிகள்' என்கிற வார்த்தைக்கு ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிடித்த அர்த்தங்களைக் கற்பிக்கத் தொடங்கிவிட்ட பிறகு, யார் வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும் துரோகிப் பட்டம் கட்டலாம் என்றாகிவிட்டது.

குறிப்பாக, ஸ்டாலின் காலத்தில், யாரெல்லாம் தேச விரோதிகள் என்கிற கேள்விக்கான பதில், நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருந்தது. ஒருகட்டத்தில், ஸ்டாலினையும், அவரது மிக நெருங்கிய தோழர்கள் சிலரையும் தவிர, மீதமிருக்கும் சோவியத் யூனியன் மொத்தத்தையும் OGPU கைது செய்து உள்ளே தள்ளுவதற்கான சாத்தியங்கள் இருந்தன.

இதற்கு முக்கியக் காரணம், லெனினைப்போலவே, ஸ்டாலினும் கம்யூனிச ஆட்சிக்கு விரோதிகள் அதிகம் என்று நம்பியதும் பயந்ததும்தான். இந்த ஆட்சியை அழித்துவிடவேண்டும் என்று விரும்புகிறவர்கள் கட்சிக்குள்ளும் இருக்கிறார்கள், நாட்டினுள்ளும் இருக்கிறார்கள், சோவியத் எல்லைக்கு வெளியிலும் இருக்கிறார்கள் என்று அறிவித்த அவர், இந்த ஆபத்திலிருந்து சோவியத் அரசைக் காப்பாற்றவேண்டுமானால், சில தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியிருக்கிறது என்றார்.

அவருக்கு வசதியாக, ரஷ்யப் புரட்சியில் ஈடுபட்ட முக்கியத் தலைவர்களில் ஒருவரான செர்கே கிரொவ் (Sergei Kirov) 1934 டிசம்பரில் கொல்லப்பட்டார். அவரைக் கொன்றதே ஸ்டாலினின் எடுபிடிகள்தான் என்று ஒரு நிரூபிக்கப்படாத ஊகம் உண்டு.

ஒருவேளை அது உண்மையாக இல்லாவிட்டாலும்கூட, செர்கே கிரொவ் மரணத்தால் அதிகப் பலன் பெற்றவர் ஸ்டாலின்தான். இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்திக்கொண்டு, சோவியத் அரசுக்கு எதிரான ஒரு மிகப் பெரிய சதித் திட்டத்தைத் தடுக்

டுறேன் என, தன்னுடைய எதிரிகளை வரிசையாகக் களை யெடுக்கத் தொடங்கினார் அவர்.

'பர்ஜஸ்' (Purges) என்று பொதுவான பெயரில் அழைக்கப்படும் இந்தக் களையெடுப்பு நடவடிக்கைகளின்மூலம், சோவியத் அரசுக்கு விரோதமாகச் சிந்திக்கிறவர்கள், செயல்படுகிறவர்கள், திட்டம் தீட்டுகிறவர்கள், எதிர் கோஷ்டியினருக்கு உதவுகிறவர் கள் ஆகியோரோடு, வருங்காலத்தில் இதையெல்லாம் செய்யக் கூடியவர்கள் என்று நம்பப்பட்டவர்களும் கைதானார்கள்.

உதாரணமாக, வலதுசாரிக் கொள்கைகளில் ஈர்ப்புள்ளவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளுக்கு விரோதமாகப் பேசு கிறவர்கள், அரசின் கட்டளைகளைப் பின்பற்ற மறுக்கிறவர்கள், அன்னிய உளவாளிகள், பணக்கார விவசாயிகள், தொழில் முறைக் கலைஞர்கள் (Professionals), படித்தவர்கள், அறிவுஜீவிகள், பேச்சாளர்கள், சிறுபான்மையினர் என்று பலதரப்பட்டவர்கள் இந்தக் கைது நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்டார்கள்.

இப்படிக் கைது செய்யப்பட்டவர்களில் பலருக்கு எதிராக, வலுவான சாட்சியங்கள் எவையும் இருக்காது. அதற்கு அவசிய மும் இல்லை. 'இந்த ஆள் ஓர் உளவாளி' என்று யாராவது மொட்டைக் கடிதாசி எழுதிப் போட்டுவிட்டால், அதைக்கூட ஆதாரமாக வைத்துக்கொண்டு சம்பந்தப்பட்ட நபரைக் கைது செய்துவிடுவது வழக்கம்.

அதாவது, சந்தேகத்துக்கு உரியவர்கள் என்று யாரை நினைத் தாலும், அவர்களை உடனே கைது செய்துவிடுவது. ஒருவேளை அந்த ஆள் நிஜமாகவே உளவாளியாக இருந்து தொலைத்து விட்டால்? எதற்கு வம்பு?

இதுபோன்ற தொடர் நடவடிக்கைகளால், சோவியத் யூனியன் முழுவதும் மெலிதான நடுக்கம் பரவிக் கிடந்தது. அரசியல்வாதி கள், அரசாங்க அதிகாரிகளில் தொடங்கி, அறிஞர்கள், விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், விவசாயிகள், வியாபாரிகள் என்று யாரானாலும், எந்த நேரத்தில் கைது செய்யப்படுவோமோ என்கிற பயத்தோடுதான் உலவினார்கள்.

மக்கள் தங்களுக்குள் சுதந்தரமாகப் பேசிக்கொள்ளக்கூட தயங்கிய காலகட்டம் இது. பேச்சுவாக்கில் அரசுக்கு எதிராக ஏதாவது பேசிவிடுவோமோ, அதை யாரேனும் கவனித்துப் புகார் செய்துவிடுவார்களோ என்று எல்லோரும் நடுங்கினார்கள்.

உண்மையில் நீங்கள் அரசாங்கத்தையோ, ஸ்டாலினையோ எதிர்த்துப் பேசவேண்டும் என்பதுகூட அவசியமில்லை. அவர்களை லேசாகக் கிண்டலடித்து ஒரு ஜோக் சொல்லிவிட்டால்கூட போதும், நீங்கள் தேச விரோதியாகக் கருதப்படுவீர்கள்.

வழக்கமாக, ஒருவர் நகைச்சுவைத் துணுக்குகளைச் சொல்லும்போது, ஒவ்வொன்றுக்கும் எந்த அளவு சிரிப்பு வருகிறது என்பதைப் பொறுத்து, அவற்றுக்கு 1, 2, 3, 4, 5 என்று மற்றவர்கள் மதிப்பெண் இடுவது வழக்கம். ஆனால், ஸ்டாலின் காலத்தில், அரசுக்கு எதிரான நகைச்சுவைத் துணுக்குகள், 'ரெண்டு வருஷம்', 'அஞ்சு வருஷம்' என்றுதான் வகைப்படுத்தப்பட்டன.

'ரெண்டு வருஷம்' என்றால், லேசான கிண்டல், அந்த ஜோக்கைச் சொல்கிறவருக்கு இரண்டு வருஷ சிறைத் தண்டனை என்று அர்த்தம். இன்னும் தீவிரமான கிண்டல்களுக்கு அஞ்சு வருஷத்தில் தொடங்கி, மரண தண்டனைவரைகூட போகலாம்.

ஜோக் சொல்கிறவர்கள், அரசைக் கண்டித்துப் பேசுகிறவர்கள் மட்டுமில்லை. இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறவர்கள், சிரிக்கிறவர்கள், ஆமோதித்துத் தலையாட்டுகிறவர்கள்கூட அரசின் விரோதிகளாகவே கருதப்படுவார்கள் என்று எல்லோரும் நம்பியதால், பெரும்பாலானவர்கள் யாரோடும் பழக்கம் வைத்துக்கொள்ளாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடப்பது வழக்கமானது.

இந்தக் காலகட்டத்தில், தாங்கள் எந்த நேரத்திலும் கைது செய்யப்படக்கூடும் என்று நம்பிய பிரமுகர்கள், அறிஞர்கள், தலைவர்கள் போன்றோர், கைவசம் எப்போதும் ஒரு செட் நல்ல துணிமணிகள், ஸ்வெட்டர்கள், இதர பொருள்களோடுதான் தூங்கப்போனார்கள். ராத்திரி வேளைகளில் கதவு தட்டப்படுகிற சத்தம் கேட்டாலே, இவர்களுக்கெல்லாம் உடம்பு நடுங்கத் தொடங்கியது.

இப்படி ஏராளமானவர்களைச் சந்தேகம் அல்லது சாட்சியத்தின் அடிப்படையில் கைது செய்து உள்ளே தள்ளிய OGPU, இவர்களை விசாரணை செய்வது, தீர்ப்பு வழங்குவது என எல்லாவற்றிலும் தனது தீவிரத் தன்மையைத் தொடர்ந்தது. கைதிகளை உடல்ரீதியில் துன்புறுத்துவது, குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்துவது, அவர்களுடைய குடும்பங்களை அழிப்போம் என்று மிரட்டுவது என எல்லா அசிங்கங்களும் நடந்தன.

உண்மையில், குற்றம் சாட்டப்பட்ட ஒருவருடைய குடும்பத்தினர் எல்லோரையும், சின்னக் குழந்தைகளைக்கூடக் கைது செய்து சிறைக்கு அனுப்புகிற, அல்லது நாடு கடத்துகிற வழக்கம் பரவலாக அமலில் இருந்தது. இதனால், கைதானவர்களில் பலர், 'என்னுடைய கதை முடிந்துவிட்டது. மனைவி, பிள்ளைகளாவது கௌரவமாகப் பிழைக்கட்டும்' என்று வேண்டிக்கொண்டு, செய்யாத குற்றத்தைக்கூட ஒப்புக்கொண்டுவிடுவார்கள்.

இந்தக் காலகட்டத்தில் OGPUவால் கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர்மீது, முறைப்படி வழக்குத் தொடரவில்லை. அப்படியே வழக்குப் பதிவாகி, விசாரணை நடந்தாலும், அது மக்கள் முன்னிலையில் பகிரங்கமாக்கப்படாமல், ரகசியமாக நடந்து முடிந்துவிடும். தண்டனை வழங்கப்பட்டுவிடும்.

கடுமையான குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்படுகிறவர்களைத்தவிர, அடுத்த நிலையில் உள்ள பெரும்பாலான குற்றவாளிகளுக்கு, தண்டனை ஒன்றேதான். 'குலக்' (Gulag) எனப்படும் கைதி முகாம்களுக்கு அனுப்பப்படுவார்கள். அங்கே அவர்கள் சொல்கிற வேலைகளையெல்லாம் செய்யத் தயாராக இருக்கவேண்டும்.

'குலக்' என்பது, 'Glavnoe Upravlenie Lagerei' என்ற ரஷ்ய வாக்கியத்தின் சுருக்கம். இதன் பொருள், தலைமை முகாம் நிர்வாகம் (Main Camp Administration). OGPU-வின்கீழ் இயங்கிய, சோவியத் யூனியன்முழுவதும் கைதி முகாம்களை உருவாக்கி, நிர்வகித்த அரசு அமைப்பின் பெயர்தான் இது. காலப்போக்கில் இதுவே முகாம்களைக் குறிக்கும் சொல்லாக மாறிவிட்டது.

1930-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட குலக் அமைப்பு பொதுக் கைதிகளுக்கு, அரசியல் கைதிகளுக்கு, கிரிமினல் குற்றவாளிகளுக்கு, விஞ்ஞானிகள் மற்றும் அறிவியல் அறிஞர்களுக்கு, பெண்களுக்கு, குழந்தைகளுக்கு என தனித்தனி முகாம்களை அமைத்து நடத்திக்கொண்டிருந்தது. இதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருந்தவர், ஜென்ரிக் க்ரிகோரிவிச் யகோடா (Genrikh Grigoryevich Yagoda). முக்கியமான இந்த நபரைப்பற்றிப் பின்னால் விரிவாகப் பேசவிருக்கிறோம்.

யகோடா நிர்வாகத்தின்கீழ், கைதிகளைச் சும்மா அடைத்துவைக்கிற சிறைச்சாலைகளாகமட்டுமின்றி, அவர்களைப் பல்வேறு கட்டுமானப் பணிகள், சுரங்கப் பணிகள் போன்றவற்றுக்குப்

பயன்படுத்திக்கொள்கிற மையங்களாகவும் குலக் முகாம்கள் மாறின. கைதிகளாக இருந்த அறிஞர்கள், விஞ்ஞானிகளைக் கொண்டு, அறிவியல் ஆராய்ச்சிகளும் மும்முரமாக நடந்தன. படிப்பறிவில்லாதவர்கள், கடினமான உடல் உழைப்புக்குத் தயாராகவேண்டியிருந்தது.

குலக் முகாம்களில் இப்படிக் கட்டாய அடிமைகளாகப் பயன் படுத்திக்கொள்ளப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை பல லட்சத்தைத் தாண்டுகிறது. இதன்மூலம், சில நன்மைகளும் இருந்தன. சோவியத் யூனியனின் உள் கட்டமைப்பு வளர்ச்சி, அறிவியல் துறை முன்னேற்றம் போன்றவற்றுக்கு இந்த முகாம்கள் மிகவும் பயன்பட்டிருக்கின்றன.

ஆனால், கைதிகள் / அடிமைகளுக்கெல்லாம் சம்பளம், வேலை வசதிகள், முறையான பணி நேரம், ஓய்வு நேரம், பாதுகாப்பு ஏற்பாடுகள் என்று எவையும் ஒழுங்காகத் தரப்படவில்லை. இதனால், பல மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளைச் சந்தித்தது சோவியத் அரசு.

ஆனால், இதைப்பற்றியெல்லாம் அவர்கள் பெரிதாக எப்போதும் அலட்டிக்கொண்டதில்லை என்பதால், குலக் முகாம்கள் கொடூ ரத்தின் அடையாளங்களாகவே பார்க்கப்பட்டன. அவற்றினுள் நுழைகிறவர்கள், பல சித்திரவதைகள், சிரமங்களைச் சந்திக்க வேண்டியிருப்பதோடு, உயிரோடு மீண்டும் வீடு திரும்புவது நிச்சயமில்லை என்றானது.

இந்தக் காலகட்டத்தில் OGPU-வின் சரமாரியான கைது நடவடிக் கைகள், மரண தண்டனைகள், குலக் முகாம்களின் செயல்பாடு கள் என்று எல்லாமாகச் சேர்ந்து சோவியத் சமூகச் சூழலில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியிருந்தது. இதற்கான முக்கியக் காரணங்கள்:

- காரணமற்ற கைதுகளால் ஏற்படும் மன உளைச்சல்.
- ஒருவர்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்களை அவர் எதிர்த்து வாதிடுவதற்கான வாய்ப்புகள் இல்லை.
- முகாம் / சிறையில் கட்டாய வேலை, கடும் உழைப்பு.
- கைதிகளுக்குப் போதுமான அடிப்படை வசதிகள்கூட செய்து தரப்படவில்லை. ரஷ்யாவின் கடும் குளிரைக்கூட

அவர்கள் வெறும் உடம்பில் தாங்கிக்கொள்ள வேண்டியிருந்தது. இதனால் பலர் உடல்நிலை பாதிக்கப்பட்டார்கள்; மரணமடைந்தார்கள்.

- குலக் முகாம்களுக்கு அனுப்பப்பட்டவர்கள், அதன்பிறகு பல வருஷங்களுக்குத் தங்களது குடும்பத்தாரோடு எந்தவிதமான தொடர்பும் இல்லாமல் தலைமறைவாக வாழ நேரிட்டது.

- சிதையும் குடும்பங்கள்.

- அகால மரணங்கள்.

ஒவ்வொரு குடும்பமாக ஆராய்ந்துபார்த்தால், இதுபோல் இன்னும் ஆயிரக்கணக்கான சம்பவங்களைப் பட்டியலிட முடியும். கையில் குச்சியை வைத்துக்கொண்டு பிள்ளையை மிரட்டி வளர்க்கிற தகப்பனைப்போல, மொத்த சமூகத்தையும் ஒரு நடுக்கத்தோடு வாழும்படி செய்துவிட்டது ஸ்டாலின் அரசும், அவரது OGPU ஆயுதமும்.

மக்களிடையே அளவற்ற பயம், திகிலை உண்டாக்கிய இது மாதிரியான தீவிர நடவடிக்கைகள், யாரும் யாரையும் நம்ப முடியாதபடி தள்ளுகிற தந்திரம் போன்றவற்றைத்தான், ஹிட்லரின் நாஜிப் படைகள் கவனித்து, பின்னர் தங்கள் நாட்டில் யூதர்களுக்கு எதிராகப் பின்பற்றினார்கள் என நாஜிக்களைப்பற்றி ஆய்வு செய்துள்ள வரலாற்றாளர் எட்வர்ட் க்ரான்க்ஷா (Edward Crankshaw) எழுதியுள்ளார்.

இவையெல்லாம் தவறு என்று ஸ்டாலினுக்குப் பிந்தைய சோவியத் அரசுகள் ஒப்புக்கொண்டன. கேஜிபியும், இந்தக் காலகட்டத்தில் தான் எடுத்த நடவடிக்கைகளை இனி எப்போதும் பின்பற்றக்கூடாது. அவற்றிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளவேண்டும் என்று பின்னர் தமது ஊழியர்களுக்குப் பாடம் நடத்தியிருக்கிறது.

ஆனால், இதெல்லாம் தாமதமான, மிகத் தாமதமான நடவடிக்கைகள். OGPU-வைப் பிரமாதமான அரசியல் ஆயுதம் என்று கண்டுகொண்ட ஸ்டாலின், தனது ஆட்சிக் காலத்தில் அதை நல்ல விஷயங்களுக்கு அதிகம் பயன்படுத்தவே இல்லை என்பதுதான் உண்மை. இதனால், சோவியத் சரித்திரத்தில் இந்தக் காலகட்ட

மும், ஸ்டாலினுக்காக OGPU மற்றும் இதர அரசு சார்ந்த அமைப்புகள் நடத்திய தீவிர 'பர்ஜ்' களையெடுப்பு நடவடிக்கைகளும், யாரும் புரட்டிப் பார்க்க விரும்பாத கறுப்புப் பக்கங்களாகவே இருக்கின்றன.

ஸ்டாலின் காலத்தில்தான், OGPU மகா வளர்ச்சியடைந்தது. 1930-ம் ஆண்டில் தொடங்கி பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளில் உளவுப் பணிகளைத் தீவிரப்படுத்தி, பின்னர் பனிப்போரின்போது அதை அமெரிக்காவுக்கும் விரிவுபடுத்தினார்கள். இதனால், பிற முக்கிய தேசங்களின் ராணுவ, அறிவியல், அரசியல் ரகசியங்கள் ஸ்டாலினுக்குத் தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருந்தன.

ஆனால், இந்தத் தகவல்களையெல்லாம், அவர் எப்படிப் பயன்படுத்தினார் என்று கேட்டால், திருப்தி தரும் பதில் கிடைப்பதில்லை. யார் என்ன விவரம் சொன்னாலும், ஆலோசனை கொடுத்தாலும், கடைசியில் அவற்றைக் கொஞ்சமும் கருதாத உணர்ச்சிவயப்பட்ட முடிவுகளை எடுப்பதுதான் ஸ்டாலினின் வழக்கமாக இருந்தது.

இதனால், 'தலைவர்' என்ன கேட்க விரும்புகிறார் என்பதை அறிந்துகொண்டு, அதற்கேற்ற 'ரிப்போர்ட்'களைத் தயார் செய்யும் சந்தர்ப்பவாதிகள் OGPU-வில் அதிகமாகிவிட்டார்கள். இவர்களால் பல தகவல்கள் வடிகட்டப்பட்டன. மற்றவை ஸ்டாலின் சிந்தனைக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டன.

உளவாளிகளின் கதை இப்படியிருக்க, OGPUவினுள் இருந்த மற்ற பாதுகாப்புப் பிரிவுகளும்கூட, ஸ்டாலினின் கற்பனையான பயங்களைப் போக்குவதற்குதான் பெரும்பான்மை நேரத்தை வீணாக்கிக்கொண்டிருந்தார்கள். கட்சிக் கட்டுப்பாடு, சட்ட விதிமுறைகள் என்று எவையும் இல்லாமல், அவர் யாரையெல்லாம் விரோதியாகக் கருதுகிறாரோ, அவர்கள்மீதுதான் OGPU-வின் மொத்த சக்தியும் பாய்ந்தது.

உதாரணமாக, கட்சியில் ஸ்டாலினுக்கு இணையான செல்வாக்கு பெற்றிருந்த ட்ராட்ஸ்கி, வருங்காலத்தில் தனக்குப் போட்டியாக வரக்கூடும் என்று எண்ணிய ஸ்டாலின், OGPU மூலம் ட்ராட்ஸ்கியின் ஆதரவாளர்களைச் சுற்றி வளைத்துக் கைது செய்யத் தொடங்கினார். ட்ராட்ஸ்கியும் கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சொல்லி, நாடு கடத்தப்பட்டார்.

இதையடுத்து, சோவியத் யூனியனிலிருந்த 'ட்ராட்ஸ்கியிஸ்ட் கள்' (Trotskyists) என்று அழைக்கப்பட்ட ட்ராட்ஸ்கியின் தோழர் கள், ஆதரவாளர்கள் பெரிய பிரச்னைகளைச் சந்தித்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் தேடிப் பிடித்து, 'தேச விரோத மாகச் செயல்பட்டதை ஒப்புக்கொள்ளுங்கள்' என்று மிரட்டியது OGPU.

ஆனால் அவர்களோ, 'நாங்கள் கட்சிக்குமட்டுமே கட்டுப்பட்ட வர்கள், இதே கேள்வியை அவர்கள் கேட்டால் பதில் சொல்கி றோம். மற்றபடி கண்ட போலீஸ்காரர்களுக்கும் நாங்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கமுடியாது' என்று பிடிவாதமாக மறுத்து விட்டார்கள்.

இதனால், 'கையாள மிகவும் கடினமான எதிரிகள்' என்று ட்ராட்ஸ்கியிஸ்ட்களைப்பற்றிக் குறிப்பெழுதிய OGPU, அவர் களை வரிசையாக குலக் முகாம்களுக்கு அனுப்பத் தொடங்கி யது. 1940-ம் ஆண்டில், ட்ராட்ஸ்கியும் ரமொன் மெர்கடெர் (Ramon Mercader) என்ற செகிஸ்டால் கொல்லப்பட்டார்.

இப்படி ஸ்டாலின் ஆட்சியால் 'பர்ஜ்' (Purge) செய்யப்பட்டவர்கள், சுமாராக எத்தனை பேர் இருப்பார்கள் என்று அதிகாரப்பூர்வமான கணக்கு எதுவும் இல்லை. ஆனால், ஜனவரி 1935முதல், ஜூன் 1941வரை சுமார் இரண்டு கோடி பேர் கைது செய்யப்பட்டதாகவும், இவர்களில் மூன்றில் ஒரு பங்குப் பேர் கொல்லப்பட்டதாகவும் நம்பப்படுகிறது.

லெனின் தலைமையில் அமைந்த போல்ஷ்விக் அரசில் 15 பேர் இடம்பெற்றிருந்தார்கள், அவர்களுள் இந்த 'பர்ஜ்' கால கட்டத்தைக் கடந்து உயிர் வாழ்ந்தவர், ஸ்டாலின் மட்டும்தான். இதேபோல், கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர், குலக் முகாம்களுக்கு அனுப்பப்பட்டார்கள், அல்லது ரகசிய விசாரணைக்குப்பிறகு கொல்லப்பட்டார்கள்.

இப்படி லட்சக்கணக்கானவர்களைத் தொடர்ந்து 'பர்ஜ்' செய்ய வேண்டியிருந்ததால். யாரைப் பிடிக்கவேண்டும், எப்படித் தேடவேண்டும், அவர்கள் பிடிபட்டபிறகு என்னவெல்லாம் செய்யவேண்டும். மக்களிடையே இதுபற்றி சலசலப்பு ஏற் படாமல் பார்த்துக்கொள்வது எப்படி என்று பல விஷயங்களை உள்ளடக்கி, OGPU ஒரு தனி வழிகாட்டிப் புத்தகமே தயார் செய்திருந்தது.

இந்தச் சூழலின் கொடூரத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால், இந்தக் காலகட்டத்தில் OGPU ஊழியர்கள் பாடிய ஒரு 'வீரப்' பாடலில் இருந்து சில வரிகளைப் பார்த்தாலே போதும்:

'எதிரிகள் புத்திசாலிகள், நாங்கள் அவர்களைவிட புத்திசாலிகள்,

எதிரிகள் பலசாலிகள், நாங்கள் அவர்களைவிட பலசாலிகள்,

சோவியத் மக்கள் எல்லோரும் எங்களுக்கு உதவுகிறார்கள்,

எதிரிகளின் நகங்களை வெட்டி வீழ்த்துவதற்கு,

எதிரிகளின் பல்லை உடைத்து எறிவதற்கு,

எதிரிகளின் கூட்டில் நெருப்பு வைத்து எரிப்பதற்கு!'



# 13. மூன்று தலைவர்கள்

**1934**-ம் ஆண்டில், இரண்டு முக்கியமான மாற்றங்களைச் சந்தித்தது OGPU.

முதலாவதாக, செகா நிறுவனர் ஃபிலிக்ஸுக்குப்பிறகு, OGPU-வின் தலைவர் பதவியை ஏற்றிருந்த வ்யசெஸ்லவ், இந்த வருஷம் மரணமடைந்தார். இதையடுத்து, அவருக்குக் கீழே பணிபுரிந்துகொண்டிருந்த யகோடா, தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

இதே சமயத்தில், OGPUவின் முந்தைய வடிவமான GPUவைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த NKVD என்ற அமைப்புக்கு, இப்போது மீண்டும் அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டன. மேம்படுத்தப்பட்ட இந்தப் புதிய வடிவத்தில் NKVD இயங்கத் தொடங்கியபிறகு, OGPU கலைக்கப்பட்டு, அதற்கு பதிலாக, GUGB என்ற புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது.

அதாவது, 1923-ம் ஆண்டில் NKVD கட்டுப்பாட்டிலிருந்து வெளியே வந்த OGPU, பதினொரு ஆண்டுகளுக்குப்

பிறகு, 1934-ல் GUGB எனும் பெயரில் மீண்டும் அதே NKVD-யின் கட்டுப்பாடில் இயங்கத் தொடங்கியது.

முந்தைய GPU, OGPU-வைப்போலவே, 'GUGB' என்பதும், ரஷ்யப் பெயரொன்றின் சுருங்கிய வடிவம்தான், 'Glavnoe Upravlenie Gosudarstvennoi Bezopasnosti' என்ற இந்தப் பெயரின் பொருள், சோவியத் பாதுகாப்பு மற்றும் உளவுச் சேவை நிறுவனம்.

GUGB-யை உள்ளடக்கிய NKVD அமைப்பின் புதிய தலைவராக, யகோடா பொறுப்பேற்றுக்கொண்டார். இதையடுத்து, அது வரை OGPU-வால் நடத்தப்பட்டுக்கொண்டிருந்த தனி நீதி மன்றங்கள் அனைத்தும் கலைக்கப்பட்டன. சொந்தமாக விசாரணை, வழக்குகள் நடத்தித் தீர்ப்பு வழங்கும் உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டது.

இதைக் கேள்விப்பட்ட மக்கள், OGPUவின் தலையில் குட்டுகிற இந்த முயற்சியை வரவேற்றார்கள். முந்தைய தவறுகளைக் களைந்து NKVD நியாய உணர்வோடு பணியாற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் உண்மையில், பழைய OGPUவுடன் ஒப்பிடுகையில், NKVD மேலும் கொடூரமான ஓர் அமைப்பாகதான் வளர்ந்தது. ஆட்சியாளர் ஸ்டாலின் கட்டளைப்படி, சோவியத் நாடுமுழுதும் ஏராளமான வடிகட்டல்கள், களையெடுப்புகளை முறைப்படி நடத்தி முடித்தவர்கள் இந்த அமைப்பைச் சேர்ந்த செகிஸ்ட்கள் தான்.

இந்தக் காலகட்டத்தில் NKVD-யின் தலைவராகப் பணியாற்றிய யகோடா, நல்ல திறமைசாலி. வ்யசெஸ்லவ் காலத்திலிருந்தே, OGPU-வின் நடவடிக்கைகளில், குறிப்பாக குலக் முகாம்களை நடத்துவதில் முக்கியப் பங்களித்தவர்.

இதனால், வ்யசெஸ்லவ் மரணமடைவதற்குமுன்பே, யகோடா தான் அடுத்த தலைவர் என்பது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது. அப்போதிலிருந்து, இயக்கத்தின் எல்லா நடவடிக்கைகளும், யகோடாவின் அனுமதிப்படியே நடந்துகொண்டிருந்தன.

1934-ல் யகோடா NKVD தலைவரானபிறகு, எல்லா விதங்களிலும் ஆட்சியாளர்களின் மனம் கோணாதபடி நடந்துகொண்டார். குலக் முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளை,

அடிமைப் பணியாளர்களாகப் பல்வேறு கட்டுமானப் பணிகளில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று யோசனை தெரிவித்து, அதை மிகச் சிறப்பாகச் செயல்படுத்திக் காட்டியவர் இவர்தான்.

எனினும், ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் இவரால் ஸ்டாலினைத் திருப்திப்படுத்தமுடியவில்லை. ட்ராட்ஸ்கி ஆதரவாளர்களை ஒடுக்குவதில் யகோடாவுக்குச் சமர்த்து போதாது என்று எண்ணி னார் ஸ்டாலின்.

உண்மையில், யகோடா காலத்தில் அரசுக்கு விரோதமாக இயங்கிய குற்றத்துக்காக, ஏராளமானவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இவர்களில் ட்ராட்ஸ்கி ஆதரவாளர்களும் அடக்கம்.

ஆனால், இப்படிக் கைது செய்யப்பட்டவர்கள் எல்லோரும் அடிமட்டத் தொண்டர்கள் என்பதுதான் ஸ்டாலினுக்குக் கோபம். ட்ராட்ஸ்கியையோ, அல்லது அவருடன் இணைந்து பணியாற்றுகிற முக்கியமான பிரமுகர்களையோ தேடிப் பிடித்து உள்ளே தள்ளுவதில் யகோடா போதுமான கவனம் செலுத்த வில்லை என்று அவருக்குத் தோன்றியது.

இதனால், 1936-ம் ஆண்டு செப்டம்பரில், NKVD தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் யகோடா. அவருக்குப் பதிலாக, நிகோலய் இவனொவிச் யெஜோவ் (Nikolai Ivanovich Yezhov) புதிய தலைவராகப் பொறுப்பேற்றார்.

பின்னர், அடுத்த ஆண்டு (1937 ஏப்ரல்) பல கிரிமினல் குற்றங் களுக்காக யகோடா கைது செய்யப்பட்டார். அவரது ஆதர வாளர்கள் எல்லோரும் வரிசையாகப் பதவியிறக்கம் செய்யப் பட்டு, சிறையில் தள்ளப்பட்டார்கள்.

யகோடாமீது சுமத்தப்பட்டிருந்த குற்றங்களுக்கான விசாரணை, 1938-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்றது. வலதுசாரிகள் மற்றும் ட்ராட்ஸ்கி ஆதரவாளர்களுடன் இணைந்து செயல்பட்ட குற்றத்துக்காக, அவருக்கு மரண தண்டனை விதிப்பதாக முடிவு செய்தது நீதிமன்றம்.

ஒருகாலத்தில், சோவியத் யூனியனின் பலம் மிகுந்த அரசாங்க அமைப்பான NKVD தலைவர் என கம்பீரமாக அமர்ந்திருந்த யகோடா, இப்போது பரிதாபமாக மன்னிப்புக் கேட்டார். 'குலக்

முகாம்களை அமைத்து, நிர்வகிப்பதில் நான் செய்த பணிக்காக வாவது, என்னை மன்னித்துவிடுங்கள்' என்று வேண்டிக்கொண்டார் அவர்.

ஆனால், அவரது இந்தக் கோரிக்கையை நீதிமன்றம் ஏற்கவில்லை. யகோடா குற்றம் செய்தது உண்மை. ஆகவே, அவர் சுடப்படவேண்டும் என்று இறுதித் தீர்ப்பு வழங்கிவிட்டது.

யகோடா மட்டுமில்லை, அவருக்குப்பிறகு NKVD தலைவரான யெஜோவின் ஆதிக்கமும், இப்படிதான் ஒருநாள் திடுதிப்பென்று முடிந்துபோனது.

வெறும் ஐந்தடி உயரம் கொண்ட யெஜோவ், பதவிக்கு வந்ததும் முதல் வேலையாக, யகோடா ஆதரவாளர்கள் பெரும்பாலானோரைத் துரத்தியடித்துவிட்டு, அவர்களுடைய இடங்களில் தன்னுடைய ஆதரவாளர்கள், விசுவாசிகளைக் கொண்டு வந்து நிரப்பினார்.

ஆனால், இப்படி எல்லோரையும் ஒரேயடியாக நீக்கிவிட்டால், புதிதாக வந்தவர்கள் 'தொழில்' பழகுவது எப்படி? இதற்காகச் சிலரைமட்டும் வேலையில் தொடர அனுமதித்த யெஜோவ், அவர்களிடமிருந்து மளமளவென்று விஷயங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்று புதியவர்களுக்கு ஆணையிட்டார்.

இதன்படி, 'பர்ஜ்' நடவடிக்கைகளைத் தொடர்வதில் தொடங்கி, நுணுக்கமான உளவுப் பணிகள்வரை எல்லா விஷயங்களையும் யகோடா காலத்தின் கடைசி அதிகாரிகள் சிலரிடம் கற்றுக் கொண்ட இந்தப் புதியவர்கள், அதன்பிறகு, அவர்களை வெளியே துரத்திவிட்டார்கள், அல்லது மொத்தமாக அழித்து விட்டார்கள்.

சில மாதங்களுக்குப் பிறகு, NKVD, GUGB-யின் உயர்நிலைத் தலைவர்கள் எல்லோரும், யெஜோவ் ஆதரவாளர்களாகதான் இருந்தார்கள். அவர்களுடைய துணையோடு சோவியத் முழுவதும் ரத்த வெள்ளம் ஓடியது. இந்தக் காலகட்டத்துக்கு, 'யஜோவ்ஸ்கினா' அல்லது, 'யஜோவின் காலம்' என்று தனியான ஒரு பெயரே ரஷ்ய மொழியில் உருவாகிவிட்டது.

இதற்குக் காரணம், 1936-ம் ஆண்டிலிருந்து, 'பர்ஜ்' நடவடிக்கைகள் முன்பைவிட அதிக வேகத்துடன் நடைபெறத் தொடங்கியது

தான். 1934-ம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்ற 1,966 பேரில், சுமார் 1,100 பேர் இந்தக் காலகட்டத்தில் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் பெரும்பாலானோர் குலக் சிறைகளிலிருந்து திரும்பவே இல்லை.

ஒருவழியாக இந்தக் களையெடுப்பு நடவடிக்கைகள் அனைத்தும் முடிந்து, சோவியத் யூனியனில் சுமுக நிலை(?) திரும்பிய பிறகு, ஏனோ திடீரென்று ஸ்டாலினுக்கு யெஜோவைப் பிடிக்காமல் போய்விட்டது.

இத்தனைக்கும், ஸ்டாலின் எண்ணத்துக்கு விரோதமாக யெஜோவ் எதையும் செய்துவிடவில்லை. என்றாலும், ரத்த வெள்ளம் ஓடிய அந்தக் காலகட்டத்தின் ஞாபகமாகதான் யெஜோவைப் பார்த்தார் ஸ்டாலின். மக்களுக்கும் அவரைப் பார்க்கிறபோதெல்லாம், பழைய சோகங்கள்தானே நினைவுக்கு வரும் என்று கருதிய அவர், NKVD தலைமைப் பொறுப்புக்கு, யெஜோவுக்கு பதிலாக வேறொருவரை நியமிப்பதாக முடிவு செய்தார்.

இதன்படி, திடீரென்று ஒருநாள், அடையாளமே இல்லாமல் மறைந்துபோய்விட்டார் யெஜோவ். அதன்பிறகு, அவரைப் பற்றிய எந்தக் குறிப்போ, தகவலோ வெளிவந்துவிடாதபடி ரகசியம் காத்தது NKVD. ரொம்ப வற்புறுத்தினால், 'யகோடா, யெஜோவ் எல்லோரும் மோசமான துரோகிகள், கிரிமினல்கள்' என்று அலட்டிக்கொள்ளாமல் வருணித்தார்கள்.

வ்யசெஸ்லவ் OGPU தலைவராக இருந்தபோது, அவருக்குக் கீழே ஒரு யகோடாவை உருவாக்கியதுபோல, யெஜோவ் காலத்திலேயே, NKVDயின் வருங்காலத் தலைவரையும் தயார் செய்துவைத்திருந்தார் ஸ்டாலின்.

அவர் பெயர் லவ்ரென்டிய் பாவ்லோவிச் பெரியா (Lavrentiy Pavlovich Beria). ஜார்ஜியா பகுதியைச் சேர்ந்த கட்டுக்கோப்பான, மத நம்பிக்கை உள்ள விவசாயக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர். இளம் வயதிலேயே மார்க்சிஸக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கட்சியில் சேர்ந்தவர்.

1920-ம் ஆண்டு செகாவில் இணைந்த பெரியா, அடுத்தடுத்து ஜார்ஜியா பகுதி GPU, OGPU அமைப்புகளிலும், போல்ஷ்விக் கட்சியிலும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெறத் தொடங்கினார்.

இந்தக் காலகட்டத்தில்தான், சோவியத் சூழலில் ஸ்டாலின் மிகப் பெரிய தலைவராக உருவாகிக்கொண்டிருந்தார். அவரும் ஜார்ஜியாக்காரர் என்கிற 'சொந்த ஊர்'ப் பாசத்தாலோ என்னவோ, அப்போதிலிருந்தே பெரியாவுக்கு ஸ்டாலின்மீது மிகுந்த ஈர்ப்பு உண்டாகிவிட்டது.

ஸ்டாலினும் பெரியாவும் தனிப்பட்டமுறையில் தோழமை கொள்வதற்குப் பல ஆண்டுகள் முன்பாகவே, போல்ஷ்விக் மேடைகளில் ஸ்டாலினை ஆதரித்துப் பேசத் தொடங்கியிருந்தார் பெரியா. குறிப்பாக, ரஷ்யப் புரட்சியில் ஸ்டாலினின் பங்கை விவரிக்கிற பெரியாவின் உணர்ச்சிமயமான பேச்சுகள், மிகவும் புகழ்பெற்றவை. பின்னர் இந்தப் பேச்சுகள் புத்தக வடிவிலும் வெளியாகிப் பிரபலமாயின.

1926-ல் ஜார்ஜியா மாகாண GPU தலைவரான பெரியாவுக்கு, முதன்முறையாக ஸ்டாலினுடன் நெருங்கிப் பழகுகிற வாய்ப்புக் கிடைத்தது. அடுத்த சில ஆண்டுகளுக்குள், ஸ்டாலினின் நம்பிக்கைக்குரிய உள்வட்டத் தோழர்களில் ஒருவராகிவிட்டார் பெரியா.

சோவியத் நாடுமுழுதும் ஸ்டாலினின் 'பர்ஜ்' நடவடிக்கைகள் மும்முரமாகச் செயல்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தபோது, ஜார்ஜியா பகுதியில் அதன் முக்கியப் பொறுப்பாளர் பெரியாதான். இந்தக் காலகட்டத்தில் அவருடைய சுறுசுறுப்பான செயல்பாடுகளைப் பார்த்துத் திருப்தியடைந்த ஸ்டாலின், பெரியாவுக்கு இன்னும் முக்கியமான பொறுப்புகளைத் தர விரும்பினார்.

இதன்படி, 1938-ம் ஆண்டு, பெரியாவை மாஸ்கோவுக்கு வரவழைத்தார் ஸ்டாலின். அங்கே யெஜோவ் பொறுப்பிலிருந்த NKVD அமைப்பின் உதவித் தலைவர் பதவி அவருக்காகக் காத்திருந்தது.

யெஜோவ்மீது ஸ்டாலினுக்கு மெலிதான வெறுப்பு பரவத் தொடங்கியிருந்த காலகட்டம் அது. இதை உணர்ந்த பெரியா, முதலில் GUGB. பின்னர் NKVD என இரு அமைப்புகளிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்த ஆரம்பித்தார்.

பெரியா மாஸ்கோவுக்கு வந்து ஒரே ஆண்டுக்குள், GUGBயின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். அதன்பின்னர், யெஜோவுக்குப்பிறகு NKVD-யின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

NKVD அமைப்பு பெரியாவின் முழுக் கட்டுப்பாட்டுக்கு வந்த பிறகு, 1941-ம் ஆண்டில் அதிலிருந்து பாதுகாப்புப் பிரிவை மட்டும் தனியே பிரித்தெடுத்து, 'NKGB' என்ற புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. மாநிலப் பாதுகாப்புக்கான மக்கள் இயக்கம் என்று பொருள்படும் இந்தப் பிரிவின் தலைவராக, பெரியாவின் உதவியாளர் மெர்குலொவ் (V N Merkulov) பொறுப்பேற்றார்.

இந்தப் புதிய பிரிவின் ஆயுள், நெடுநாள் நீடிக்கவில்லை. அதே ஆண்டு (1941) ஜூன் மாதத்தில் ஜெர்மனி சோவியத் யூனியனைத் தாக்கியது. இதையடுத்து, NKGB மற்றும் NKVD இரண்டும் மறுபடி ஒருங்கிணைக்கப்பட்டன. தலைவராக பெரியா, துணைத் தலைவராக மெர்குலொவ் தொடர்ந்தார்கள்.

இரண்டாம் உலகப்போரின்போது, NKVD-யை மிகச் சிறப்பாக வழிநடத்தினார் பெரியா. ரஷ்யப் படைகளில் ஊடுருவியிருக்கக் கூடிய அன்னிய உளவாளிகளைக் கண்டறிந்து களையெடுக்கும் பொறுப்பு, அவரிடம் வழங்கப்பட்டிருந்தது. இன்னொருபக்கம் பிற நாடுகளின்மீதான உளவுப் பணிகளும் மும்முரமாக நடந்துகொண்டிருந்தன.

தாவது, சோவியத் யூனியனால் மற்ற நாடுகளின் ரகசியங்களைச் சுலபமாக அறிந்துகொள்ளமுடிந்தது. ஆனால் அதேசமயம், மற்றவர்கள் அவர்களிடமிருந்து ஒரு சிறிய துரும்பைக்கூட எடுத்துக்கொண்டுபோக முடியவில்லை. இந்தச் சாமர்த்தி யத்தைப் பலர் ஆச்சரியத்தோடு பார்த்துப் பாராட்டினார்கள். அவர்களுள் முக்கியமானவர் அடால்ஃப் ஹிட்லர்.

1942-ம் ஆண்டு மே மாதம் 17-ம் தேதி, தன்னுடைய நாஜிப் படையினரிடையே உரையாற்றிய ஹிட்லர், 'ரஷ்ய ராணு வத்தைப்பற்றி நமக்கு ஒன்றுமே தெரிவதில்லை. அவர்களுடைய பணியிடங்களில் நம்மால் ஊடுருவ முடியவில்லை. காரணம், அவர்கள் நாட்டில் ஏகப்பட்ட பாதுகாப்புக் கெடுபிடிகள். அவர் கள், தங்கள் நாட்டை ஓர் இரும்புக் கோட்டையாக வைத்திருக்கி றார்கள். ஆனால், உளவின் மூலம் நமது எண்ணங்களைத் தெரிந்துகொள்கிறார்கள்' என்று பாராட்டி, ரஷ்யாவின் உளவுத் திறனுக்குத் தலை வணங்குவதாகச் சொல்லியிருக்கிறார்.

இந்தக் காலகட்டத்தில் ரஷ்ய உளவுத்துறையும் ராணுவமும் பெற்ற பல வெற்றிகளுக்கு, பெரியாவின் பங்கு மிக முக்கியம்

ஆனது. இதற்குச் சாட்சியமாக, போருக்குப்பிறகு அவர் வாங்கிக் குவித்த விருதுகளின் பட்டியலைப் பார்த்தாலே போதும்.

NKVD-யில் மட்டுமின்றி, கம்யூனிஸ்ட் கட்சியிலும் முக்கியத் தலைவராக வளர்ந்திருந்தார் பெரியா. 1939-ல் பொலிட்ப்யூரோ (Politburo) உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட அவர், 1946-ல் முழு உறுப்பினர் அந்தஸ்து பெற்றார். இந்த கௌரவத்தைப் பெற்ற செகிஸ்ட்கள் மிகச் சிலர்தான்.

இப்படி பெரியா மிகப் பிரபலமாக வளர்ந்துகொண்டிருந்த சமயத்தில், அவர் சார்ந்திருந்த NKVD-யும் படிப்படியாகப் பல மாற்றங்களைச் சந்தித்தது.

1943 ஏப்ரலில், NKVD-யிலிருந்து ஸ்மெர்ஷ் (Smersh) என்ற உளவு அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. உலகப்போரில் பங்கு பெறும் ரஷ்ய ராணுவத்தில் துரோகிகள், அன்னிய உளவாளிகள் யாரேனும் உண்டா என்று துப்பறிவதற்காக அமைக்கப்பட்ட ஸ்மெர்ஷ், தனது தாய் அமைப்பான NKVD அதிகாரிகளையே உளவு பார்த்த சம்பவங்களும் உண்டு.

தாங்கள் கண்டறிந்த தகவல்களை ஸ்டாலினுக்கு நேரடியாக அனுப்பிக்கொண்டிருந்த ஸ்மெர்ஷ், சுமார் மூன்று ஆண்டுகள் மிகச் சிறப்பாக இயங்கியது. NKVD-யின் வெளிநாட்டுப் பிரிவான INO, இதனை நன்கு பயன்படுத்திக்கொண்டது.

1946-ம் ஆண்டு மார்ச் மாதத்தில், பெரியா கட்டுப்பாட்டிலிருந்த NKVD இன்னொரு புதிய அவதாரம் எடுத்தது. இதன் பெயர் MGB. அதாவது, தேசப் பாதுகாப்புக்கான சோவியத் அமைச்சகம்.

இப்படி MGB என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, இயங்க ஆரம்பித்தபிறகு, ஒரு சின்ன குழப்பம் நேர்ந்தது. இதற்குக் காரணம், சோவியத் யூனியனில் GRU என்ற வேறொரு ராணுவ அமைப்பும், கிட்டத்தட்ட MGB போன்ற பணிகளையே செய்து கொண்டிருந்ததுதான்.

லெனின் காலத்தில் தொடங்கப்பட்ட 'GRU'வின் முழுப் பெயர், 'Glavnoe Razvedyvatel'noe Upravlenie'. இதன் பொருள், மத்திய உளவு இயக்கம். 1918-ம் ஆண்டுமுதல் ரஷ்ய ராணுவத்துடன் இணைந்து செயல்பட்டுவந்த 'சீனியர்' அமைப்பு இது.

இவர்களிடையே நீடிக்கும் குழப்பத்தை உணர்ந்த போல்ஷ்விக் அரசு, ஒரே வேலையை வெவ்வேறு உளவு நிறுவனங்கள் செய்து கொண்டிருப்பதைவிட, இவற்றை ஒருங்கிணைத்தால் அதிகப் பலன் கிடைக்கும் என்று எண்ணியது.

இந்த முடிவுக்கு, வேறொரு காரணமும் உண்டு. 1947 ஜூலையில், கிட்டத்தட்ட இதே நோக்கத்துடன் தனது உளவு அமைப்புகளை அமெரிக்கா இணைத்து, சிஐஏ (CIA - Central Intelligence Agency) என்று அதற்குப் பெயர் சூட்டியிருந்தது.

அமெரிக்காவின் உளவு நிறுவனங்கள் ஒன்றாகச் சேர்ந்து இயங்கும் சூழலில், நாம் இப்படிப் பிரிந்து கிடந்தால், அதனால் எதிரிதான் சுலபமாகப் பலனடைவான் என்று முடிவு செய்த அரசு, MGB மற்றும் GRUவின் உளவுப் பிரிவுகளை இணைத்து, KI என்ற புதிய அமைப்பைத் தோற்றுவித்தது.

KI என்ற இந்த அமைப்பைச் சிந்தித்து, உருவாக்கியவர்களில் முக்கியமானவர், அப்போதைய வெளியுறவு அமைச்சரான வ்யசெஸ்லவ் மொலொடொவ் (Vyacheslav Molotov). உளவுப் பணிகளை ஒருங்கிணைப்பதோடு, சில அரசியல் காரணங்களுக்காகவும், இப்படி ஓர் அமைப்பு அவசியப்பட்டது என எண்ணினார் அவர்.

அமைச்சரின் எண்ணம் உயர்வானதுதான். ஆனால், அதை யதார்த்தத்தில் செயல்படுத்துவது அத்தனை சுலபமாக இல்லை. காரணம், MGB-யும் GRU-வும் ஒருவரையொருவர் போட்டியாளர்களாகக் கருதிக்கொண்டு எலியும் பூனையுமாக முறைத்துக் கொண்டு நின்றதுதான்.

இதனால் ஏகப்பட்ட நிர்வாகக் குளறுபடிகள் ஏற்பட்டன. எத்தனையோ பேர் பலவிதமாக முயன்றும்கூட, MGB, GRU ஏஜெண்ட்களிடையே சுமூக உறவை ஏற்படுத்தமுடியவில்லை.

ஆகவே, இது சரிப்படாது என 1948-ம் ஆண்டில் GRU மீண்டும் பாதுகாப்பு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டுக்குத் திரும்பியது. அதன்பிறகு MGB-யுடனான அவர்களுடைய தனிப்பட்ட விரோதம் நிரந்தரமாக நீடித்தது.

GRU பிரிந்தபிறகும், KI சில ஆண்டுகளுக்குத் தொடர்ந்தது, 1951-ம் ஆண்டில் கலைக்கப்பட்டது.

இதனிடையே, NKVD தலைவர் பெரியா, தனது முக்கிய ஆயுதமான உளவுப் பிரிவை இழந்ததில் சற்றே வருத்தத்துடன் இருந்தார். மீண்டும் பழையபடி சகல அதிகாரங்களையும் ஒருங்கிணைத்து 'மகா தலைவராக' உட்கார்ந்துகொள்வதற்கான நேரத்தை எதிர்நோக்கியிருந்தார் அவர்.

1953-ம் ஆண்டு ஜனவரி 13-ம் தேதி, கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வ இதழான ப்ரவ்தா (Pravda), பரபரப்பான ஒரு சதித் திட்டத்தைச் செய்தியாக வெளியிட்டது. 'டாக்டர்ஸ் ப்ளாட்' (Doctors' Plot) என்று அழைக்கப்பட்ட இந்தத் திட்டம், யூத இனத்தைச் சேர்ந்த சில மருத்துவர்கள், சோவியத் யூனியனின் முக்கியத் தலைவர்களை விஷம் கொடுத்துக் கொல்ல முயன்றதாகக் குற்றம் சாட்டியது.

இந்தச் செய்தி வெளியானதும், பெரியாவின் எதிர்ப்பாளர்கள் செம குஷியாகிவிட்டார்கள். நாட்டில் இப்படி ஒரு பெரிய சதித் திட்டம் நடந்திருக்கிறது; நடந்துகொண்டிருக்கிறது. அதை கவனிக்காமல் NKVD நிதானமாகப் பல் குத்திக்கொண்டிருக்கிறது என்று விமரிசனங்கள் எழுந்தன. உடனடியாக பெரியாவைப் பதவி நீக்கம் செய்தாகவேண்டும் என்று பரவலாகப் பேசப்பட்டது.

ப்ரவ்தாவில் வெளியான தகால் உண்மையா, பொய்யா என்று உறுதியாவதற்குள், இதுபற்றிய உபவதந்திகள் ஏராளமாகப் பரவத் தொடங்கிவிட்டன. வழக்கம்போல் மேற்கத்திய நாடுகள் இணைந்து தீட்டிய சதித் திட்டம் இது. மொத்த சோவியத் யூனியனுக்கும் விஷம் கொடுத்துக் கொன்றுவிட்டு, நாட்டைத் துண்டம் போட்டு எடுத்துக்கொள்ளப்போகிறார்கள். இதில் உள்ளூர்க்காரர்கள் பலருக்குத் தொடர்பு உண்டு என்றெல்லாம் 'டாக்டர்ஸ் ப்ளாட்'க்குக் கண், காது, மூக்கு வைக்கப்பட்டது.

இதையெல்லாம் கேள்விப்பட்ட பொதுமக்களுக்கு, பெரியா பதவியில் இருக்கிறாரா, அல்லது கீழே விழுகிறாரா என்பதில் ஆர்வமே இல்லை. புதிய சதித் திட்டத்தை ஒடுக்குகிறோம் பேர்வழி என்று சோவியத் யூனியனில் இன்னொரு பெரிய 'பர்ஜ்' தொடங்கிவிடுமோ என்பதுதான் அவர்களுடைய பயமாக இருந்தது.

இந்தப் புதிருக்கு விடை கிடைப்பதற்குள், வேறொரு பெரிய சம்பவம் நேர்ந்துவிட்டது. 1953 மார்ச் 5-ம் தேதி, சோவியத் அதிபர் ஸ்டாலின் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, ஸ்டாலினின் நம்பிக்கைக்குரிய அதிகாரியாகவும், அந்தக் காலகட்டத்தில் செல்வாக்கு மிகுந்த கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவராகவும் இருந்த பெரியா, உதவிப் பிரதமராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பதவிக்கு வந்ததும், பெரியா செய்த முதல் வேலை, MGB மற்றும் MVD என்ற இரண்டு அமைப்புகளை ஒன்றாக இணைத்து, மேம்பட்ட MVD-யை உருவாக்கி, அதன் தலைவராக உட்கார்ந்ததுதான்.

'MVD' என்றால், ரஷ்ய மொழியில் 'சோவியத் வெளி விவகார அமைச்சகம்' என்று அர்த்தம். அநேகமாக செகாவில் தொடங்கி, MGB வரை பல்வேறு ரஷ்ய நிறுவனங்கள் செய்துகொண்டிருந்த அனைத்துப் பணிகளும், இப்போது MVD-யின் கட்டுப்பாட்டில் வந்திருந்தன.

ஏகப்பட்ட அதிகாரங்களுடன் MVD-யின் தலைவராகத் தன்னை அறிவித்துக்கொண்ட பெரியா, வரிசையாகப் பல சீர்திருத்தங்களைச் செயல்படுத்தத் தொடங்கினார், அரசியல் கைதிகளை விடுதலை செய்தார். இதையெல்லாம் உணர்ச்சிமயமாகப் பேசி, மக்களிடையே நல்ல பெயர் வாங்க முயன்றார்.

பெரியாவின் இந்த நடவடிக்கைகளையெல்லாம் பார்க்கும்போது, மற்ற அதிகாரிகள், தலைவர்களுக்கு ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்தது. தன்னை ஒரு சிறந்த நிர்வாகியாகவும், மக்கள் தலைவராகவும் முன்னிறுத்திக்கொள்ள விரும்புகிறார் அவர்.

ஒருவேளை, சோவியத் ஆட்சியைக் கைப்பற்றுகிற யோசனையும் அவருக்கு இருக்கிறதோ என்று பயந்த மற்றவர்கள், பெரியாவைக் கொஞ்சம் அடக்கிவைப்பது நல்லது என்று தீர்மானித்தார்கள்.

அவர்களுடைய பயத்தில் நியாயம் உண்டு. அந்தக் காலத்தில், கம்யூனிஸ்ட் கட்சி, அரசாங்கத்தையே பயமுறுத்தக்கூடிய அளவுக்கு அதன் செகிஸ்ட்கள் வளர்ந்திருந்தார்கள். ராணுவம் உள்பட, எல்லா அமைப்புகளையும்விட ஒரு படி மேலாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தது MVD.

ஆகவே, ஸ்டாலினும் இப்போது உயிரோடு இல்லாத சூழ்நிலையில், பெரியா நினைத்தால் தனக்கென்று ஒரு கோஷ்டியைச்

சேர்த்துக்கொண்டு, வன்முறையைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடித்துவிடுவது சாத்தியம்தான் என்று அவருடைய எதிர் கோஷ்டியினர் நினைத்தார்கள்.

அவர்கள் முன்பு வீசிய 'டாக்டர்ஸ் ப்ளாட்' ஆயுதம், பொய் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டதால், பெரியாவை எதுவும் செய்ய முடியவில்லை. ஆகவே, இந்தமுறை நேரடியாகத் தாக்கத் தீர்மானித்தார்கள்.

1953 ஜூன் மாதத்தில், பெரியாவின் பதவி பறிக்கப்பட்டது. தேச விரோதக் குற்றங்களுக்காக அவர் கைது செய்யப்பட்டார். அவருடைய ஆதரவாளர்கள் எல்லோரையும் சுற்றி வளைத்து உள்ளே தள்ளினார்கள்.

ஒரே நாளில், பெரியாவின் அதிகாரம் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால், அவர் கைது செய்யப்பட்ட விஷயம் வெளியே தெரிந்தால், பெரிய பரபரப்பாகிவிடும் என்று பயந்த மற்ற தலைவர்கள், பல நாள்களுக்கு இந்தச் செய்தியை மக்களுக்கு அறிவிக்கவே இல்லை.

இத்தனைக்கும், அவர்மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் எவையும் சாதாரணமானவை அல்ல - கட்சிக்கும் சோவியத் யூனியனுக்கும் எதிரான கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. அன்னிய சக்திகளோடு இணைந்துகொண்டு, மீண்டும் முதலாளித்துவ ஆட்சியை நிறுவ முயன்றது என எல்லாமே வலுவான குற்றச்சாட்டுகள்தான். இவைதவிர, பல பெண்களைப் பாலியல் வன்முறை செய்ததாகவும் பெரியாமீது நிரூபிக்கப் படாத ஒரு குற்றச்சாட்டு உண்டு.

பெரியாவை விசாரிப்பதற்காக, சிறப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டது. அதில் நடந்த வழக்கு விசாரணையின் முடிவில், கட்சியைவிட MVD-யைப் பெரிதாக வளர்க்க முயன்றது. அரசு ஒழுங்குமுறைகளைப் பின்பற்றாமல் தன்னிச்சையாகச் செயல்பட்டது. பிரிட்டன் உளவாளியாக இயங்கியது போன்ற குற்றங்களுக்காக, அவருக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டது.

இதையடுத்து, பெரியா கொல்லப்பட்டார். அவரது மனைவி, மகன் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். NKVD-யின் முதல் இரு தலைவர்களான யகோடா, யெஜொவ்போலவே, பெரியாவின் சகாப்தமும் அசந்தர்ப்பமாக முடித்துவைக்கப்பட்டது.

பெரியாவுக்குப்பிறகு MVD தலைமைப் பொறுப்பை ஏற்ற க்ருக்லொவ் (S N Kruglov) தொடங்கி, பின்னர் வந்த எல்லா அதிகாரிகள், பொறுப்பாளர்களுக்கும் யகோடா, யெஜோவ், பெரியா ஆகிய முப்பெரும் தலைவர்களின் கதை ஒரு முக்கிய மான முன்னுதாரணமாக இருந்தது.

கட்சியும் அரசாங்கமும்தான் முக்கியம். அதற்குமேல் ஓர் அமைப்பை யாரேனும் வளர முயன்றால், அவர்களும் சரி, அந்த அமைப்பும் சரி, ஒடுக்கப்படுவது சர்வ நிச்சயம் - மூன்று தலைவர் களை இழந்து, செகிஸ்ட்கள் கற்றுக்கொண்ட பாடம் இதுதான்.

இந்த விதிப்படி, *1954*-ம் ஆண்டு, MVD-யின் பல் பிடுங்கப்பட்டது.



# 14. கடைசிப் பெயர்

தன்னுடைய பதவிக் காலத்தின்போது, MVD-க்கு ஏகப்பட்ட அதிகாரங்களைக் கொண்டுவந்து குவித்தவர் பெரியா. இந்தப் பழக்கமே, பின்னர் அவருக்கு எமனாகவும் முடிந்தது.

பெரியாவைப் பதவி நீக்கம் செய்த வர்கள், அவரைச் சிறைக்கு அனுப்பிய கையோடு, MVD-யின் அதிகார வரம்பு களைக் கட்டுப்படுத்தத் தொடங்கினார் கள். நீதி அமைப்பு, உள்நாட்டுப் பாது காப்பு, எல்லைப் பாதுகாப்பு, கைதி முகாம்களின் கட்டுப்பாடு, நெடுஞ் சாலைப் பராமரிப்பு என, MVD வச மிருந்த பணிகள் படிப்படியாகக் குறைக் கப்பட்டன. உரிமைகள் பிடுங்கப் பட்டன.

கடைசியாக, MVD என்று ஒரு தனி அமைச்சகமே தேவையில்லை என முடிவு செய்துவிட்டது சோவியத் அரசு. இதையடுத்து, அதன் பொறுப்பிலிருந்த காவல்துறை மற்றும் சட்டம் ஒழுங்கு அமைப்புகள் ஒருபக்கம், உள்நாட்டு,

வெளிநாட்டுப் பாதுகாப்பு விவகாரங்களை கவனித்துக்கொள் ளும் அமைப்பு இன்னொரு பக்கம் எனத் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டது.

இவற்றுள், **1954**-ம் ஆண்டு மார்ச் 13-ம் தேதி தொடங்கப்பட்ட பாதுகாப்புப் பிரிவுக்கு, KGB எனப் பெயர் சூட்டப்பட்டது. இந்தப் பெயரின் முழு வடிவம், 'Komitet Gosudarstvennoi Bezopasnosti'. ரஷ்ய மொழியில் இதன் பொருள், சோவியத் பாதுகாப்பு மற்றும் உளவுச் சேவை நிறுவனம்.

1917-ல் தொடங்கப்பட்ட செகா, அதன்பிறகு GPU, OGPU, GUGB, NKGB, MGB, KI, MVD என வரிசையாகப் பல வடிவங்களை எடுத்துவிட்டு, கடைசியாக KGB என்ற பெயரில் நிலைபெற்றது. பின்னர், 1978-ல் இந்தப் பெயரை 'சோவியத் யூனியன் கேஜிபி' என்று சற்றே நீட்டி முழக்கினார்கள்/ அப்போதிலிருந்து, சுமார் நாற்பது வருஷங்களுக்கு இந்தப் பெயரை மாற்றவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

இதனால்தான், செகாவில் தொடங்கி, கேஜிபி வரையிலான எல்லா அமைப்புகளும், 'கேஜிபி' என்ற பிரபலமான பொதுப் பெயராலேயே அறியப்படுகின்றன - இந்த அமைப்புகள் அனைத் தின் ஊழியர்களும் 'செகிஸ்ட்கள்' என்று பொதுவாக அழைக்கப் பட்டதைப்போல.

கேஜிபி தொடங்கப்பட்ட காலகட்டத்தில், அதன் முந்தைய வடிவமான MVD-யின் அதிகாரங்களைக் குறைக்கிற எண்ணம் தான் ஆட்சியாளர்களுடைய மனத்தில் முக்கியமாக இருந்தது. ஆகவே, முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு, கேஜிபி அமைப்பு கம்யூனிஸ்ட் கட்சியின் கடுமையான கட்டுப்பாடு களுக்கு உட்பட்டு இயங்கவேண்டியதாயிற்று.

1954-ம் ஆண்டு, கேஜிபியின் முதல் தலைவராகப் பொறுப் பேற்றவர் இவான் அலெக்ஸாண்ட்ரோவிச் செரொாவ் (Ivan Aleksandrovich Serov). இதற்குமுன் MVD துணைத் தலைவராக இயங்கிக்கொண்டிருந்தவர் இவர்.

செரொவின் செகா வாழ்க்கையில், ஸ்டாலின் காலத்து அடக்கு முறைகளில் முக்கியப் பங்காற்றியவர் என்ற கறும்புள்ளி உண்டு. என்றாலும், பெரியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை முன் னின்று நடத்தியவர் என்பதால், அதற்குப் பரிசாக கேஜிபி தலைவர் பதவி அவருக்கு வழங்கப்பட்டது.

கேஜிபியின் தலைவராக செரோவ் பொறுப்பேற்றபின்னர், பெரியா காலத்துத் தவறுகள் எதையும் திருப்பிச் செய்துவிடாமல் மிகவும் கவனமாகச் செயல்பட்டார். அப்போது கேஜிபியிடம் அதிக அளவு அதிகாரங்களும் இல்லை என்பதால், பெரிதாக எந்தப் பிரச்னையும் எழவில்லை.

செரோவ் சந்தித்த முதல் சவால், 1956-ம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் நடைபெற்ற ஹங்கேரிப் புரட்சி - ஹங்கேரியில் அப்போது சோவியத் அரசுக்கு எதிராக, ஆயிரக்கணக்கான புரட்சியாளர்கள் திரண்டிருந்தார்கள். அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு கேஜிபியின் உதவி தேவைப்பட்டது.

இதுபற்றிக் கேள்விப்பட்டதும், தானே நேரில் கிளம்பி ஹங்கேரி சென்ற செரோவ், புரட்சியாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளைச் சிறப்பாகத் திட்டமிட்டு வழிநடத்தினார். இதன்மூலம், ஹங்கேரிப் புரட்சி ஒடுக்கப்பட்டது.

ஆனால், இதற்காக ஹங்கேரியப் புரட்சியாளர்கள்மீது கேஜிபி உள்ளிட்ட சோவியத் துருப்புகள் செலுத்திய அடக்குமுறைகளின் தீவிரம், உலக அளவில் பெரிய அதிர்வுகளை உண்டாக்கியது.

காரணம், என்னதான் புரட்சியாளர்கள் அரசுக்கு எதிராகத் தவறுகளைச் செய்திருந்தாலும், 'மக்களின் ஆட்சி' என்று வருணிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அரசு, தன்னுடைய சொந்த மக்களை இப்படிக் கடும் நடவடிக்கைகளின்மூலம் ஒடுக்கிய விதம், பலரை திடுக்கிடச் செய்தது. இந்தக் கறும்புள்ளி, கேஜிபியின் மீதும் அழுத்தமாக விழுந்தது.

உண்மையில், ஸ்டாலினுக்குபிறகு பதவிக்கு வந்த சோவியத் ஆட்சியாளர்கள், இதுபோன்ற அடக்குமுறை நடவடிக்கைகளைக் குறைத்துக்கொண்டிருந்தார்கள். சிறு எதிர்ப்பாளர்களின் மீதும் விழுந்து பிடுங்குகிற போக்கு வெகுவாகக் குறைந்திருந்தது. எதிர்க் கருத்துகள் வரவேற்கப்பட்டன. உண்மையான ஜனநாயகத்துக்கான அறிகுறிகள் தென்பட்டுக்கொண்டிருந்தன. இதன் ஓர் அடையாளமாக, குல முகாம்களில் அடைக்கப்பட்டிருந்த பல கைதிகள், விடுதலை செய்யப்பட்டார்கள்.

என்றாலும், அமெரிக்கா, சோவியத் இடையே பனிப்போர் தீவிரமடைந்திருந்த இந்தச் சூழலில், ரஷ்யாவில் நடக்கும் சின்னச் சின்ன விஷயங்கள்கூட, மேற்கத்திய ஊடகங்களால் பூதாகர

மாக்கிப் பேசப்பட்டன. இதனால், கேஜிபிக்குத் தொடர்ந்து எதிர் மறை வெளிச்சம்தான் கிடைத்துக்கொண்டிருந்தது.

1958-ம் ஆண்டு, கேஜிபியின் புதிய தலைவராக அலெக்ஸாண்டர் ஷெலெபின் (Aleksandr Shelepin) பொறுப்பேற்றார். அதிபர் நிகிதா குருச்சேவ் (Nikita Khrushchev) எண்ணப்படி, கேஜிபி பொறுப்புகள், உள்கட்டமைப்பு, வழிமுறைகளில் பல குறிப்பிடத்தக்க மாற்றங் களைச் செய்தவர் இவர்.

கேஜிபியைப்பொருத்தவரை, குருச்சேவ் செய்த இரு மிக முக்கியமான மாற்றங்கள் - ஸ்டாலின் காலத்துத் 'தீவிர' நட வடிக்கைகள் பலவற்றைத் தடுத்து நிறுத்தியதும், 'இதுபோன்ற சில விஷயங்களில் நாங்கள் தவறு செய்துவிட்டோம்' என்று வெளிப்படையாக ஒப்புக்கொண்டதும்தான்.

வெறுமனே தவறைச் சொல்லி மன்னிப்புக் கேட்பதோடு நிறுத்தி விடாமல், வருங்காலத்தில் இதுபோன்ற நடவடிக்கைகள் எவை யும் தலைகாட்டிவிடாதபடி நிரந்தரமாகத் தடுக்கவேண்டும் என்று விரும்பினார் குருச்சேவ். இதற்கான ஏற்பாடுகள் முடுக்கி விடப்பட்டன.

இதன்படி, ஷெலெபின் தலைவராகப் பொறுப்பேற்றதும், ஸ்டா லின் காலத்து அதிகாரிகள் பலர் நீக்கப்பட்டார்கள். அவர்களுக்கு பதிலாகத் துடிப்பான இளைஞர்கள் பலர் முக்கியப் பொறுப்பு களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததால், கேஜிபியில் சூடான இள ரத்தம் பாய்ந்தாற்போலிருந்தது.

'கேஜிபி, கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சோவியத் மக்களுக்கும் உண்மையாக நடந்துகொள்கிறது' என்று பெருமையோடு குறிப் பிட்ட அதன் தலைவர் ஷெலெபின், தனது அதிரடிச் சீர்திருத்தங் களால் கொஞ்சம்கொஞ்சமாகக் கட்சியிலும் முக்கியத்துவம் பெறத் தொடங்கினார்.

விடுவார்களா? சில ஆண்டுகளுக்குப்பிறகு, ஷெலெபின் ஓரங் கட்டப்பட்டு, 1961-ம் ஆண்டில் புதிய கேஜிபி தலைவராக, விளாடிமிர் செமிசாஸ்ட்னி (Vladimir Semichastny) என்பவர் நியமிக்கப்பட்டார்.

இந்தக் காலகட்டத்தில், சோவியத் மற்றும் வெளிநாட்டு ஊடகங் கள் அனைத்திலும், கேஜிபிபற்றித் தவறான, எதிர்மறையான

தகவல்களே அதிகம் பரவியிருக்கின்றன என்பதை உணர்ந்திருந்த செமிசாஸ்ட்னி, இந்த 'இமேஜ்' வளையத்தை உடைத்து, கேஜிபிக்கு நல்ல பெயர் வாங்கித்தருவதற்குத் தன்னால் இயன்ற முயற்சிகளைச் செய்யத் தொடங்கினார்.

இதற்காக, கேஜிபியின் பணிகளைப்பற்றியும், அதில் காத்திருக்கும் சுவாரசியமான சவால்களைப் பற்றியும் விரிவான தகவல்களைக் கொடுத்து, பத்திரிகைகளில் அவற்றைச் சிறப்பான முறையில் வெளியிடச் செய்தார் செமிசாஸ்ட்னி, இதன்மூலம், கேஜிபியில் இணைந்து பணிபுரிய விரும்பும் சோவியத் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

இதேபோல், முன்பு எப்போதோ (அதாவது, ஸ்டாலின் காலத்தில்) மக்களிடம் அத்துமீறி நடந்துகொண்ட செகிஸ்ட்கள் சிலர் இருந்திருக்கலாம். அவர்களில் யாரும் இப்போது கேஜிபியில் இல்லை என்கிற செய்தியையும் மக்கள் மனத்தில் அழுத்தமாகப் பதிக்க முயன்றார் செமிசாஸ்ட்னி.

இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக அவர் கேஜிபிக்கு 'நல்ல பிள்ளை' இமேஜ் உண்டாக்கிக்கொண்டிருக்கையில், சோவியத் அதிபர் நிகிதா குருச்சேவ் பதவியிலிருந்து இறக்கப்பட்டார். இதையடுத்து, சீர்திருத்தங்கள் பெட்டிக்குள் வைத்துப் பூட்டப்பட்டன. பழையபடி எதிர்ப்பாளர்களை அடக்கி ஒடுக்கும் வியாதி சோவியத் யூனியனைப் பற்றிக்கொண்டது.

குருச்சேவைப் பதவியிறக்கம் செய்ததில் கேஜிபியின் முன்னாள், இன்னாள் அதிகாரிகளின் பங்கு முக்கியமானதாக இருந்தது. புதிய அதிபராக லியோனிட் ப்ரெஜ்னொவ் (Leonid Brezhnev) தேர்ந்தெடுக்கப்பட்டபிறகு, குருச்சேவைத் தொடர்ந்து தீவிரக் கண்காணிப்பில் வைத்திருந்தது கேஜிபி.

லியோனிட் ப்ரெஜ்னொவ் ஆட்சி அமைந்ததிலிருந்து, அரசின் எதிரிகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கும் முயற்சிகளில் முழு கவனம் செலுத்தத் தொடங்கியது கேஜிபி. புரட்சியாளர்களைத் தேடிப் பிடித்துக் கைது செய்வதில் தொடங்கி, போலி ஆவணங்களை உருவாக்குவது, உற(ள)வாடிக் கெடுப்பது, புரட்சி இயக்கங்களின் தலைவர்களைப்பற்றித் தவறான தகவல்களைப் பரப்புவது என ஏகப்பட்ட வழிமுறைகள் இதற்குப் பயன்படுத்தப்பட்டன.

அதன்பிறகு, எண்பதுகளில் மிகைய்ல் கோர்பசேவ் ஆட்சி அமையும்வரை, சோவியத் யூனியனில் அரசுக்கு எதிரான பேச்சு கள், கருத்து வேறுபாடுகள் என எவையும் அனுமதிக்கப்பட வில்லை.

குருச்சேவ் அரசு கவிழ்க்கப்பட்டபிறகு, 1967-ம் ஆண்டு கேஜிபி யின் தலைவரானவர் யூரி வ்ளாடிமிரோவிச் ஆன்ட்ரொபொவ் (Yuri Vladimirovich Andropov). கேஜிபியின் சரித்திரத்திலேயே மிக அதிகமாக, பதினைந்து ஆண்டுகள் தலைவராகப் பணியாற்றி னார் இவர்.

இந்தப் பதினைந்து ஆண்டுகளும், கேஜிபியின் சரித்திரத்தில் மிகவும் முக்கியமானவை. ஐம்பதுகளின் மத்தியில், அமைச்சகம் என்ற நிலையிலிருந்து, ஒரு சாதாரண அரசு கமிஷனாகச் சுருக்கப் பட்ட கேஜிபி, இவரது காலத்தில்தான், படிப்படியாகத் தனது முக்கியத்துவத்தை மீண்டும் அதிகரித்துக்கொண்டது.

எந்த அளவுக்கு? கேஜிபியின் தலைவர், சோவியத் யூனியனுக்கே அதிபராகப் பொறுப்பேற்கிற அளவுக்கு!

1982-ம் ஆண்டு, கேஜிபியின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிய யூரி ஆன்ட்ரபொவ், சோவியத் யூனியன் அதிபராகப் பொறுப்பேற்றார். இந்த கௌரவத்தைப் பெற்ற முதல் செகிஸ்ட் இவர்தான்.

கேஜிபி தலைவராவதற்குமுன், பல்வேறு அரசுப் பொறுப்பு களில் பணியாற்றியிருந்த ஆன்ட்ரபொவ், 1956-ல் நடைபெற்ற புரட்சியின்போது, ஹங்கேரியில் தூதராக இருந்தவர், அந்தப் புரட்சியை சோவியத் அரசு சிறப்பானமுறையில் ஒடுக்குவதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர் இவர்.

இதுபோன்ற சில நடவடிக்கைகளின்மூலம், ஆட்சியிலும் கம்யூ னிஸ்ட் கட்சியிலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ந்திருந்த ஆன்ட்ரபொவ், கேஜிபி தலைவராக அறிவிக்கப்பட்டபோது, பலருக்கு ஆச்சரியம். இவருக்கும் கேஜிபிக்கும் என்ன சம்பந்தம்? இவரால் கேஜிபியில் என்ன செய்துவிடமுடியும் என்று பெரும் பாலானோர் சந்தேகப்பட்டார்கள்.

ஆனால், ஆன்ட்ரபொவ் தலைமையில்தான் கேஜிபி நவீன மயமானது. அதுவரை உளவுபார்ப்பதற்கு மனித சக்தியை

மட்டுமே நம்பியிருந்த கேஜிபி, முதன்முறையாக எலக்ட்ரானிக் சாதனங்கள், செயற்கைக் கோள்களையெல்லாம் பயன்படுத்தத் தொடங்கியது.

இதேபோல், அரசின் எதிர்ப்பாளர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதிலும் கவனமாக இருந்தார் ஆன்ட்ரபொவ். இதன்மூலம், அன்னியர்களை உளவறிதல், உள்ளூரில் தவறு செய்தவர்களைக் கண்டுபிடித்துத் தண்டித்தல் என இரு நிலைகளிலும் சிறப்பாகச் செயல்பட்டு, உலகின் முதல் நிலை உளவு நிறுவனமாகப் புகழ்பெற்றது கேஜிபி.

ஆனால், உள்ளூரில் கேஜிபிக்கு மரியாதை கூடவில்லை. மாறாக, அதன்மீது பயத்தோடுதான் பெரும்பாலான ரஷ்யக் குடிமக்கள் உலவினார்கள். அக்கம்பக்கத்தில் உள்ளவர்களோடு பேசுவதற்கு பயம், பழகுவதற்கு பயம், யாரிடம் எதைச் சொன்னாலும், அது எப்படியோ கேஜிபிக்குத் தெரிந்துவிடும் என்கிற நம்பிக்கை உறுதியாக வேரூன்றிவிட்டதால், பார்க்கிறவர்கள் எல்லோரும் கேஜிபி உளவாளிகளாக இருப்பார்களோ என்று சந்தேகப்பட்டார்கள் மக்கள்.

இதற்கேற்ப, அரசாங்க அலுவலகங்களில் தொடங்கி, ராணுவப் பிரிவுகள்வரை கேஜிபியின் உளவாளிகள் எங்கும் இருந்தார்கள். எதிலும் இருந்தார்கள், அடிக்கடி சந்தித்துப் பேசுகிற நண்பர்களிலிருந்து, சோவியத் மண்ணில் இருக்கும் வெளிநாட்டவர்கள் வரை எல்லோருடைய நடவடிக்கைகளும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டன.

ஆன்ட்ரபொவ் தலைவராக இயங்கிய காலகட்டத்தில்தான், உலகம்முழுவதும் மிகச் சிறந்த உளவாளிகள் நெட்வொர்க்கை ஏற்படுத்திப் பல நாடுகளின் ரகசியங்களை அறியத் தொடங்கியது கேஜிபி. சுவாரசியமான இந்த உளவுக் கதைகளைப்பற்றிப் பின்னால் விரிவாகப் பேசவிருக்கிறோம்.

எப்போதுமே, மற்றவர்களின் ரகசியங்களை நன்றாகத் தெரிந்துகொண்டவர்களுக்கு, தங்களுடைய ரகசியங்களும் இதுபோல் திருடுபோய்விடுமோ என்கிற பயம் சற்று அதிகமாகவே இருக்கும். இந்தப் பொதுவிதியிலிருந்து, சோவியத் யூனியனும் தப்பவில்லை - உலகம் முழுவதும் உளவுக் கொடி நாட்டிக் கொண்டிருந்த கேஜிபி, தன்னுடைய சொந்த மண்ணில், தகவல் திருட்டு

கள் எதுவும் நடந்துவிடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இயங்கத் தொடங்கியிருந்தது.

இதற்காக, வெளிநாடுகளிலிருந்து இங்கே வந்து தங்கியிருக்கும் அன்னியர்கள் எல்லோரையும் கேஜிபி ஏஜெண்ட்கள் கவனமாகப் பின்தொடர்ந்தார்கள். உள்ளூர்க்காரர்கள் யாரேனும் அவர்க ளோடு சகஜமாகப் பேசினால், பழகினால் போச்சு. மொத்தமாக 'உளவாளி' முத்திரை குத்திவிடுவார்கள்.

ரஷ்யர்கள் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பது தொடங்கி, அலுவலகப் பதவி உயர்வு, வெளிநாடு செல்வதற்கான விசா என்று எல்லாவற்றுக்குமான விண்ணப்பப் படிவங்களில், ஒரு கேள்வி தவறாமல் இடம்பெற்றிருந்தது - 'வெளிநாடுகளைச் சேர்ந்த நண்பர்கள் / உறவினர்கள் யாரேனும் உங்களுக்கு உண்டா?'

இந்தக் கேள்விக்கு, 'ஆம்' என்று பதில் அளித்தால், சம்பந்தப் பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்படுவது உறுதி. அந்த அளவுக்கு, வெளிநாட்டவர்களோடு தொடர்புடைய ரஷ்யர்கள் அவஸ்தை அனுபவித்தார்கள்.

சோவியத் யூனியன் அதிபர் லியோனிட் ப்ரெஜ்னொவ், கேஜிபி தலைவர் யூரி ஆன்ட்ரபொவ் இருவரும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான எண்ணங்களுடன் இணைந்து பணியாற்றிய கால கட்டம் இது. கேஜிபி உறுப்பினர்கள், தலைவர்களின் ஆதிக்கம் கம்யூனிஸ்ட் கட்சியிலும் மெல்லப் பரவத் தொடங்கியிருந்தது.

1982-ம் ஆண்டு ப்ரெஜ்னொவ் மரணமடைந்தபோது, புதிய அதிபராக யூரி ஆன்ட்ரபொவ் தேர்வு செய்யப்பட்டார். அவருக்குப்பதிலாக, கேஜிபி தலைவராகப் பொறுப்பேற்றவர் வ்ளாடிமிர் அலெக்ஸாண்ட்ரோவிச் க்ரொயுச்கொவ் (Vladimir Alexandrovich Kryuchkov).

ஆன்ட்ரபொவைப்போலவே, க்ரொயுச்கொவும் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்தான். 1967-ல் கேஜிபியில் இணைந்து, 1978-ல் துணைத் தலைவர், 1982-ல் தலைவர் என படிப்படியாக உயர்ந் தவர். 1991-ம் ஆண்டில், சோவியத் யூனியன் என்கிற மகா கூட் டமைப்பைத் துண்டுதுண்டாக உடைத்துச் சிதறுகாய் போட்டவர் களுள் இவரும் ஒருவர்!



# 15. உளவு, ஊடுருவல்

செகாவில் தொடங்கி, ஏதோ வேண்டுதல்போல் ஐந்தாறு ஆண்டுகளுக்கு ஒருமுறை பெயர் மாற்றிக்கொண்டிருந்த கேஜிபியின்மீது, பிற உலக நாடுகளுக்கு எந்தவிதமான அச்சமோ, தயக்கமோ ஏற்படவே இல்லை.

காரணம், சோவியத் யூனியன் எனும் கம்யூனிசக் கூட்டமைப்பு, தங்களுக்குள் சுபிட்சமாக வாழ விரும்புகிறவர்கள், மற்றவர்களை எப்போதும் தொல்லைப்படுத்தமாட்டார்கள் என்கிற பிம்பம்தான் வெளியே பரவியிருந்தது. அது பெருமளவு உண்மைதான். ஆனால், தங்களை மற்றவர்கள் ஏதேனும் செய்துவிடுவார்களோ என்ற பயத்தால், அவர்கள் உலகத்தின் எல்லா நாடுகளையும் உளவு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஆரம்பத்தில், இப்படி ஊடுருவுவது அவர்களுக்கு மிகவும் சுலபமாக இருந்தது. மற்ற நாட்டு உளவுத்துறையினர் விழித்துக் கொள்வதற்குள், மளமளவென்று தங்களுடைய உளவாளிகளின் நெட்வொர்க்கைக் கட்டியெழுப்பிவிட்டார்கள்.

இப்படி அதிகாரபூர்வமாகவும், அப்படியில்லாமலும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட உளவாளிகள், அந்தந்த நாடுகளின் அரசியல், ராணுவ, அறிவியல் நடவடிக்கைகளைப்பற்றிய தகவல்கள், உள்நாட்டுப் பிரச்னைகளின் விவரங்கள், முக்கியமான ஆவணங்கள், புகைப்படங்கள், வரைபடங்கள் எனச் சேகரித்து மாஸ்கோவுக்குத் தொடர்ந்து அனுப்பினார்கள்.

இதைப் புரிந்துகொண்ட வெளிநாடுகள், கொஞ்சம் சுதாரித்துக் கொண்டார்கள். அதன்பிறகு, தங்களுடைய எல்லைக்குள் வருகிற ரஷ்யர்கள் எல்லோரையும் சந்தேகக் கண்களோடு பார்க்கத் தொடங்கினார்கள். ஆனால், இதற்கெல்லாம் அசராத படி கேஜிபி ஏஜெண்ட்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கப் பட்டிருந்தது.

கேஜிபி தன்னுடைய ஏஜெண்ட்களைத் தேர்ந்தெடுக்கும் விதம், அவர்களுக்கு அளிக்கும் பயிற்சிகள் என எல்லாமே மிகவும் ரகசியமாக நடந்தது. ஒருவரை வேலைக்குச் சேர்க்குமுன், அவர்களுக்கு ரகசியத் தேர்வுகள், அவர்களுடைய பின்னணியைப்பற்றி விசாரித்து, ஒற்றறிந்து தெரிந்துகொள்வது என வெகு கவனமாகச் செயல்பட்டார்கள்.

இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விரிவான பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. முந்தைய கேஜிபி அதிகாரிகள், உளவாளிகளின் வீரக் கதைகள் அவர்களுக்கு உணர்ச்சிமயமாகச் சொல்லித்தரப்பட்டன. பிரமாதமான சம்பளம், சவுகரியங்கள் என்று குறையில்லாமல் ஏற்பாடு செய்திருந்தாலும்கூட, ஊழியர்களைக் கொள்கை ரீதியில், உள்மனத்தளவில் வெல்லவேண்டும். வெறும் கட்டாயத்தால் அல்ல என்பது கேஜிபி பயிற்சியாளர்களின் நோக்கமாக இருந்தது.

அடுத்து, சம்பந்தப்பட்ட ஊழியர் எந்தப் பிரிவில் வேலை செய்யப்போகிறார் என்பதைப்பொறுத்து, அதற்கேற்ற சிறப்புப் பயிற்சிகள் தொடங்கும். இதற்கு உதாரணமாக, கீழ்கண்ட பயிற்சிகளைச் சொல்லலாம்:

1. தாக்குதல், பிற நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடும் ஏஜெண்ட்களுக்கான பயிற்சிகள்.
2. ரகசிய உளவாளிகளுக்கான (உள்நாடு / வெளிநாடு) பயிற்சிகள்.

3. எதிரிக் குழுக்களிடையே தவறான தகவல்களைப் பரப்பு வதற்கான பயிற்சிகள்.

4. தனி நபர்களைப் பின்தொடர்ந்து ஆராயும் பயிற்சிகள்.

5. கண்காணிப்புப் பயிற்சிகள்.

6. பத்திரிகையாளர் போர்வையில் பணிபுரிவதற்கான பயிற்சி கள்.

இந்தப் பயிற்சிகளுக்கெல்லாம் ரகசிய வழிகாட்டிகள் தயாரிக்கப் பட்டிருந்தன. அவற்றை எழுதப்படாத சட்டங்களாக மதித்துப் பின்பற்றியே, ஒவ்வொரு புதிய கேஜிபி ஊழியரும் உருவாக்கப் பட்டார்.

அடுத்து, அவர்கள் எந்த நாடு அல்லது பகுதிக்குச் செல்கிறார் களோ, அங்கே உள்ளவர்கள் இவர்கள்மீது கொஞ்சமும் சந்தேகம் கொள்ளாதபடி, பிசிறில்லாத ஒரு 'முன்கதை'யைத் தயாரிக்கும் கேஜிபி. இதை உறுதிப்படுத்துவதற்கான போலி ஆவணங்கள் எல்லாவற்றையும் உருவாக்கியபிறகுதான், விமானத்துக்கோ கப்பலுக்கோ டிக்கெட் எடுப்பார்கள்.

சுருக்கமாகச் சொன்னால், சமர்த்து போதாத கத்துக்குட்டிகளைச் சேர்ப்பதில்லை. விஷயங்களை முழுமையாகச் சொல்லித்தரா மல், கச்சிதமாகத் திட்டமிடாமல் அவர்களை வெளியே அனுப்புவதில்லை என்ற இரு விஷயங்களில் மிகத் தெளிவாக இருந்தது கேஜிபி.

இதனால், உலக அளவில் மற்ற உளவுத்துறைகளோடு ஒப்பிடு கையில், எல்லாக் காலகட்டங்களிலும் கேஜிபியின் கை கொஞ்சம் ஓங்கியே இருந்தது. கேஜிபி உளவாளிகள் யாரேனும் தட்டுப்படுகிறார்களா என்று வருகிறவர்கள் போகிறவர்களை எல்லாம் கண்ணில் விளக்கெண்ணை விட்டுக்கொண்டு தேடிய வர்கள், தங்களுடைய காலடிக்குக் கீழேயே சில கேஜிபி ஏஜெண்ட்கள் ஊடுருவியிருப்பதை மிகவும் தாமதமாகதான் கண்டுகொண்டார்கள்.

கேஜிபி உளவுத்துறையின் உச்சத்தில், அதனால் ஊடுருவப்படாத நாடு என்று பெரிதாக எதுவும் இல்லை. இதனை, தொண்ணூறு களின் இறுதியில் வெளியான 'மிட்ரோகின் ஆவணங்கள்' உறுதிப்படுத்தின.

முதல் அத்தியாயத்தில் நாம் சந்தித்த மிட்ரோகின், கேஜிபியின் வெளிநாட்டு உளவுப் பிரிவு ரகசியங்களைப் பிரதியெடுத்து, மிகுந்த சிரமங்களுக்கிடையில் வெளியே கொண்டுவந்தபோது, அதைக் கேள்விப்பட்டு அசடு வழியாத நாடுகள் மிகக் குறைவு. தங்களுடைய ரகசியங்களை கேஜிபி 'சுட்டு'விட்டதே என்கிற சங்கடத்தைவிட, எப்படியெல்லாம் அதன் உளவாளிகள் தங்களிடையே சாமர்த்தியமாக ஊடுருவியிருந்தார்கள் என்கிற தகவல்தான் அவர்களுக்கு அதிக ஆச்சரியம் அளித்தது.

உதாரணமாக, மிட்ரோகின் ஆவணங்கள் வெளியானபோது, மெலிடா நார்வுட் (Melita Norwood) என்ற 87 வயதுப் பாட்டி, கேஜிபியின் பிரிட்டன் உளவாளி என்பது தெரியவந்தது. தோட்டத்தில் ஆப்பிள் வளர்த்து, சொந்தமாக ஜாம் தயாரித்துக் கொண்டிருந்த அவரை, உளவாளியாக யாராலும் கற்பனைகூட செய்யமுடியாது.

ஆனால், இதற்குமுன் பிரிட்டனில் அணுகுண்டு ஆய்வு செய்து கொண்டிருந்த நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்த அவர், கிட்டத்தட்ட நாற்பது வருஷங்களுக்கு இதுபற்றிய தகவல்களைத் தொடர்ந்து கடத்திவந்திருக்கிறார். மிட்ரோகின் புத்தகம் வெளியான பிறகுதான், இதனை அவர் வெளிப்படையாக ஒப்புக் கொண்டார்.

இதேபோல், அமெரிக்கா தயாரித்த அணுகுண்டும், கேஜிபியின் கழுகுப் பார்வையிலிருந்து தப்பவில்லை. மிக நுணுக்கமாகத் திட்டமிட்டு அனுப்பிய சில ஏஜெண்ட்களின்மூலம், அமெரிக்காவின் முதலாவது யுரேனியம் / புளூட்டோனியம் குண்டுகளைப் பற்றிய எல்லா ஆய்வு விவரங்களும் சோவியத் யூனியனுக்கு உடனடியாகக் கிடைத்துவிட்டன.

இதன்மூலம், அவர்களால் தங்களுடைய அணுகுண்டுத் தயாரிப்பை விரைவுபடுத்த முடிந்தது. 1945-ம் ஆண்டு அமெரிக்கா அணுகுண்டு வெடித்தபிறகு, அடுத்த நான்கே வருஷங்களில், 1949-ம் ஆண்டு சோவியத் குண்டு வெடித்துவிட்டது! உளவுத் துறையின் சாகசமல்லாமல், இத்தனை விரைவாக இதைச் செய்திருக்கமுடியாது.

இப்படி அறிவியல் துறையில் கேஜிபியின் உளவுகள் நல்ல பலனளித்தன. ஆனால், அரசியல் மற்றும் ராணுவத் துறைகளில், அவர்களுடைய சாமர்த்தியம் அவ்வளவாகப் பயன்படவில்லை.

இதற்குக் காரணம், வேறு எந்த உளவுத்துறையும் கற்பனைகூட செய்யமுடியாத அளவுக்கு கேஜிபியிடம் தகவல்கள் வந்து குவிந்தன. ஆனால், இவற்றைச் சரியானமுறையில் ஆராய்ந்து பார்த்து, பொருத்தமான முடிவுகளை எடுக்கும் திறன் அவர்களிடம் குறைவுதான்.

தவிர, ஸ்டாலின் காலத்தில் தொடங்கி, 'தலைவர்' எவரோ, அவர் விரும்பும் தகவல்களைமட்டும் நாம் தெரிவித்தால் போதும் என்கிற மனோபாவம் கேஜிபி செகிஸ்ட்களிடையே பரவலாகி விட்டது. ஒருவேளை அவர்களுக்குப் பிடிக்காத தகவல்களைத் தருகிறவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்கிற பயம் பெரும்பாலானோரிடம் இருந்தது. இதனால், முக்கியமான பல விவரங்கள், பெரும்தலைவர்களின் பார்வைக்குச் செல்லவே இல்லை.

இப்படிச் சில குறைகள் இருந்தபோதும், உளவு சார்ந்த பணிகளில் கேஜிபியின் அபாரமான சாதனைகளை யாராலும் மறுக்க முடியாது. மிகச் சில தருணங்களைத்தவிர, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தங்களைச் சுற்றியுள்ளவர்கள், முக்கிய எதிரிகள், போட்டியாளர்கள் என்ன நினைக்கிறார்கள், அடுத்து என்ன செய்யப்போகிறார்கள் என்கிற விவரங்கள் சோவியத் யூனியனுக்கு முன்கூட்டியே தெரிந்துவிட்டது.

இதற்கு ஏராளமான உதாரணங்களை மிட்ரோகின் ஆவணங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அமெரிக்காவின் FBI மற்றும் CIA என்ற முக்கியமான பாதுகாப்பு நிறுவனங்கள் இரண்டிலும், கேஜிபி உளவாளிகள் உயர்மட்டங்களில் ஊடுருவியிருந்தார்கள். இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து நபர் படை ஏராளமான ரகசியங்களைக் கொண்டுவந்து கொட்டியது. மேற்கு ஜெர்மனியில் கேஜிபி ஊடுருவியது, இந்தியாவில் இந்திரா காந்தி ஆட்சியின்போது நடந்த 'மெகா' ஊடுருவல்கள் என திடுக்கிடும் தகவல்களை வரிசையாக அடுக்குகின்றன மிட்ரோகின் ஆவணங்கள்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிறிஸ்டோபர் ஆண்ட்ரூ (Christopher Andrew) என்பவரால் தொகுக்கப்பட்டு, மிட்ரோகின் ஆவணங்கள் வெளியானபோது உலகம்முழுவதும் பலத்த அதிர்ச்சி, ஆச்சரியம். இப்படி ஓர் அசாதாரணமான உளவு நிறுவனமா? மிட்ரோகின் பிரதியெடுத்த தகவல்களே இப்படி இரண்டு தலையணை சைஸ் புத்தகங்களாக வெளியாகியிருக்

கிறது என்றால், இன்னும் கேஜிபியிடம் ஒளிந்திருக்கிற, அல்லது அழிக்கப்பட்டுவிட்ட ஆவணங்கள் என்னென்ன இருக்குமோ என்று எல்லோரும் பேசிப்பேசி மாய்ந்துபோனார்கள்.

மிட்ரோகின் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகவல்கள் எந்த அளவு உண்மையானவை, அவற்றை முழுமையாக நம்பலாமா என்கிற விஷயங்களில் இந்தியா உள்பட பல நாடுகள் மாற்றுக் கருத்து கொண்டிருக்கின்றன. எனினும், கேஜிபியின் வெளிநாட்டு உளவு நடவடிக்கைகள் எந்த அளவு வெற்றியடைந்திருந்தன என்பதற்கான ஓர் ஆதார ஆவணமாகவே இந்நூல்கள் மதிக்கப்படுகின்றன.

தங்களது ரகசிய நடவடிக்கைகளில் மிகவும் பெருமை கொண்டிருந்த கேஜிபி, தங்களைப்பற்றி இப்படி ஒரு புத்தகம் எழுதப்படமுடியாது என்று உறுதியாக நம்பியது. அவர்களுடைய கெட்ட நேரம், முக்கியமான ரகசியக் குறிப்புகள் அனைத்தையும் வாசிக்கும் வாய்ப்பு கிடைத்த மிட்ரோகின், அவற்றைப் பதிவு செய்துவைக்கத் தீர்மானித்திருந்தார்.

ஒருவேளை, *1991*-ல் சோவியத் யூனியன் உடைந்து பிரிந்திருக்காவிட்டால், மிட்ரோகினுடைய இந்தக் குறிப்புகள் வெளிவராமலே மறைந்திருக்கும். அந்தச் சிதறலுக்குப்பிறகு, பிரிட்டனுக்குக் குடிபெயர்ந்தார் மிட்ரோகின், ஆறு பெரிய பெட்டிகளில் நிரப்பப்பட்டிருந்த அவருடைய ரகசியக் குறிப்புகள் அனைத்தையும், பிரிட்டிஷ் உளவுத்துறையினர் கடத்தி, ரஷ்யாவுக்கு வெளியே கொண்டுவந்தார்கள்.

'மிட்ரோகின் ஆவணங்கள்' நூல் இரு பாகங்களாக வெளியான பிறகுதான், அதுவரை மிகப் பெரிய 'கறுப்பு'ப் பெட்டியாக மட்டுமே தெரிந்துகொண்டிருந்த கேஜிபியின் நடவடிக்கைகளைப் பற்றிய ஓர் உத்தேசமான பார்வையாவது சோவியத் யூனியனுக்கு வெளியே கிடைத்தது. அந்தவிதத்தில் இது ஒரு மிக முக்கியமான சரித்திர ஆவணம்!

முற்றிலும் தனி நபர் முயற்சியான இந்நூல்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய பாராட்டு, அமெரிக்கப் பாதுகாப்பு நிறுவனம் FBI-யிடமிருந்து வந்தது. 'சரித்திரத்தில் இதுவரை கிடைத்துள்ள உளவுக் குறிப்புகளிலேயே மிக விரிவானது, மிக முழுமையானது!'

பன்னிரண்டு ஆண்டுகள் இடைவெளியில்லாமல் தினந்தோறும் உட்கார்ந்து எழுதி, அப்படி என்னதான் பதிவு செய்திருக்கிறார் மிட்ரோகின்? தயக்கத்துடன் உள்ளே நுழைந்து பார்த்தால், க்ரைம், திகில் நாவல்களையெல்லாம் ஊதித் தூக்கியெறிந்து விடக்கூடிய சாகசக் கதைகள் (அல்லது, உண்மைகள்) கட்டுக் கட்டாக விரிகின்றன.



# 16. உள்ளங்கையில் உலகம்

அநேகமாக சோவியத் அரசியல் சூழலைத் தொடர்ந்து கவனித்துப் பார்த்தால், வெறும் முக்கால் நூற்றாண்டு காலத்துக் குள், உள்ளூரில் கேஜிபி அமைப்பின் பெயர், அதன் தலைவர்கள், அரசியல் பயன்பாடுகள் என்று எல்லாமே அடுத் தடுத்து பந்தாடப்பட்டுக்கொண்டிருந்தா லும், அதன் வெளிநாட்டுச் செயல்பாடு கள்மட்டும் தொடர்ந்து எந்தப் பிசிறும் இல்லாமல் இயங்கிக்கொண்டிருந்தன.

இதற்கு முக்கியக் காரணம், செகாவின் 'INO' பிரிவு தொடங்கப்பட்ட காலத்தி லிருந்து, அதனால் தேர்ந்தெடுக்கப் பட்ட சிறந்த உளவாளிகளில் பெரும் பாலானோர், வெளிநாட்டு உளவுப் பணிகளில்தான் அதிக கவனம் செலுத்திக்கொண்டிருந்தார்கள்.

சோவியத் யூனியனுக்குள் கேஜிபிக்குப் பரவலான அதிகாரம் உண்டு. ரகசிய மாகக் கண்டறியமுடியாத விஷயங் களைக்கூட, பகிரங்கமாக அதிகா ரத்தைச் செலுத்திப் பிடித்துவிடலாம்.

ஆனால், வெளிநாடுகளில் அப்படி ஆதிக்கம் செலுத்தமுடியாதே. இதனால்தான், அங்கே திறமைசாலி உளவாளிகளைமட்டுமே நம்பியிருக்கவேண்டிய கட்டாயம் கேஜிபிக்கு இருந்தது.

தங்களது 'பெஸ்ட்' உளவாளிகளையெல்லாம் பொட்டலம் கட்டி வெளிநாடுகளுக்கு அனுப்பும் பழக்கம் கேஜிபிக்கு இப்படி வந்ததுதான். இப்படி அனுப்பப்பட்டவர்களுக்கு, அவர்களு டைய வயது, அனுபவம், திறமையைப் பொறுத்து இருவிதமான பொறுப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

1. வெளிநாட்டு ரகசியங்களை, சோவியத் யூனியனுக்கு எதிரான நடவடிக்கைகளை உளவறிவது.

2. அதிகார மட்டத்தில் உள்ளவர்களை விலைக்கு வாங்கி, சோவியத் உளவாளிகளாக மாற்றுவது.

உலக வரைபடத்திலிருக்கிற ஒவ்வொரு நாட்டிலும் சோவியத் உளவு நெட்வொர்க் பரவியது இப்படிதான். திறமைசாலியான ஒரு நபரைப் பிடித்து, அவருக்குச் சந்தேகமில்லாத ஒரு முன் கதையைச் சிருஷ்டித்து அனுப்பிவிட்டால் போதும், மிச்சத்தை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

கேஜிபியின் எளிமையான இந்தத் திட்டம், அநேகமாக எல்லா நாடுகளிலும் மிகக் கச்சிதமாக நிறைவேறியது. ஒருகட்டத்தில், இப்படி ஏராளமான வெளிநாட்டு உளவாளிகளிடமிருந்து வந்து குவியும் தகவல்களையெல்லாம் ஒழுங்காகச் சேகரித்துத் தொகுக்கக்கூட முடியாமல், மாஸ்கோ கேஜிபி திணறவேண்டிய தாயிற்று.

இத்தனை தகவல்களை வைத்துக்கொண்டு, சோவியத் ஆட்சி யாளர்கள் என்ன செய்தார்கள் என்பது தனிக்கதை. ஆனால், எல்லாக் காலகட்டங்களிலும், எல்லா அரசாங்கங்களைப் பற்றிய மான தகவல்களை கேஜிபி தன்னால் முடிந்தவரை சிறப்பாகத் திரட்டிக் கொடுத்துக்கொண்டிருந்தது உண்மை.

இப்படி சோவியத் யூனியனுக்காக உளவுப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அயல்நாட்டு 'ஏஜெண்ட்'களின் தகவல்கள் பரம ரகசியமாக வைக்கப்பட்டிருந்தாலும், அவர்களுடைய ரகசியப் பெயர்களைப் (Code Names) பயன்படுத்தி, சுவாரசியமான கதைகள், வீரச் சம்பவங்கள் உலவிக்கொண்டிருந்தன. சிறந்த

உளவாளிகளைக் கதாநாயகர்களாகச் சித்திரித்துக் கொண்டாடு வதன் மூலம், சோவியத் இளைஞர்களை இதுபோன்ற பணி களுக்கு ஈர்க்கமுடியும் என்று நம்பியது கேஜிபி.

உதாரணமாக, 'கேம்பிரிட்ஜ் ஐவர்' (Cambridge Five) என்று பிரபல மாக அறியப்படும் சோவியத் உளவுக் குழு ஒன்று, பிரிட்டன் மண்ணில் உருவாகி, அவர்களுடைய பல ரகசியங்களை சோவி யத் யூனியனுக்குக் கொண்டுவந்தது.

ஐந்து இளைஞர்களைக் கொண்ட இந்தக் குழுவில், யாருமே சோவியத் யூனியனைச் சேர்ந்தவர்கள் இல்லை. ஆனால், கேஜிபி யின் உளவு சரித்திரத்தில், மிக முக்கியமான ஓர் இடம் இவர் களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

இங்கிலாந்தைச் சேர்ந்த யாரோ ஐந்து இளைஞர்கள், இப்படி சோவியத் யூனியனுக்கு விசுவாசமாக இயங்கவேண்டிய அவ சியம் என்ன?

இங்கேதான் கேஜிபியின் ராஜ தந்திரம் பளிச்சிடுகிறது. இங்கி லாந்தில் இப்படி ஓர் உளவுப் படையை அமைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன், அர்னால்ட் டாய்ச் (Arnold Deutsch) என்பவரைத் தேர்ந்தெடுத்து, லண்டனுக்கு அனுப்பிவைத்தார்கள். அவருக்குத் தரப்பட்டிருந்த முக்கியமான வேலை, புதிய உளவாளிகளைத் தேர்ந்தெடுப்பது.

யாரோ ஓர் அர்னால்ட், இங்கிலாந்தில் குடியேறுவதும், வேலைக்குப் போவதும் சுலபமாக இருக்கலாம். அதன்பிறகு? பிரிட்டிஷ் அரசு அலுவலகங்களில் அவர் ஊடுருவுவது எப்படி? முக்கியமான ரகசியங்களைக் கண்டறிவது எப்படி?

இதில் இருக்கும் யதார்த்தமான சிரமங்களை நன்றாகப் புரிந்து கொண்டிருந்த அர்னால்ட், இந்தப் பிரச்னையை வேறுவிதமாக அணுகவேண்டும் என்று தீர்மானித்தார்.

அவருடைய திட்டம் மிக எளிமையானது - கேஜிபி உளவாளி ஒருவர், பிரிட்டிஷ் ரகசியங்களை அணுகுவது கஷ்டம், அல்லது, மிகவும் நேரம் பிடிக்கிற விவகாரம். அதற்குபதிலாக, ரகசியங் களை அணுகக்கூடிய சில நபர்களை கேஜிபி உளவாளிகளாக்கி விட்டால்? அவ்வளவுதான் சமாசாரம்.

கேட்பதற்குச் சுலபமாகத் தோன்றினாலும், நிஜத்தில் இப்படி ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவது சிரமமான காரியம், மிக ஆபத்தானதும்கூட.

காரணம், அர்னால்டுக்கும் கேஜிபிக்கும் தேவையான பிரிட்டிஷ் அரசியல், ராணுவ, அறிவியல் ரகசியங்களையெல்லாம் அறிந்தவர்கள் மிகச் சிலர்தான். அவர்களைக் கூப்பிட்டு, 'ஐயா, கொஞ்சம் ரகசியம் தருகிறீர்களா?' என்றெல்லாம் நேரடியாகக் கேட்டுக் கொண்டிருக்கமுடியாது.

ரகசியம் அறிந்த அரசு அதிகாரிகள் சிலரைப் பணத்தால் விலைக்கு வாங்கமுடியும் என்பது உண்மைதான். ஆனால், யார் விலை போகிறவர்கள், யார் நேர்மையானவர்கள் என்பதைக் கண்டறிவது எப்படி? விவரம் தெரியாமல் யாரிடமாவது வாயைக் கொடுத்து மாட்டிக்கொண்டுவிட்டால்? சிக்கிக்கொள்வது அர்னால்ட் மட்டுமா? மொத்த கேஜிபி, சோவியத் யூனியனுக்கும் அல்லவா அவமானம்?

இப்படி யோசித்த அர்னால்ட், புத்திசாலித்தனமான ஒரு யோசனையை முன்வைத்தார் - இப்போதைய அரசு அதிகாரிகள் நேர்மையாக இயங்கி நாசமாகப் போகட்டும். அவர்களுக்குப் பதிலாக, நாம் வருங்கால அரசு அதிகாரிகளைத் தேடிப் பிடிப்போம்.

'வருங்கால அரசு அதிகாரிகள்' என்றால்?

சில ஆண்டுகளுக்குமுன்னால், 'ரமணா' என்று ஒரு தமிழ்த் திரைப்படம் வந்தது. அதில் கதாநாயகனாகப்பட்ட பேராசிரியர், நமது அரசு அலுவலகங்களில் ஊழலைத் தடுப்பதற்கு ஓர் அட்டகாசமான யோசனை செய்வார்.

தன்னிடம் படிக்கும் மாணவர்களில் சிறந்தவர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களை நேர்மையான மனிதர்களாக உருவாக்குவார் இந்தப் பேராசிரியர். பின்னர், இவர்களை அரசாங்க வேலைக்குத் தகுதியானவர்களாகத் தயார் செய்து, தமிழகத்தின் வெவ்வேறு நகரங்களில் உள்ள பல்வேறு அரசு அலுவலகங்களில் வேலைக்கு அனுப்புவார்.

இப்படி 'நேர்மை'யைப் பரப்புவதற்காக புரொஃபஸர் ரமணா தேர்ந்தெடுத்த இந்த வழிமுறை, பல மொழிகளில் வெற்றிகர

மான திரைப்படமாகப் புகழ்பெற்றது. அப்போது, பத்திரிகைகள், பிற ஊடகங்கள் எழுப்பிய முக்கியமான ஒரு கேள்வி, 'இதெல்லாம் சினிமாக் கதைக்குச் சரி, ஆனால், யதார்த்தத்தில் ஒத்து வருமா?'

யதார்த்தம் என்பது, புனைகதைகளைக்காட்டிலும் விநோதமானது என்று சொல்வார்கள். அதற்கு இன்னொரு சாட்சி, இந்தச் சினிமா 'ரமணா'வின் உண்மையான முன்னோடி. அரை நூற்றாண்டு காலத்துக்குமுன் பிரிட்டனில் வாழ்ந்த அர்னால்ட் டாய்ச்.

இங்கிலாந்தில் கேஜிபிக்கு ஓர் உளவுப் படையை உருவாக்க வேண்டும் என்கிற நோக்கத்துடன் இயங்கிக்கொண்டிருந்த அர்னால்ட், பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களில் படிக்கும் சிறந்த மாணவர்கள் சிலரைக் கண்டறிந்து, அவர்களோடு நெருங்கிய நட்பை உருவாக்கிக்கொண்டார். படிப்படியாக, அவர்களை கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களாக மாற்றினார்.

அதன்பிறகு, இந்தத் திட்டத்தின் அடுத்தகட்டமாக, இந்த மாணவர்கள் அனைவரும் பல்வேறு முக்கியமான அரசு வேலைகளுக்குத் தயார் செய்யப்பட்டார்கள். இதன்மூலம், பிரிட்டிஷ் அரசு அலுவலகங்களுக்குள்ளாகவே, கேஜிபிக்கு வலுவான ஓர் உளவுக் கட்டமைப்பு உருவாகிவிட்டது.

இதைக்காட்டிலும் எளிமையான, கச்சிதமான, யதார்த்தமான ஒரு திட்டம் இருக்கவேமுடியாது. ஏற்கெனவே அரசாங்கத்துக்காகப் பணிபுரிந்து கொண்டிருப்பவர்களைத் தொடர்புகொண்டு வம்பை விலைக்கு வாங்குவதைவிட, வருங்காலத்தில் அரசு அதிகாரிகளாகத் தகுதியுள்ள புத்திசாலி மாணவர்களை உளவாளிகளாகத் தயார் செய்வது சுலபம். இல்லையா?

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அர்னால்ட் தேர்ந்தெடுத்தது இரு பல்கலைக்கழகங்களை - ஆக்ஸ்ஃபோர்ட் (Oxford), கேம்பிரிட்ஜ் (Cambridge) ஆகிய இந்த இரண்டில், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலிருந்துதான் அதிக மாணவர்கள் அரசுப் பணிகளுக்குத் தேர்வாகிறார்கள் என்பதை கவனித்தார் அவர்.

அதுமட்டுமில்லை, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ட்ரினிடி (Trinity) கல்லூரியிலிருந்துதான், அவருக்கு முதலாவது உளவாளி கிடைத்தான். அவன் பெயர் கிம் ஃபில்பி (Kim Philby).

அர்னால்டைச் சந்திப்பதற்குப் பல ஆண்டுகள் முன்பாகவே, தனக்குள் கம்யூனிஸச் சிந்தனைகளை வளர்த்துக்கொண்டிருந் தவன் கிம் ஃபில்பி. அவன் வியன்னாவில் பணிபுரிந்து கொண் டிருந்தபோது, அவனுடைய மனைவி லிட்ஸி(Litzi)யின் தோழி எடித் (Edith) என்பவள், அவனைக் கூர்ந்து கவனித்தாள். கொஞ்சம் முயன்றால், இவனை சோவியத் உளவாளியாக்கமுடியும் என்று கண்டுகொண்டாள்.

அதன்பிறகு, கிம், லிட்ஸி லண்டன் திரும்பினார்கள், ஏற்கெனவே அங்கு குடிபெயர்ந்திருந்த எடித் முயற்சியில், அர்னால்ட், கிம் இருவரும் ரகசியமாகச் சந்திக்க ஏற்பாடானது.

அந்தச் சந்திப்பின்போது, அர்னால்ட் அப்படி என்னதான் பேசி னாரோ தெரியாது. அதன்பிறகு முழுக்க முழுக்க சோவியத் யூனிய னுக்கு விசுவாசமான ஓர் உளவாளியாக மாறிவிட்டான் கிம்.

இத்தனைக்கும், தான் ஒரு கேஜிபி உறுப்பினர் என்பதையோ, கிம் ஒரு சோவியத் உளவாளியாக இயங்கவேண்டும் என்கிற எதிர்பார்ப்பையோ அர்னால்ட் அவனிடம் வெளிப்படையாகச் சொல்லவே இல்லை. முதலாளித்துவத்துக்கு எதிரான கம்யூ னிஸத்தின் போராட்டத்துக்கு கிம் உதவவேண்டும் என்றுதான் பூடகமாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், கிம் ஃபில்பிக்கு, இந்த விளக்கமே போதுமானதாக இருந்தது. 'இப்போது நான் என்ன செய்யவேண்டும், சொல்லுங் கள்' என்கிற அளவுக்குப் பணிந்துபோய்விட்டான் அவன்.

புதிய பொறுப்பின்கீழ், கிம் செய்தாகவேண்டிய முதல் கடமை என்று அர்னால்ட் குறிப்பிட்டது, 'நீ உன்னுடைய கம்யூனிஸ்ட் தோழர்கள் எல்லோருடனும் தொடர்பைத் துண்டித்துக் கொள்ள வேண்டும், இனிமேல் கம்யூனிஸச் சார்பாக நீ எதுவும் பேசக் கூடாது, எழுதக்கூடாது, உன்னுடைய நடவடிக்கைகளில் இருந்து நீ ஒரு கம்யூனிஸ்ட் என்று யாருக்கும் தெரிந்துவிடக்கூடாது.'

இதைக் கேட்டதும் கிம் அதிர்ச்சியடையவே இல்லை. நிஜத்தை மறைத்துப் பொய் வேஷம் போடுவதுதான், ஓர் உளவாளியின் முதலாவது வேலை என்பது அவனுக்குப் புரிந்திருந்தது. கிம் ஒரு கம்யூனிஸ்ட் என்கிற சந்தேகம் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு ஏற் பட்டுவிட்டால், அவன் என்னதான் திறமைசாலியாக இருந்தா லும் அவனை நெருங்கவிடாமல் துரத்திவிடுவார்கள்.

அடுத்து, 'உன்னுடைய தோழர்களில் யாரெல்லாம் நம்மோடு பணிபுரிய விரும்புவார்கள் கிம்?' என்று கேட்டார் அர்னால்ட், இதன்மூலம், கிம்போலவே சிந்தனையோட்டம் கொண்ட துடிதுடிப்பான புத்திசாலி இளைஞர்களை அடுத்தடுத்து கண்டறிய அவரால் முடிந்தது.

கிம் உள்பட, அர்னால்டால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மொத்தம் ஐந்து பேர். எல்லோரும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கல்லூரிகளிலிருந்து வந்தவர்கள், பணம், புகழுக்காகவோ பிற சவுகரியங்களுக்காகவோ மயங்காமல், கொள்கைக்காக, கம்யூனிஸ்ட் சோவியத் யூனியனின் உளவாளிகளாக விரும்பிய அந்த ஐவர்:

* கிம் ஃபில்பி (Kim Philby)
* ஆண்டனி ப்ளன்ட் (Anthony Blunt)
* கய் பர்கெஸ் (Guy Burgess)
* ஜான் கைர்ன்க்ராஸ் (John Cairncross)
* டொனால்ட் மெக்லியான் (Donald Maclean)

'கேம்ப்ரிட்ஜ் ஐவர்' என்று பொதுப் பெயரால் அழைக்கப்பட்ட இந்த ஐந்து பேரும், இங்கிலாந்து அரசாங்கம் மற்றும் அது சார்ந்த பிற அமைப்புகளில் ஊடுருவத் தொடங்கியபிறகு, தங்களுக்குக் கிடைத்த முக்கியமான, முக்கியமற்ற தகவல்கள் எல்லாவற்றையும் மாஸ்கோவுக்குக் கடத்தத் தொடங்கினார்கள். இதன் மூலம், இங்கிலாந்து அரசியல் நிலவரத்தில் தொடங்கி, ராணுவ நடவடிக்கைகள், முக்கிய அறிவியல் கண்டுபிடிப்புகள் என்று எல்லாமே உடனடியாக கேஜிபி கைக்குக் கிடைத்துக் கொண்டு இருந்தன.

குறிப்பாக, கிம் ஃபில்பிக்கு இங்கிலாந்து உளவுத்துறையிலேயே வேலை கிடைத்திருந்தது. இதனால், அமெரிக்கா உள்ளிட்ட பன்னாட்டு விவகாரங்களையும் அவனால் உட்கார்ந்த இடத்தில் சேகரித்துவிட முடிந்தது.

ஆனால், இப்படிச் சேகரித்த தகவல்களையெல்லாம், கேம்பிரிட்ஜ் தோழர்களால் நேரடியாக மாஸ்கோவுக்கு அனுப்ப முடியாது, இங்கேதான் அர்னால்டின் ராஜ தந்திரம் வேலை செய்தது.

இங்கிலாந்தின் மிக முக்கியமான பொறுப்புகளில் இருக்கிற இந்த ஐந்து பேர் மீதும், யாருக்கும் எந்தச் சந்தேகமும் வந்து விடாதபடி பார்த்துக்கொள்வதில் அர்னால்ட் மிகவும் கவனத் தோடு இருந்தார். ஆகவே, இவர்களிடமிருந்து தகவல்களைத் திரட்டுவதற்குப் பல ரகசிய வழிமுறைகளைக் கையாண்டார் அவர்.

முக்கியமான தகவல்கள் அல்லது ரகசிய ஆவணங்களின் 'மைக்ரோ ஃபிலிம்' பிரதிகளோடு வந்திருக்கும் ஏஜெண்ட்களில் யாரையேனும் சந்திக்கவேண்டுமானால், அர்னால்ட் முதல் வேலையாகத் தன்னுடைய காரில் கிளம்பி, ஊருக்கு வெளியே சென்றுவிடுவார். தன்னை யாரும் ரகசியமாகப் பின்தொடர்கி றார்களா என்பதை கவனிப்பதற்குத்தான் இந்த முன் எச்சரிக்கை.

இப்படிச் சிறிது நேரம் ஊர் சுற்றி, பின்னொட்டிகளைக் குழப்பி அல்லது வெறுப்பேற்றியபிறகு, யாருக்கும் தெரியாமல் ஓர் இடத்தில் காரை நிறுத்திவிட்டு, சட்டென்று கண்ணில் தென் படும் பேருந்தில் ஏறிவிடுவார் அர்னால்ட். அதில் சிறிது தூரம் சென்றபிறகு இறங்கி, மீண்டும் இன்னொரு பேருந்து அல்லது ரயிலைப் பிடிப்பார்.

இதுபோல் பொதுவான வாகனங்களிலும் சில ஊர்களைச் சுற்றிய பிறகு, ஒருவழியாக மீண்டும் லண்டன் வந்து சேருவார் அர் னால்ட். இதற்குள், அவர்மீது சந்தேகப்பட்டு யாரேனும் பின் னால் வந்திருந்தால், அவர்களே தொலைந்துபோயிருப்பது நிச்சயம்.

இப்படி ஏகப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன், சின்னத் தவறுக் கும் இடமளிக்காமல் இயங்கிக்கொண்டிருந்த அர்னால்ட், தனிப்பட்டமுறையிலும் மிகத் திறமைசாலி. பிரமாதமான படிப் பாளி. அதைவிட முக்கியம், தனக்குக் கீழே இயங்குபவர்களின் முழு நம்பிக்கையைப் பெற்று, அவர்களை நன்கு கையாளத் தெரிந்த மனிதர்.

அர்னால்ட் யாரிடம் பேசினாலும், இந்த உலகத்தில் மற்ற எல்லா விஷயங்களையும்விட, உன்னுடன் பேசுவதுதான் எனக்கு அதிக முக்கியம் என்பதுபோல் கனிவோடும் கூர்மையாகவும் ஒரு பார்வை பார்ப்பார். இந்த விஷயத்தைக் குறிப்பிட்டு பாராட்டி இருக்கிறார் கிம் ஃபில்பி - 'அர்னால்ட் ஓர் அற்புதமான மனிதர்,

அவரை முதன்முறை பார்த்தபோதே, என்னால் அதை உணர முடிந்தது. அதன்பிறகு, அந்த உணர்வு மறையவே இல்லை!'

கேம்பிரிட்ஜ் ஐவர் கூட்டணியின் உளவுப் பணிகள், அர்னால்ட் கண்காணிப்பில் மிகச் சிறப்பாக இயங்கிக்கொண்டிருந்தபோது, இரட்டை லாபமாக அவர்களுக்குப் பலனளித்த ஒரு சம்பவம் நடந்தது - பிரிட்டன் உளவுத்துறையில், ரஷ்யா சம்பந்தப்பட்ட தகவல்களை கவனித்துக்கொள்ளும் பொறுப்பு கிம் ஃபில்பி யிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்மூலம், இங்கிலாந்து சம்பந்தப்பட்ட ரகசியங்களை மாஸ்கோவுக்கு அனுப்புகிற கிம்மின் முதல் வேலை மிக எளி தானது. கூடவே, ரஷ்யாவிலிருக்கும் பிரிட்டிஷ் உளவாளிகள் சேகரித்து அனுப்புகிற விஷயங்களை, லண்டனில் இருக்கும் முக்கிய அதிகாரிகளின் கண்ணில் படாதபடி வடிகட்டவோ, மறைக்கவோ முடிந்தது.

இப்படி சோவியத் யூனியனுக்கு 'டபுள்' விசுவாசமாகச் செயல் பட்டுக்கொண்டிருந்த அதே நேரத்தில், இங்கிலாந்தில் தன்மீது யாருக்கும் சந்தேகம் ஏற்பட்டுவிடாதபடியும் திறமையாக இயங்கிக் கொண்டிருந்தான் கிம் ஃபில்பி. இதனால், வரிசை யாகப் பல முக்கியப் பொறுப்புகளும், கௌரவப் பட்டங்களும் அவனைத் தேடி வந்தன.

அப்போதெல்லாம், கிம் ஒரு சோவியத் உளவாளி என்று இங்கி லாந்து அதிகாரிகள் யாரிடமேனும் சொல்லியிருந்தால், 'ஆனாலும் ரொம்பதான் குறும்பு' என்று சொன்னவருடைய கன்னத்தைப் பிடித்துக் கிள்ளியிருப்பார்கள். அந்த அளவுக்கு ஒரு ஈ, எறும்புக்குக் கூட சந்தேகம் எழாதபடி தன்னுடைய வே(லீ)லைகளைத் தொடர்ந்துகொண்டிருந்தான் கிம் ஃபில்பி.

இந்த நிலைமையில், ஒரு முக்கியப் பொறுப்புடன் கிம் ஃபில்பியை அமெரிக்காவுக்கு அனுப்பியது பிரிட்டன். அங்கே யும் அவனுடைய உளவாளி புத்தி சும்மா இருக்கவில்லை. அமெரிக்காவின் அணு ஆயுதப் பரிசோதனையைப்பற்றிய சில முக்கியத் தகவல்களைத் திரட்டி சோவியத் யூனியனுக்கு அனுப்பிவைத்தான் அவன்.

பிரிட்டனில் எப்படியோ, அமெரிக்காவில் இதுபோன்ற ஒரு பெரிய கசிவைச் சுலபமாகக் கண்டுபிடித்துவிட்டார்கள். இதற்குக்

காரணம் யார் என்று அவர்கள் தீவிரமாக விசாரிக்கத் தொடங்கிய போது, கிம் மற்றும் சில நண்பர்களின் பெயர்கள் அடிபட்டன.

இதையடுத்து, கைது நடவடிக்கைக்கு பயந்து, கிம் ஃபில்பியின் நண்பர்கள் இருவர் ரஷ்யாவுக்குப் பறந்தார்கள். அவர்களுக்குத் துப்புக் கொடுத்து வெளியே அனுப்பியது கிம்தான் என்று குற்றம் சாட்டப்பட்டு, அவன் லண்டனுக்குக் கொண்டு செல்லப் பட்டான்.

பிரிட்டிஷ் அரசாங்கம் நடத்திய விசாரணையில், கிம்மிடமிருந்து உருப்படியாக எந்தத் தகவலையும் வரவழைக்கமுடியவில்லை. அவன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் எவையும் ஆதாரபூர்வ மாக நிரூபிக்கப்படாத சூழ்நிலையில், வேறு வழியே இல்லா மல், வெறுமனே ஒரு ராஜினாமாக் கடிதம் எழுதி வாங்கிக் கொண்டு, கிம் ஃபில்பியை விடுதலை செய்யவேண்டிய தாயிற்று.

அதன்பிறகு கிம் ஃபில்பி சிறிது காலம் பத்திரிகையாளனாகப் பணியாற்றினான். அதிலும் பிரச்னை வந்தபோது, உடனடியாக மாஸ்கோவுக்குப் பறந்து, கேஜிபியில் முறைப்படி இணைந் தான். அங்கே அவனுக்குப் பெரிய பொறுப்புகள், முக்கியப் பதவிகள் காத்திருந்தன.

மிகச் சிறப்பாக உளவுப் பணியாற்றிய கேம்பிரிட்ஜ் ஐவரின் சகாப் தம், சீக்கிரமாகவே முடிவுக்கு வந்துவிட்டது. எனினும், பிரிட்ட னில் கேஜிபியின் உளவு நடவடிக்கைகள் அதோடு ஓய்ந்துவிட வில்லை. கிம்போல் இன்னும் பல உளவாளிகளை கேஜிபி அங்கே பத்திரமாக விதைத்துவைத்திருந்த செய்தி, மிட்ரோகின் ஆவணங்கள் வெளியாகும்வரை யாருக்கும் தெரியவில்லை.

இங்கிலாந்துமட்டுமில்லை, கிம் ஃபில்பியைப்போன்ற கில்லாடி கேஜிபி உளவாளிகள், அநேகமாக எல்லா உலக நாடுகளிலும் ஊடுருவியிருந்தார்கள். 'வல்லரசு' அமெரிக்காவும் இதற்கு விதிவிலக்கில்லை.

சோவியத் யூனியன் என்ற கூட்டமைப்பு அதிகாரபூர்வமாகத் தொடங்கப்படுவதற்குமுன்பே, செகா / GPU மற்றும் ரஷ்ய ராணு வத்தின் GRU அமைப்புகளைச் சேர்ந்த உளவாளிகள் பல்வேறு உலக நாடுகளில் ஊடுருவ ஆரம்பித்திருந்தார்கள். ஆனால்,

அப்போதெல்லாம், அவர்கள் அமெரிக்காவை ஒரு பொருட்டாக மதிக்கவே இல்லை.

1930-ம் ஆண்டு கூடிய சோவியத் ஆட்சி அமைப்பு, பல்வேறு காரணங்களுக்காகத் தங்களது உளவுப் பணிகளைத் தீவிரப் படுத்துவதற்காகத் தீர்மானித்தபோது, உடனடியாக அவர்கள் கவனத்துக்கு எடுத்துக்கொண்ட மூன்று நாடுகள் - இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி.

சோவியத் யூனியன் மட்டுமல்ல, அப்போதெல்லாம் பெரும் பாலான உலக நாடுகள் அமெரிக்காவைத் தங்களது எதிரியாகக் கருதவில்லை. அங்கே என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால், மற்ற நாடு களுடன் ஒப்பிடுகையில், இருபதுகள் மற்றும் முப்பதுகளின் முற்பகுதியில், அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கிய கேஜிபி உளவாளிகள் மிகச் சிலர்தான்.

ஆனால், இந்த 'மிகச் சிறிய' எண்ணிக்கையே அமெரிக்காவுக்கு எரிச்சல் அளித்தது. எங்களுடைய உள் விவகாரங்களில் நீங்கள் அநாவசியமாகத் தலையிடுகிறீர்கள் என்று சோவியத் யூனி யனைக் கண்டித்தது அமெரிக்கா. 1933-ல் அமெரிக்கா மற்றும் USSR இடையே கையெழுத்தான நட்பு உடன்படிக்கையில், இது ஒரு முக்கியப் பிரச்னையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அமெரிக்கா எதிர்பார்த்ததுபோல், இந்த உடன்படிக்கையால் அங்கிருந்த ரஷ்ய உளவாளிகளின் எண்ணிக்கை குறையவில்லை. மாறாக, பல்வேறு நேரடி மற்றும் மறைமுக வழிகளில் உளவாளி கள் அதிகமானார்கள்.

மற்ற நாடுகளில் பலமுறை திரும்பத் திரும்பப் பயன்படுத்தி வெற்றியடைந்த அதே சூத்திரம்தான் - அமெரிக்காவில் வாழும் ரஷ்யர்களைக் கண்டுபிடி, உள்ளூரிலேயே பணத்துக்கு மயங்கக் கூடிய பெரும்புள்ளிகளைக் கண்டுபிடி, கம்யூனிஸ்ட் கொள்கை களில் ஈடுபாடு கொண்டவர்களைக் கண்டுபிடி, எல்லோர் நெற்றியிலும் மொத்தமாக உளவாளிப் பட்டை கட்டிவிடு.

கண்மூடித் திறப்பதற்குள், அமெரிக்காவிலும் கச்சிதமான கேஜிபி உளவு நெட்வொர்க் உருவாகிவிட்டது. நேரடியாக இயங்குகிற வர்கள், மறைமுகமாகச் செயல்படுகிறவர்கள் என்று இவர்களில்

யாரைப்பற்றியும் துப்பறியமுடியாமல் தவித்துப்போனது அமெரிக்கா.

அவர்களுடைய முக்கியச் சந்தேகம், அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி(CPUSA)யின்மீதுதான். அதன் பொதுச் செயலாளர் யேல் ப்ரெளடர் (Earl Browder) மற்றும் அவருடைய ஆதரவாளர்கள் சிலர், மறைமுகமாக சோவியத் உளவுப் பணிகளுக்கு ஆள் சேர்க்கிறார்கள் என்று அமெரிக்கா நம்பியது. இந்தத் தகவலை, கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலத்துக்குப்பிறகுதான் அவர்களால் உறுதி செய்துகொள்ளமுடிந்தது.

இந்தக் காலகட்டத்தில் அமெரிக்காவில் இயங்கிய சோவியத் உளவாளிகளில் மிக முக்கியமானவர், ஜேக்கப் கோலோஸ் (Jacob Golos). அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியமான 'சீனியர்' பிரமுகர்களில் ஒருவரான இவர், தன்னை ஒரு 'முன்னாள் செகிஸ்ட்' என்று பெருமையுடன் அழைத்துக்கொண்டதுண்டு. கேஜிபி உளவாளிகள் பலர், அமெரிக்காவில் எந்தத் தடையும் இன்றி சுதந்தரமாக இயங்கிக்கொண்டிருந்தது, இவருடைய தொடர்ந்த நடவடிக்கைகளால்தான்.

'World Tourists' என்ற பெயரில், சுற்றுலாப் பயணிகளுக்கான சேவை நிறுவனம் ஒன்றைத் தொடங்கியிருந்தார் ஜேகப். பல சோவியத் உளவாளிகள் அமெரிக்காவினுள் சொந்தப் பெயரில் பகிரங்கமாகவோ, அல்லது திருட்டுப் பாஸ்போர்ட்களுடன் ரகசியமாகவோ வந்து போவதற்கு இந்த நிறுவனம்தான் முக்கியக் காரணமாக இருந்தது.

இரண்டாவது உலகப் போர் சமயத்தில், அதில் அமெரிக்காவின் பங்கு எப்படி, யாருக்கு ஆதரவாக இருக்கப்போகிறது என்கிற விஷயத்தில் பல்வேறு நாடுகள் பதற்றம் கொண்டன. ஒரு வேளை அமெரிக்கா தங்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துவிட்டால், பிரச்னையாகிவிடும் என்று பயந்தவர்கள், அமெரிக்காவின் அரசியல் நிலைமை, ராணுவ பலம், அறிவியல் கண்டுபிடிப்புகள் போன்றவற்றை உடனுக்குடன் அறிவதற்காகவும், அவற்றை முடிந்தவரை கட்டுப்படுத்த விரும்பியும், தங்களது உளவுப் படையினரைப் பெரிய அளவில் முடுக்கிவிட்டார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரமாதமாகச் செயல்பட்ட ஜேகப் கோலோஸ், ஏகப்பட்ட திறமைசாலிகளைக் கண்டறிந்து, தனது

உளவாளிக் குழுவில் இணைத்து பலம் சேர்த்துக்கொண்டார். அவர் உருவாக்கிய இந்த உளவுப் படை, அதன்பிறகு 'கோலோஸ் வட்டம்' (Golos Ring) என்றே பெயரிட்டு அழைக்கப்பட்டது.

அமெரிக்கக் கண்டத்தில் கேஜிபி (அதாவது, அதன் அப்போதைய வடிவங்களான GPU / NKVD) பெற்ற முதலாவது முக்கிய வெற்றி, ஸ்டாலின் ஆட்சிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய போல்ஷ்விக் தலைவர் ட்ராட்ஸ்கியின் கொலை.

*1929*-ல் சோவியத் யூனியனிலிருந்து வெளியேற்றப்பட்ட ட்ராட்ஸ்கி, அதன்பிறகு சிறிது காலம் துருக்கி, பிரான்ஸ், நார்வே ஆகிய நாடுகளில் தஞ்சம் புகுந்திருந்தார். கடைசியாக, மெக்ஸிகோவுக்கு வந்து சேர்ந்தார்.

இந்தத் தலைமறைவுக் காலகட்டங்களில் ட்ராட்ஸ்கி எழுதிய புத்தகங்களும் அவருடைய அரசியல் நடவடிக்கைகளும் ஸ்டாலி னுக்குக் கோபமூட்டின. எப்படியாவது இந்த மனிதரை மௌன மாக்கிவிடவேண்டும் என்று முடிவுசெய்து, அதற்காகக் காய் களை நகர்த்த ஆரம்பித்தார்.

*1940* மே மாதம், லோசிஃப் ரொமுவால்டோவிச் கிரிகுலேவிச் (Iosif Romualdovich Grigulevich) என்ற GPU ஏஜெண்ட் தலைமையில் ஒரு குழு ட்ராட்ஸ்கியின் வீட்டினுள் நுழைந்தது. ஆனால், இவர்களுடைய பிடியிலிருந்து அதிர்ஷ்டவசமாகத் தப்பி விட்டார் ட்ராட்ஸ்கி.

இதையடுத்து, திட்டத்தில் சிறிய மாற்றம் ஒன்று தேவைப் பட்டது. கும்பலாகச் சென்று தாக்குவதைவிட, கேஜிபி ஏஜெண்ட் ஒருவர் எப்படியாவது ட்ராட்ஸ்கியுடன் பழகி, அவ ருடைய நம்பிக்கையைப் பெற்றுவிட்டால், கண்ணும் கண்ணும் வைத்தாற்போல் காரியத்தை முடித்துவிடலாம் என்று தீர்மானித் தார்கள்.

இதற்காக, முந்தைய தாக்குதலில் பங்குபெற்றிராத ஒரு NKVD உளவாளி தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பெயர், ரமோன் மெர்க டெர். போலிப் பெயரில் மெக்ஸிகோவினுள் நுழைந்த இவர், சத்தமில்லாமல் ட்ராட்ஸ்கியின் நெருங்கிய நண்பர் வட்டத்தை உளவு பார்க்க ஆரம்பித்தார்.

தன்னை ஒரு ட்ராட்ஸ்கி ஆதரவாளராக அறிவித்துக்கொண்ட இவர், கனடாவிலிருந்து 'தலைவரை'ச் சந்திக்க வந்திருக்கிறேன்

என்று சொன்னதும், ட்ராட்ஸ்கியைச் சுற்றியிருந்தவர்களுக்கு எந்தச் சந்தேகமும் ஏற்படவில்லை. இதனால், அடிக்கடி ட்ராட்ஸ்கியை நேரில் பார்த்துப் பேசுகிற வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

முதல் தாக்குதல் நடந்து சுமார் மூன்று மாதங்களுக்குள், ஆகஸ்ட் 20-ம் தேதி ட்ராட்ஸ்கியைச் சந்திக்கச் சென்ற இவர், தனிமையைப் பயன்படுத்திக்கொண்டு, ஓர் ஐஸ் கத்தியால் அவரைத் தாக்கிக் கொன்றார்.

இதைத் தொடர்ந்து, கொலையாளி ரமொன் கையும் களவுமாகப் பிடிபட்டுவிட்டாலும்கூட, சோவியத் யூனியனுக்கு வெளியே யும் கேஜிபியால் ஒரு திட்டத்தைக் கச்சிதமாகவும் ரகசியமாகவும் நிறைவேற்றமுடியும் என்பதற்கான சாட்சியமாக இந்தச் சம் பவம் அமைந்தது. அதன்பிறகுதான், மேற்கு நாடுகளின் ஊடகங் கள் கேஜிபியை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கின.

இந்தக் காலகட்டத்தில், அமெரிக்காவிலிருந்த கேஜிபி ஏஜெண்ட் களுக்குத் தரப்பட்டிருந்த இன்னொரு முக்கியமான பொறுப்பு, அந்நாட்டின் அணு ஆயுத ஆய்வுகளைப்பற்றிய தகவல்களைத் திரட்டுவது. இதற்காக, 'XY செல்' (XY Cell) என்ற பெயரில் ஒரு விசேஷப் பிரிவு உருவாக்கப்பட்டிருந்தது.

அறிவியல் ஆய்வு சார்ந்த துறைகளில் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியடைந்திருந்த ரஷ்ய விஞ்ஞானிகள், அமெரிக்காவைப் பார்த்துக் காப்பியடிக்காமலே ஓர் அணு ஆயுதத்தைக் கண்டறிந் திருக்க முடியும். ஆனால், அதற்குக் காலதாமதமாகும். அதுவரை அமெரிக்கா பொறுமையாக வேடிக்கை பார்த்துக்கொண் டிருக்கும் என்பது என்ன நிச்சயம்?

இந்த பயத்தால்தான், அமெரிக்காவின் அணு ஆயுதத்தைப்பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள சோவியத் யூனியன் விரும்பி யது. ஒருவேளை அவர்கள் நிஜமாகவே அணுகுண்டைக் கண்டு பிடித்திருந்தால், அதைக் கார்பன் பிரதி எடுத்தாவது தங்களை பலப்படுத்திக்கொள்ளத் தயாராக இருந்தது சோவியத் அரசு.

இதற்காக உருவாக்கப்பட்ட XY பிரிவு, ஜேகப் கோலோஸ் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. இதற்காக, சோவியத் மற்றும் கம்யூனிஸச் சார்புடைய பொறியாளர்கள், விஞ்ஞானி கள், மற்றவர்களைத் தேடிப் பிடித்தார் அவர். ஜூலியஸ் ரோஸன்

பெர்க் (Julius Rosenberg) என்பவர் தலைமையில் இயங்கிய இந்தக் குழு, முக்கியமான பல தகவல்களை கோலோஸ்மூலம் சோவியத் யூனியனுக்கு அனுப்பிக்கொண்டிருந்தது.

இதுதவிர, தியோடர் ஹால் (Theodore Hall), க்ளாஸ் ஃபுச்ஸ் (Klaus Fuchs) உள்ளிட்ட பல ஏஜெண்ட்கள், 'ப்ராஜக்ட் மன்ஹாட்டன்' (Project Manhattan) என்று அழைக்கப்பட்ட அமெரிக்காவின் அணு ஆயுத ஆராய்ச்சியைப்பற்றிய விவரங்களைச் சேகரித்துக் கொடுத்தார்கள்.

இப்படித் திரட்டப்பட்ட தகவல்கள், ரகசியக் குறிப்புகள் அனைத்தும், சோவியத் யூனியன் தனக்கான அணு ஆயுதம் ஒன்றைத் தயாரிப்பதை விரைவுபடுத்தின. அமெரிக்காவில் சோவியத் ஊடுருவலின் முழுமையான வெற்றிக்குச் சாட்சியாக, 1945-ல் அமெரிக்கா முதலாவது அணுகுண்டு வெடித்து நான்கே ஆண்டுகளுக்குள், கிட்டத்தட்ட அதேபோன்ற ஒரு குண்டை 1949-ம் ஆண்டு சோவியத் யூனியன் தயாரித்து வெடித்துவிட்டது.

இதைப் பார்த்தபிறகு, அமெரிக்காவின் சந்தேகங்கள் அனைத்தும் உண்மையாகிவிட்டன. இதற்குமுன் உளவுச் சரித்திரத்தில் வேறு எந்த அமைப்பும் சாதித்திருக்காத அளவு அமெரிக்காவிலும் பிற நாடுகளிலும் ஊடுருவியிருந்தது கேஜிபி.

அமெரிக்கா - சோவியத் யூனியன் இடையிலான பனிப்போர் காலகட்டத்தில், எப்படியாவது கேஜிபியின் கொட்டத்தை அடக்கியாகவேண்டும் என்று தீர்மானித்த அமெரிக்கா, பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளின்மூலம் தங்களது ரகசியங்களைப் பாதுகாக்க முனைந்தது. இதனால், பழையபடி உளவாளிகளை அமெரிக்காவினுள் இயங்கச் செய்யமுடியாமல் தடுமாறியது கேஜிபி.

ஆனால், இதுபோன்ற தீவிரத் தடைகளையும் மீறி, கேஜிபியின் உளவு நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டுதான் இருந்தன. 1991-ல் சோவியத் யூனியன் சிதறி மறையும்வரை, அமெரிக்காவில் கேஜிபி ஏஜெண்ட்கள் பிடிபடும் செய்திகளுக்குக் குறைச்சலே இல்லை.

இப்படி எத்தனைமுறை வெட்டினாலும், மறுபடி பழைய வேகத்துடன் முளைப்பதுதான் கேஜிபியின் சாமர்த்தியமும் பலமும். அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா என எங்கே சென்றாலும், கேஜிபி

யின் உளவாளிகள் நீக்கமற நிறைந்திருந்தார்கள். சம்பந்தப்பட்ட நாடுகள் அதை உணராமல் இருக்கலாம், ஆனால், சிறியவை, பெரியவை என வித்தியாசம் பார்க்காமல், எல்லா நாடுகளில் இருந்தும் தொடர்ந்து தகவல்களைத் திரட்டிக்கொண்டிருந்தது கேஜிபி.

உதாரணமாக, சோவியத் யூனியனுடன் நல்லுறவு வைத்திருந்த இந்தியாவில், கேஜிபியின் உளவுக் கரங்கள் மிக ஆழமாகப் பரந்து விரிந்திருந்தன என்று 'மிட்ரோகின் ஆவணங்கள்' தெரிவிக்கின்றன. உண்மையில், உலக அளவில் கேஜிபியால் சுலபமாகவும் முழுமையாகவும் ஊடுருவ முடிந்த தேசங்களில் இந்தியாவும் ஒன்று என்கிறார் மிட்ரோகின்.

குறிப்பாக, இந்திரா காந்தி ஆட்சி நடந்த காலகட்டத்தில், அரசு அதிகாரிகள், தலைவர்கள், அரசியல்வாதிகள் என்று பலதரப்பினரும், கேஜிபியின் 'நன்கொடை'களைப் பெற்றுக்கொண்டு, அவர்களுக்கு வேண்டிய தகவல்களை வழங்குவது, சோவியத் யூனியனுக்குச் சாதகமான நடவடிக்கைகளில் ஈடுபடுவது என நன்றாகவே ஒத்துழைத்திருப்பதாகத் தெரிகிறது.

இதனால், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளோடு ஒப்பிடுகையில், இங்கே கேஜிபி உளவாளிகளின் சாகசக் கதைகள் அவ்வளவாக இல்லை. ஆனால், அவர்கள் அதிகம் மெனக்கெடாமலே, உலக அளவில் சோவியத்துக்கு வெளியே கட்டமைக்கப்பட்ட மிகப் பெரிய கேஜிபி நெட்வொர்க் பின்னல்களில் ஒன்றாக இந்தியா அமைந்துவிட்டது.

இதேபோல், இந்தியா சுதந்தரமடைந்த காலகட்டம் தொடங்கி, மாஸ்கோவிலிருந்த இந்தியத் தூதரகத்தில், கேஜிபி உளவாளிகள் நன்கு ஊடுருவியிருந்தார்கள். அங்கு முக்கியமான பொறுப்புகளில் இருந்த சில இந்திய அதிகாரிகளை, பல்வேறு வழிமுறைகளைப் பயன்படுத்தி விலைக்கு வாங்கியிருந்த கேஜிபி, அவர்களுடைய உதவியால், இந்தியாவுக்கு அனுப்பப்படுகிற அல்லது அங்கிருந்து வருகிற தகவல்களை வழிமறித்துப் படித்துக் கொண்டிருந்தது.

இந்த விஷயம் இந்தியாவுக்குத் தெரியுமோ, தெரியாதோ, எதற்கும் இருக்கட்டும் என்று அவர்கள் தங்களது அலுவல் விவகாரங்கள் அனைத்தையும் கிரிப்டாலஜி (Cryptology) எனப்படும் ரகசிய

வழிமுறைகளால் மறைத்து அனுப்பிக்கொண்டிருந்தார்கள். ஆகவே, இந்தச் சங்கேதக் குறிப்புகளை, கேஜிபியால் புரிந்து கொள்ள இயலவில்லை.

அதாவது, முக்கிய ஆவணங்களோ, அல்லது அவற்றின் நகல்களோ தாராளமாகக் கிடைக்கின்றன. ஆனால், அவற்றில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று ஒரு மண்ணும் புரியவில்லை. என்ன செய்யலாம் என்று யோசித்த கேஜிபி, மிகச் சுலபமான ஒரு வழிமுறையைக் கண்டுபிடித்தது.

மாஸ்கோவிலுள்ள இந்தியத் தூதரகத்தில், இதுபோன்ற சங்கேதக் குறியீடுகளை உடைக்கிற கில்லாடிகள் யார் யார் என்று கவனித்தார்கள். அவர்களில் ஒருவருக்குக் கச்சிதமாக வலை விரித்துப் பிடித்துவிட்டார்கள். அதன்பிறகு, சோவியத் யூனியனுக்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாத இந்திய ஆவணங்களைக் கூட, கேஜிபியால் உடைத்துப் படித்துவிடமுடிந்தது.

இந்தக் காலகட்டத்தில், இந்திய உளவுப்பிரிவான 'ஐபி'(IB)யும் கேஜிபியின் நடவடிக்கைகளை அவ்வப்போது கவனித்துக் கொண்டுதான் இருந்தது. குறிப்பாக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு அவர்கள் தாராளமாக நிதி உதவி செய்கிறார்கள் என்கிற சந்தேகம் பரவலாக இருந்தது.

ஆனால், மற்ற நாடுகளைப்போல் இந்தியாவிலும் கம்யூனிஸச் சித்தாந்தத்தை வளர்ப்பதுடன், இங்கே கேஜிபிக்கு வேறு சில முக்கியமான நோக்கங்களும் இருந்தன. இந்த விவரம் அப்போது 'ஐபி'க்குப் புரியவில்லை.

படிப்படியாக இந்தியாவில் கேஜிபி தனது இருப்பை வலுப்படுத்திக்கொண்டிருந்த சூழ்நிலையில், அப்போதைய இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு மரணமடைந்தார். புதிய பிரதமர் யார் என்கிற அதிகாரப் போட்டி தொடங்கியிருந்தது.

1964-ல் நேருவுக்குப்பிறகு அவருடைய பதவியை ஏற்கத் தகுதியுள்ளவர்களாகக் கருதப்பட்டவர்கள் மூவர் - குல்சாரி லால் நந்தா, லால் பகதூர் சாஸ்திரி மற்றும் மொரார்ஜி தேசாய்.

இவர்களில் குல்சாரி லால் நந்தாவை ஆதரித்தது கேஜிபி. ஒரு வேளை, நந்தாவால் ஜெயிக்கமுடியவில்லை எனில், லால் பகதூர் சாஸ்திரியை ஆதரிக்கலாம், தப்பில்லை. ஆனால், எப்படி

யாவது மொரார்ஜி தேசாய் பிரதமராகாமல் தடுத்துவிட வேண்டும் என்பது சோவியத் யூனியனின் எண்ணமாக இருந்தது.

இந்தப் போட்டியில் ஜெயித்து, புதிய பிரதம மந்திரியாகப் பொறுப்பேற்றவர் லால் பகதூர் சாஸ்திரி. ஆனால், அவருடைய ஆட்சி இரண்டு வருஷங்கள்கூட நீடிக்கவில்லை. சாஸ்திரியின் திடீர் மரணத்தைத் தொடர்ந்து, நேருவின் மகள் இந்திரா காந்தி புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேருவைப்போலவே, இந்திராவும் சோவியத் யூனியனின் வளர்ச்சி, உலக சரித்திரத்தில் ஒரு முக்கியமான முன்னேற்றம் எனக் கருதினார். ஆகவே, அவர் இந்தியப் பிரதமராக இருப்பது, தனக்குச் சாதகமான விஷயம்தான் என முடிவுகட்டியது கேஜிபி, அதன்பிறகு, இந்திராவின் ஆட்சிக்கு அவர்களுடைய முழு ஆதரவும் பக்கபலமும் இருந்தது.

இங்கே ஒரு முக்கியமான விஷயம் - இப்படிச் சில இந்திய அரசியல்வாதிகளுக்கு கேஜிபி அளித்து வந்த மறைமுக ஆதரவை வைத்து, குல்சாரி லால் நந்தா, லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி போன்றோர் கேஜிபி உளவாளிகள் என்று சொல்வதற் கில்லை. இதை மிட்ரோகின் மிகத் தெளிவாகச் சொல்லிவிடு கிறார்.

ஆனால், இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தின்போதுதான், கேஜிபியால் இங்கே நன்கு ஊடுருவ முடிந்தது என்று குறிப்பிடும் மிட்ரோகின் ஆவணங்கள் நூல்வடிவில் வெளியானபோது, அதனால் நேரடியாக பாதிக்கப்பட்டது காங்கிரஸ் கட்சிதான். இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ்மீது, மிட்ரோகின் குறிப்புகள் முன்வைக்கும் முக்கியமான குற்றச்சாட்டுகள் மூன்று:

1. காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்காக, சோவியத் யூனியன் நன்கொடை வழங்கியிருக்கிறது. தெரிந்தோ தெரியாமலோ இந்திரா காந்தி அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.
2. இதேபோல், அமெரிக்க உளவு நிறுவனமான சிஐஏ-யிடமிருந்தும் காங்கிரஸ் / இந்திரா காந்திக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.
3. இந்திரா காந்தியின் அமைச்சரவையில் இருந்த சில அமைச்சர்கள், கேஜிபியிடம் பணம் பெற்றுக்கொண்டு,

அவர்களுடைய உளவாளிகளாக இயங்கினார்கள். அர சாங்கத் தகவல்களை விற்றார்கள்.

ரஷ்யா, அமெரிக்காவிலிருந்து வந்த கட்சி அல்லது தேர்தல் நிதியைப்பொருத்தவரை, இந்திரா காந்திக்குப் பல விஷயங்கள் முழுவதுமாகத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்கிறார் மிட்ரோகின். காரணம், அவருடைய கட்சியைச் சேர்ந்த லலித் நாராயண் மிஷ்ரா என்பவர்தான் இதுபோன்ற நிதி விவகாரங் களுக்குப் பொறுப்பேற்றிருந்தார்.

இதனால், பணம் எங்கிருந்து வருகிறது, எதற்காக வருகிறது, பதிலுக்கு அவர்கள் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று எல்லாம் சரியாகத் தெரிந்துகொள்ளாமலேயே, காங்கிரஸ் கட்சி இந்தத் தொகைகளைப் பெற்றுக்கொண்டு செலவு செய்து இருக்கிறது. இதுவும் ஒருவகையில் குற்றம்தான்.

இதுதவிர, காங்கிரஸ் அமைச்சர்கள் சிலர், கேஜிபியின் ரகசிய ஏஜெண்ட்களாக இயங்கியதைக் குறிப்பிடுகிறார் மிட்ரோகின். இவர்களைக் கொண்டு திரட்டிய ஏராளமான தகவல்கள், கேஜிபி யின் மாஸ்கோ அலுவலகத்தில் ஆண்டுமுழுவதும் நிரம்பி வழிந்துகொண்டிருந்தன.

மிட்ரோகின் ஆவணங்களுக்கு, அவர் எழுதிய தினசரிக் குறிப்பு களைத்தவிர, வேறு ஆதாரங்கள் எவையும் இல்லை. ஆகவே, இவற்றை உறுதி செய்யப்படாத தகவல்களாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. எனினும், இந்தத் தகவல்கள் நூல்வடிவில் வெளியானபோது, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளை வெளிப் படையான அதிர்ச்சி தாக்கியது.

இந்திரா ஆட்சி மற்றும் காங்கிரஸ் மீதான இந்தக் குற்றச்சாட்டு கள் அனைத்தும் முறைப்படி விசாரிக்கப்படவேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சி கோரிக்கை விடுத்தது. ஆனால், 'ஏதோ ஒரு புனைகதை(fiction)ப் புத்தகத்துக்கெல்லாம் நாங்கள் பதில் சொல்லவேண்டிய கட்டாயம் இல்லை' என்கிற ரீதியில் பேசி, இதனை ஏற்க மறுத்துவிட்டது காங்கிரஸ்.

கிட்டத்தட்ட ஒரு துப்பறியும் நாவலுக்கு இணையான சுவாரசிய மும் சுறுசுறுப்பும் மிட்ரோகின் ஆவணப் புத்தகங்களில் நிரம்பி வழிகிறது. என்றாலும், அவை நிச்சயமாகப் புனைகதை அல்ல,

அதேசமயம், அவற்றில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படவும் இல்லை.

இதனால், மிட்ரோகின் ஆவணங்களின் அடிப்படையில் முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் எவையும், முழுமையாக நிரூபணமாவது சாத்தியமில்லை. எனினும், சுமார் அரை நூற்றாண்டு காலத்துக்குமேல் உலக அளவில் கேஜிபி விரித்திருந்த உளவு வலையின் உறுதி செய்யப்படாத பதிவுகளாக இந்நூல்கள் வாசிக்கப்படுகின்றன.



# 17. சிதைந்த கனவுகள்

சோவியத் யூனியனின் கடைசி அதிபரான மிகையில் கோர்பசேவ் (Mikhail Gorbachev), மற்ற எல்லா அதிபர்களும் செய்ய விரும்பாத, அல்லது செய்யத் தயங்கிய சில விஷயங்களைத் தொடங்கி வைத்தார்.

அதுவரை மூடிய சமூகமாகவே வாழ்ந்து விட்ட சோவியத் அரசாங்கத்தின் கதவுகளை, அகலத் திறந்துவைக்க முயன்றார் கோர்பசேவ் - 'இது மக்களின் அரசு, இங்கே என்ன நடக்கிறது என்பது மக்களுக்கும் தெரிந்திருக்கவேண்டும். ஆட்சி எப்படி நடக்கிறது என்கிற விஷயத்தில் எந்தவிதமான ஒளிவுமறைவும் இருக்கக்கூடாது'.

கேட்பதற்குச் சுவாரசியமான மேடைப் பேச்சு அல்லது கோஷம்போல் தெரிந்தாலும், அன்றைய சோவியத் யூனியனில் கோர்பசேவ் கொண்டுவர விரும்பிய மாற்றங்கள், அவர் முன்வைத்த கருத்துகள் ஒவ்வொன்றும் மக்களிடையே பரவலான அதிர்ச்சியைத் தோற்றுவித்தது.

இதற்குக் காரணம், லெனின் தொடங்கி அதன்பிறகு வந்த ஆட்சியாளர்கள் எல்லோருமே, தாங்கள் எதைக் கம்யூனிஸம் என்று நம்பினார்களோ, அதைதான் மக்கள்மீது மென்மையாகவோ, வன்மையாகவோ திணிக்க முயன்றுகொண்டிருந்தார்கள். மக்களுக்கான, மக்களுடைய அரசு என்று திரும்பத்திரும்ப வருணிக்கப்பட்டாலும்கூட, உண்மையில் 'என்னப்பா? உனக்கு என்ன வேணும்?' என்று அவர்களை அனுசரணையாக உட்கார வைத்துப் பேசியவர்கள் யாருமே இல்லை என்பதுதான் உண்மை.

அதைத்தான் கோர்பசேவ் செய்தார். நானும் வல்லரசுதான் என்று அமெரிக்காவுடன் சண்டை போட்டுக்கொண்டிருப்பதைவிட, உள்ளூர் நிலவரம் என்ன? யாருக்கு, என்ன பிரச்னை, அதை எப்படிச் சரி செய்யலாம் என்று யோசிக்க ஆரம்பித்தவர், நீங்களும் என்னோடு சேர்ந்து யோசியுங்கள் என்று மக்களை அழைத்தார்.

இதற்காக, தனது பனிப்போர் 'பங்காளி'யான அமெரிக்கா, பிற நாடுகளுடனான உரசல்களை கோர்பசேவ் மறந்துவிட்டார் என்று அர்த்தமில்லை. உண்மையில், வெற்று வீம்புக்காகவே அவர் பல நாடுகளை முறைத்துக்கொண்டு நின்ற சம்பவங்கள் நிறையவே உண்டு.

உதாரணமாக, **1985**-ம் ஆண்டு, இங்கிலாந்திலிருந்த சோவியத் பிரஜைகள் **25** பேரை, உளவாளிகள் என்று குற்றம் சாட்டி, நாட்டிலிருந்து வெளியேற்றியது பிரிட்டிஷ் அரசு, இதற்குப் பதிலடியாக, சோவியத் யூனியனில் இருந்த பிரிட்டிஷ் குடிமக்கள் **25** பேரைத் தேர்ந்தெடுத்து வெளியே அனுப்பியது கோர்பசேவ் தலைமையிலான அரசாங்கம்.

இதைப் பார்த்துக் கடுப்பான பிரிட்டன், மேலும் ஐந்து சோவியத் உளவாளிகளை வெளியே அனுப்பியது. கோர்பசேவும் சளைக்காமல் ஐந்து பிரிட்டிஷ் பிரஜைகளை வெளியேற்றினார்.

இந்த ஒரு சம்பவம் என்றில்லை, பல சந்தர்ப்பங்களில், அதிலும் குறிப்பாக, அயல்நாடுகளில் வாழும் சோவியத் குடிமக்கள் உளவு நடவடிக்கைகளுக்காக தண்டிக்கப்படும்போதெல்லாம், பழிக்குப் பழி வாங்குவதுபோலவே கோர்பசேவ் அரசின் நடவடிக்கைகள் இருந்தன.

இதற்குக் காரணம், கோர்பசேவ் இதுபோன்ற உளவு நடவடிக்கைகளை ஆதரித்தார் என்பதில்லை. சோவியத் யூனியனை, அதன் குடிமக்களைப் பிற நாடுகள் வேண்டுமென்றே வம்புக்கிழுக்கின்றன என்று அவர் திடமாக நம்பியதால்தான், அவர்கள் வழியிலேயே பொருத்தமான பதிலடி கொடுத்துக்கொண்டிருந்தார் கோர்பசேவ்.

தனது ஆட்சிக்காலத்தில் கோர்பசேவ் விடாமல் பின்பற்றிய கொள்கை மிக எளிமையானது - மரியாதை கொடுத்து, மரியாதை வாங்கிக்கொள்ளுங்கள்!

அதாவது, வளர்ந்த மேற்கத்திய நாடுகளில் தொடங்கி, மூன்றாம் உலக நாடுகள்வரை எல்லோரும் சோவியத் யூனியனை மதிக்கவேண்டும். அதன் இருப்பை, 'நாங்களும் ஒரு வல்லரசு தான்' என்கிற கம்பீரமான நிலைப்பாட்டை முழுமையாக ஏற்று அங்கீகரிக்கவேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருந்தார் கோர்பசேவ். சோவியத் யூனியன் எந்தவிதத்திலும் யாருக்கும் குறைந்ததில்லை என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கொண்டிருந்தார் அவர்.

குறிப்பாக, அமெரிக்காவிடம் தங்களுக்கான மரியாதையை உரிமையோடு கோரிப் பெற்றவர் கோர்பசேவ். சோவியத் - அமெரிக்கா இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைகளின் போதெல்லாம், எந்தவிதத்திலும் தனது தேசத்தின் கௌரவத்தை விட்டுக்கொடுக்காமல், அமெரிக்காவை அதன் கொள்கைகள், செயல்பாடுகள்மீது ஆதிக்கம் செலுத்த அனுமதிக்காமல் கத்தி மேல் நடப்பதுபோல் திறமையாகச் செயல்பட்ட பெருமை அவருக்கு உண்டு.

ஆகஸ்ட் 1986-ல், அமெரிக்காவில் வாழ்ந்துவந்த கென்னடி ஜகாரொவ் (Gennadi Zakharov) என்ற நபர், சோவியத் உளவாளி என்று குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டார். இதை அடுத்து, ஒருபக்கம் அமைதிப் பேச்சுவார்த்தை, இன்னொரு பக்கம் உளவு நடவடிக்கைகள் என சோவியத் யூனியன் இரட்டை வேடம் போடுகிறது என்று கண்டனப் பேச்சுகள் எழத் தொடங்கின.

இதனால் எரிச்சலடைந்த சோவியத் யூனியன் அரசு, ரஷ்யாவில் வசித்த அமெரிக்கப் பத்திரிகையாளர் நிகோலஸ் டானிலொஃப்

(Nicholas Daniloff) என்பவரை உடனடியாகக் கைது செய்தது. அமெரிக்காவுக்காக ரஷ்யாவை உளவு பார்த்தார் என்று அவர்மீது குற்றம் சாட்டியது கேஜிபி.

அமெரிக்காவும் சோவியத் யூனியனும் சின்னப் பிள்ளைகள் போல் இப்படி ஏட்டிக்குப் போட்டியாகக் 'கைது' விளையாட்டுகள் நடத்திக்கொண்டிருந்த கூத்து ஒருபக்கமிருக்க, யாரோ ஒரு ஜகரொவ் கைது செய்யப்பட்டவுடன், சட்டென்று கேஜிபி ஓர் அமெரிக்கப் பத்திரிகையாளரை உள்ளே பிடித்துப் போட்டது எப்படி? ஆதாரம் இல்லாமல் இப்படிச் செய்யமுடியுமா?

முடியாதுதான். ஆனால், எப்போது வேண்டுமானால் இப்படி ஓர் அவசியம் நேரலாம் என்று எதிர்பார்த்து, கேஜிபி சில அமெரிக்கர்களுக்கு எதிரான குறிப்புகளைத் தயாராகக் கைவசம் வைத்திருந்தது.

இதற்காக, சோவியத் யூனியன் எல்லைகளுக்குள் வசிக்கிற வெளிநாட்டவர்கள், குறிப்பாக அமெரிக்கர்கள் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டார்கள். நிஜமாகவே அவர்கள் ஏதேனும் உளவு நோக்கங்களோடு இயங்குகிறார்கள் என்பதை ஆராய்வதுடன், சில சமயங்களில் போலியாக அவர்களுக்கு எதிரான ஆதாரங்களும் உருவாக்கப்பட்டன.

அதாவது, வேண்டுமென்றே ஓர் உள்ளூர்க்காரரை அவர்களுடன் பழகச் செய்வது, இதன்மூலம் சில ரகசிய ஆவணங்களை அவர்களிடம் கொடுத்து, பின்னர் அவற்றையே சாட்சியாகக் காண்பித்து, அவர்களை உளவாளிகள் எனக் கைது செய்துவிடுவது - பெரும்பாலான வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் கேஜிபியின் இந்த வலையில் சுலபமாகச் சிக்கிக்கொண்டார்கள்.

இதற்காக, ரஷ்யாவில் வசித்த வெளிநாட்டவர்கள் எல்லோரும் இப்படித் துன்புறுத்தப்பட்டார்கள் என்று அர்த்தமில்லை. ஆனால், அவசியம் ஏற்பட்டால், கேஜிபியால் யாரை வேண்டுமானாலும் கைது செய்யமுடியும் என்கிற நிலைமைதான் இருந்தது.

இப்படி ஆரம்ப காலத்தில் சில முக்கியமான பணிகளுக்காக கோர்பசேவ் அரசு கேஜிபியை அவ்வப்போது பயன்படுத்திக் கொண்டதுண்டு. எனினும், சோவியத் யூனியனுக்கான அவரது 'பெரிஸ்த்ராய்கா' (Peristroika) மறுகட்டுமானத் திட்டங்கள்

முன்வைக்கப்பட்டபிறகு, அவற்றை நிறைவேற்றுவதற்கு இடையூறாக அமையக்கூடிய பல விஷயங்களைத் தியாகம் செய்ய கோர்பசேவ் தயாராக இருந்தார்.

கோர்பசேவ் செயல்படுத்த முனைந்த சீர்திருத்தங்கள் அனைத்தும், சோவியத் யூனியன் மக்களுக்குப் புதுமையானவையாகத் தெரிந்தன. ஆனால் உண்மையில், 'பெரிஸ்த்ராய்கா'வின் அடிநாதமாக அமைந்திருந்தவை, லெனின் உள்ளிட்ட கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஏற்கெனவே முன்வைத்த கொள்கைகள்தான்.

இந்தக் கொள்கைகள் நிஜமாகவே உயர்வானவைதான். ஆனால் சோவியத் யூனியன் என்கிற அமைப்பில் அவை சரியான முறையில் செயல்படுத்தப்படவில்லை என்பதுதான் கோர்பசேவ் மற்றும் அவருடைய ஆதரவாளர்களின் எண்ணமாக இருந்தது. ஒருவேளை, லெனின் அகாலமாக மரணமடையாமல், இன்னும் சிறிது காலம் உயிரோடு வாழ்ந்திருந்தால், கம்யூனிஸத்தின் மேன்மையை உலகம் புரிந்துகொள்ளும்படியான ஓர் உதாரண தேசமாக சோவியத் யூனியன் அமைந்திருக்கும் என்று நம்புகிறவர்கள் இப்போதும் இருக்கிறார்கள்.

கோர்பசேவ் அரசின் 'பெரிஸ்த்ராய்கா'வும் இதைத்தான் செய்ய முனைந்தது. சோவியத் யூனியனில் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்த அதீத மதுப் பழக்கத்தைக் குறைப்பது, ஊழலைத் தடுப்பது, தேர்தலில் எல்லோரும் நிற்கிற, ஆட்சியில் பங்குபெறுகிற வாய்ப்பை உருவாக்குவது, தனிநபர்களின் பிஸினஸ் முயற்சிகளை ஊக்குவிப்பது என்று, அதற்குமுன் யாரும் முயன்றிராத மிகப் பெரிய மாற்றங்களைச் செயல்படுத்தத் தொடங்கினார் கோர்பசேவ்.

இதையெல்லாம் செய்துமுடிப்பதற்குக் கொஞ்சம் நாளாகும். இதனால் சில அரசு நிறுவனங்கள், அதிகாரிகள், கட்சி உறுப்பினர்கள் பாதிக்கப்படலாம். ஆனால், அதனால் பிரச்னையில்லை. மக்களை நேரடியாக அல்லது மறைமுகமாக பாதிக்கக்கூடிய எல்லா விஷயங்களையும் மாற்றியே தீரவேண்டும் என்று கோர்பசேவ் களத்தில் இறங்கியதால், உள்ளூரிலேயே அவருக்குப் பல விரோதிகள் உருவானார்கள்.

அப்போதுதான், 'பெரிஸ்த்ராய்கா' சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, கேஜிபியின் அதிகாரங்களைக் குறைக்கவேண்டும் என்று முடிவு செய்தார் கோர்பசேவ். காரணம், மக்களுக்காக மக்களால்

அமைந்த ஓர் அரசு, இப்படித் தீவிர உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தால், சுற்றியிருப்பவர்களுக்கு சோவியத் யூனியன்மீது மரியாதை வராது, பயம்தான் வரும்.

கோர்பசேவின் இந்தச் சிந்தனை, அப்போதைய கேஜிபி தலைவர் க்ரொயுச்கொவுக்குக் கொஞ்சம்கூட பிடிக்கவில்லை. ஆனால், அவருடைய விருப்பத்தை யார் கேட்டார்கள்?

பெரிஸ்த்ராய்காவின்கீழ், அதுவரை கேஜிபியின் பொறுப்பில் ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டுவந்த பல விஷயங்கள், வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டன. கேஜிபியின் காவல்கார பிம்பம் மெல்லச் சரியத் தொடங்கியது.

தவிர, கொள்கை அடிப்படையில் கேஜிபிக்கும், கோர்பசேவ் சீர்திருத்தங்களுக்கும் ஒத்துப்போகவில்லை - சோவியத் சமூகத்தை அரசாங்கம் எப்போதும் தனது கைப்பிடிக்குள் வைத்திருக்கவேண்டும் என்று விரும்பிய கேஜிபியின் எண்ணத்தைப் பழமைவாதம் என ஒதுக்கியது கோர்பசேவ் அணி.

இதனால், மக்களிடையே கேஜிபிமீது இருந்த பயமும் மரியாதையும் போய்விட்டது என்று உள்ளுக்குள் பொருமினார் க்ரொயுச்கொவ். பகிரங்கமாகத் தனது கோபத்தை வெளிப்படுத்தமுடியாத அவர், ரகசியமாக கோர்பசேவ் அரசுக்கு எதிரான சில திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்தார்.

அரசு அதிகாரிகளில் தொடங்கி, சாதாரணப் பொதுமக்கள்வரை எல்லோரிடையேயும் பெரிய மாற்றங்களை உருவாக்க முயன்ற கோர்பசேவின் 'திறந்த' கொள்கைகள்தான், சோவியத் யூனியனின் சிதைவுக்குக் காரணமானதாகச் சொல்கிறவர்கள் உண்டு. இதனால், பெரிஸ்த்ராய்கா அறிமுகப்படுத்தப்பட்ட காலகட்டத்தில் பலர் கோர்பசேவ்மீது தீவிர அதிருப்தி கொண்டிருந்தார்கள்.

1991 ஆகஸ்ட் மாதத்தில், க்ரொயுச்கொவ் உள்ளிட்ட எட்டு முக்கியத் தலைவர்கள் இணைந்து, சோவியத் அதிபர் கோர்பசேவுக்கு எதிரான ஒரு கலவரத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். இதன்மூலம் அவரைக் கட்டாய ஓய்வு பெறச் செய்துவிட்டு, ஆட்சியைக் கைப்பற்றிக்கொள்வதாகத் திட்டம்.

க்ரொயுச்கொவும், இன்னும் சில கேஜிபி அலுவலர்களும் நேரடியாக ஈடுபட்டபோதும், இந்தக் கலவரம் அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியடையவில்லை. கடைசி நேரத்தில்,

முக்கியப் பொறுப்பிலிருந்த சில தளபதிகள் தயங்கிப் பின் வாங்கிவிட்டதால், அரசுக்கு எதிரான அவர்களுடைய சதித் திட்டம் தோல்வியடைந்தது.

கோர்பசேவுக்கு எதிரான கிளர்ச்சி, தானாகத் தேய்ந்து மறைந்து விட்டது என்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் உண்மையில், இந்தக் கலவரத்தை முறியடித்ததில் ரஷ்யக் குடியரசுக் கூட்டமைப்பின் (RSFSR) தலைவரான போரிஸ் யெல்ஸ்டின் (Boris Yelstin) பங்கு மிக முக்கியமானது.

இதற்குமுன்பு, கோர்பசேவ் மற்றும் யெல்ஸ்டின் இடையே அதிகாரப் பகிர்தலில் பிரச்னைகள் ஏற்பட்டதுண்டு. ஆனால், கோர்பசேவுக்கு எதிராகக் கிளர்ச்சி என்று கேள்விப்பட்டதும், சட்டென்று அதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்த யெல்ஸ்டின், சுறுசுறுப்பாகச் செயல்பட்டு ஓரிரு தினங்களுக்குள் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்து, எந்த அசம்பாவிதமும் ஏற்படாதபடி தவிர்த்துவிட்டார்.

ஆனால், இப்படிச் சிரமப்பட்டு அவர் கோர்பசேவ் அரசைக் காப்பாற்றியபோதும், சோவியத் அரசாங்கத்துக்கு எதிராக, அதன் தலைவர்கள், முக்கிய அதிகாரிகளே புரட்சி செய்திருக்கிறார்கள் என்கிற அவப்பெயர் நிலைத்துவிட்டது.

கேஜிபியின் சரித்திரத்திலேயே, மிகப் பெரிய அவமானம் அது. இத்தனை ஆண்டுகளாக, அரசாங்கத்துக்கு எதிராகச் செயல்படுகிறவர்களைக் கண்டறிந்து ஒடுக்குவது என்ற ஒன்றையே முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டுக்கொண்டிருந்த நிறுவனம், அதன் தலைவர், இப்போது தானே ஒரு சதித் திட்டத்துக்குக் காரணகர்த்தாவாக இயங்கியிருக்கிறார்.

இந்த விவரம் வெளியான மறுதினம், க்ரொயுச்கொவும், அரசுக்கு எதிரான கலவரத்துக்குத் திட்டமிட்ட மற்றவர்களும் கைது செய்யப்பட்டார்கள். க்ரொயுச்கொவுக்குப் பதிலாக, கேஜிபியின் புதிய தலைவராக வாடிம் பகடின் (Vadim Bakatin) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மற்ற கேஜிபி தலைவர்களெல்லாம், அந்த நிறுவனத்தை மேலும் பலமுள்ளதாக வளர்க்கவேண்டும் என்கிற உறுதியோடு பதவியேற்றார்கள். ஆனால், இந்த வாடிம் பகடின்மட்டும், கேஜிபியை இழுத்து மூடுவதற்காகவே அதன் தலைவரானார்.

கோர்பசேவ் சீர்திருத்தங்களில் நம்பிக்கை கொண்ட பகடின், கேஜிபிபோல, அளவற்ற அதிகாரங்களைத் தன்னிடத்தே குவித்துவைத்துக்கொண்டிருக்கிற ஓர் அமைப்பு, இனிமேலும் சோவியத் யூனியனுக்குத் தேவையில்லை என உறுதியாக நம்பிக் கொண்டிருந்தவர். சோவியத் அரசுக்கு எதிரான க்ரொயுச்கொவின் நடவடிக்கைகள், அவரது இந்த நம்பிக்கையை மேலும் பலப்படுத்தின.

வாடிம் பகடின் கேஜிபி தலைவராகப் பொறுப்பேற்றதும், அதன் முக்கியத் தலைவர்கள், பொறுப்பாளர்கள் எல்லோரும் ஒவ்வொருவராக ராஜினாமா செய்தார்கள். ஆகஸ்ட் இறுதிக்குள், கேஜிபி முழுவதும் அவருடைய தனிக் கட்டுப்பாட்டில் வந்திருந்தது.

இதையடுத்து, கேஜிபிக்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் இதர சொத்துகள் அனைத்தும், அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த அரசாங்கங்களின் பொறுப்பில் விடப்பட்டன. உள்ளூர் கேஜிபி கிளைகள் கலைக்கப்பட்டு, அவற்றின் பொறுப்புகளையும் சோவியத் தேசியப் பாதுகாப்புப் பிரிவே ஏற்றுக்கொண்டது.

இந்தக் காலகட்டத்தில் சரிவடைந்தது கேஜிபிமட்டுமில்லை, பெரும்பாலான சோவியத் அரசு நிறுவனங்களுக்கும் இதே நிலைமைதான். இந்தத் தடுமாற்றங்களுக்குப் பின்னணியாக, சோவியத் யூனியன் மற்றும் ரஷ்ய அரசாங்கங்களிடையே யாருக்கு எந்த அதிகாரம், என்ன மாதிரியான உரிமைகள் உண்டு என்ற குடுமிபிடிச் சண்டை தொடர்ந்துகொண்டிருந்தது.

சோவியத் யூனியன் அமைக்கப்பட்டபோதே, அதில் இடம் பெற்றிருக்கும் நாடுகள் எப்போது வேண்டுமானாலும் தங்கள் சுய விருப்பத்தின்பேரில் இந்தக் கூட்டமைப்பிலிருந்து விலகிக் கொள்ளலாம் என்று முடிவுசெய்யப்பட்டிருந்தது. இப்போது இந்தச் சவுகரியத்தைப் பயன்படுத்தி, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகள் தனிக் குடித்தனம் செல்ல விரும்பின.

*1991*-ம் ஆண்டு அக்டோபர் *24*-ம் தேதி, கேஜிபியை முறைப்படி கலைப்பதற்கான உத்தரவில் கையெழுத்திட்டார் கோர்பசேவ். இந்த உத்தரவு, நவம்பர் 6-ம் தேதிமுதல் அமலுக்கு வந்தது.

ரஷ்யா சுதந்தரமடைந்து ஆறு வாரங்களுக்குப்பிறகு அமைக்கப் பட்ட செகாவில் தொடங்கி, சுமார் 74 ஆண்டுகள் நீடித்த சோவியத்

பாதுகாப்பு மற்றும் உளவுத்துறையின் சரிதம் இந்த உத்தரவின்மூலம் முடிவடைந்தது. அடுத்த சில வாரங்களுக்குள் (1991 டிசம்பர் 26) சோவியத் யூனியனும் கலைக்கப்பட்டுவிட்டது.

அதன்பிறகு, சுதந்தர ரஷ்யாவில், கேஜிபி என்ற பெயர் நேரடியாகப் பயன்படுத்தப்படவில்லையேதவிர, அதுவரை கேஜிபி கவனித்துக்கொண்டிருந்த முக்கியமான பணிகளை, வேறு சில நிறுவனங்கள் செய்துவருகின்றன.

**FSB - Federal Security Service**

- *1991*-ல் சோவியத் யூனியன் வீழ்ந்ததுமுதல், கேஜிபியின் நேரடி மாற்றாக, FSK (Federal Counterintelligence Service) என்ற பெயரில் அழைக்கப்பட்ட அமைப்பு இது.

- பின்னர் *1995*-ல், இந்த FSK அமைப்பு, FSB-யாக வடிவம் மாற்றப்பட்டது. நிறைய அதிகாரங்களுடன் பலம் மிகுந்த அமைப்பாக உருவான FSB-யின் புதிய தலைவராக மிகைல் இவனோவிச் பர்சுகொவ் (Mikhail Ivanovich Barsukov) நியமிக்கப்பட்டார்.

- *1997*-ம் ஆண்டில், FSB-யின் உள்கட்டமைப்பு மீண்டும் மாற்றப்பட்டது. அளவு குறைக்கப்பட்டது. அதிகாரங்கள் மறுவரையறை செய்யப்பட்டன. பிற அமைப்புகளின் முக்கியத்துவம் அதிகரிக்கத் தொடங்கியது.

**SVR - Foreign Intelligence Service**

- ரஷ்யாவின் வெளிநாட்டு உளவு நடவடிக்கைகள், தகவல் சேகரிப்பு, ஆய்வுப் பணிகளைக் கவனித்துக்கொள்ளும் தனி அமைப்பு.

- சோவியத் யூனியன் சிதையத் தொடங்கிய காலகட்டத்தில், கேஜிபிக்கு இணையாக உருவாக்கப்பட்ட முதலாவது பாதுகாப்பு அமைப்பு.

- கேஜிபியின் 'முதலாவது தலைமை டைரக்ட்ரேட்' நிறைவேற்றிக்கொண்டிருந்த பணிகளில் பெரும்பாலானவை SVRவசம் ஒப்படைக்கப்பட்டன. அதன் தலைவராக யெவ்கெனி ப்ரிமகொவ் (Yevgeny Primakov) நியமிக்கப்பட்டார்.

- யெவ்கெனிக்குப்பிறகு, *1996*-ம் ஆண்டிலிருந்து வ்யாசெலவ் ட்ருப்னிகொவ் (Vyacheslav Trubnikov), *2000*-ம் ஆண்டுமுதல் செர்கை லெபெடெவ் (Sergei Lebedev) ஆகியோர் SVR தலைவர்களாகப் பணியாற்றியிருக்கிறார்கள்.

**FAPSI - Federal Agency for Government Communications and Information.**

- தேசியப் பாதுகாப்பு அமைப்பு, தகவல் தொடர்புப் பாதுகாப்பில் கவனம் செலுத்துகிறது.

- *1991*-ல் கேஜிபியின் எட்டாவது மற்றும் பதினாறாவது டைரக்ட்ரேட்களை இணைத்து உருவாக்கப்பட்டது.

- இதன் தலைவர்களாகப் பணியாற்றியவர்கள் ஏ. வி. ஸ்டாரொவொய்டொவ் (A.V. Starovoitov - 1991-98), வ்ளாடிஸ்லவ் பெட்ரோவிச் ஷெர்ஸ்ட்யுக் (Vladislav Petrovich Sherstyuk- 1998-99), வ்ளாடிமிர் ஜியார்ஜிவிச் மட்ய்கின் (Vladimir Georgievich Matykhin 1999-2003) மற்றும் யு, பி. கார்னெவ் (Yu.P. Kornev 2003-05).

**FSO - Federal Protective Service**

- ரஷ்யாவின் தேசச் சொத்துகள், தலைவர்களைப் பாது காக்கும் அமைப்பு.

- கேஜிபியின் ஒன்பதாவது டைரக்ட்ரேட், சுதந்தர ரஷ்யாவில் 'FSO'வாக இயங்கத் தொடங்கியது.

ஒருகாலத்தில், உலகின் முதல் நிலை உளவு நிறுவனம் என்ற பெருமையுடன் இயங்கிக்கொண்டிருந்த கேஜிபி, அந்தப் புகழுடனே ஓய்வு பெற்றுவிட்டது. அதன் பணிகள் இப்போது பல துண்டுகளாக உடைக்கப்பட்டுப் பகிர்ந்துகொள்ளப்பட்டுவிட்டாலும், சோவியத் யூனியன் என்கிற 'மகா கனவு' விட்டுச் சென்ற சில நினைவுகளில், கேஜிபி என்ற சிவப்புக் கழுகின் சுவடுகள் யாராலும் மறக்கமுடியாதது.

# பிற்சேர்க்கை – 1

## கேஜிபி - கால வரிசை

★ டிசம்பர் 1917 முதல் பிப்ரவரி 1922 வரை - Cheka

- *1917* - டிசம்பர் *20*, Cheka தொடக்கம். தலைவர்: ஃபிலிக்ஸ் டெஜொர்ஜின்ஸ்கி
- *1918* - Cheka மாஸ்கோவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கத் தொடங்குகிறது.
- *1918* - டிசம்பர் *19*, உளவுப் பணிகளுக்கான Cheka-வின் விசேஷப் பிரிவு தொடங்கப்பட்டது.
- *1918* - ரஷ்ய உள்நாட்டுப் போர்.
- *1920* - டிசம்பர் *20*, INO வெளிநாட்டு உளவு நிறுவனம் தொடக்கம்.
- *1921* - Cheka-வின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன
- *1922* - பிப்ரவரி *6*, Cheka கலைக்கப்பட்டு, GPU உருவாக்கப்பட்டது.

★ பிப்ரவரி 1922 முதல் ஜூலை 1923 வரை - GPU

- *1923* - சோவியத் யூனியன் உருவாக்கம்.
- *1923* - நவம்பர் *15*, GPU கலைக்கப்பட்டு, OGPU உருவாக்கப்பட்டது.

- ★ *ஜூலை 1923 முதல் ஜூலை 1934 வரை* - **OGPU**
  - *1923* - OGPU-வுக்கு தனி கமிஷன் அந்தஸ்து.
  - *1926* - ஃபிலிக்ஸ் மரணம். புதிய தலைவர் வியசெஸ் லவ் ருடோல்ஃபொவிச் மென்ஜின்ஸ்கி.
  - *1930* - குலக்(கைதி முகாம்)களை நிர்வகிக்கும் நிறு வனம் உருவாக்கப்பட்டது.
  - *1930* - சோவியத் பொலிட்ப்யூரோ பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளில் உளவுப் பணிகளைத் தீவிரப்படுத்த முடிவு.
  - *1934* - மென்ஜின்ஸ்கி மரணம். புதிய தலைவர் ஜென்ரிக் க்ரிகோரிவிச் யகோடா.
  - *1934* - OGPU நீக்கப்பட்டு, அதன் பணிகள் GUGB-யிடம் ஒப்படைக்கப்பட்டன.
- ★ *ஜூலை 1934 முதல் பிப்ரவரி 1941 வரை* - **GUGB**
  - *1936* - யகோடா கைது. புதிய தலைவர், நிகோலய் இவனொவிச் யெஜொவ்.
  - *1938* - புதிய தலைவர் லவ்ரென்டிய் பாவ்லோவிச் பெரியா.
- ★ *பிப்ரவரி 1941 முதல் ஜூலை 1941 வரை* - **NKGB**
- ★ *ஜூலை 1941 முதல் ஏப்ரல் 1943 வரை* - **GUGB**
- ★ *ஏப்ரல் 1943 முதல் மார்ச் 1946 வரை* - **NKGB**
  - *1946* - ஸ்மெர்ஷ் (SMERSH) உளவு நிறுவனம் உரு வாக்கப்பட்டது.
- ★ *மார்ச் 1946 முதல் அக்டோபர் 1947 வரை* - **MGB**
- ★ *அக்டோபர் 1947 முதல் நவம்பர் 1951 வரை* - **KI** (வெளிநாட்டு உளவுப் பிரிவு)
  - *1947* - MGB மற்றும் GRU உளவுப் பிரிவுகள் ஒருங் கிணைக்கப்பட்டன.

- *1948* - GRU பாதுகாப்பு அமைச்சகத்தின் பொறுப்புக்குத் திரும்பியது.

★ மார்ச் *1953* முதல் மார்ச் *1954* வரை - **MVD**

- *1953* - MGB மற்றும் MVD ஒருங்கிணைந்தது.
- *1953* - பெரியா கைது. புதிய தலைவர் க்ருக்லொவ்.
- *1954* - MVD-யின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அமைச்சக அந்தஸ்து பறிக்கப்பட்டது.

★ மார்ச் *1954* முதல் அக்டோபர் *1991* வரை - **KGB**

- *1954* - மார்ச் *13*, கேஜிபி உருவாக்கம். புதிய தலைவர் இவான் அலெக்ஸாண்ட்ரோவிச் செரொவ்.
- *1958* - கேஜிபி புதிய தலைவர் அலெக்ஸாண்டர் ஷெலெபின்.
- *1961* - கேஜிபி புதிய தலைவர் வ்ளாடிமிர் செமிசாஸ்ட்னி.
- *1967* - கேஜிபி புதிய தலைவர் யூரி ஆன்ட்ரபொவ். இவர் காலத்தில், அரசியல்ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் பலம் பெறுகிறது கேஜிபி.
- *1978* - சிறு பெயர் மாற்றம் - 'சோவியத் யூனியன் கேஜிபி'.
- *1982* - யூரி ஆன்ட்ரபொவ் சோவியத் யூனியன் அதிபராகிறார். கேஜிபி புதிய தலைவர் வ்ளாடிமிர் அலெக்ஸாண்ட்ரோவிச் க்ரொயுச்கொவ்.
- *1984* - Cheka - கேஜிபி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது.
- *1991* - கோர்பசேவ் அரசுக்கு எதிராக கேஜிபி தலைவர் வழிகாட்டுதலில் புரட்சி, தோல்வி.
- *1991* - க்ரொயுச்கொவ் கைது, கேஜிபி புதிய தலைவர் வாடிம் பகடின்.
- *1991* - நவம்பர் *6*, கேஜிபி கலைக்கப்பட்டது.

- 1991 - டிசம்பர் 26, சோவியத் யூனியன் கலைக்கப் பட்டது.

★ பின்கதை

- 1992 - முன்னாள் கேஜிபி ஆவணக் காப்பாளர் மிட்ரோகின், பிரிட்டனுக்குக் குடிபெயர்கிறார். அவர் சேகரித்த ஆவணங்களும் பிரிட்டனுக்குக் கடத்தப்படுகின்றன.

- 1999 - மிட்ரோகின் ஆவணங்கள் முதல் தொகுதி வெளியாகி, பரபரப்பைக் கிளப்புகிறது.

- சுதந்தர ரஷ்யாவில் கேஜிபிக்கு இணையான பணி களைச் செய்துவரும் முக்கிய நிறுவனங்கள்: FSB - SVR.

# பிற்சேர்க்கை – 2

## கேஜிபி - கட்டமைப்பு

**கேஜிபியின் முக்கிய டைரக்ட்ரேட் (Directorate) / இயக்ககங்கள்:**

- முதலாவது தலைமை டைரக்ட்ரேட் - வெளிநாட்டு நடவடிக்கைகள், உளவுப் பணிகளுக்குப் பொறுப்பேற்கும் இயக்ககம்.
- இரண்டாவது தலைமை டைரக்ட்ரேட் - உள்நாட்டு அரசியல், சோவியத் பொதுமக்கள், இங்கிருக்கும் வெளிநாட்டவர்கள் போன்ற விவகாரங்கள்.
- மூன்றாவது தலைமை டைரக்ட்ரேட் - ஆயுதமேந்திய படை.
- நான்காவது தலைமை டைரக்ட்ரேட் - போக்குவரத்து.
- ஐந்தாவது தலைமை டைரக்ட்ரேட் - உள்நாட்டுப் பாதுகாப்பு, காண்காணிப்பு, தணிக்கை முதலியன.
- ஆறாவது டைரக்ட்ரேட் - பொருளாதார விவகாரங்கள், தொழில்துறைப் பாதுகாப்பு.
- ஏழாவது டைரக்ட்ரேட் - உள்ளூர் / வெளியூர்க் குடிமக்களைக் கண்காணிப்பது, மேற்பார்வை.
- எட்டாவது தலைமை டைரக்ட்ரேட் - தகவல் தொடர்பு (உள்நாடு / வெளிநாடு), இதற்கான தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல்.

- ஒன்பதாவது டைரக்ட்ரேட்-தலைவர்கள், அவர்களுடைய குடும்பத்தினர், தேச சொத்துகளைப் பாதுகாக்கும் சீருடைப் பணியாளர்கள்.

- பதினைந்தாவது டைரக்ட்ரேட் - அரசு நிறுவனங்களைப் பாதுகாப்பது.

- பதினாறாவது டைரக்ட்ரேட் - தொலைபேசி, தந்திச் சேவைகள்.

பிற முக்கியப் பிரிவுகள் :

- தனிப் பிரிவு (Personnel Department)
- நிர்வாகப் பிரிவு (Administration)
- நிதிப் பிரிவு (Finance Department)
- ஆவணப் பிரிவு (Archives)
- எல்லைப் பாதுகாப்புப் பிரிவு (Border Guards)

# பிற்சேர்க்கை – 3

உதவிய நூல்கள் / கட்டுரைகள் / இதழ்கள்

**நூல்கள் :**


1. The Soviet Secret Police - Robert M. Slusser, Simon Wolin - Frederick A. Praeger - Research Program on the U.S.S.R. - 1957

2. The Sword and the Shield: The Mitrokhin Archive and the Secret History of the KGB - Christopher Andrew, Vasili Mitrokhin - Basic Books - 2001

3. The Mitrokhin Archives II: The KGB and the World - Christopher Andrew, Vasili Mitrokhin - Allen Lane (Penguin) - 2005

4. KGB Today: The Hidden Hand - John Barron - Coronet Books - 1985

5. The Soviet Polity in the Modern Era - Erik P. Hoffmann, Robbin F. Laird - Aldine de Gruyter - 1984

6. KGB: Death and Rebirth - Martin Ebon - Praeger Publishers - 1994

7. A History of the Soviet Union from the Beginning to the End - Peter Kenez - Cambridge University Press - 1999

8. Two Lives, One Russia - Nicholas Daniloff - Avon Books - 1990

9. ரஷ்யப் புரட்சி: ஒரு புதிய தரிசனம் - என். ராமகிருஷ்ணன் - கிழக்கு பதிப்பகம் - 2006

10. மேதினம் - கே. செல்வப்பெருமாள் - பாரதி புத்தகாலயம் - 2005

கட்டுரைகள் :

1. OGPU'S Reign of Terror in Russia - Gareth Jones - The Western Mail - 1933
2. The Election to the Russian Constituent Assembly of 1917 - Oliver Henry Radkey - Harvard University Press - 1950
3. The Origin and Status of the Cheka - E. H. Curr - Soviet Studies - 1958
4. The KGB - David Wallechinsky, Irving Wallace - Trivia Library - 1981
5. A Top Cop Takes the Helm - Patrica Blake - Time - 1982
6. Changing the Guard - Patrica Blake - Time - 1982
7. In Stalin's Footsteps Yuri Andropov: Rise of a Dictator - Victor Herman, Fred E. Dohrs - Library Haven - Journal of Hillsdale College - 1983
8. Men of the Year: Ronald Reagan - Yuri Andropov - George J Church - Time - 1984
9. The Cheka during the Russian revolution - Aileen O'Carroll - Workers Solidarity Movement - 1992
10. The KGB: They still need us - Natalia Gevorkian - Bulletin of the Atomic Scientists - 1993
11. The Eremin Letter - Eric Lee - Revolutionary Russia - 1993
12. The Russian-A(merican) Bomb: The Role of Espionage in the Soviet Atomic Bomb Project - Michael I. Schwartz - History of Science - 1996
13. Committee For State Security - John Pike - FAS Intelligence Resource Program - 1997
14. Russia: 80 Murky Years Of The KGB - Stephen Dalziel - BBC - 1997
15. History of the ChK OGPU NKVD KGB - TL - CyberUSSR - 1998
16. The Secret History of the KGB - J. Michael Waller - Insight on the News - 1999
17. How to be a KGB spy - Vasiliy Mitrokhin - The Guardian - 2002
18. Lawful terror: The Cheka - Dr. Dennis F. Casey - Spokesman - 2002

19. All are naked in the bath - Kuldip Nayar - Deccan Herald - 2005

20. மீத்ரோகின் ஆவணங்கள் பத்ரி சேஷாத்ரி - http://thoughtsintamil.blogspot.com/ - 2005

21. மாயவலை - பா. ராகவன் - குமுதம் ரிப்போர்ட்டர் - 2006

22. உஷார் உளவாளி - சுதாங்கன் - ஜூனியர் விகடன் - 2006

23. The NKVD - Mesrob Vartavarian - NKVD.org

24. The Economy of the OGPU, NKVD and MVD of the USSR - Oleg Khlevnyuk - http://www.uh.edu/~

### இணையத் தளங்கள் :

http://cr.middlebury.edu/public/russian/Bulgakov/public_html//NKVD.html

http://english.pravda.ru/

http://flag.blackened.net/revolt/talks/cheka.html

http://home.sandiego.edu/~landeros/KGBCIA/KGB.htm

http://iaia.essortment.com/cheka_rvph.htm

http://library.thinkquest.org/10826/kgb.htm

http://news.bbc.co.uk/2/hi/world/analysis/41319.stm

http://users.skynet.be/terrorism/

http://www.cyberussr.com/

http://www.fas.org/irp/world/russia/kgb/index.html

http://www.findarticles.com/p/articles/mi_m1571/is_37_15/ai_56184189

http://www.geocities.com/CapitolHill/2808/chap3.html

http://www.historyguide.org/europe/cheka.html

http://www.ibiblio.org/expo/soviet.exhibit/secret.html

http://www.mosnews.com/

http://www.nkvd.org/

http://www.npr.org/templates/story/story.php?storyId=4948068

http://www.pbs.org/redfiles/kgb/deep/kgb_deep_ref_detail.htm

http://www.periclespress.com/Russia_KGB.html

http://www.questia.com/library/kgb.jsp

http://www.rusnet.nl/encyclo/k/kgb.shtml

http://www.spartacus.schoolnet.co.uk/

http://www.st-andrews.ac.uk/

http://www.thebulletin.org/article.php?art_ofn=jf93gevorkian

http://www.tiscali.co.uk/reference/encyclopaedia/hutchinson/m0014072.html

http://www.trivia-library.com/b/history-of-russian-government-agency-the-kgb-part-1.htm

http://www.uh.edu/~vlazarev/4389/Gulag-khlev.htm

http://www.xs4all.nl/~kvenjb/madmonarchs/ivan4/ivan4_bio.htm

https://www.cia.gov/csi/books/17240/art-3.html

**பத்திரிகைகள் / நாளிதழ்கள்**

1. The Guardian

2. Pravda

அமெரிக்காவும் ரஷ்யாவும், உலகத்தையே இருகூறாகப் பிரித்துக் கட்சி கட்டிக்கொண்டிருந்த நேரம். எதிர் கோஷ்டி என்ன செய்கிறது என்று தெரிந்துகொள்ள இரு கோஷ்டிகளும் துடித்தன.

அந்த நேரத்தில், ரஷ்யாவின் உளவுத் துறையாகிய கேஜிபி, ஒரு மிகப்பெரிய பாய்ச்சலை நிகழ்த்தியது. எங்கே, யார், எப்படி என்றெல்லாம் நாம் கற்பனையே செய்ய முடியாத இடங்களிலெல்லாம் தங்களது உளவாளிகளை ரகசியமாக நுழைத்து, விறுவிறுவென்று தகவல்களைச் சேகரிக்க ஆரம்பித்தார்கள். அவை அவசியமா, இல்லையா என்பதெல்லாம் இரண்டாம் பட்சம், உலகில் யார் பலமாக மூச்சு விட்டாலும்கூட, இங்கே ரஷ்யாவில் அதைக் கேட்க வேண்டும். அவ்வளவுதான் விஷயம்.

இதனால், சர்வதேச அளவில் மிகப் பலம் வாய்ந்த உளவு நிறுவனமாக உருவெடுத்தது கேஜிபி. பல நாடுகளைப் பற்றி அந்தந்த தேசத்துத் தலைவர்களுக்குக்கூடத் தெரியாத விஷயங்கள் ரஷ்யாவுக்குத் தெரிந்தன. இதனால், யாரைப் பார்த்தாலும் 'இவன் கேஜிபி ஏஜென்டா இருப்பானோ?' என்று அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் குலைநடுங்க ஆரம்பித்தார்கள்.

ஒரு துப்பறியும் நாவலையும்விடச் சுவாரஸ்யமான கதை கேஜிபியினுடையது. அதை விறுவிறுப்பான மொழியில் தந்திருக்கும் என். சொக்கன், ஏற்கெனவே CIA, FBI, மொஸாட் உள்ளிட்ட பல உளவுத் துறை நிறுவனங்களின் சரித்திரங்களை எழுதியுள்ளார்.

மதி நிலையம்